# மண்ணும் மனித உறவுகளும்

கோ. கேசவன்

# மண்ணும்
# மனித உறவுகளும்

கோ. கேசவன்

சென்னை புக் ஹவுஸ்
42, நாராயணப்பன் தெரு
சென்னை – 600 021

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| | முன்னுரை | ... | v |
| 1. | போரும் புதுமையும் | — | 1 |
| 2. | புலவரும் புரவலரும் | ... | 70 |
| 3. | மாயையும் உண்மையும் | ... | 95 |
| 4. | மண்ணும் மனித உறவுகளும் | ... | 148 |
| 5. | நூல் பொருள் அகராதி | ... | 191 |

# மண்ணும்
# மனித உறவுகளும்

முதற்பதிப்பு: டிசம்பர், 1979
உரிமை: ஆசிரியர்க்கே
© AUTHOR

**Mannum Manitha Oravukalum**

*Studies in the Sociology of Literature*

*by*

G. KESAVAN, M.A.,

*Assistant Professor of Tamil*

*Government Arts College*

*Madras - 39*

அச்சிட்டோர்:
வள்ளல் பாரி அச்சகம்
இராயப்பேட்டை
சென்னை - 600 014

கலாநிதி க. கைலாசபதி அவர்களின்

# முன்னுரை

பல நூற்றாண்டுகளாக ஏட்டுச் சுவடிகளில் முடங்கிக் கிடந்த பழந்தமிழ் நூல்கள், சென்ற நூற்றாண்டின் பிற் பகுதியிலிருந்து மெல்ல மெல்ல அச்சு வாகனமேறி கற்றோருலகில் நடமாடத் துவங்கின. சி. வை. தாமோதரம் பிள்ளை, உ. வே. சாமிநாதையர் முதலிய மூலபாடத்திறனாய்வாளரின் பதிப்புரைகளைப் படிக்கும்பொழுது, சென்ற நூற்றாண்டிலே மகாவித்துவான்கள், புலவர்கள், கணக்காயர்கள், கவிராயர்கள் போன்றோர் கூட பழந்தமிழ் நூல்கள் பற்றிப் பெருமளவு அறியாமையில் மூழ்கிக் கிடந்தனர் என்பது புலனாகும். சிலப்பதிகாரம் என்ற தொடர்நிலைச் செய்யுளை சிறப்பதிகாரம் எனக்குறிப்பிட்ட கவிராயர்களும், பத்துப் பாட்டு எவை எனத் தெரியாத பண்டிதர்களும் மலிந்திருந்த காலம் அது. 'சங்க மருவிய' நூல்களென வழங்கப் பட்டனவும், நீதி ஆசாரங்கள் பற்றி நீண்ட காலமாக நம்மவர்க்கு எடுத்துரைத்து வந்திருப்பனவுமான பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் இன்ன என்பது பற்றியே சென்ற நூற்றாண்டின் பிற்பகுதி முதல் மூதறிஞர்களிடையே பெரும் வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன.

இடைக்காலத்திலே, குறிப்பாகப் பிற்காலச் சோழரின் வீழ்ச்சிக்குப் பின்னர், இதிகாசத் தழுவல்களும், தலபுராணங்களும், சரசலீலை நூல்களும் தமிழ்க் கல்வி உலகிலே தனியாட்சி செய்தன. மடாலயங்களும் சமஸ்தானங்களும் வரையறுக்கப்பட்ட சிற்சில துறைகளைச் சார்ந்த நூல்களையே ஊக்குவித்தன; ஆதரித்தன. தொன்மை வாய்ந்த தமிழ்ப்பனுவல்கள் பல தேடுவாரற்றுப் "பொய்யாய்ப் பழங்கதையாய்க் கனவாய்" மறைந்துபோய்க்

கொண்டிருந்தன; இன்னும் பல ஏலவே இருந்த இடம் தெரியாமல் போயின. இலக்கியப் பாரம்பரியத் தொடர்ச்சியும் மரபுணர்ச்சியும் இற்றுப் போகின்ற இக் கட்டான சூழ்நிலையிலே, தமிழ் அறிஞர்களிற் சிலர் பண்டைத் தமிழ் நூல்களைப் பதிப்பிக்கவும் அவற்றை ஆராயவும் முற்பட்டனர். ஆங்கிலக்கல்வி, மத்தியதர வர்க்கத்தின் முதல் தோற்றம், அச்சியந்திரத்தின் பரம்பல், அந்நிய கலாசார ஆதிக்கத்துக்கு எதிரான உட்கொதிப்பு, தொல் பொருளியல் தொல்லெழுத்தியல் வரலாற்றியல் முதலாய ஆய்வுத் துறைகளின் அறிமுகம் ஆகியனவும் பிற வும் இம்முன்னோடித் தமிழறிஞர்கள் முனைப்பாகச் செயற் படத் தூண்டுகோலாயமைந்தன. உதாரணமாக 1887-ல் கலித்தொகை என்ற நூலை முதன் முதலாகப் பதிப்பித்த சி. வை. தாமோதரம்பிள்ளை பதிப்புரையிலே கூறியவை இங்குக் கருதத்தக்கன.

> "எத்தனையோ திவ்விய மதுர கிரந்தங்கள் காலாந்தரத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களின் உங்களுக்குச் சற்றுவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்! அயலான் அழியக் காண கினும் மனந்தளம்புகின்றதே! தமிழ் மாது நுந்தா யல்லவா? இவள் அழிய நமக்கென்று வாளா இருக் கின்றீர்களா? தேசாபிமானம் மதாபிமானம் பாஷாபிமானமென்று இவை யில்லாதார் பெருமை யும் பெருமையா? இதனைத் தயை கூர்ந்து சிந்திப் பீர்களாக."

காலத்தாலும் முயற்சியாலும் சாமிநாதையருக்கு முற்பட்ட வரான தாமோதரம்பிள்ளையின் கூற்றில் பல செய்திகள் பொதிந்திருக்கின்றன. இத்தகையோரின் முதன் முயற்சி யினாலேயே நாவலர், தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, இறையனார் களவி யலுரை முதலியன திருத்தமுறப் பரிசோதிக்கப் பெற்று

அச்சிடப்பட்ட வடிவில் அறிஞர் கைகளுக்குச் சென்றடைந்தன. பெரும்பாலும் பௌராணிக மரபில் வந்த பிரபந்தங்களிலே திளைத்திருந்த தமிழிலக்கிய உலகிற்கு, மேற்குறிப்பிட்ட முந்து நூல்கள் புதியவொரு அநுபவத்தை உண்டாக்குவனவாயிருந்தன. 'சான்றோர்' என்ற சொல்லை அறிவொழுக்கங்களால் நிறைந்த பெரியோர்களைக்குறிக்கப் பயன்படுத்திய பிற்காலப் புலவர்களின் நூல்களைப் பயின்று வந்த நம்மவர்க்கு, அச்சொல் வீரரைக் குறித்தது என்பது புறநானூறு முதலிய நூல்களாற் புலப்படலாயிற்று. சுருங்கக் கூறின், சமயச் சார்புடைய கலாசாரத்தையே பெரிதும் அறிந்திருந்த தமிழ்க் கல்வியாளருக்கு, சமயஞ்சாராத—உலகியல் சார்ந்த—வாழ்க்கை நெறியும குறிக்கோள்களும் இப்பழைய நூல்களின்மூலம் பரிச்சயமாயின.

இன்னுமொன்று. கி. பி. ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளிலிருந்தே தமிழிலக்கிய இலக்கண நூல்களின் சரிதத்தைக் கணிக்கலாம் என்று மேனாட்டுக் கிறித்தவப் பாதிரிமாரும் துரைத்தனச் சார்புடைய இந்தியவியல் ஆராய்ச்சியாளரும் கூறி வந்த வேளையில், பழந்தமிழ் நூல்களின் 'கண்டுபிடிப்பும்' வெளியீடுகளும் அவற்றினது காலம் பற்றி மேனாட்டார் கூறிவந்த கருத்தை மறுத்து கிறித்து அப்தத்திற்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலேயே அவற்றிற் பல இயற்றப்பட்டு விட்டன என்னுமுண்மையை உறுதியாய் நிலைநாட்டின. கிறித்துவ பாதிரிமாரும் ஏனைய மேனாட்டு இந்தியவியல் ஆய்வாளரும் தமக்குப்பரிச்சயமான எபிரேய, கிரேக்க, இலத்தின் மொழிகளிலுள்ள இலக்கியங்களுக்கு நிகரான நூல்கள் தமிழிலும் உண்டு என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. இதன் விளைவாகப் பண்டைத் தமிழ்ப் பனுவல்கள் இலக்கிய நூல்களாக மாத்திரமன்றி, சமூகவியல் அரசியல் பொருளியல் ஆவணங்களாகவும் கருதப்படலாயின. இத்தகைய ஒரு பின்னணிச் சூழலிலேயே வி. கனகசபைப்பிள்ளை (1855—1906) The Tamils Eighteen Hundred Years Ago என்ற ஆங்கில நூலை எழுதினார். 1895

முதல் 1901 வரை தொடர் கட்டுரைகளாக வெளிவந்து 1904—இல் அது நூல் வடிவில் வெளியிடப்பட்டது. "கனக சபைப்பிள்ளை தமது தமிழ்க் கல்வி, தேச சரித்திரவுணர்ச்சி, சமுதாய சரித்திர ஞானம், சிலாசாசன ஆராய்ச்சி, ஆங்கிலக் கல்வி முதலிய அனைத்தும் பயன்படத்தக்க சிறந்த நூலொன்றை எழுதித் தமக்கு அழியாப் புகழும் நமது தாய் மொழிக்கு மறக்கவொண்ணுப் பெருந் தொண்டும் இயற்றினர்" என்று எஸ். வையாபுரிப்பிள்ளை கூறியிருப்பது மனங்கொளத்தக்கது.

சென்ற நூற்றுண்டின் நடுப்பகுதியில் மற்றொரு சம்பவம் நிகழ்ந்தது. கால்டுவெல் பாதிரியாரின் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற ஆங்கில நூல் 1856 – இல் வெளி வந்தது. பழந்தமிழ் நூல்கள் அச்சிற் பதிக்கப் பெருத காலத்தில் அந்நூல் எழுதப்பட்டது. பிற்கால நூல்களின் காலம் பற்றியும் பாதிரியாருக்குப் பலமயக்கங்கள் இருந்தன. எனினும், திராவிட மொழிகள் தொன்மையானவை என்ற அடிப்படையிலேயே தனது ஒப்பிலக்கண நூலை எழுதியிருந்தார். கால்டுவெல் கடைப்பிடித்த கருதுகோளும் கூறியமுடிபுகளும் ஆராய்ச்சி உலகிற்கு அப்பாலும் தாக்கத்தை உண்டாக்கின: திராவிட மொழிகள் என்ற தொடரைப் பயன்படுத்திய விதமும், ஆரிய மொழிகளிலிருந்து வேறுபட்டவை திராவிட மொழிகள் என்னும் அடிப்படைத் தகவலை அழுத்திக்கூறிய விதமும், அதே வேளையில் 'ஆரியம்' 'திராவிடம்' என்றிரு கருத்துருவங்களை உருவாக்கி அவற்றை எதிரெதிர் நிறுத்தி இரண்டிற்குமிடையே போட்டி, பகைமை, இடைவிடாத போராட்டம் இருந்து வந்திருப்பதாகக் கூறிய முறையும், ஆரியர் பிராமணர் மொழியென்றும் திராவிடம் பிராமணர் அல்லாதார் (தமிழர்) மொழியென்றும் அவர் வாதிட்ட வகையும் ஆராய்ச்சி உலகிற் புதிய பார்வையையும் பரிமாணங்களையும் புகுத்தின. தமிழிலக்கிய இலக்கண ஆய்வுகளுக்கு, இனம், மொழி, சாதி, பிரதேசம் என்பன

மிகமுக்கியமான கருத்துக்கூறுகளாயமைந்தன. (அன்றைய மொழிநூல் அறிவின் குறைபாடு, இனங்கள் பற்றிய தவருன கண்ணேட்டங்கள், மதச்சார்புடைய ஆய்வாளர் பலரிடத்துக் காணப்பட்ட மனக்கோட்டம், இந்திய வரலாறு பற்றிய வக்கரிப்புகள் முதலியவற்றுடன், இந்தியாவிலே தமது ஆட்சியை வலுப்படுத்தி வந்த ஏகாதிபத்தியவாதிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் கடைப்பிடித்த பிரித்தாளும் சூழ்ச்சியும் ஆரிய— திராவிடப் பிரச்சினை உருவாகவும் பூதாகாரமான வடிவம் பெறவும் ஏதுவாயமைந்தது. ஆயினும் அதனை விரித்துரைக்க இது ஏற்ற இடமன்று.) வடவர்-தென்னவர், ஆரியர்-திராவிடர், பிராமணர்—பிராமணரல்லாதார், வந்தேறு குடிகள்— பூர்விக மக்கள் என்பன போன்ற பேதங்களைத் தோற்றுவித்து, சோதரரைக் கூறுபடுத்தி, நாட்டிலே உருவாகக் கூடிய தேசிய ஒற்றுமைக்கு ஊறு விளைவித்துத் தமது ஆட்சியைப் பலப்படுத்த அந்நிய ஆட்சியாளர் கடைப் பிடித்த தந்திரோபாயங்களில் பாதிரிகளாகவிருந்த படிப்பாளிக்கும் பங்கிருந்தது என்பதை ஆராய்ச்சியாளர் இப்பொழுது உணரத் துவங்கியுள்ளனர். தென்னிந்திய வரலாறு குறித்து அண்மையில் நூல்கள் எழுதியிருக்கும் பேக்கர், வாஷ்புறூக் என்னும் ஆங்கிலேய ஆராய்ச்சியாளர் இருவர் இதுபற்றி எழுதியுள்ளமை கருதத்தக்கது: இன, சாதி, குல வேறுபாடுகளைத் தூண்டிவிட்டு மிகைபடக்கூறும் அரசின் மனோபாவத்தை அறிந்து கொண்ட பாதிரிமாரும் மானிடவியல் ஆய்வாளரும் தமது நூல்களிலும் பிரசுரங்களிலும் அதனைப் பிரதிபலித்தனர் என்று தென்னிந்தியா 1880—1925 என்னும் ஆங்கில நூலில் வாஷ்புறூக் கூறியுள்ளார்.

காலடுவெல் கட்டவிழ்த்துவிட்ட இனவாத மாயை எதிர்பார்க்கக் கூடியவிதத்திலே பலரைப் பற்றிக் கொண்டது. தமிழ்மொழி, இலக்கியம், கலாசாரம், நாகரிகம் இவைபற்றிய ஆய்வுகளிற் பெரும்பாலான,

ஆரிய—திராவிட முரண்பாட்டினை அடிப்படையாய்க் கொண்டே நடைபெறலாயின. கால்டுவெல் விதைத்த எண்ணம் பெ. சுந்தரம்பிள்ளை, பண்டிதர் சவரிராயபிள்ளை, சுவாமி வேதாசலம் பிள்ளை (மறைமலையடிகள்), கே. என். சிவராச பிள்ளை, வெ. ப. சுப்பிரமணிய முதலியார், தா. பொன்னம்பல பிள்ளை, பி. டி. சீனிவாச ஐயங்கார், கா. சுப்பிரமணியபிள்ளை, ஆ. முத்துத்தம்பி பிள்ளை, ஜெ எம். நல்லசாமிப்பிள்ளை முதலிய முந்திய தலைமுறைத் தமிழ் ஆர்வலர்கள் மூலமாக, ஔவை சு. துரைசாமிப் பிள்ளை. கா. அப்பாத்துரை, தேவ நேயப்பாவாணர், சி. இலக்குவனார், மு. வரதராசனார் முதலிய பிந்திய தலைமுறை எழுத்தாளரையும் ஆட்கொண்டிருந்தது என்பது வெளிப்படை. சென்ற நூற்றாண்டின் கடைக்கூறிலிருந்து தமிழியல் ஆராய்ச்சிக்காக ஆங்கிலத்தில் நடத்தப்பட்ட சில இதழ்களை எடுத்து நோக்கினால் இவ்வுண்மை தெளிவாகும். சித்தாந்த தீபிகை (1897—1913), தமிழ்ப்பழமை (1907—1914), தமிழ்ப்பண்பாடு (1952—1966) முதலியவற்றிலும் செந்தமிழ், செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், ஞாயிறு, கலாநிதி ஆகியவற்றிலும் வெளிவந்த கட்டுரைகளைப் படிப்போர்க்கு, இனவாதம் நம்மவரை எவ்வளவுதூரம் ஆட்டிப்படைத்துள்ளது என்பது தெரியவரும். இப்பொதுப்போக்கின் ஓர் அமிசமாகவே, இந்நூற்றாண்டின் முற்பகுதியிலே சவரிராயபிள்ளை, வேதாசலம்பிள்ளை முதலியோர் தனித்தமிழ் இயக்கத்தையும் தொடங்கினர். இவர்களுக்குச் சற்று முற்பட்ட பெ. சுந்தரம்பிள்ளை இவ்விடயத்தில் பெருக்கம் கொண்டிருந்தார் என்பதும் நினைந்துகொள்ள வேண்டியதாகும். ஏறத்தாழ நூற்று இருபத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி மேற்கூறிய நெறியிலேயே அமைந்து வந்திருக்கிறது. அதனை முழுமையாக விமர்சிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படாமை நமது கல்வியாளரின் பலவீனமேயாகும். இந்நூற் கட்டுரைகளில் இனவாத ஆய்வாளர்களை இனங்கண்டு காட்டியிருப்பது குறிப்பிடத்தக்க சிறப்பியல்பாகும்.

மொழிநூல் அடிப்படையில் வரலாறு, மானிடவியல், மக்கட் பண்பாட்டியல் முதலிய ஆய்வுத் துறைகளின் தரவுகளைத் துணைக்கொண்டு "விஞ்ஞான" ரீதியாகக் கருத்துக்களைத் தெரிவித்த கால்டுவெல் பாதிரியாரும் சரி, அவர் நிறுவிய 'மதத்தின்' ஞான பரம்பரையினரும் சரி, பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்துத் தமிழ் இலக்கியங்களினதும் தமிழ் மக்களினதும் தொன்மை பற்றிய சர்ச்சைகளுக்கு வழி வகுத்த ஆசிரியர்களும் சரி, கடந்த ஒன்றேகால் நூற்றாண்டாக நடம்பட்ட வழியிலேயே நடந்து வந்திருக்கின்றனர்: தமிழிலக்கியத்தின் தொன்மையைத் தோற்றமறியாக் காலத்திற்குக் கொண்டு செல்லல், ஆரியத்துக்கும் தமிழுக்குமுள்ள வேறுபாடுகளை மிகையழுத்தமாகக் கூறுதல்; பழந்தமிழ் நூல்கள் சென்றொழிந்த பொற் காலம் ஒன்றைச் சித்திரிப்பன என்று ஓயாது எடுத்துரைத்தல்; இவையே பெரும்பாலான தமிழ் அறிஞர்களின் பயபக்தியான பணியாக இருந்து வந்திருக்கின்றன. சுந்தரம்பிள்ளையிலிருந்து வரதராசனார் வரையில் புகழ்பெற்ற தமிழறிஞர்கள் தமிழாய்விலும் பார்க்க தமிழபிமானத்தையே ஏற்புடைமைக்கு அளவுகோலாகக் கொண்டியங்கினர். மாறுபட்ட கருத்துடையோரை மாற்றார் என்றும், திறனாய்வுப் போக்குடையோரைத் துரோகிகள் என்றும், பகுத்தாயும் பண்புடையோரைப் பார்ப்பனதாசர்கள் என்றும் பட்டஞ் சூட்டுவது இவர்களது பழக்கம். கருத்தொற்றுமையே அறிவுடைமைக்குச் சான்று எனக்கருதும் சூழலிலே சுகங் கண்ட இவர்கள் உழைப்பின்றியே உயரிய மதிப்பைப் பெற்றனர்.

இப்பெரும் போக்கிலிருந்து சற்றே விலகி, எஸ். வையாபுரிப்பிள்ளை, ஏ. வி. சுப்பிரமணிய அய்யர், வெ. இராமலிங்கம் பிள்ளை, பொ. திருகூடசுந்தரம், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், மயிலை. சீனி. வேங்கடசாமி, வி. ஐ. சுப்பிரமணியன், இரா. நாகசாமி முதலியோர் அவ்வப்போது சிற்சில நூல்களும் கட்டுரைகளும் எழுதியுள்ளனர்,

வாதங்களும் நிகழ்ந்திருக்கின்றன. புதியதலைமுறையைச் சேர்ந்த பிறநாட்டுத் தமிழாய்வாளர்களான அந்திரனோவ், ஆஷர், ஃபிலியோஸா, சுவலபில் ஆகியோர் சாழ்ப்புகளைக் கடந்து நின்று கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இவை நம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகளே. ஆயினும் ஒட்டுமொத்த மாக நோக்குமிடத்து, அதிகாரமும் செல்வாக்குமுடைய தமிழறிஞர்களின் ஆராய்ச்சி அடிப்படை, தொன்மை= பெருமை, தனித்துவம்=பெருமை, மாறுமை = பெருமை ஒப்புமையின்மை=சிறப்பு என்ற வாய்பாடாகவே இருந்து வந்திருப்பது தெளிவு.

இந்நூலிலுள்ள கட்டுரைகளைக் கருத்தூன்றிப் படித்த பொழுது, மேலே விவரித்த வரலாறு தவிர்க்க இயலாதபடி என்மனத்தில் விரிந்தது. கடந்த கால்நூற்றுண்டுக் காலத்தில், பொதுவாகத் தமிழிலக்கியத்தையும் சிறப்பாகச் சங்க நூல்கள் என விவரிக்கப்படும் சான்றோர் செய்யுட்களையும் அவற்றுக்கு விவரணமாயும் விளக்கமாயும் அமைந்த தொல்காப்பியத்தையும், மேலே குறிப்பிட்ட வாய்ப் பாடு முறையிலன்றி வரலாற்றியல், சமூகவியல் நோக்கில் அணுக முயன்றிருக்கின்றனர் சில எழுத்தாளர்கள். சாமி. சிதம்பரனார், தொ. மு. சிதம்பர ரகுநாதன், எஸ். இராம கிருஷ்ணன், நா. வானமாமலை. கா. சிவத்தம்பி ஆகியோரை இவ்விடத்திலே விதந்துரைத்தல் வேண்டும். எனினும் இவர்களுள்ளும் இரண்டொருவரே முறையான நுண்ணாய்வுகளை மேற்கொண்டனர். ஏனையோர் பொதுப்பட, வரலாற்றியல் பொருள் முதல்வாத அணுகு நெறிநின்று பழந்தமிழ் நூல்களின் பண்புகள் சிலவற்றை எடுத் துரைத்தனர். மார்க்சீயத்தின் ஒளியில் அடிப்படைக் கருத் துக்கள் சிலவற்றைத் தமிழிலக்கியங்களிற் காணப்படும் உதாரணங்களுடன் விவரித்தனர். பல்வேறு பணிகளுக் கிடையில் இத்தகைய ஆய்வுகளை ஓய்வுநேர முயற்சியாகக் கொண்டனர் எனக் கூறுவதில் தவறிருக்காது.

இப்பொழுது தமிழ் நாட்டிலும் இதர மாநிலை

களிலும் இலங்கையிலும் பல்கலைக்கழக மட்டத்தில் தமிழியல் ஆராய்ச்சிகள் பல்கிப் பெருகி வருகின்றன. பண்டைய புறப்பாடல்களிலிருந்து இன்றைய புதுக் கவிதைகள் வரையில்—இம்மென் கீரனார் முதல் இன்குலாப் வரை—பல்வேறு இலக்கியகர்த்தாக்கள் மாணாக்கரின் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 'சனத்தொகைத் திடீர்ப் பெருக்கம்' என்று பொருளியல்வாதிகள் கூறுவதைப் போல், தமிழ்க்கல்வி நிலையங்களில் தற்சமயம் 'ஆராய்ச்சித் திடீர்ப்பெருக்கம்' ஏற்பட்டு வருகிறது அறிவுலகம் இதுகுறித்து அகமகிழக்கூடிமாயினும், நடைமுறையில் இவ்வாய்வுக் கட்டுரைகளில் அனேகமானவை மேமெழுந்த வாரியானவையாயும், கூரிய நெறிமுறைப் படாதனவாயும், 'கூறியது கூறல்' என்னும் குற்றத்திற்கு இடந்தருவன வாயும் இருக்கின்றன. உண்மையில், ஆய்வுக் கட்டுரைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளபோதும் அவற்றிற்கு இன்றியமையா நெறிதவறா நேர்மையும் ஒழுங்கு முறைக் கண்டிப்பும் அவசியமான அளவிற்கு வளர்ச்சி யடையவில்லை என்றே கூறத்தோன்றுகிறது. நுனிப்புல் மேய்தலும், கிளிப்பிள்ளை மனப்பான்மையும், பட்டியல்கள் தயாரிக்கும் பயிற்சியும், எதிர்நோக்க வேண்டிய— தீர்வுக் குரிய பிரச்சினைகளிற் பட்டும் படாமலும் நழுவிவிடும் 'பண்புடைமை'யும், யாவற்றுக்கும் மேலாக நெஞ்சறியப் பொய்தழுவும் போக்கிலித்தனமும் ஆராய்ச்சி நிலையங் களில் அங்கீகாரம் பெறும் இந்நாட்களில், இந்நூலாசிரிய ரைப் போலச் சிலரேனும் விஞ்ஞான பூர்வமான விசாரணை களை மேற்கொள்வது விசேடமாகப் பாராட்ட வேண்டிய தொன்றாகும்.

இந்நூலிலுள்ள கட்டுரைகளில்வழக்கமான வாய்ப்பாடு களையும் வக்காலத்துகளையும் நாம் காணவியலாது மாறாக, பழந்தமிழ் நூல்கள் வாயிலாக நாம் அறியவரும் நிறுவனங் களும் இலட்சியங்களும் சிந்தனைகளும் தத்துவங்களும் ஏன் எழுந்தன? எவ்வாறு உருப்பெற்றன? எத்தகைய மாற்றங்

களை அடைந்தனர் என்னும் அடிப்படையான வினாக்களை எழுப்பி அவற்றுக்கு ஏற்ற விடைகளையும் விளக்கங்களையும் அளிக்க முயலுவதைக் காண்கிறோம். இக்கட்டுரைகளின் சுருக்கத்தைக் கூறுவது என் நோக்கமன்று. வாசகர்கள் ஆற அமரப் படித்துச் சிந்தித்துத் தெளிய வேண்டிய பல விஷயங்கள் இந்நூலிற் பொதிந்துள்ளன. இவ்விடத்தில் இரண்டொரு எடுத்துக்காட்டுகளை மாத்திரம் சுட்டிச் செல்வேன்; சங்க காலத்தைப் பற்றி எப்பொழுதும் எழுதிக் கொண்டிருக்கும் தமிழாசிரியர்கள் அக்காலப் பகுதியிலே புலவர்களுக்கும் மன்னர்களுக்கும் இருந்த நெருங்கிய உறவைப்பற்றியும், மன்னருக்கு அறிவுரை கூறிய புலவரின் மாட்சியையும், புலவருக்கு வாரி வழங்கிய மன்னரின் மேன்மையையும் பரவசத்துடன் விவரிப்பர். அப்பொருளை ஆராயும் இந்நூலாசிரியர் அக்காலத்தில் நிலவிய அரசியலையும் பொருளாதாரத்தையும் ஆதாரமாகக் கொண்டு மன்னர் புலவர் இருசாராருக்குமிருந்த சிறப்பான தொடர்பை விளக்குகிறார். புலவர்களின் பிரசார ஆற்றலையும் அமைவுற நிரூபிக்கிறார். "யாதுமூரே, யாவரும் கேளிர்" என்ற பாடலடியை எடுத்தாளாத எழுத்தாளர் இல்லை. ஒருமைக் கோட்பாட்டை அது குறிக்கிறது என்று சிலர் பெருமைப்படுவர். அவ்வாறு விரித்துரைக்கவும் அவ்வாக்கியம் இடம் தருமென்பது உண்மையே. ஆயினும், அது பாடப் பெற்ற காலத்து நிலைமையாது? இரத்த உறவுகளை அடிப்படையாகக் கொண்ட குலங்கள் இருந்த காலம் ஒன்றிருந்தது. 'தமர்', 'பிறர்' என்ற பாகுபாடு அவ்வேளையில் வழக்கிலிருந்தது. ஆனால் உற்பத்தித் துறையில் உண்டாகிய மாற்றங்களினால் சமூக அமைப்பிலும் மாற்றங்கள் உண்டாகியபொழுது உறவு முறைகளும் உருமாறுகின்றன. "பொதுவான பொருளாதாரக் குறிக்கோள்களால் மாத்திரமே இணைக்கப்பெற்று, அருகருகே வாழும் பிராந்தியச் சமூகங்கள், இரத்த உறவை அடிப்படையாகக் கொண்டிருந்த குலங்களை ஒதுக்கித் தள்ளின" அத்தகைய சூழ்நிலையிலேயே, "எல்லாம் நமது ஊரே; எல்லாரும் நமது உறவி

னரே" என்ற குரல் ஓங்கி ஒலிக்கத் துவங்குகிறது. இவ்வாறு உதாரணங்களைக் காட்டிக் கொண்டே போகலாம். பழந் தமிழ் இலக்கியங்களிலே சித்திரிக்கப்படும் வீரம், கொடை, காதல், கற்பு, தியாகம், பக்தி, வாய்மை, நற்பண்பு, ஒழுக்கம் முதலிய உயர் "இலட்சியங்கள்" எத்தகைய சமூக அமைப்பிலே என்ன அர்த்தத்தில் வழங்கப்படுகின்றன என்பதையெல்லாம் வரலாற்றடிப்படையில் நுட்பமாக விளக்குகிறார் ஆசிரியர்.

எடுத்துக்கொள்ளும் விஷயத்தைத் தருக்க ரீதியாக விவரித்து விளக்குவதற்குப் பெரிதும் துணை செய்வது ஆசிரியர் கைக்கொள்ளும் அணுகு நெறியேயாகும். சரித்திர வியல் பொருள் முதல்வாதமே அந்த அணுகுநெறி. அதாவது சமுதாயமானது அதனுடைய நியதிகளின்படி தொடர்ந்து வளர்ந்து கொண்டும் மாறிக்கொண்டும் இருக்கிறது என்ற அடிப்படையைப் பிரமாணமாகக் கொண்டு ஆசிரியர் நிறுவனங்களையும் கருத்தோட்டங்களையும் இயங்கியல் ரீதியில் அலசியிருக்கிறார். நான் மேலே விவரித்த தமிழ் ஆர்வலர்கள் இலக்கியங்கள் காட்டும் சிந்தனைகள் எக்காலத் துக்கும் பொருந்துவன என்றும், தனித்த வாழ்க்கை அவற்றிற்கு உண்டென்றும் எண்ணுவர். அதனால் வரலாற்றி லிருந்து விரும்பியோ விரும்பாமலோ இலக்கியத்தையும் அதற்கு ஆதாரமாயுள்ள தத்துவத்தையும் பிரித்து விடு கின்றனர். ஆனால் இந்நூல் ஆசிரியர் சிந்தனைகளைச் சரித்திரத்திலிருந்து பிரிக்காமல் பரிசீலித்திருக்கிறார். இந் நூலிற் காணப்படும் சிறப்பியல்புகள் சிலவற்றைக் குறிப்பிடுதல் மிகையாகாது.

ஒன்று: உற்பத்தி உறவுகளினடியாக உருவாகும் பொருளாதார அமைப்பே ஒரு சமூகத்தின் அத்திவாரமாய் உள்ளது. அதாவது பொருளாதார அமைப்பே அடித்தளம். அதன்மீது பல்வேறு மேல்தளங்கள் அமைகின்றன: சமூக உறவுகள், கருத்துக்கள், நிறுவனங்கள், தத்துவங்கள் ஆகியன உருவாகின்றன. மார்க்சிய மூலக்கருத்துக்களில்

ஒன்று இதுதான். "பொருளாதார அடித்தளமே, சமூகத்தின் கருத்து வகைகளை அதாவது, சமூகத்தினுடைய சித்தாந்த மேற்கட்டுக்கோப்பை, (அரசியல், சட்ட, சமய, தத்துவார்த்த, கலை இலக்கியக் கருத்துக்களை) நிர்ணயிக்கின்றது" உலகளாவிய பொதுவிதியாக மார்க்ஸ் இவ் வடிப்படைக் கருத்தைக் கூறினார். ஆனால் அடித்தளத்துக்கும் மேல்தளத்துக்குமுள்ள தொடர்பும் உறவும் ஒன்றுக்கொன்று சமானமாக யாந்திரீக முறையில் கட்டிறுக்கமாய் அமைந்தன அல்ல என்பதையும் மார்க்சீய முதல்வர்கள் வற்புறுத்தத் தவறவில்லை. எங்கெல்ஸ் இது சம்பந்தமாக ஒரு சந்தர்ப்பத்திலே கூறியது நினைவு கூரத்தக்கது.

> "......... இறுதியிலும் இறுதியாய், மூலத்துக்கு மூலமாய், வரலாற்றை நிர்ணயிக்கும் அமிசம் பௌதீக வாழ்க்கையின் பொருள் உற்பத்தியும், அதன் மறு உற்பத்தியுந்தான். இதனைத் திரித்துக் கொச்சைப்படுத்திப் பொருளாதார அமிசம் ஒன்றே ஒன்றுதான் வரலாற்றை நிர்ணயிக்கிற அமிசம் என்று யாராகிலும் ஒருவர் சொன்னால் அவர் மார்க்சின் கூற்றை பொருளற்ற, சூக்குமமான, அபத்தமான சொற்றொடராக மாற்றிவிடுகிறார் என்றே கூற வேண்டும். பொருளாதார நிலை என்பது அடித்தளம், ஆனால் மேல் தளத்தைச் சேர்ந்த பல்வேறு அமிசங்கள் வரலாற்றுப் போராட்டங்கள் எத்திசையிலே எந்தப் போக்கிலே செல்வது என்னும் விஷயத்திலே தமதுசெல்வாக்கைக் காட்டத்தான் செய்கின்றன. பல சந்தர்ப்பங்களில் அப்போராட்டங்களின் வடிவத்தைத் தீர்மானிபபதில் அவையே பிரதானபங்கு கொள்கின்றன. இந்த மேல்தளத்து அமிசங்கள் எல்லாம் சேர்ந்து செயல்பட்டு வினையும் எதிர்வினையும் விளைவித்துக் கொண்டேயிருக்கின்றன. இடையே முடிவின்றிப் பல தற்செயல் நிகழ்வுகள் நிகழ்ந்து கொண்டே

யிருக்கையில், இந்த வினை எதிர்வினைச் சுழலிலே பொருளாதார இயக்கம் ஓர் அவசியத்தேவை என்று தன்னை நிலைநிறுத்திக்கொள்கிறது.”

இயக்கவியல் விதிக்கு இயைய மேல்தளத்து அமிசங்களும் பல கட்டங்களில் அடித்தளத்தை வெவ்வேறு வகையிலும் வடிவிலும் பாதிப்பதை எங்கெல்ஸ் தனக்கேயுரிய முறையில் எடுத்துரைத்திருப்பது கவனத்திற்குரியது. இலக்கியம் மேல்தளத்து அமிசங்களில் ஒன்று என்ற வகையில் கவனமாக ஆராயப்பட வேண்டியது. வரலாற்றில் வலுவுள்ள அமிசமாக அது விளங்குகிறது. இவ்வடிப்படைக் கோட்பாட்டுக்கு உதாரண விளக்கம்தரும் வகையிலே, பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து பல நிறுவனங்களையும் கோட்பாடுகளையும் எடுத்துக்கொண்டு அவற்றின் தோற்றம், வளர்ச்சி, மாற்றம் ஆகியவற்றை ஆராய்ந்திருக்கிறார் ஆசிரியர்: உதாரணமாக, அரசின் தோற்றத்தை முதலாம் அத்தியாயத்தில் வெகு நுணுக்கமாகச் சித்திரித்திருக்கிறார். அதைப் போலவே அடிமை முறை பற்றியும் அரிய பல செய்திகளைக் கூறியுள்ளார். முடியுடை மூவேந்தர் காலத்திலும், பல்லவ சோழர் காலத்திலும் நிலவிய அரசின் இயல்பை அற்புதமான தெளிவுடன் விளக்கியிருப்பது நல்விருந்தாய் உள்ளது. அரசு என்பது ஒவ்வொரு யுகத்திலும் ஆளும் வர்க்கத்தின் கருவியாகவே இருக்கிறது. வர்க்க சமுதாயம் தோன்றிய அந்தக் கட்டத்திலேயே அரசும் தோன்றிவிடுகிறது. அவற்றையெல்லாம் இலக்கியங்களிலிருந்தும் கல்வெட்டுக்களிலிருந்தும் ஏனைய சான்றுகளிலிருந்தும மறுக்கவியலாத முறையில் நிறுவியிருக்கிறார்.

இரண்டு: இலக்கியம் என்பது எந்தக் காலத்திலும் நூற்றுக்கு நூறுவீதம் நேரடியான சமுதாயச் சித்திரம் அன்று. புறவுலகை அதாவது காட்சிகளையும் அநுபவங்களையும் எழுத்தாளர் அப்படியே சொல்லில் வடிப்பதில்லை. அநுபவ முழுமையிலிருந்து தற்செயலான, மேற்போக்கான அம்சங்களையெல்லாம் நீக்கிவிட்டு, அடிப்படையான சாராம்

சத்தை அகஉணர்வில் உரைத்து, வகைமாதிரிக்குப் பொருத்தமான வடிவத்தில் உருவாக்குகின்றனர். இன்னொரு விதமாய்க் கூறுவதாயின், புறநிலைப்பட்ட யதார்த்தத்தை அசநிலைப்பட்ட யதார்த்தமாக மாற்றியமைக்கின்றனர் ஆற்றல் வாய்ந்த எழுத்தாளர்கள். அதனையே இலக்கிய இரசவாதம் என்று கவித்துவ மொழியிற் குறிப்பிடுவர். அம்மாற்றத்தைச் செய்யும்பொழுதே எழுத்தாளருடைய ஆற்றல் மாத்திரமன்றி, வர்க்க தத்துவார்த்தச் சார்புகளும் வெளிப்படையாகவோ அன்றி மறைமுகமாகவோ தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன. இவ்வாறு பார்க்கும் பொழுதுதான் வாழ்க்கைக்கும் கலை இலக்கியத்திற்குமுள்ள இயங்கியல்ரீதியான உறவு புலனாகும். மாவோ ஒரு சந்தர்ப்பத்தில் கூறியது இவ்விடத்தில் பொருத்தமாயுள்ளது.

> "இலக்கியத்திலும் கலையிலும்சித்திரிக்கப்படும் வாழ்க்கையானது, நிஜ வாழ்க்கையினும் மேம்பட்ட நிலையில் இருத்தல் கூடும்; இருத்தல் வேண்டும். அது உண்மையான அன்றாட வாழ்க்கையிலும் பார்க்கச் செறிவுமிக்கதாயும், கூடுதலாக ஒருமுகப்படுத்தப்பட்டதாயும், கூடியளவு வகைமாதிரிக்குப் பொருத்தமானதாயும், இலக்கியல் நிலையை அண்மித்தாயும், இவற்றால் உலக முழுதேற்புடைமைக்கு மிக நெருங்கியதாயும் இருக்கும்"

மனிதனின் சமூக வாழ்க்கையே கலை இலக்கியம் அனைத்துக்கும் ஒரே அடிப்படையாயிருப்பினும், அவை உருவாக்கிக் காட்டும் வாழ்க்கை, கண்ணுரக்காணும் வாழ்க்கையை விட வளமிக்கதாயும் உயிர்த்துடிப்புள்ளதாயும் அமைந்து விடுகிறது. வாழ்க்கைக்கும் இலக்கியத்துக்குள்ள விசேஷமான உறவு இதுதான். சிக்கலான இவ்வுறவின் செயற்பாடு காரணமாவே இலக்கியத்தின் வடிவ வண்ண விகற்பங்களும் வேறுபாடுகளும் மிளிர்கின்றன.

பழந்தமிழ் இலக்கியங்களை ஆராயும் ஒருவர் இவ்

வுண்மையை ஒவ்வொரு கணமும் மனத்திலிருத்திக் கொள்ளுதல் அவசியம். தரவுகளின் துணையோடு ஓரளவு ஆக்கபூர்வமான காட்சித்திறனும் கைவரப் பெற்றவரே கடந்தகாலத்து நிகழ்வுகளை அவற்றுக்குரிய வரலாற்றுப் பின்னணியில் வைத்து நோக்குதல் சாலும். இந்நூலாசிய ருக்கு நான் குறிப்பிட்ட திறமைகள் போதியளவு பொருந்தி யிருக்கின்றன. உதாரணமாக, பல்லவர் காலத்திலே சமயத் துறையிலெழுந்த பக்தி இயக்கம், கலை இலக்கியங்களில் விரூர்ந்த முறையில் வெளிப்பட்டது. பக்தி இயக்கம் தனித் தன்மை வாய்ந்த வழிபாட்டு வடிவத்தையும் அதற்கியைந்த கவிதை உருவங்களையும் தோற்றுவித்தது. ஆயினும் அவ் வியக்கத்தின் பௌதீக அடிப்படையாக வணிக வர்க்கத்தினருக்கும் நிவுடமையாளருக்குமிடையில் நடந்த போராட்டமே அமைந்திருந்தது. இலக்கிய முடுதிரையைக் கிழித்துவிட்டு, பக்தி இயக்கத்தின் சமூக பொருளாதார தத்துவார்த்த காரணிகளைக் கண்டறிந்தாலன்றி அவ்வியக் கத்தின் சாரணமாயும் காரியமாயும் காட்சியளிக்கும் ஆற்றல் மிக்க கவிதைகளை முழுமையாகப் புரிந்து கொள்ள இயலாது. "சங்கம்— மாயையும் உண்மையும்" என்ற கட்டுரையில் இக்கடினமான காரியத்தை ஆசிரியர் கச்சித மாகச் செய்திருக்கிறார்.

சரித்திரவியல் பொருள் முதல் வாத அனுகுநெறியைக் கடைப்பிடிக்கும் சில ஆய்வாளர் பொது நியதிகளைக் கூறி விட்டுத் தமிழுக்கும் அவை பொருந்தும் என்று அமைதி காண்பர். தமிழ் நூல்களையும் ஏனைய சான்றுதாரங்களையும் நுண்ணுய்வு செய்யத் தவறிவிடுகின்றனர். இந்நூலாசிரியர் இலக்கியங்களைத் துருவி ஆராய்ந்து எதிர்த்து வாதாட முடியாத மூல ஆதாரக் கூறுகளின் துணையுடன் தமது முடிவுகளை நிறுவியுள்ளார். அவரது கருத்துத் துணிவிற்கு வேண்டிய கடின உழைப்பு நூலில் ஐயத்திற்கு இடமின்றித் தெளிவாகத் தெரிகிறது.

தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் அண்மையில் எழுதத்

துவங்கியுள்ள இளைய தலைமுறை இலக்கிய ஆய்வாளர்களில் திரு. கேசவனுக்குத் தனி இடமுண்டு. இந்நூலின் பகுதிகள் ஏடுகளில் வெளிவந்தபொழுது ஆசிரியரைத் தேடிப்பிடித்து எனது மகிழ்ச்சியையும் பாராட்டையும் தெரிவித்தேன். என்னுடைய நூல்கள் சில அவருக்கு ஊக்கமளித்திருப்பதைக் காண்கிறேன். ஆராய்ச்சிப் பயணத்தில் மற்ருெரு தோழன் கிடைத்திருப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியே. பல வழிகளில் தனித்துவம் வாய்ந்த இந்நூலுக்கு முன்னுரை எழுத வாய்ப்பு ஏற்பட்டதை மன நிறைவளிக்கும் கடமையாகக் கருதுகிறேன். ஆசிரியரின் முதல் நூல் இதுவே என்றெண்ணுகிறேன். இதனைத் தொடர்ந்து பல ஆராய்ச்சி நூல்கள் வெளிவரும் என நம்புகிறேன்.

22—10—1979 க. கைலாசபதி

# 1. போரும் புதுமையும்

*பண்டைய சமூகப் போர்கள்:*
*காரணங்கள்—முறைகள்—விளைவுகள்.*

பண்டைய இலக்கியங்களைப் படிக்கின்ற போது, அவற்றில் சண்டைகள்—போர்கள் பற்றிய செய்திகள் அதிகம் காணப்படுகின்றன. அக்காலத்தில் வாழ்ந்த மக்களிடத்து வீரஉணர்வுகள் மிக்கிருந்தது என்பதை அறிகிறோம். போர் என்றாலே மறவர்கள் மிகவும் விருப்பத்தோடு ஈடுபடுவார்கள் (புறம்31); போரைவிரும்பி எதிர்நோக்கும் சிவந்த கண்களுடைய வீரர்கள் பற்றி அகம் கூறுகிறது (அகம்157); போர்க்கு விரைந்து வருக எனத் தலைவன் சொல்லியனுப்பியவுடன் விரைந்து வரும் கால்களையுடைய மறவனைப் பார்க்கிறோம் (புறம் 289); பண்டைக்கால ஆடவர்கள் மட்டுமின்றிப் பெண்டிர்களும் வீரவுணர்வு மிக்கு இருந்ததாக அறிகிறோம். தம் தலைவன் ஈடுபட்டு வெற்றி பெறுவதற்குப் போர்கள் ஏற்படவேண்டும் என மகளிர்களே விரும்புகின்றனராம்.

> "என்னையும்
> ஓ வேந்தனொடு
> நாடுதரு விழுப்பகை எய்துக எனவே" (புறம் 306)

தன் தந்தையும் கணவனும் நெருநல் போர்களிலே செத்து மடிந்த பின்னும் தன் ஒரே மகனுக்கு வெள்ளுடை உடுத்தி வேல் கை கொடுத்து அனுப்புவதாக ஒரு பாடல் கூறுகிறது (புறம் 279); தன் கணவன் மார்பில் புண்பட்டு இறக்க,

அதைக்கண்டு மகிழும் மனைவியரைப் பார்க்கிறோம் (புறம் 288—291); தன்மகன் போரில் புறமுதுகு காட்டாது, மார்பில் புண்ஏற்று விழுப்புண்ணோடு வீழ்ந்து பட்டதைக் கண்டு களிப்படைந்து வாடு முலையிலும் பால் சுரந்த தாயைக் காண்கிறோம (புறம் 295); போர் வீரர்கள் பரம் பரையாகவே ஒரே தலைவனின் குடும்பத்திற்குப் போர் புரிந்த நிலமையையும் காண்கிறோம் (புறம் 290). இத்தகைய நேரங்களில் வஞ்சினங்கள்—சூளுரைகள்—மேற்கொள்வதை யும் காண முடிகிறது. முதல் நாள் போரில் தன் தமையனை எதிரி வீரன் கொன்று விட, அந்த எதிரியைக் கொல்வேன் என உறுதியெடுக்கும் வீரனைப் பார்க்கிறோம் (புறம் 300); அந்த எதிரி வீரனை மட்டுமல்லாமல் அவன் தம்பியையும் சேர்த்துக் கொல்வேன் எனப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஒரு வீரன் சபதம் எடுக்கிறான்.

> "நெருநை
> என்முன் தப்பியோன் தம்பியோ டொருங்கு
> நாளைச் செய்குவன் அமரென." (புறம் 304)

என்ற பாடல் வரிகளிலே இதைக் காண்கிறோம். வீரர்கள் மட்டுமின்றி வேந்தர்களும் உறுதியெடுத்ததாக அறிகிறோம். [ஒல்லையூர்தந்த பூதப் பாண்டியன் (புறம் 71); நெடுஞ் செழியன் (புறம் 72) நலங்கிள்ளி (புறம் 73) ] சிறுகுழந்தை கள் ஐம்படைத்தாலி அணிந்திருந்தனர் என அறிகிறோம் (புறம் 77) சங்கு, சக்கரம், கதை (தண்டாயுதம்) கடகம் (வாள்) சார்ங்கம் (வில்) எனும் ஆயுதங்களின் வடிவமாக அமைக்கப்படும் ஆபரணம் பிறந்த ஐந்தாம் நாளில் பிள்ளை களுக்கு அணிவித்தல் மரபு என்பர் டாக்டர் உ. வே சாமிநாதய்யர் (புறம்-உரை-பாட்டு எண் 77)மக்கட் சமூகம் ஒவ்வோர் காலங்களில் பயன்படுத்தியதாக இருக்கக் கூடிய இப்போர்க் கருவிகளின் வடிவங்களைச் சிறு குழந்தைகளுக்கு அணிவிக்கும் பழக்கத்திலிருந்து அப்பருவததிலேயே வீர வுணர்வை ஊட்டி வளர்க்க வேண்டிய அளவிலே சமுதாயக் கட்டமைப்பு இருந்தது என அறிகிறோம். வீரமரணம்

பற்றி நிறைய நம்பிக்கைகள் இருந்தனவாகத் தெரிகிறது. போர்க்களத்திலே விழுப்புண்பட்டு இறப்பவனே வீர மரணம் எய்துகின்றான் என்றும் அவனே நிச்சயமாக 'நோற்ற வன்' என்றும் கருத்துக்கள் உலவியதாக அறிகிறோம் (அகம் 61) இத்தகைய வீரமரணம் வாய்க்கப் பெறாது இறந்து போனால் அவன் உடலைப் பசும்புல் தரையில் கிடத்தி அதனைக் கூறு படுத்திய பின் அடக்கம் செய்யும் மரபு விளங்கியதை அறிகிறோம் (புறம் 93). இதற்கு வேறொரு விதமாக ஒரு மன்னன் எழுதிய பாடல் சான்று பகர்கிறது (புறம் 74). இத்தகைய காலத்திலேதான் 'அடுதலும் தொலைதலும் புதுவதன்று; உலகத்தியற்கை' என்ற குரல் ஒங்கி ஒலிப்பதைக் கேட்க முடிகிறது (புறம்). பொதுவாக, ஆடவர் என்ற சொல்லே வீரர் எனும் பொருள்படவே பயனுக்கு வருகிறது.

ஆண்மை தோன்ற ஆடவர்க்கடந்த (புறம் 242)
படையமைத் தெழுந்த பெரும்சேய் ஆடவர் (அகம் 30)
பொழிலகம் பரந்த பெருஞ்செய் ஆடவர் (புறம் 362)

"ஆடு" எனும் சொல்லே "வெற்றி" எனும் பொருளில் தான் பெரிதும் வருகிறது (புறம் 21; மா. கா. 428; பதிற். 54, 96) எனவே, போரில் வெற்றியுறும் வீரனே 'ஆடவர்' எனுஞ் சொல்லுக்கு உரியவனாகின்றான் எனும் அளவிற்கு வீரம் அக்காலத்தில் வேண்டப்பட்டது என்பதையும் அறிகிறோம்.

ஒரு குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களிடையே உறவு பற்றியும் அக்குடும்பத்தினருக்கும் சமுதாயத்துக்கும் உள்ள உறவு பற்றியும் அவர்கள் கடமை பற்றியும் விளக்கும் பாடல் ஒன்று உள்ளது. அது பின் வருமாறு:

ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (புறம் 321)

"மகனைப் பெற்று வளர்த்து விடுதல் என்னிடத்துக் கடமை யாகும்; அவனை நற்பண்புகளால் நிறைந்தவனுக்குவது தந்தைபால் உள்ள கடமையாகும்; அவனுக்கு வேண்டும் வேலை வடித்துக் கூரிதாக்கித் தருவது கொல்லனது கடமை யாகும்; நல்லொழுக்கத்தைக் கற்பிப்பது நாடாளும் வேந்தனது கடமையாகும்; விளங்குகின்ற வாளைக் கையில் ஏந்திச்சென்று தருதற்கரிய போரைச்செய்து பகைவர் களிற்று யானைகளைக் கொன்று வெற்றியோடு மீளுவது காளையாகிய மகனுக்குக் கடமையாகும்" என்று இப்பாடலுக்கு அவ்வை துரைசாமி பிள்ளையவர்கள் உரை எழுதுவார். (புறம் கழகப்பதிப்பு-பக்கம் 221) தாய், தந்தை, வீரமகன், கொல்லன், வேந்தன் ஆகியோரது சமுதாயக் கடமைகளைச் சொல்லும் போது, சான்றோனுக்குதல் என்ற தந்தையின் கடமையை நற்பண்பு களால் நிறைந்தவனுக்குவது என உரை எழுதுகின்றார். ஆனால் வீரவுணர்வு நிரம்பிய காலத்து நற்பண்புகள் என்பது வீரப்பண்புதான் ஆகும். எனவே சான்றோன் எனில் நற்பண்புகளால் நிறைந்தவன் என்பதைவிட வீரன் என்பதே அக்காலத்திற்குப் பொருத்தமாயிருக்கும். சான்றோர் என்றால் பழைய காலத்தில் வீரர்கள் எனும் பொருளிலே பயின்றிருக்கும் என்பர்[1] மேலும் சிற்சில இடங்களில் சான்றோன் என்பது குணநலன்களையுடையவன் எனும் பொருளில் வந்திருப்பினும் (புறம் 191; புறம் 195), பெரிதும் வீரன் என்னும் பொருளிலே (புறம் 63, பதிற் 58, 67, 14) வந்துள்ளது என அறிகிறோம், இவ்விடத்து "வீரன்" எனும் பொருளையே கொள்வர் உ. வே, சா. அவர்களும். பிற் காலத்தில் சமுதாயத்தில் ஏற்பட்ட நீதிக் கருத்துகளின் அடிப்படையில் சான்றோன் எனின் நற்பண்பாளன் என்று பொருள் வழங்கலாயிற்று. கால வேறுபாட்டையும் அதை யொட்டி எழுந்த கருத்து மாறுபாட்டையும் கவனித்துக் கொள்ளாததனுலே, சான்றோர் என்பதற்கு துரைசாமி அவர்கள் நற்பண்பாளர் என்று பொருள் உரைக்கின்றார், இப்பொருள் அக்காலச் சூழலுக்குப் பொருந்துவதன்று. அடுத்து, வேல்கை கொண்டு போர்க்களத்திற் புகுந்து தப்

திறம்காட்டும் வீரர்களுக்கு மன்னர்கள் பரிசில்களாகப் போர்க் கொள்ளைப் பொருள்களைக் கொடுப்பது வழக்க மாக இருந்தது. அவற்றுள் நிலம் கொடுப்பதே பிரதான மாக உள்ளது. (புறம் 287-297, மலைபடு கடாம் 86-89) எனவே, களிறெறிந்து பெயரும் காளைகளுக்கு வேந்தர்கள் தண்ணடை நல்கல் கடனாக இருக்கலாம். எனவே, இப்பாட்டில்வரும் 'நன்னடை' என்ற சொல்லுக்குப் பிரதிபேதமாகிய தண்ணடை (உ. வே. சா. புறம் உரை பாடல் 321) என்பதையும் மனங்கொண்டால் பாடலின் வரி

"தண்ணடை நல்கல் வேந்தற்குக் கடனே"

என்பதாக இருக்கலாம். உரை மயக்கங்களையும் பிரதி பேதங்களையும் கணக்கில் எடுத்துப் பார்த்தால் இப்போது இப்பாடலின் பொருள் நமக்குத் தெளிவாகிறது.

> "தாய்பெற்றுத் தருகிறாள்; தந்தை வீரனாக்குகிறான்
> கொல்லன் வேல்வடித்துத் தருகிறான்: மகன் (வீரன்)
> போர்க்களத்தில் களிறெறிந்து பெயர்கிறான்; வேந்தன்
> வீரனுக்குப் பரிசிலாக நல் நிலங்களை-வயல்களைத்
> தருகிறான்"

இதிலே கூறப்பட்டிருக்கும் அனைத்துக் கடமைகளும் போரோடு சம்பந்தப் பட்டுள்ளவையாக இருக்கக் காணலாம். போர் சமுதாயக் காட்சியாக விளங்கும் சமுதாயத்தின் நிலைமையைக் காட்டும் வகை மாதிரியான பாடலாக இது விளங்குகிறது. எனவே ஒட்டு மொத்த மாகப் பார்க்கும்போது, பண்டையகால மக்கட் சமுதாய வாழ்வில் ஏற்படக் கூடிய செல்வம், புகழ், அதிகாரம், செல்வாக்கு, சிறப்பு ஆகிய அனைத்திற்கும் அடிப்படை யாகப் போர்கள் விளங்கின என்று பார்க்கிறோம். போர் களினால் ஏற்படும் விளைவுகள் சமுதாயத்தின் உலகியல் நிலமைகளைப் பெரிதும் மாற்றக்கூடிய அளவு இருந்தது என்று தெரிகிறது. இத்தகைய சூழல் நம்தமிழ்ச் சமுதாயத்தில் நாம் என்றென்றும் காணக்கூடிய ஒன்றல்ல.

எனவே ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள்ளே தோற்ற மளிக்கக் கூடிய இத்தகைய உணர்வுகளுக்கும் மறமாண்பு களுக்கும் சண்டைகளுக்கும் காரணங்கள் எவை? எந்த முறையில் அச்சண்டைகள் நடந்தேறின? அதனால் தமிழ கத்தின் வரலாற்றுச் சக்கரம் எத்திசை நோக்கி நகர்ந்தது என்பதைச்சுருங்கிய அளவில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பண்டைய இலக்கியங்கள் எனும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றுள் புறம் பற்றிய பாடல்களைச் சிறப்பாகவும் அகம் பற்றிய பாடல்களுக்குள்ளே பயின்று வரும்கருத்துகளைப் பொதுவாகவும் அடிப்படையாகவைத்து நாம் இக்கட்டுரையை ஆராயலாம். இந் நேரத்தில் இவை எழுந்த காலம் தொகுக்கப்பட்ட தன்மை இவைகளைப் பார்த்தறிய வேண்டியுள்ளது.

இந்தத் தொகை நூல்களெல்லாம் கி. பி 5ஆம் நூற்றாண்டு அல்லது அதற்குப் பிந்தைய நூற்றாண்டுகளிலே தொகுக்கப்பட்டிருக்கலாம் என்பர் அறிஞர்[2]. எவ்வாறு சரியாக 400 பாடல்களைக் கொண்டு ஒவ்வொரு நூலையும் தொகுத்தனர் என்பது குறித்தும் தொகுத்தவர்களே சில பாடல்களை எழுதிச்சேர்த்தனரா என்பதுகுறித்தும் இன்னும் ஆராயப்பட வேண்டிய செய்திகள் உள்ளன. ஆனால் ஒன்று சொல்லலாம். ஒரு தொகுப்பில் உள்ள அனைத்துப் பாடல்களும் ஒருகுறிப்பிட்ட காலத்தில் பாடியவை அல்ல. பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட திணை, துறை கோட் பாடுகளை அளவு கோலாக வைத்துத் தொகுக்கப்பட்ட பழம் பாடல்கள் அனைத்தும் ஒரே காலத்தில் உருவானவை என்று சொல்லுதல் இயலாது. பாடலின் கருத்துக்கள், மொழி, நடை, உவமைகள், பின்னணிக் காட்சிகள், வேற்றி னக்கலப்புகள் ஆகியவற்றை வைத்துக் கொண்டு ஒரே தொகுப்பு நூல்களுக்குள் உள்ள பாடல்களையெல்லாம் கால வரிசைப்படுத்த வேண்டும் என்றால் அது இயலாத செயலும் அன்று.

உதாரணமாக, மிகைப்படுத்தல் இயல்பு பேரளவு

குறிப்பிருப்பதும் நாம் இக்கட்டுரைக்குப் பெரிதும் சான்றாகப் பயன்படுத்தப் போவதுமான புறநானூற்றை எடுத்துக்கொள்வோம். பாட்டுடை மக்களாகிய அரசர்கள் குறுநில மன்னர்கள் கிழார்கள் ஆகியோரின் அடிப்படையில் தொகுக்கப்பட்டதாகவும் தெரிகிறது(புறம்2—35 மூவேந்தர் கள்; 87-181 குறுநில அரசர்கள்; 196-229 மூவேந்தர்கள்; 368-400 மூவேந்தர்களும் குறுநில அரசர்களும் கலந்து வருதல்). பாடு பொருளின் கருத்துகளின் அடிப்படையில் வரிசைப் படுத்தியதாகவும் (கையறுநிலை 112-120;217-227; 230-243) தெரிகிறது. அதேநேரத்தில் புறநானூற்றின் மைய நீரோட்டத்தில் 269 முதல் 358 வரையிலான பாடல்கள் கொஞ்சம் விலகிக் காணப்படுகிறது. பழம்பாடல்கள் சில வற்றுள் விரவிக் காணப்படும் ஆரிய நம்பிக்கை ஆரிய வழிபாட்டுக் கருத்துக்கள் அங்கே சிறிதுமில்லை. வீரமய மான போட்டி உணர்வுகளும் வீரச்சாவுகளும் அங்கே மலிந்து கிடக்கின்றன. அங்கே இரத்தக் கலப்பு உறவு முறைகளின் பரிபூரணமான சிறப்பைக் காண்கிறோம். உரிமைகளுக்காகச் சகோதரர்கள் தங்களுக்குள்ளேயும், தகப்பன் மகனுக்குள்ளேயும் ஏற்படும் மோதுதல்களை நாம் காண முடியாது. பிசிராந்தையார் பாடலில் வருவதைப் போன்ற வரியமைப்பு நெறி முறைகளே கிடையாது. எல்லாக் குழுக்களிடமிருந்தும் வீரர்கள் திரள்வதைப் பார்க்கிறோம். புறநானூற்றில் வரும் ஏனைய பாடல்களுக்கும் இதற்கும் பாடுபொருளுக்கும் பாடு முறைக்கும் வேற்றுமை காணப்படுகிறது. இவைகள் அரசு எனும் அமைப்பே தோன்றாது அல்லது மிகக் கருவிலே இருக்கும் நேரத்திலே பழைமையான கூட்டுச் சமுதாயத் தின் வாழ்நெறிகளைத் தெரிவிக்கும் பாடல்களாக இருக்க லாம். இயற்கையின் மடியிலே தவழ்ந்து, கிடைத்த பொருள் களையெல்லாம் எல்லோரும் பங்கிட்டுக் கொண்ட சமுதாயத்தின் பாடல்களாக இருக்கலாம். இவை "தமிழகம் எனும் பிரதேச உணர்வோ அதன் எல்லை களாகப் பிற்காலத்தில் உருவான 'வடவரை தென்குமரி'

என்ற வரையறைகளோ தோன்றாத காலத்தில் பாடியதாயிருக்கலாம். அல்லது அத்தொன்மையான காலத்து நிகழ்ச்சிகளை "நினைவு கூர்ந்து" மரபு ரீதியாகவும் பாடியதாயிருக்கலாம். சுருங்கச் சொன்னால் இவை தொன்மைக் காலத்திய செய்திகளைத் தெரிவிக்கும் பாடல்களாக இருக்கலாம். காலவரன் முறையெலாம் இலக்கியத்தில் மயக்கமுற்று இருப்பதினாலேதான் நம் வரலாற்றைச் சரியான முறையில் கணிக்க முடியாமற் போய்விடுகிறது எனவே காலவரன் முறைப்படி புறநானூற்றை வரிசைப்படுத்தினால் முதலில் இப்பாடல்கள் இடம் பெறலாம். அதற்குப் பின்னர் குறுநில மன்னர்கள், கிழார்கள், பொதுவான செய்திகள், மூவேந்தர்கள் ஆகியோரைப் பற்றி வரலாம். இம் மாதிரியான வரலாற்று முறையில் தொகுப்பு நூல்கள் அமைந்தால் சமுதாய வரலாற்றை நுனித்து நோக்குவோர்க்கு இலக்கியம் அதற்குரித்தான முறையில் பயன்படும். ஆனால் புறத்தின் தொகுப்பு அவ்வாறு அமையாது, முதலும் முடிவும் மூவேந்தர்களைப் பற்றியதாகவும் இடையிலே ஏனையோர்களைப் பற்றியதாகவும் காணப்படுகிறது. இதிலே மிகவும் முக்கியத்துவம் பெற்றிருப்பவர்கள் மூவேந்தர்கள். பொதுவாகத் தொகுப்பு நூல்கள் தோற்றம் களப்பிரர்கள் காலத்துக்குப் பின்னேதான் எழுகிறது. பாண்டியன் குடக்கோனின் எழுச்சியிலிருந்து களப்பிரர்கள் அஸ்தமிக்கின்றனர். அதற்குப் பின்னே, தமிழ்ப் பரம்பரை மன்னர்கள் ஆளத் தொடங்கும்போது, அம்மன்னர்களுக்கு இலக்கிய அந்தஸ்து தேவைப்படும்போது அன்றைய நேரத்தில் உதிரிகளாக இருந்த பாடல்களை யெல்லாம் தொகுத்திருக்கலாம். அப்படித் தொகுக்கும்போது, மூவேந்தர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அவர்களைப் புறநானூற்றின் 'முதலும் முடிவும்' ஆன பாட்டுடைத் தலைவர்களாக ஆக்கியிருக்கலாம். ஆயினும் இதுபற்றி இன்னும் விரிவாகப் பார்க்க இது சந்தர்ப்பமன்று.

பண்டை இலக்கியங்கள் காட்டும் போர்களின் விபரங்களைப் பார்ப்போம். இது போர்களின் காரணங்களை

ஆராய வெகுவாக உதவக்கூடும். வீரை எனுமிடத்தை ஆண்ட வேளியன் தித்தன் (நற் 58) உறையூரைச் சேர்ந்த இளையர் இனச் சேந்தனோடு மோதி வெற்றி பெறுகிறான் (அகம் 122—137); வேளியன் தித்தன் மகன் தித்தன் வேளியன் போர்வை எனுமிடத்தை ஆளும் பழையர் இனத் தலைவனை வெல்கிறான்; சுயேச்சையாக இருந்த பழையன் (அகம் 186) தித்தன் வேளியனின் ஆளுகைக்கு உட்பட்டு (அகம் 326) எயினர் வில்லாளர் இனங்களை அடக்கப் பயன்படுகிறான்; பின்னர் கொங்கர் இனத்தை அடக்கப் பயன்படும்போது (நற் 10) அதில் இறக்கிறான், (அகம் 44); தித்தன் வேளியன் ஆளுகைக்குள் கொணரப்பட்ட ஆயி, நன்னனுடன் போரிடுகையில் இறக்கிறான் (அகம் 209); தித்தன் வேளியன் கழாஅர் பரதவர் இனத்து மத்தி என்பவனைத் தோற்கடிக்கிறான் (அகம் 153); கரிகாலன் வெண்ணி வாயிலில் இரு மன்னர் ஒன்பது வேளிர்களை வென்றடக்குகிறான் (அகம் 55, 246, புறம் 65); வேல்பஃறடக்கை பெருவிறற் கிள்ளியும் நெடுஞ் சேரலாதனும் போரிடுகையில் இருவரும் மாண்டனர் (புறம் 62, 63); பசும் பூண் பாண்டியன் பொதிய மலையை ஆண்ட அதியனை அடக்குகிறான் (அகம் 162); பின்னர் கொங்கர்களை அடக்கும் முயற்சியில் பாண்டியர்களுக்குத் துணைபுரிகையில் மாள்கிறான் (குறுந் 393); இப்பாண்டியன் எவ்வி இனத்தலைவனை வென்று அகுதையை இணைக்கிறான் (அகம் 266); பெருஞ்சேரல் இரும்பொறை அத்தியர் இனத்து அழினியை வென்று அவன் நாட்டை இணைக்கிறான். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இரண்டாம் திதியன், மூன்றாம் எழினி, இருங்கோ வேள், எருமையூரன் உட்பட பல வேளிர்களை வென்றடக்குகிறான்; இளம் பெரும் சென்னி வம்ப வடுகரை வென்று, அரண்நாட்டை இணைக்கிறான் (புறம் 375); காரி என்பவன் சேர அரசனுக்காக, கொல்லிமலை வல்வில் ஓரியை வெல்கிறான் (அகம் 209); இக்காரியைத் தமக்குத் துணையாக வைத்துக்கொள்ள மூவேந்தரும் விரும்புகின்றனராம் (புறம் 122); கரிகாலன், வடவர், அருவர், கருநாடர், பொதுவர், ஆகிய இனத்தலைவர்களை

வெல்கிறான். இவ்வாறு பல குலத்தினர்கள் தங்களுக்குள் முட்டி மோதிக்கொண்ட நிகழ்ச்சிகள் பெரிதும் நம் பண்டைய இலக்கியங்களை ஆக்ரமித்துக் கொண்டுள்ளன. இக்குலத்தினர்கள் முட்டி மோதிக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன என்பது பற்றிய விளக்கம் நமக்கு வேண்டுமானால், அந்தக் குலங்களின் சமூக நிலைமைகளையும் மாற்றங்களையும் கொஞ்சம் விரிவாகப் பார்ப்பது மிகவும் அத்தியாவசியமாகிறது.

பண்டைய காலத்திலே மானிட சமூகம் சிறுசிறு குழுக்களாக வாழ்க்கை நடத்தியது. தங்களுக்குத் தேவையான பொருள்களைத் தாங்களே தேடிக்கொண்டனர். உழைப்புப் பிரிவினை சமமாக இருந்தது. ஆண்கள் வேட்டையாடினார்கள்; உணவுப் பொருள்களைச் சேகரித்தனர்; போர் செய்தார்கள்; பெண்கள் வீட்டைக் கவனித்தனர்; உணவு, துணி தயாரித்தனர்; அந்தத் துறையில் அவரவர்களே மேலோங்கியிருந்தனர்; அவரவர்கள் பயன்படுத்தும் பொருள்கள் அவரவர்களுக்குச் சொந்தமாக இருந்தது. வேட்டையாடிய பொருள்களையும் இயற்கை உணவுப் பொருள்களையும் சேகரித்து எல்லாவற்றையும் பொதுவில் அனுபவித்தனர். இந்நிலையை மானிடவியலாளர், உணவு சேகரிக்கும் நிலை (FoodgatheringStage) என்பர். பிராணிகளைப் பெருமளவில் பயன்படுத்தினாலும் அவற்றை எவ்விதத்தும் கட்டுப்படுத்தத் தெரிந்திருக்கவில்லை. அவற்றை வளர்க்கவோ வேறு விதத்தில் பயன்படுத்தவோ இன விருத்தி செய்யும் முறையையோ அறிந்திருக்கவில்லை. வீட்டுக்குக் கொண்டு பழக்கும் மிருகங்களை மனிதன் காட்டில் கண்டான். அதற்குப் பின் கால்நடைகளை வளர்ப்பதற்குக் கற்றுக்கொண்டான். கொஞ்சம் கொஞ்சமாக அதையே பிரதான தொழிலாகக் கொண்டான். கால்நடை வளர்க்கும் குலங்கள் அதிகப் பொருள்களை உற்பத்தி செய்தது. கால்நடைகள் பலவிதங்களில் பயன்பட்டன. உணவாகவும் போக்குவரத்து சாதனமாகவும் துணி தரும் மூலப் பொருளாகவும் பயன்பட்டன. இதற்கு முந்தைய

காலகட்டத்தைவிட இப்போது பண்டமாற்று அதிக மாகியது. கால் நடைகளே சமூகத்தில் மதிப்புள்ள பொரு ளாகியது. எருமை மாடுகளைச் செல்வமாகக் கருதி பழம் பாடல்கள் பாடுகின்றன.

நெடுங்கடை நின்று பகடுபல வாழ்த்தி (புறம் 373)
புலரிவிடியற்பகடுபல வாழ்த்தி (புறம் 375)

என்று எருமை மாடுகளை வாழ்த்துகின்றனர். கால் நடை களையே பாடு பொருளாகக் கருதியுள்ளனர் (புறம் 388); கால் நடைகள் பரிசுப் பொருளாகக் கொடுக்கும் அளவுக்கு அதன் மதிப்பு உயரலாயிற்று (புறம் 399) ஆனிரைகள் மாற்றுப்பண்டமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டன. வீரர்கள் ஆனிரைகளைக் கவர்ந்து வந்து அதற்கு கள் ஈடாகப் பெற்ற நிகழ்ச்சிகளைப் புறம் கூறுகிறது. இக்கால்நடைகளுக்குப் புல்வளர்ப்பதும் சிறுதானியங்கள் பயிரிடுவதும் இன்றியமை யாததாகிறது. முதலில் கால்நடைகளுக்காகவே தானியம் வளர்க்கப்பட்டது. அது ஆரம்பத்தில் பெண்கள் பணி யாகவே இருந்தது. எருமையால்—மாடுகளால் இழுக்கப் படும் ஏர் கண்டுபிடிக்கப்படும் வரை இந்த ஆரம்ப கால வேளாண்மை, பெண்கள் நிலைமை உயரக் காரணமாக இருந்தது. மேலும் ஆண்கள் புரியும் வேட்டை, கால்நடைத் தொழில் ஆகியவற்றைவிட இந்த விவசாயத் தொழிலி லிருந்து அதிக உற்பத்தி ஆன சமயங்களில் பெண்களின் நிலைமை சற்று கூடுதல் மதிப்போடு இருந்தது. இத்தகைய சமூகப்பொருளாதார உறவுமுறைகளைக்கொண்டிருந்த இவர் கள், இரத்தக்கலப்பு உறவினர்களாகவும் இருந்தனர். முழுவ தும் ஆயுதம் தரித்த நிறுவனமாக இருந்தார்கள். மக்கட் பெருக்கமும் பொருளாதார வளர்ச்சியும் இந்த நிலங்கள் விரிவடையக் காரணமாயிருந்தது. சுதந்திரமான உரிமை படைத்த இந்தக் கணக் குடும்பங்கள் தாங்களாகவே நட்பு முறையில் ஒருங்கிணைந்து கூட்டுச் சமுதாயமாக ஆகின்றனர். இங்கே போர்கள் கால்நடைகளைக் கவர்வதற்காகவே நடை பெற்றன. வடமொழியில் போர் என்பதற்கு காவிஷ்டி

என்று சொல்வார்கள். அதாவது கால் நடைகளைப் பெறு வதற்கான யாகமே ஆகும். ஒரு கூட்டுச் சமுதாயம் இன்னொரு கூட்டுச் சமுதாயத்தோடு மோதியது. அந்த இனத்தின் செல்வங்களான கால்நடைகளைக் கவர்ந்தது. பிறகு அந்த இனம் போரிட்டு மீட்டது. எனவே ஆநிரை கவர்தலும், மீட்டலும் போர்க்குரிய தலையாய காரணங் களாயிற்று. போர்கள் ஆடவர் தொழிலாயிற்று. இளையரும் முதியோரும் போர் செய்தனர். (புறம் 254) போரின் கொள்ளைகளை அனைவரும் பகிர்ந்து கொண்டனர். தலைவன் போரில் பெற்ற நிரைகளைப் பிறர்க்குப் பகுத்துக் கொடுத்த செயலைப் பற்றி (புறம் 257) இலக்கியம் கூறுகிறது. அந்தக் கூட்டுச்சமுதாயத்தில் உற்பத்தித் திறன்மிகக் குறைவாகவே இருந்தது. எனவே போரில் பிடித்த வீரர்களை என்ன செய்வது? போரில் கைதிகள் கைப்பற்றப்பட்டபோது அவர்களின் சிறப்புத்திறன்களைக்குறித்து அதாவது அவர்கள் பலம், இசையறிவு, வைத்திய அறிவு, கலையறிவு ஆகியவை குறித்து அவர்கள் வெற்றியடைந்த கூட்டுச் சமுதாயங் களால் ஏற்கப்பட்டிருக்கலாம். ஆயின் எவ்வித செழுமைப் பட்டஉற்பத்தித்திறனில்லாது வசதியற்ற கூட்டுச்சமுதாயத் தில் அவர்களுக்கு இடமில்லை. அவர்கள் உழைக்குங் கரங்களாக இருந்திருக்க முடியாது. வேண்டுமானால் உண்ணும் வாய்களாக இருந்திருக்கலாம். எனவே தன்னுடைய தேவைக்கு மேலே மனிதனின் உற்பத்தித் திறனும் அளவும் பெருக வாய்ப் பில்லாத கூட்டுச் சமுதாயத்தில் போர்க் கைதிகளைக் கொல் வதைத் தவிர வேறு எவ்வழியும் இருந்திருக்க வாய்ப்பில்லை.

இந்தக் கூட்டுச் சமூகங்களில் வாழ்ந்த அனைவரும் இரத்தக் கலப்பு உறவினர்கள் கொண்ட அமைப்பால் பிணிக்கப்பட்டிருந்தனர். பிரதேச அடிப்படையில் பிணிக்கப் படவில்லை. அதாவது தமிழகம் எனும் பிரதேச உணர்வு இல்லாத காலத்தில் வாழ்ந்தவர்கள் எனலாம். மிகப் பழைய பாடல்களிலே நாம் இத்தகைய பண்பைக் காண லாம். இவர்கள் தங்களுக்குள் வேறுபாடுகள் வரும்போது ஒரு மன்றத்தில்கூடித் தத்தம் வேறுபாடுகளைப்பேசிக்களைந்து

கொண்டனர் (புறம் 387, 379). இவர்கள் பொதுவாக இனப் பெயர்களாலே அழைக்கப்படுவர். இந்தக் கூட்டுச் சமூகங்களைப் பற்றியே அசோகர் தன் கல்பொறிப்புகளிலே கூறியிருக்கலாம்.

" கடவுளர் விரும்புவனும் காட்சிக்கு இனியவனுமான
மன்னர் நாட்டிலும் எல்லா விடங்களிலும்
அடுத்துள்ள சோழர் பாண்டியர் கேரளபுத்திரர்
தர்ம பண்ணி வரையிலும்..."

என்று அசோகர் கல்பொறிப்பு கூறுகிறது[3] ஆனால் அசோகரது கல்பொறிப்புகளில் காணப்படும் மூவேந்தர்களும் அக்காலத்திலே நன் முறையில் ஸ்தாபிதம் பெற்றுள்ளனர் என்பாரும் உளர் பழைய கூட்டுச் சமுதாயங்களைப்பற்றியே அசோகரது கல்பொறிப்புகள் கூறுகின்றன என்றும் சோழர் பாண்டியர் என்பது இத்தகைய பெயராக இருக்கலாம் என்றும் இதற்குப் பின்னால் உருவான அரசுகளோடு இதைத் தொடர்பு படுத்துவது வரலாற்றுக்கு முரணாகும் என்றும், இதில் கூறப்படும் சோழர், பழையர், சத்திய புத்திரர், கேரள புத்திரர் எல்லோரும் ஐயத்துக்கிடமின்றிப் பழைய கூட்டுச் சமுதாயங்களினரே ஆவர் என்றும் திரு. சிவராஜபிள்ளையவர்கள் கூறுகிறார்.[4] எனினும் இது இன்னும் விரிவாக ஆயத்தக்கது ஆகும்.

இந்தக் கூட்டுச் சமூகத்தில் தங்கள் சொந்த உடன் பிறப்பாளரோடு உரிமைக்காகப் போராட்டம் நடத்திய அசிங்கத்தைக் காண முடியாது. தன் சகோதரனைக் கொன்ற எதிரியைப் பழிவாங்கத்துடிக்கும் வீரனையே காண்கிறோம் (புறம் 300, 304); ஆனால் இந்தக் கூட்டுச் சமூக அமைப்புக்குப் பின் வந்த அமைப்புகளிலே இதைப்பற்றிக் கவலையில்லை. யாரோடு வேண்டுமானாலும் உரிமைக்கு மோதிடலாம். அவர் உற்றார் உறவினராக இருக்கலாம் அண்ணியனாகக்கூட இருக்கலாம். சொந்தத் தந்தையாகவோ தமையனாகவோகூட இருக்கலாம். சொந்தத் தாயத்தினரிடையேகூட மூர்க்கத்தனமான மோதல்கள் வரலாம்.

சோழன் கோப்பெருஞ்சோழனுக்கும் அவர் பரம்பரையினருக்கும் உரிமை காரணமாக மோதல்கள் எழலாம்; கரிகாலனும் அவன் தாயத்தினரும் போர்செய்யலாம்; அத்திமாலைஅணிந்த நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் இடையே உரிமை காரணமாகச் சண்டை மூளலாம்; சேரனுக்கும் அவன் தாயத்தாருக்கும் (பனம்பூ அணிந்தவன்) யுத்தம் ஏற்படலாம் (பதிற் 40); மொத்தத்தில் இப்போதைய போர்க்களம் மாறிவிட்டது. அது பண்டைய புலவன் சொற்களில் சொல்லப் போனால் தமர்பிறர் அறியா அமர் மயங்கும் அழுவம் (புறம் 294) ஆக மாறிவிட்டது. எவ்வாறு பழம் முறையிலிருந்து புதிய முறைக்கு மாறியது என்பதையும் அந்தக் மாற்றத்துக்கான காரணங்கள் எவை என்பதையும் அந்தக் காரணங்கள் எப்படிப் போர்களின் மூலமாக காரியங்களாக முழு வடிவம் பெற்றது என்பதையும் காணலாம். அப்போது தான் அன்றைய தமிழக வரைப்பிலே நடந்தேறிய சம்பவங்களும் அதன் விளைவாக ஏற்பட்ட மாற்றங்களும் புலனாகும். அதுமட்டுமல்ல நம் தமிழக வரலாற்றைப் பற்றிய பொய்மையான கருத்துக்களும் விலகும்.

காலப்போக்கில் பொருள் உற்பத்தி செய்யும் கருவிகளில் ஏற்பட்ட மாற்றம்-குறிப்பாக இரும்பு பயன்படுத்தியதிலிருந்து தமிழகத்தில் ஏற்பட்ட புரட்சி மிக விரிவாகவே மாறுதல்களை ஏற்படுத்தியது. மனிதர்களுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவுகளை மாற்றியமைத்ததோடு மட்டுமின்றி, மனித சமுதாயம் தமக்குள்ளே உள்ள உறவு முறைகளை புரட்சிகரமான முறையில் மாற்றியமைத்தது. தமிழகத்தில் பையம்பள்ளியில் நடந்த அகழ்வாராய்ச்சியின் விளைவாக, ஏறத்தாழ கி. மு. 300 ஆண்டுகளில் இரும்பு பயன்படுத்தப் பட்டதாக அறிகிறோம்[5] தமிழ்நாட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்ட முதுமக்கட்தாழிகளும் இரும்பின் பயன்பாட்டுக்குச் சான்று பகர்கின்றன[6] ஆதிச்சநல்லூரில் அகழ்ந்தெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகளில் இரும்புக் கத்திகள், கூர்வாள்கள், தீட்டிய அம்புகள், சிறு கோடரி, கதிர் அரிவாள்கள், உளி, கைப்பிடியுள்ள இரு

முனைவான், இரும்புத் தூண்டில், நீள் கைப்பிடிக் கரண்டி, மரம் செதுக்கும் கருவிகள் ஆகியவை கண்டு பிடிக்கப் பட்டன (இவை இன்றளவும் சென்னை அருங்காட்சியகத்தில் (museum) பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளன.) சிறு கோடாரி (நவ்வியம்) உளி, கதிர் அரிவாள் போன்றவை தொடக்க கால வேளாண்மைக்கு மிகச்சிறிய அளவில் பயன்பட்டன. பொதுவாக, தென்னிந்தியாவில் இரும்பு பரவலாய்ப் பயன்படுத்தியது கி.மு 5 ஆம் நூற்றாண்டு அளவில் தான் என்பர். முல்லை குறிஞ்சி நிலப்பகுதிகளிலே, காடுகளைச் சரிப்படுத்துவதற்கும் சிறுசிறு தோட்ட வேலை களுக்கும் பயன்பட்டு வந்தது (அகம் 394) நற்284குறுந்221); காளை மாடுகளைப் பயன்படுத்தி வரகு போன்றவற்றைப் பயிரிடுகின்றனர் (புறம் 322); மிகப்பழைய காலத்தில் வரகு, தினை, கொள், அவரை ஆகியவையே உணவாக இருந்தது என்றும் தெரிகிறது.

> "கருங்கால் வரகே இருங்கதிர் தினையே
> சிறுகொடிக் கொள்ளே பொறிகளர் அவரையோடு
> இந்நான் கல்லது உணவுமில்லை..."

என்று ஒரு புலவன் உணவு வகைகளைப் பதிவு செய்கிறான் (புறம் 335). இத்தகைய பொருள்களையோ—புன்செய்ப் பயிர் களையோ—உணவாகக் கொள்ளும்போது பண்டைய கூட்டுச் சமுதாயங்கள் முறையான நீர்ப்பாசான முறைகளை அறிந்திருக்கவில்லை மழைபெய்த நிலத்தில் அதன் ஈரம் உலரும் முன்னரே உழுதுவிட வேண்டும் என எண்ணும் உழவர்களையே காண்கிறோம்.

> " வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவல்
> கார்பெயல் கலித்த பெரும்பாட்டு ஈரத்து
> பூழிமயங்கப் பலஉழுது வித்தி" (புறம் 120)

என இந்நிலைமை எடுத்துச் சொல்லப்படுகிறது. இதை விரிவாகப் பின்னர் ஆராய்வோம்.

வேளாண்மையில் இரும்புக் கருவிகளின் பயன்பாடு அதிகரிக்க அதிகரிக்க உற்பத்தி பெருகிக்கொண்டு போயிற்று. இன்னும் திருத்தமான கருவிகளுடன்மனிதனின் உற்பத்தித் திறனும் புதிதான நிலங்களும் சேர்ந்து கொண்டு உற்பத்தியில் ஒரு பாய்ச்சலையே ஏற்படுத்தியது. இந்தப் பாய்ச்சல் சமுதாய மாற்றங்களையும் உள்ளடக்கிக்கொண்டு வெளிவரலாயிற்று. கால் நடைகளையே தங்கள் இன்றியமை யாத வாழ்க்கை ஆதாரமாகப் பெருமளவில் கருதிய நிலை மாறியது. விலங்குகளைச் சார்ந்திருக்கவேண்டிய ஒட்டுண்ணி நிலையிலிருந்து மனித சமுதாயம் தன்னை விடுத்துக் கொண்டது. பெரிய காட்டில் அலைந்து திரிந்து வேட்டை யாடிச் சேகரிக்கும் பொருள்களைவிடவும், கால்நடைகளை மேய்த்துத் திரிந்து அதன்மூலம் கிடைத்த உற்பத்திப் பொருள்களைவிடவும், சிறிய வன்புலத்தைத் திருத்தமடை யாத கருவிகளைவைத்துக்கொண்டு உழுதுபெற்ற உற்பத்திப் பொருள்களைவிடவும் ஒரே இடத்தில் நிறையப்பொருள்கள் கிடைக்கலாயின. இது எண்ணிக்கையில் பெருகப் பெருக தன்மைரீதியிலே மாற்றம் பெற்ற சமூகத்திற்கு வேளாண்மை வழிகாட்டியது. . கால்நடைகளை வளர்த்தல் என்பது வேட்டையாடி உணவு சேகரிக்கும் நிலையைவிடச் சற்று முன்னேறிய நிலை என்றாலும்கூட, இரண்டு தொழிற் பாடுகளுக்கும் இடம் விட்டு இடம் நகர்ந்து செல்ல வேண்டி யுள்ளது அங்கே மானிட சமூகம் நாகரிக வாசலில் தவங் கிடந்ததே தவிர, நாகரிக உலகில் நுழையவில்லை. அதற்கு வேளாண்மை வழிவிட்டது. மேலும் வேளாண்மை குறிப்பிட்ட காலத்திற்கானது மட்டுமே. எனவே மக்கள் வேறு தொழிலைச்செய்ய அவகாசமிருந்தது. இது பல புதிய தொழில்களுக்குச் சமுதாயத்தின் கதவைத் திறந்துவிட்டது வேளாண்மைக்குத் தேவையான கைவினைத் தொழில்கள் தோற்றம் பெறலாயின. இதைத் தொடர்ந்து ஏற்பட்ட உற்பத்தி மாற்றங்கள் மனிதனின் உழைப்புச் சக்தியைப் பெருக்கியது. இப்போது அவன் உண்ணும் வாய்களுடன் மட்டுமின்றி உழைக்கும் கரங்களாகவும் இருந்தான். அவன்

தன் தேவைகளுக்கும் அதிகமாகவே உற்பத்தி செய்வதற்கான தன் உற்பத்தித் திறனை வளர்த்துக் கொண்டதே இதற்குக் காரணமாகும். இந்நேரத்தில் வேளாண்மையின் மூலமாகத் தமிழகத்தில் அன்று உற்பத்தி செய்த பொருளைப் பார்ப்பது தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றங்களைக் காணுவதற்கு ஒரு சிறந்த பாதையாக இருக்கும்.

நெல், தமிழகத்திற்கு அறிமுகப்படுத்திய உணவுவகையாகத் தோன்றுகின்றது[7] இது எப்போது வந்தது? இது மிகவும் முக்கியமானது. ஏனெனில் இதுமிகவும் சிக்கலான சமூக அமைப்பின் வளர்ச்சிக்குப் பொருளாதார அடித்தளமாக அமைகிறது. மனிதன்-கால்நடை-நிலம் ஆகியவற்றுக்கு இடையே உள்ள உறவுமுறையில் மிக முக்கியத்துவம் பெற்று, உழுது பயிரிடும் வேளாண்மைப் பொருளாதாரத்திற்கும் நாகரீகத்திற்கும் அடிகோலுகிறது என்பர்[8] நீர்ப்பாசனம் பெரிதும் பயன் படுத்தாத வன்புலத்து விவசாயத்தை இதற்குமுன் பார்த்தோம். நீர்ப்பாசன வசதியுடன் கூடிய நெல் பயிரிடுதல் கங்கை நதி தீரத்திலும் வங்காளப் பகுதிகளுலும் கி.மு 10,9 ஆம் நூற்றுண்டுகளில் பரவலாக இருந்தது என்றும் கூறுவர். அண்மையில் தாமிரவருணி கொற்கையில் ஓர் அகழ் ஆராய்ச்சி நடந்தது. அதை விமரிசிக்கும் அறிஞர் மௌனி பின் வருமாறு கூறுவார்.[9]

> "வங்காளச் சமவெளிப் பகுதிகளில் இருந்து ஒரிசா (கலிங்கம்)
> ஆந்திரா வழியாக, தமிழகத்தில் நெல் பயிரிடும் முறை
> நீர்ப்பாசன வசதி உட்பட கி. மு. முதல்
> ஐந்துநூற்றுண்டுகளில் வந்திருக்கலாம்"

நீர்ப்பாசன நெறி முறைகள் தோன்றி நன்கு செழுமையடைவதால் நதிக்கரையோர இடங்களில் உற்பத்தி பெருகிற்று. ஆற்றங்கரையோர கூட்டுச் சமுதாயங்கள் ஏராளமான விளைச்சலைப் பெருக்கிற்று. நீண்ட காலப் பயிர்

களான கரும்பு போன்றவற்றையும் விளைவித்தனர். விளைச்சல் பெருகிய காலத்தில், சமுதாயத்தில் பற்றாக்குறை யாக இருந்த உற்பத்தி மனிதனின் தேவைக்கும் மேற் பட்டுப் போய் உபரியாக மாறியது. இந்த உபரியை எடுத்துக் கொள்வதுயார்? இதை எப்படி பெருக்கிக் கொண்டே போவது? என்ற பிரச்சனைக்கெல்லாம் தீர்வு கண்ட வழிவகைகளில்தான் மானிடசமூகம் தனக்குள் பலவிதமான உறவு முறைகளைத் தானே கற்பித்துக் கொண்டது. இங்கே நெல் விளைச்சல் பெருகியதன் பின்னரே தமிழக நிலப்பரப்பில் உழைப்பவன்—உழைப்பில் ஈடுபடாமலே உற்பத்தியை அனுபவிப்பவன் என்ற வேறு பாடுகள் இன்னும் சரியான வார்த்தையில் அதாவது சமூக விஞ்ஞான மொழியில் சொன்னால், சுரண்டப்படுபவன்—சுரண்டுபவன் என்ற பிரிவினைகள் வந்தன என்பர்[10] அதிக மான அளவில் சாகுபடி செய்ய வினைஞர்கள், அரிஞர்கள் பெருமளவில் தோற்றமளிக்கின்றனர் (குறுந் 309. நற் 60,400; பெரும்பாண் 196—262; ம. கா. 230—70; ப.பாலை 7—19) இரும்பின் தேர்ந்த திறன் வாய்ந்த கருவிகள் வேளாண்மையை முன்னிலும் பெருமளவில் நடத்தியது. விரிந்த காட்டுப் பகுதிகளைச் சாகுபடிக்காகத் தயார் செய்யக்கூடிய எந்த உலோகமும் எதிர் நிற்க முடியாத அளவில், கடினமும் கூர்மையும் பெற்ற கருவிகளை இரும்பு எனும்உலோகம் வினைஞனுக்குக்கொடுத்தது வேளாண்மை கைத்தொழில் என்று இரு மாபெரும் கிளைகள் உற்பத்தியில் பிரிவினையாக ஏற்பட்டதிலிருந்து, நேரடியாகப் பண்ட மாற்றத்துக்கான உற்பத்தி செய்யும் முறை அதாவது சரக்கு உற்பத்தி முறை பிறந்தது. அதன் உடன் நிகழ் வாகவே வியாபாரம் — அதனுடைய உண்மையான பொருளில்—வந்து சேர்ந்தது. பணக்காரன், ஏழை என்ற வேறுபாடும் புகுந்தது (இல்லோர்—உள்ளோர் என இதை இலக்கியம் பேசும்) புதிய வேலைப் பிரிவினைகளின் கீழே சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிந்து விட்டது. கூட்டுச் சமுதாயத்தில் இருந்த பலவேறு குடும்பத்தலைவர்களின்

சொத்துடைமைகளில் ஏற்பட்ட மாறுபாடுகள்—அதாவது மேலே மேலே ஏறிவரும் தனிச்சொத்து—கூட்டுச் சமுதாய அமைப்பில் முதல் உடைப்பை ஏற்படுத்தியது. வேளாண்மை தொடக்க கால கைத்தொழில்கள், சரக்கு உற்பத்தி முறை இவற்றோடு மக்கட்தொகையும் பெருகிற்று. இத்துடன் செல்வ விசயத்தில் பெருத்த வேறுபாடுகள் சேர்ந்தன. இதற்கு முன்னால் கூட்டுச் சமுதாய அமைப்புக்குள் உயிரோட்டமாக நிலவிய ஜனநாயக முறைக்குள்ளேயே, இச் செல்வ வேறுபாடுகளெல்லாம் ஒரு தனிப்பட்ட பிரபுத்துவ அம்சத்தை தோற்றுவித்தது. இந்த பிரபுத்துவத்தைப் பெருக்க வேண்டுமென்றால் இன்னும் நன்கு விளையக்கூடிய முறையிலான உற்பத்தி சாதனங்களை—நிலங்களை விஸ்தீரணம் செய்ய வேண்டியுள்ளது. எனவே, இடத்தை அதாவது நிலத்தை, பிரதேசத்தை மையமாகக் கொள்ள வேண்டிய அவசியம் வருகிறது. ஆகவே இரத்தக்கலப்பு உறவினர்களை மைய அச்சாகக் கொண்டியங்கிய பண்டைய கூட்டுச் சமுதாய அமைப்புக்குள்ளேயே பிற இரத்தக் கலப்பினர்களாக இருந்தாலும்—அவர்களையும் மையமாகக் கொண்டுள்ள பிரதேசமுறை பிறந்துவிட்டது. இதனுடைய தொடர்ச்சியாகவே பண்டைய கூட்டுச் சமுகங்களையும் அதன் தலைவர்களையும் பற்றி புகழ்ந்து பாடும் பாடல்களிலே தமிழ்நாடு— 'தமிழ்' எனும் சொல்லோடுகூடிய உணர்வுபட இலக்கியங்களை நாம் பெரிதும் காண்ப திற்கில்லை. ஆனால் அதற்கு பின்னால் நிறுவனமான மூவேந்தர்களைப் பற்றிய பாடல்களிலே தான் இத்தகைய உணர்வுகளை நாம் காண முடிகிறது.

தென்குமரி வடபெருங்கல்
குணகுடகடலா எல்லை காஞ்சி76—77

வடாஅதுபனி படுநெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்று முதிர்பௌவத்தின் குடக்கும்

—புறம் 6

என அரசுகள் தொடர்பான பாடல்களிலே தாம் பிரதேச இயற்கையமைப்பு கொண்ட 'தமிழகம்' எனும் கருத்து காணப்படுகிறது. தமிழ் எனும் சொல்லே பொதுவாக மூவேந்தர்கள் தொடர்பான குறிப்பாகவே இருக்கிறது.

தமிழ்தலை மயங்கிய தலையாலங்கானம் —புறம் 19

தண் தமிழ்க்கிழவர்
முரசு முழங்குதானை மூவருள்ளும் —புறம் 75

வில்அலைத்துஉற்றும் வல்லாளர் வாழ்க்கைத்
தமிழ்கெழுமூவர் அகம் 31

தமிழ் கெழுகூடல் தண்கோல் வேந்தே" —புறம்

எனவே தமிழகம்எனும் பிரதேசஉணர்வே பிற்காலத்தியது; அதாவது, அரசுகள் தோன்றிய காலத்தியது ஆகும். இது கூட்டுச் சமுதாயத்துக்குள் உறவாடிக் கலந்த இரத்தக்கலப்பு உறவுமுறையை மீறி வருகிற பிரதேச உணர்வைக் காட்டுகிறது. இத்தகைய கால கட்டங்களில்தான் ஒரு நிலமும் இன்னொரு நிலமும் கலந்து மயங்குகின்றபோது, பல்வேறு வகைப்பட்ட இரத்தக் கலப்பு உறவு முறைகள் வரலாற்றின் நிர்பந்தமாக இணைக்கப்படும்போது "எல்லாம் நமது ஊரே; எலலோரும் நமதுஉறவினர்களே"என்றுஒலிக்கும் குரலையும் நாம் கேட்கமுடிகிறது. தங்கள் கூட்டுச் சமுதாயத்தின் நிலத்தை ஆக்ரமித்ததற்காகவும் தம் கால் நடைகளைக் கவர்ந்து களவாடிச் சென்றதற்காகவும் நடை பெற்ற போர்கள் இப்போது இரண்டாம் அணியிலேபோய்நின்றது; இப்போது பெருமளவில் உற்பத்தி தரக்கூடியதுமான புதிய உற்பத்தி சாதனமாகிய நிலத்தைக் கொள்ளையடிப்பதற்காகவே போர்கள் நடைபெறலாயின. இப்போர்களை நடத்திய தலைவர்கள் தவிர்க்க இயலாதவாறு சமூகத்தின் தலைவர்களாகவும் ஆனார்கள். விளைநிலங்கள் உடைய குடும்பத்து போர்வீரர்கள், குடிகளையும் நிலங்களையும் போர்களிலிருந்து காப்பதற்கான தொழிலையும், மேற்கொண்டனர் 'புரவு' எனும் சொல் விளைநிலங்களைக் குறிக்கிறது. (புறம் 297

279, 260); அதே நேரத்தில் காத்தல் தொழிலினையும் குறிக்கிறது (புறம் 149; 175, 334). இந்தச் சொற்களின் பொருள் மாற்றம் வினைநிலங்களின் உடையவர்கள் பின்னர் குடிகளைக் காக்கும் தொழிலையும் மேற்கொண்டனர் என்பதற்கு சொல் ஆராய்ச்சி எனும் அளவில் சான்று பகர்கிறது.

சொந்த விவகாரங்களைச் சுயமாக, சுதந்திரமாக நிர்வாகித்து கூட்டுச் சமுதாய நிறுவனத்திற்குப் பதிலாக, அண்டை அயலார்களைக் கொள்ளையடிக்கும் நிறுவனமும் அதற்குள்ளேயே தோன்ற ஆரம்பித்துவிட்டது. வரலாற்றில் தவிர்க்க முடியாதபடி புகுந்துவிட்ட தந்தை யுரிமைப் படி ஒரேயொரு குடும்பத்திலிருந்து பதவிக்கு வழக்கமாக வருவது என்பது ஒரு பரம்பரை வாரிசாகத் தோற்றுவிக்கப் பட்டது (புறம் : பழவிறல்தாயம்) இதெல்லாம் பரம்பரை வாரிசுரிமை புகுந்ததைக்கூறும் செய்திகளாகவே உள்ளன. இதனுடன் தொடர்ச்சியாக, எல்லோரும் சுயேச்சையாகப் பேசி, விவாதித்து முடிவெடுக்கும் நாள் மகிழ் இருக்கைக்குப் பதிலாக (புறம் 324, 330) தலைவர்களின் நெருங்கிய செழும்பல் குடிகள் பிரிவிடமிருந்து பொறுக்கியெடுத்த "உரிமைச்சுற்றம்" பிறக்கிறது (புறம் 2; ம. கா 227) இதுவே தான் பின்னர் அறங்கூறு அவையம் என்று தோற்றமளிக்கிறது. அதன் தோற்றத்தைப் பின்னால் பார்ப்போம். இத்தகைய மாபெரும் பொருளாதார—அரசியல் புரட்சியை பேராசான் பிரடெரிக் ஏங்கல்சு பின்வருமாறு கூறுகிறார்.[11]

> "செல்வத்தின் பால் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளின் விளைவாக சமுதாய அமைப்பு பாதிக்கப் பட்டது. பரம்பரைப் பிரபுத்துவத்திற்கும் அரச முறைக்கும் கொழுந்துகள் துளிர்த்தன. அடிமை முறை போர்க் கைதிகளோடு நின்றிருந்த போதிலும், ஏற்கெனவே குலத்தின் உறுப்பினர்களையும் கூட அடிமைப்படுத்துவதற்கு வழியைச் செப்பனிட்டு வந்தது. கால் நடைக்கு நடைபெற்ற சண்டைகள் நிலத்துக்கான திட்டமிட்ட படையெடுப்புகளாக இழிந்து ஒரு முறையான தொழி

ளாகி விட்டது. உயர்வினும் உயர்வான சம்பத் தாக செல்வம் புகழப்பட்டது... தனி நபர்கள் புதிதாகச் சேர்த்த சொத்தைப் பாதுகாக்கவும் அதைப் பெருக்குவதற்கும் படிப்படியாய் வளர்ந்து வரும் புதிய வடிவங்களுக்கும் பொதுமக்கள் அங்கீ காரம் எனும் முத்திரையைப் பதிய வைப்பதற்கும் வேண்டிய ஒரு நிறுவனம் இல்லாதிருந்தது. சமுதா யத்தில் எழுந்த வர்க்கப் பிரிவினையை நிரந்தரமாக்கு வதோடு மட்டுமல்லாமல் உடைமையற்ற வர்க்கங்களை உடைமையுள்ள வர்க்கம் சுரண்டுவதற்கான உரிமையை நிரந்தரமாக்கும் நிறுவனம் வரத் தொடங் கியது. அதுதான் அரசு என்பது''

இங்கே மூவேந்தர்கள் அரசு எனும் நிறுவனத்தின் மூலம் தமிழகத்தை நாகரிக நிலையின் வாசலுக்குக் கொண்டு வருகிறார்கள். இப்போது, போர்கள் நிலத் துக்காகவும். அடிமைகளுக்காகவும் நடைபெற்றன. மேலை நாடுகளில் இருந்ததைப் போல உழைப்பு அடிமை முறை (Chattel Slavery) இங்கே இல்லை; ஆனால் வீட்டு அடிமைமுறை (Household Slavery) இருந்தது நன்கு விளக்கமாகிறது. ஏவலர், வினைவலர், இளையர் அடியோர் இவர்களின் பல்வேறுவிதமான பணிகளை இங்கு மனங்கொள்ளுதல் பொருத்தமாயிருக்கும். பொதுவாக, குடி எனின் வேளாளர் குடியிருப்பைக் குறிக்கிறது என லாம். "கொழும்பல் குடிச்செழும்பாக்கத்து'' என பட்டினப் பாலை இத்தகைய குடியிருப்பைக் கூறுகிறது: அதே நேரத் தில் "சிறுகுடி'' எனும் சொல் பெரிதும் காணப்படுகிறது. (ம. கா 122; நற் 82, 87, 110, 114; குறுந் 284 322, 355) ஒரு வேளை இவை வேளாளர்களின் கீழேயுள்ள உழவர்கள் குடியிருப்பாக இருக்கலாம். கிள்ளிவளவனால் பாடப்பெற்ற சிறு குடி கிழான் பண்ணன் (புறம்) இத்தகைய உழவர் குடியிருப்புக்குச் சொந்தக்காரனாக இருக்கலாம். வீட்டு அடிமை முறையைச் சொல்லும்போது, இந்தச் செய்தி களை எண்ணிப் பார்ப்பது இடங்சருதிய பொருத்தமா

யிருக்கலாம். எனினும், தமிழகத்தில் பண்டைய சமூக அமைப்பில் உள்ள அடிமை முறையின் பல்வேறு வடிவங் களை நாம் இன்னும் ஆராய்வது நலம் பயக்கும். மேலை நாட்டு அடிமை முறையின் வடிவத்தைப் போன்று இங்கே காணப்படவில்லை என்பதை ஒப்புக் கொள்ளும் அதே நேரத்தில், அடிமை முறை இங்கே பிறிதொருவடிவம் எடுத்துள்ளது என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை.

நூற்றுக்கணக்கான கூட்டுச் சமுதாயங்கள் தமக் குள்ளே முட்டிமோதிக் கொண்டதன் விளைவாக வேந் தர்கள் உருவெடுகின்றனர். கூட்டுச் சமுதாயங்களெல்லாம் காட்டுப் பகுதிகளையும் மலைப் பகுதிகளையும் மட்டுமே ஆளுகை செலுத்தின. (புறம் 12', 139, 141, 152) இவர்கள் நிலம், வன்புலம் (புன்செய்) என்றும் சீறூர் என்றும் குறிக்கப் படுகிறது. (புறம் 146, 314, 321, 322—வன்புலம்; புறம் 3!° 324, 330—சிறூர்) ஆனால் வேந்தர்களின் நிலமோ மென்புல மாக இருந்தது அதாவது இச் சமூகத்தின் மாறிய உற்பத்திச் சாதனமான மருதநில வயல்களாக இருந்தன.

"மென்புலம்" (புறம் 42)

தண்பணை வேந்தர் (புறம் 322)

தண்டை மன்னர்" (புறம் 99, 229)

இவர்கள் தாம் தமிழக வரைப்பிலே முறையான நீர்ப் பாசனத்துக்கு வழி கோலுகிறார்கள். ஆற்றங்கரை யாகிய தண் பணையூரில் குளமமைத்து நீர்பாசனத்துக்கு வழி செய்யப் படுகிறது.

"அடு போர்ச்செழிய இகலாது வல்லே
நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண்தட் டோரே
தள்ளா தோர் இவண் தள்ளா தோரே"

என குட புலவியனார் (புறம் 18) பாண்டியனுக்கு அறிவுரை கூறுகிறார். நீர் மிகு காவிரியின் வெள்ளம் உலகமக்களைக்

காக்கும் பொருட்டு பாசனம் அமைத்த நன்னாட்டுப் பொருநன் என சோழன் நலங்கிள்ளியைக் கோவூர்கிழார் கூறுகின்றார் (புறம் 18). 'குளந்தொட்டுவளம் பெருக்கி' என கரிகாலனைப் பற்றி பட்டினப்பாலை(284) கூறுகிறது. பல் யானைச் செல்கெழுகுட்டுவனைப் பற்றிய பாடல் ஒன்றில் (பதிற் 27)வயல்களிடத்து மிக்க நீர்கழிவது குறித்து செய்யப்பட்ட வழிகளை "வாயில்" என்றும் மிகுதியான நீர்வரும் போது அதை தடுத்து நிறுத்தும் "புனல்பொருபுதவு" களைப் பற்றியும் குறிப்பு உண்டு. நீர்ப் பாசனம் பெருகியதைத் தொடர்ந்து விளைச்சல் பெருகியது. பெரியமலைபோல் குவிந்து கிடக்கும் நெற்குவியலைப் பற்றி நம் இலக்கியம் பெருமைபட விதந்தோதுகிறது. வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்ட சிறுகுடிகளைப்பற்றி இலக்கியம் நிரம்பப் பேசுகின்றது. கைவினைமக்கள் (குறுந் 309); உழவர் (நற் 60 குறுந் 10); நெல் அரிபவர்கள் (நற் 400, 275, 350); எருது எறிகளமர் (நற் 125); கள்ளார் களமர் (ம. கா. 260); கடைசியர் (புறம் 61) போன்ற வேளாண்மை வினைஞர்களைப் பார்க்கிறோம்.

அதே நேரத்தில் வெளிநாடுகளுடன் நடத்திய வாணிபமும் பெருகிற்று. கி. மு 40 ஆம் ஆண்டளவில் இப்பாலசு எனும் எகிப்திய மாலுமி கண்டுபிடித்த பருவக் காற்று நிலை, கப்பல் போக்குவரத்து அதிகரித்ததற்கு துணையாயிற்று. இரும்புக் கருவிகள், அரும்பொருள்கள், குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. தங்க நாணயங்களைப் பெரிதும் வணிகர்கள் பெற்றனர். கூட்டுச் சமுதாயத்தில் குதிரைகள் பயன் படுத்தப் பட்டிருந்தாலும் கூட, மூவேந்தர்களின் போர்க்களங்களில் தான் அவை சிறப்பாக பயன் பட்டிருக்கலாம் எனத்தெரிகிறது. ரோம நாட்டு வணிகர்கள் அடிமை வியாபாரத்திலும் ஈடுபட்டதாகத் தெரிகிறது. இந்த யவன அடிமைகள் அரசர்களுக்குப் போர்க்காலங்களில் பயன்பட்டிருக்கலாம். யவனர்கள் பாசறையில் இருக்கும் செய்தியும் அரசனுக்கு மெய்க்காப்பாக இருக்கும் செய்தியும் உண்டு. இது குறித்து பொது

வாக இந்தியாவில் அடிமை வாணிபத்தைக் குறித்து அபோயர் என்பர் கூறுகிறார்.

"...பொருள்களை மட்டுமல்ல அடிமைகளையும் மேலைநாட்டு வணிகர்கள் கொண்டு வந்தனர். இவ்வாறாக இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்ட ஆண் அடிமைகள் பாதுகாவலாளர்களாக நியமிக்கப்பட்டனர். பெண் அடிமைகள் இசைக் கலைஞர்களாக நடனப் பெண்டிர்களாக அந்தப்புறப் பணிப் பெண்டிர்களாக நியமிக்கப்பட்டனர் என்று தெரிகிறது"[12]

மூவேந்தர்கள் மட்டுமே வெளிநாட்டினரோடு பெருமளவில் வாணிபத் தொடர்பு வைத்திருந்தனர் என்று தெரிகிறது. அவர்கள் ஆதிக்கம் சார்ந்த துறைமுகங்களிலே தான் பெரிதும் பொருள்கள் ஏற்றுமதி-இறக்குமதி நடந்ததாகத் தெரிகிறது. வெளிநாட்டுப் பயண அறிஞர் குறிப்புகளிலே வரும் கடல் துறைமுகங்களைப் பார்த்தால் அவை பெரிதும் மூவேந்தர்களையே சார்ந்திருப்பதை உணர முடிகிறது.

நௌரா = கண்ணனூர் = சேரர்
டிண்டிஸ் = தொண்டி = பாண்டியர்
முசிறி = சேரர்
கொற்கை = பாண்டியர்
பொடுசு = புகார் = சோழர்

இவ்வாறு உள்நாட்டில் ஏற்பட்ட உற்பத்திப் பெருக்கத்தாலும் வெளி வாணிபம் கொஞ்சம் கூடுதலாக ஆனதன் விளைவாகவும் வேந்தர்கள்-ஆற்றங்கரையில் வளமான நிலத்தைச் சாதனமாகக் கொண்டவர்கள்-நீர்ப்பாசனமுறையறிந்து திருத்தமான கருவிகளைப் பெற்று உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டவர்கள் வலுப் பெறுகின்றனர். உண்மையில் இவர்களும் பழைய கூட்டுச் சமுதாயத்தின் வழி வந்தவர். ஆனால் அந்த உறவுகளை அறுத்தெறிந்து கொண்டவர்கள். அதற்குள்ளே ஏற்பட்ட முரண்பாடுகளின் மோதல்களினால் உருவானவர்கள். மொத்தத்தில் அதிலிருந்து

தோன்றி அதற்கு எதிர்மறை ஆனவர்கள். உதாரணமாக ஒரே ரத்த உறவு கொண்ட பல குலங்களுக்குப் பொதுவான பெயர் கூட இருந்திருக்கலாம். இந்தக் குலங்கள் தமக்குள் போரிட்டு பின் ஒன்றிணைந்து வலுவோடு இருந்திருக்கலாம் உதாரணமாக பழம் பாடல்களிலே உறந்தை, வல்லம், குடந்தை, பருவூர், பெருந்துறை ஆகியவற்றில் வாழ்ந்த சமூகத்துக்குப் பொதுவாக 'சோழர்' என்று பெயர் வழங்கிற்று என அறிகிறோம்.

மாரியம்பின் மழைத்தோல் சோழர்
வில்ஈண்டு இறும்பின் வல்லத்து (அகம் 336)
தொடுபோர்ச் சோழர்பொருண் மலிபாக்கத்து
வழங்கல் ஆனுப் பெருந்துறை (அகம் 338)

என நம் பாடல்கள் விளக்குகின்றன.

எனவே அன்றைய தமிழகத்தில் இருந்த நூற்றுக் கணக்கான கூட்டுச் சமுதாயங்கள் போர் எனும் கொதி நிலைக் கொப்பரைக்குள் தள்ளப்படுகின்றன. ஒளியர், ஆவியர், அதியர், பழவர், வழுதியர், இளையர், பழையர், கொங்கர், கழாஅர், புலியர், சென்னி, கிள்ளி, ஆதன், எவ்வி, செழியன், உதியர், பஞ்சவர், கவுரியர், மறவர். வில்லோர் போன்ற குலங்கள் தமக்குள் எழுந்த முரண் பாடுகளைத் தீரப்பதற்காகப் போரிட்டன. இதிலேயிருந்து தான், சேர சோழ பாண்டிய மூவரசுகளும் உருவாயின என்றுந் தெரிகிறது. இவர்களின் அறிமுகத்துக்குப் பின்னுந் தான், தமிழகம் எனும் 'இடத்தை அடிப்படையாகக் கொண்ட உணர்வு, வர ஆரம்பிக்கின்றது என்பதையும் நாம் பார்த்தோம். எனவே வளமான உற்பத்திக் கருவி களையும் சாதனங்களையும் வைத்துக் கொண்டு, நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கிக் கொண்ட சமுதாயங்கள், உள் நாட்டில் தமது உற்பத்தி குறையாவண்ணம் இருப்பதற்கு பலரைச் சிறுகுடி ஆக்கியும், வெளிநாட்டு வாணிபத்தால் கிடைத்த குதிரைகளையும் போர்க்கருவிகளையும் வைத்துக் கொண்டு அயலகத்தில் இருந்தகூட்டுச் சமுதாய நிலங்களைக் கொள்ளை அடித்து உருவானவை என்பதை யாரும் மறுப்ப

தற்கில்லை, இவர்கள் புதியதாகத் தோன்றியவர்கள் என்று பொருள்பட இலக்கியம் இவர்களை "வம்ப வேந்தர்" என்று கூறுகிறது. எனவே, வரலாற்றுத் தேவையை நிறைவு செய்ய ஏற்பட்ட இவர்களின் தோற்றம் ஒரு கால கட்டத்திற் குரியதே. ஆனால் அறப்பழங்காலத்தில் நினைவுக்கு எட்டாத நாளிலிருந்தே சேரசோழபாண்டிய அரசுகள் நன்முறையில் இருந்தன எனக் கூறுபவரும் உண்டு.

இத்தகைய கருத்து, தமிழுலகில் இடைக்காலத்தில் ஏற்பட்டு, பின்னர் உறுதி பெற்றதாகத் தெரிகிறது. குறள் உரைகாரரான பரிமேலழகர் பின் வருமாறு எழுதுகிறார்.

> " தொன்று தொட்டு வருகின்ற குடி ... அதாவது
> சேர சோழ பாண்டியர் என்றாற்போல, படைப்புக்
> காலம் தொடங்கி மேம்பட்டு வருதல்"
>
> (குடிமை—குறள் 5—உரை)

இதே கருத்தையே பி. டி. சீனிவாச அய்யங்கார் பின் வருமாறு கூறுகிறார்.[13]

> "நினைவுக்கு எட்டாத மிகப் பழைய காலத்தி
> லிருந்தே மூவேந்தராகிய சேர சோழ பாண்டியர்
> களும் அரசு ஒச்சி வந்தனர்"

இதே கருத்துக்கு கால்டுவெல் பாதிரியார் அவர்களும் சான்று பகர்கின்றார்[14] பல்வேறு சூழ்நிலைமைகளினால் தத் தமக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக பல் வேறு கூட்டுச் சமுதாயங்கள் போரிட்டுக் கொண்டதனால் ஏற்பட்ட தவிர்க்க முடியாத விளைவாகவே மூவேந்துகளும் தோன்றின என்பதை விரிவாகப் பார்த்தோம். எனவே வரலாற்றின் அடிவானத்திலிருந்தே புறப்பட்டவையல்ல மூவேந்துகளும் என்பது நமக்குத் தெளிவாகிற அதே நேரத்தில், அவை ஒரு கால கட்டத்திய தவிர்க்க முடியாத அவசியங்களாகத் தோன்றின என்பதையும் விளங்கிக் கொள்கிறோம். இதே கருததை தயே கே. என். சிவராஜ பிள்ளை பின்வருமாறு கூறுவார்:[15]

"இந்த அரசுகள் உண்மையிலே, குறுநிலங்களின்—

கூட்டுச் சமுதாயங்களின் அழிவிலிருந்தே அதன் சாம்பலிருந்தே தோன்றியிருக்கும்"

ஏறத்தாழ இதே கருத்தையே ததம் வார்த்தைகளில் கூறுபவரும் உள்ளனர் எனலாம்.[16]

இவ்வாறு செல்வாக்குபெற்று உருவெடுத்த அரசர்களுக்கென்று பண்டைய கூட்டுச் சமுதாயத் தலைவர்களுக்கு இல்லாத பெருமைகளெல்லாம் இலக்கியத்தில் காணப்படுகின்றன. இவர்களுக்குத் தான் முரசு, வெண் கொற்றக் குடை, அடையாளப்பூ பெறும் தகுதி கொடுக்கப் பட்டது. பண்டைய சமுதாயத் தலைவர்களுக்கு இவையெலாம் கிடையாது. முரசு—காவல்முரசு—வேந்தர்களுக்கே உண்டு, கூட்டுச் சமுதாயத் தலைவரையும் அரசரையும் பற்றியே கூறும் ஒரு பாடலில், இவர்கள் இருவரையும் 'முரசு' கொண்டே பிரித்துப் பாடப்படுகிறது. வென்றெறி முரசின் வேந்தர் என அவருக்குத் தகுதி கொடுக்கப் படுகிறது. (புறம் 109, 112, புறம் 137, 158, 36, 373, 397, 17, 62, 93 87, 75, 301, 127, 351, குறுந் 380); சிறப்பு அடையாள மாலைகள் இவர்க்கே யுண்டு (பாண்டியன்—வேம்பு—புறம் 33; சேரன் புறம் 22, 229; சோழன்—அத்தி—31, 75, 35, 60 197, 113) சேரலாதனும் பெரு விறற்கிள்ளியும் போர் உடற்றும் போது இருவரும் அணிந்திருந்த தாகச் சொல்லப் படுகிறது (புறம் 61, 175); வெண் கொற்றக்குடையும் இவர்க்கே உரித்து. மூவேந்தர்களும் ஒருங்கிருந்த தாகச் சொல்லப்படும் தருணத்தில் ஔவையார் அவர்களை 'கொற்றவெண்குடை கொடித்தேர் வேந்திர்' என பெருமைபட விளிக்கிறார்(புறம்371). இந்த சமூகத் தகுதிகளெல்லாம், அக்காலத்தில் கூட்டுச் சமுதாயங்களைவிட இவர்கள் பெற்றிருந்த அரசியல் உயர்வையும் குறிக்கின்றன.

சிதறிக் கிடந்த கூட்டு சமுதாயங்கள் ஒன்றுடன் ஒன்று மோதின; சில உயர்ந்தன; சில அழிந்தன; சில அடக்கப்பட்டு ஒன்றின் கீழ் கொணரப்பட்டு அதற்குத் துணையாக்கப் பட்டன. வேந்தர்கள் கூட்டுச் சமுதாயத்தினரோடு மோதினர் (ப.பா 174, 282); ஒரு வேந்தனை எதிர்த்து, பிற

வேந்தர்கள் வேளிர்கள் கூட்டணியாகவும் மோதினர் (கரிகாலன்—வெண்ணியுத்தம் அகம் 246, புறம் 66; நெடுஞ் செழியன்—தலையாலங்கனம் ம.கா. 55, புறம் 17, அகம் 36). இரு வேந்தர்களும் தத்தம் ஆதிக்க நிலபாட்டுக்காக மோதினர் (புறம் 125, 62, 175); தனியுடமைக்கொடுமையின் வடிவமான வாரிசுமைப் போர்களும் உறவினர்களுக்குள்ளே நடந்தன. வேந்தனால் அடக்கப்பட்ட கூட்டுச்சமுதாயத் தினர் அவனுக்குத் துணை நின்று, பிறருடன் மோதினர் (எழினி—அகம் 211; காரி சேரனுக்காக ஓரியை வெல்லல் அகம் 209) வேந்துதருவிழுக் கூழுக்காக (புறம் 320) அவன் சார்பில் மோதுதல் உண்டு. நாஞ்சில் வள்ளுவன் பாண்டி யனுக்காக சேரனுடன் மோதுகிறான்[புறம் 139].

இத்தகைய மோதுதல்களின் விளைவாக சக்தி வாய்ந்த அரசுகள் உருவெடுக்கின்றன. இவை பெருமளவில் நிலங் களுக்காகவே நடந்தேறின என்பதை அறிகிறோம். கால்நடைக் கான போர் என்பது மாறி, நிலம் பெரிதும் உற்பத்தி சாதன மான பின்னாலே, முன்னது பின்னுக்குத் தள்ளப்பட்டு, நிலத்துக்கான போர்களே நடைபெற்றன. மாடு பிடிச் சண்டை நாடுபிடிச் சண்டையாக மாறி விட்டது. தனி யுடமை தாண்டவமாடிய காலத்தில்தான் வேந்தர்கள் நிலம் இடம் பொது என்றாலே போருக்குக் கிளம் புகின்றனர். (புறம் 8) நல்ல முறையில் விளையக்கூடிய நன்செய் நிலத்துக்காகப் போரிடுகின்றனர். [புறம் 6 பதிற் 2] தங்களுக்குரிய இடம் (நிலம்) சிறிதென்றும் காரணத்தால் "இடம் சிறிதென்னும் ஊக்கம் துரப்ப' [புறம் 5] போரிடுகின்றனர். பகை நாட்டு கதிர் விளைந்த கழனிகளைப் கைப்பற்றப் போர் புரிகின்றனர். [புறம் 57] தனக்கும் மறுதலையாக இருக்கும் இரு வேந்தர்களின் நிலம் கவரும் நோக்கோடும் போரிடுகின்றனர். [புறம் 42] பகை நாட்டு நீர்நிலங்களைக் கைப்பற்றவும் சண்டை நடந்தேறி யது. [பதிற் 12] எனவே ஆனிரை கவர்தல் மீட்டல் என்ற பழங்காரணங்கள் இப்போதைக்கு பின்னே சென்று நிலத்திற்கான கொள்ளை என்பது சமுதாயத்தின் தொழி

லாக இழிந்து போயிற்று. இத்தகைய கொள்ளைகளையே அரசர்களும் விரும்பியிருக்கின்றனர் என்று தெரிகிறது.

" எல்லையும் இரவும் எண்ணாய்ப் பகைவர்
ஊர்சுடு விளக்கத்து அழுவிளிக் கம்பலை
கொள்ளை மேவலை " (புறம் 7)

என்ற கரிகாற் பெருவளத்தானின் கொள்ளை விருப்பத்தைப் பற்றி கருங்குழல் ஆதனார் பெருமிதம் ததும்பப் பாடுகின்றார். எனவே நிலக்கொள்ளைக்கான வாசலாகவே போர்கள் தென்படுகிறதே தவிர வேறில்லை. ஆனால் வேறு சிலர் வேறுபடுகின்றனர். உதாரணமாக, இதே கரிகாலனின் வெற்றிகளைக் கூறும்போது டாக்டர் ஆரோக்கியசாமி அவர்கள் பின்வருமாறு கூறுவார்[17]

"பண்டைய தமிழ் அரசர்கள் போரில் வெற்றி பெற வேண்டும் என விரும்பியது எதற்கென்றால், தமக்குப் புகழ்வரவேண்டும் என்பதற்கும் பெருமை சேர வேண்டும் என்பதற்கும் தாமே தவிர தங்கள் நிலப்பரப்பில் பிறர்நாட்டு நிலங்களை இணைக்க வேண்டும் என்பதல்ல."

இக்கருத்து தனித்ததன்று. தமிழ் உலகில் போர்க் கான காரணம்பற்றி இதே கருத்தோட்டம் உடையவர்கள் நிரம்ப உண்டு. இவன் இளையன் என்று சொன்னதற்காகவும் [புறம் 72] தன் வலிமையை இகழ்ந்தான் என்பதற்காகவும் (புறம் 73) சண்டை மூண்டதாகவும் சில பாடல்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. அவையும் காரணங்கள் ஆக லாம். ஆனால் இரண்டாந்தரத்தில் பின்னுக்கு வைக்கப்பட்டு எண்ண வேண்டிய துணைக்காரணங்கள் ஆகும். இது உண்மையைத் தெரிந்தோ தெரியாமலோ மறுக்கின்ற அல்லது மறைக்கின்ற செயலாகும். மேலும் புகழ், வலிமை பெருமை என்பதெல்லாம் தனித்து நிற்கக் கூடியதல்ல. அன்றைய பொருளியல் அந்தஸ்தான நிலத்தையே இவை பெரிதும் சார்ந்துள்ளன. ஆகவே அரசன் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளும் போராட்டத்தில் பல கூட்டுச் சமுதாயங்களை

தலைகுப்புறத் தள்ளி அவைகளை அழித்து அதன் சாம்பலி லிருந்து பேருருக்கொண்டு எழ வேண்டும் அல்லது அந்த பழம் இனங்களை தனக்குள் அடக்கி அதன் பலத்தையும் உட் கொண்டு தன் நிலக்கொள்ளைமேவலைப் பெருக்கிக் கொண்டே போக வேண்டும். பெருமை, வலிமையைக் காட்டல் இகழ்ந்தவனை அடக்குதல் புகழ்சேர்த்தல் என்பதற் கெல்லாம் அடிப்படை நிலக் கொள்ளைதான். எனவே பெருமைக்காக—இளையன் என்பதற்காக — புகழுக்காக போர் நடத்தல் என்பது மிகமிகச் சிறிய துணைக்காரணமாக அவ்வப்போது மேலே தோன்றிக் காட்சியளித்தாலும், அடிப் படையிலே, ஆணிவேராக அமைந்தது, நிலத்திற்கான திட்டமிட்ட கொள்ளை என்பதுதான் பேருண்மையாகும். மேலும் போரில் நல்அரும் பொருள்களையெல்லாம் கொள்ளையடித்துக் கொண்டு வருவதை நம் இலக்கியம் மறஞ்சார்ந்த பெருமிதத்தோடு பதிவு செய்கிறது. எனவே அக்காலத்திய போர்கள் பெரிதும் நிலத்திற்கான— நில இணைப்பிற்கான — நில ஆக்ரமிப்பிற்கான போர் களாகும் என்பது தெளிவு. எனவே இவர்கள் கூற்றில் அடிப்படை உண்மைகள் இல்லை எனலாம். மேலும் மு. ஆரோக்கியசாமி அவர்களே தான் முன்னர் கூறிய கூற்றை மறுத்துரைத்து ஒருவாறு உண்மையை அதே நூலில் பின் வருமாறு உரைக்கின்றார்.[13]

> "தற்காப்புக்காக மட்டும் போர்கள் நடை பெறவில்லை; அவை அண்டைய நிலப்பகுதிகளை இணைப்பதற்கான ஆர்வ மேலீட்டின் காரணமாக நடத்தப்பட்டன."

இன்னொன்றுள்ளது. அரசர்கள் பழைய கூட்டுச் சமு தாயத் தலைவர்களின் மகளிரை தமக்கு மணம் செய்து கொடுக்குமாறு வற்புறுத்திய நேரத்தும் போர் நிகழ்ந் தேறியது என்றறிகிறோம் (புறம் 336—354, 356) பிற்காலத் திய இலக்கணத் தொகுப்பாசிரியர்கள், இதை காஞ்சித் திணை—மகட் பாற் காஞ்சித்துறை என்று அடக்குவர்.

" ஏந்திழையாள் தருகென்னும்
வேந்தனோடு நின்றன்று"

என்று புறப் பொருள் வெண்பாமாலை கூறும். மேலும் தமிழக மூவரும் பாரியின் மகளிரை வேண்டி பறம்பு மலையை முற்றுகையிட்டதாக புறம் (109—111) கூறுகிறது. இதை பிற்காலத்தில் இலக்கணத் தொகுப்பாளர்கள் நொச்சித்திணை (பிரதிபாடம் காஞ்சி) மகண் மறுத்தல் துறையில் அடக்கிக் காண்பிப்பர் இப்போர்க் காரணத்தைக் கொஞ்சம் பார்ப்போம்.

பண்டைய கூட்டுச் சமுதாயங்களில் உள்ள மகளிர்கள் பல்வேறு குழுக்களில் இருந்து தாங்கள் விரும்பியவனைத் தம் தலைவனாக வரித்துக்கொண்டனர். இதற்கு அன்புடைய நெஞ்சங் கலந்த காதல் உணர்வு அடிப்படையாக இருந்தது. பல குழுக்கள் ஒன்றிணைந்து மிகவலுவான முறையில் செயல்படும் கூட்டுச் சமுதாய முறைக்கு இது மிகவும் சிறப்பாகப் பயன்படுகிறது. இம் மணமுறையை சமூகவிஞ்ஞான ஆய்வாளர்கள் இணைமணமுறை என்பர். நம் தமிழிலக்கியத்தில் உள்ள மிகப் பழமையான இலட்சியப் படுத்தப் படாத, இயல்பாக உள்ள, வெறும் மரபு கருதியே பாடாத காதற்பாடல்களோடு இதை இணைத்துப் பார்ப்பது, தமிழக வரைப்பிலே குடும்பங்கள் தோற்றம் வளர்ச்சியைக் காணுவதற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். ஆனால் அது இப்போது நம் முன்னிற்கும் பணியன்று. இவ்வாறு கூட்டுச் சமுதாயங்களில் இருந்த மகளிர் தத்தம் சமுதாயக் குலங்களிடையே களவு மணம் கொண்ட நாள்களிலேதான் இந்தக் கூட்டுச் சமுதாயத்தின் புகை மூட்டத்திலிருந்து உதித்தெழுந்த, ஆனால் அதற்கு முற்றிலும் எதிர் மறையாகிவிட்ட அமைப்பின்—அரசு அமைப்பின் தலைவர்களாகிய வேந்தர்கள் தாங்கள் மணம் செய்து கொள்ள கூட்டுச் சமுதாயத் தலைவர்களின் மகளிர்களைக் கேட்கின்றனர். ஒரே கூட்டுச் சமுதாயத்திற்குள் பல்வேறு குலங்களிடையே இரத்த உறவு சம்பந்தமுள்ள சமுதாயத்திடமும், தோன்றிவிட்ட

பிரதேச உணர்வுகளால் ஆட்பட்ட புதிய சமுதாயத்தினர் பெண் கேட்கின்றனர். இம்மகளிர்களை மணம் செய்வதனால், வேந்தர்களின் "புதிய பெருமைக்கு" பழம் சமூகத்திடம் அங்கீகாரம் கிடைக்கலாம். ஆனால் பழம் குலப்பெருமை உள்ள சமூகங்கள் இதை மறுக்கின்றன. பழஞ்சமூக ஆடவர்கள் சீறுகின்றனர். நிரல் அல்லோர்க்குத் தரலோ இல்லென சொல்லி மறுக்கின்றனர் (புறம் 345). ஆனால் உற்பத்திப் பெருக்கத்தின் விளைவாக உயரச் சென்று விட்ட வேந்தர்களின் முன்னால்—பலவகையான படைகளை அணிவகுத்து நிற்கும் அரசுகளின் முன்னால் வெறும் குலப்பெருமையையும் பழம்பற்றையும் பிடித்துக் கொண்டிருந்த இளைஞர்களால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. கொடூரமான ஆனால் முன்னேறிய புதுமைக்கு (வம்ப வேந்தர்) முன்னால் குலப்பெருமை கொண்ட ஆனால் மிகவும் தேங்கிப் போன பழமை தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முடியவில்லை. வேந்தர்கள் வேறு இடங்களில் அடித்த கொள்ளைப் பொருள்களைக் கொடுத்தாலும் பழஞ்சமூக இளைஞர்கள் அவைமறுத்து செருப்புகல் வேண்டுகின்றனர் (புறம் 345—352). யானையும் தேரும் மாவும் படையணி மறவரொடு துவன்றி நிற்கும் வம்பவேந்தருக்கு மகளிரைக் கொடுக்க கூடாது என்பது பழஞ்சமூகத்திற்கு "படிவமாக" (புறம் 340) அதாவது கொள்கையாகவே இருந்தது. இவர் கொள்கை இதுவாக இருப்பினும் பல வகைப்பட்ட படைகட்கு ஆற்றாது "தூர்ந்த கிடங்கில் சேர்ந்த ஞாயில்" தூள் தூளாகின்றது. இந்தத் துகள்களின் புழுதிபட வேந்தர்களின் கொடிகள் பறக்கின்றன பின்னர் அந்நிலங்கள் அரசனின் வரைப்பிலே இணைக்கப்படுகின்றன, இந்த மகள் வேண்டுதல் மூலம் அரசனுக்கு இருமுனைப் பயன்கள் உண்டு; ஒன்று வேந்தனின் வேண்டுதல் நிறைவேறினால் அவனுக்கு 'பெருமை" கிடைக்கிறது; அது மறுக்கப்பட்டால், அவன் நிலப் பரப்பு விரிவடைகிறது. இரண்டிலுமே வேந்தனுக்கு விருப்புண்டு. வேந்தனும்,

சுற்றிலும் நல்ல நிலங்கள் உள்ள சமூகங்களிடமே பெரிதும் பெண் வேண்டுகிறான்.

" வண் தோட்டுப்
பிணங்கு கதிர்க்கழனி நாப்பண் ஏமுற்று
உணங்கு கலன் ஆழியின் தோன்றும்
ஓர் எயில் மன்னன்" புறம் 332

எனக்கூறும். கதிர்களை உடைய கழனிகட்கு நடுவே எயில் உடை மன்னனிடம் பெண் கேட்கப் படுகிறது. மேலும் வேந்தர்கள் வளமுள்ள நிலத்தலைவர் மகளையே கேட்பதற்குச் சான்றுகள் உள.

"மென்புல வைப்பின் இத்தண்பணையூர்" புறம்—341
"பன்னல் வேலி இப்பணை நல்லூரே" புறம்—345
"ஏமம் சால் சிறப்பின் இப்பணை நல்லூர்" புறம்—351

என இவ்வூர்களைப் பற்றி இலக்கியம் கூறுகிறது.

தண்பணைக்கிழவன் இவள்தந்தையும் புறம்—342

எனவும் குன்றுகண்ட உயரமான நெல்போர்களை உடைய தண்பணைக்கிழவன் (புறம் 353) எனவும் இம்மகள் மறுக்கும் தந்தையர்களையும் நாம் காண்கிறோம். எனவே அரசர்கள், தண்பணையூரான் மகளிர்களையே பெரிதும் விரும்பியிருந்தனர். மகளிர் வேண்டி "பெருமை" தேடி நிற்கும் அதே நிலையிலேயே தண்பணைக்கிழவன்களின் மென்புலவைப்பைக் கவரும் நோக்கத்தை அடியிலேயே வைத்திருந்தனர் என்பதும் நமக்குப் புலனாகிறது. மகளிர் வேண்டி போர் செய்து வெற்றி பெற்ற பின்னாலும், தான் வேண்டிய மகளிரை மணம்செய்து கொண்டதாகவும் தெரியவில்லை. வேள பாரி மகளை மூவேந்தரும் வேண்டி நிற்க, பாரிமறுக்க அவர்கள் முற்றுகையிடுகின்றனர். [புறம் 109, 110, 111); போரில் வெற்றி கொண்டபின் அவர்கள் பாரிமகளிரைக் கைக் கொள்ளவில்லை; ஆனால் அவர்கள் வேள்பாரியின் குன்றைக்கைக்கொண்டார்கள் [புறம்119).

அவர்கள் அடிநோக்கம் அதுவாகவே இருந்திருக்கலாம் அதற்குப்பின் பாரிமகளிரை இருங்கோவேள், விச்சிக்கோன் போன்றவர்களே மறுத்த செயலானது, மூவேந்தர்களால் உறுதிப்படுத்தப் பட்ட அரசியல் அதிகாரத்தின் செல்வாக்கை நமக்குத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

இவ்வாறு ஒவ்வொரு காலத்தும் பயன்படுத்தப் பட்ட உற்பத்திச் சாதனங்களுக்காகவே பெரிதும் நடை பெற்ற போர்கள் எந்தந்த முறையில் ஆற்றப்பட்டது? அவ்வாறு நடந்தேறிய போர்களின் விளைவாக தமிழ்ச் சமுதாயத்தில் என்னென்ன மாற்றங்கள் — விளைவுகள் ஏற்பட்டன என்பதையும் பார்ப்போம்

தனியுடைமையும் வர்க்கங்களும் தோன்றியது முதல் பிறப்பெடுத்த போர் என்பது, வர்க்கங்கள், தேசங்கள் அரசியற் குழுக்கள், ஆதிக்க சக்திகள் ஆகியவற்றுக் கிடையே நிலவும் முரண்பாடுகள் ஒரு குறிப்பிட்ட கட்டத் துக்கு வளர்ச்சியடைந்ததும் அவற்றைத் தீர்ப்பதற்குரிய அதியுயர்ந்த போராட்டவடிவமாகும் என்பதைப் பார்த் தோம். ஒவ்வொரு கட்டமும் அதற்கேயுரித்தான சிறப்பு அம்சங்களை வெவ்வேறு துறைகளில் கொண்டு இருப்பதைப் போலவே போர் முறைகளிலும் கொண்டுள்ளது. ஒவ்வொரு வரலாற்றுக் கட்டத்திலும் போரின் விதிமுறைகளும் செயல் முறைகளும் அவற்றின் வழி வகைகளும் சிலபல தன்மைகளால் நிர்ணயம் பெறுகின்றன. பயன்படுத்தும் விலங்குகள் அவற்றின் தன்மை வேகம், ஆயுதங்கள் கருவிகள் அவற்றின் செழுமையான அல்லது செழுமையற்ற வடிவம் அவற்றைப் பயன் படுத்தும் நுணுக்கமான அறிவு ஆகியவை பற்றியும், போர் நடத்துவதற்கான களம், சம வெளிப் பரந்த நிலம், கரடுமுரடான புதர்கள் நிரம்பிய காடுகள் குன்றுகள், நடுக்கடல், விண்வெளி ஆகியவை பற்றியும் போர் முறைகளில் பெருத்த வேறுபாடு உண்டு. இதைப் பொறுத்தே ஒவ்வோர் கால கட்டத்திலும் ஒவ்வோர் போர் முறைகள் வகுக்கப்படுவது உண்டு. பின் வாங்குதல், முன்னேறிச் செல்லல். முன்னேறியபின் சற்று

பின் வாங்கல், எதிரியை ஆழ உள்ளிழுத்தல், மறைந்து தாக்குதல், நீண்டகால யுத்தம் நடத்தல், நாள் போர் நடத்தல் வெற்றி அல்லது வீரமாக மரித்தல், மார்பில் புண் ஏற்று மடிதல், புறமுதுகு காட்டாமை போன்ற முறைகள் உண்டு

பண்டைய சமூகத்தில் சண்டைக்குப் போகுமுன் நறியபூக்களை நெல்லுடனும் நீருடனும் சேர்த்துத் தூவி, கைதொழுது வணங்கி, நற்சொல்லாகிய விரிச்சி கேட்டு, இரவோடு இரவாகப் போய் ஆனிரைகளைக் கவர்ந்து வந்து விடுகின்றனர்(பெரும்பாண் 140—142); நிரை கவர்ந்த பின்னல், அதை மீட்க வேண்டிய தலைவன் தன் சமூக ஆடவரை தண்ணுமை முழக்கி அறிவித்து நிரை மீட்கச் செல்கிருன் (புறம் 270) நிரைமீட்டு உரியவர்க்குக் கொடுக்கிருன் (புறம் 264). இச்செய்திகளையெல்லாம் வெட்சி (ஆனிரை கவர்தல) கரந்தை (ஆனிரை மீட்டல்) என பிற்கால இலக்கண ஆசிரியர்கள் வகுத்தனர்.

பழைய கூட்டுச்சமுதாயத்தினரைவிட அரசர்கள் பெரும் செல்வம் படைத்தவர் என்றும் புதிய புதிய கருவிகள் கொண்டிருந்தனர் என்றும் தெரிகிறது. தொடக்க காலத்தில் கூட்டுச்சமுதாயங்கள் வில், அம்பு, கூர் நுனிவேல் இவற்றையே பெரிதும் பயன்படுத்தியது. கால்நடைக்கான சண்டையில், அவற்றைக் கவர்ந்து வரும் போதும் அல்லது கவர்ந்தோனைத் துரத்தும் போதும் வெகு தொலைவில் அல்லது சிறிது தொலைவில் இருக்கும் எதிரிகளைக் கொல்வதற்கு வில். அம்பு, வேல் பயன் பட்டிருக்கலாம். "அரம்போழ் நுதியவாளி அமபின் நிரம்பார் நோக்கின் நிரையங் கொண்மார்" என அகநானூறு (67) கூறுகிறது. இங்கு மட்டுமல்ல, மலைஅடர்ந்த காடு சார்ந்த பகுதிகளில் எதிரி அண்மையில் இல்லாத இடத்து இத்தகைய கருவிகள் தாம் அதிகம் பயன் பட்டிருக்கலாம். எதிர்த்து வரும் வேல், அம்புகள் ஆகியவற்றைத் தாங்குவதற்குரிய கேடயங்களையும் பயன் படுத்தியுள்ளனர் என்றும் தெரிகிறது. தொடக்க காலத்தில் இது விலங்கின்

தோலால் செய்யப் பட்டிருக்கலாம். இதற்கு "தோல்" என்றே பெயருண்டு [புலிநிறக் கவசம்—புறம் 13]. அதற்கு பின்னால் வாள்கள், குத்தீட்டி, கோடரி போன்ற கருவிகள் பயன்படுத்தப் பட்டாலும் கொஞ்சம் அண்மையிலே எதிரியைச் சந்திக்கவேண்டிய சமவெளிப் பிரதேசப் போர்கள் உருவெடுத்து விட்டதாலும் மரத்தாலும், இரும்பாலும் கேடயங்கள் செய்து பயன்படுத்தியிருக்கலாம் (மரம்—புறம் 375; இரும்பு,—புறம் 15, 16, 17, 63, நற் 179; பதிற் 62; மலைபடு 377). ஆனாலும் கூட, அப்போதும் தோல் எனும் சொல்லையே பெரிதும் பயன் படுத்தியுள்ளனர்.

ஏந்தியும் தாங்கியும் போரிடும் கருவிகளில் வேறுபட்டிருப்பதைப் போலவே, தங்கியிருக்கும் கோட்டைகளிலும் பழைய கூட்டுச் சமுதாயங்கள் அரசுகளிடமிருந்து மாறுபட்டுள்ளன.

"எருவிட்டு அமைத்த திண்ணிலைக் கதவின்
அரைமண் இஞ்சி"

எனச்சிறார் மன்னரின் அரைத்த மண்ணாலாகிய கோட்டை பற்றி ஒரு பாடல் கூறுகிறது (புறம் 341). மறைந்திருந்து பகைவர் மீது அம்பு எறிவதற்கு ஏதுவான அறையாகிய ஞாயில் இல்லாமல் கிடக்கும் இஞ்சியைப் பற்றி இன்னொரு பாடல் (புறம் 350) கூறும். மலைஆள் சிறார் மன்னர்க்கு இயற்கையே அரணாக அமையும் (பாரி, காரி போன்றோர்). பழஞ் சமூகம் மண்ணாற்கட்டிய மதில்பற்றி பதிற்றுப்பத்து எடுத்துச் சொல்லும் (பதிற் 6: 1—9, 58: 6); ஆனால் அன்றைக் காலத்து சக்திகளாக உருவெடுத்த அரசுகளின் கோட்டை பல அரண்களை உடைத்ததாய் இருந்தது. பகைவர் படை எடுத்து வருவதைப் பார்க்கும் பார்வல் இருக்கை கோட்டையில் உண்டு (ம. கா. 231); அடுத்து ஒரு கூட்டுச் சமுதாயத் தலைவன் தண்ணுமை முழக்கி வீரரைப் போர்க்கு அழைக்கிறான்; உடனே,

"மறப்படை நுவலும் அரிக்குரல் தண்ணுமை
இன்னிசை கேட்ட துன்னரும் மறவர்
வென்றிதரும் வேட்கையர் மன்றம் கொண்மார்"

என வீரர்கள் மன்றம் கூடும் செய்தியை • புறம் (270) கூறு கிறது. அதைப் போன்றே போர்ப்பறை ஒலிக்கக் கேட்டு பின்னரே போருக்குச் செல்லும் மரபு உண்டு (புறம் 279). மேலும் போருக்குவருக எனகுரல் விடுக்கப்படுகிறது எனவுந் தெரிகிறது (புறம் 284, 293). இதையெல்லாம் மொத்த மாகப் பார்க்கும்போது, பழைமையான கூட்டுச் சமுதாய அமைப்பில் படை என தனித்து ஒரு பிரிவாக இல்லாததாகத் தெரிகிறது. அங்கே இளையர் முதியர் போரில் ஈடுபட்டனர் (புறம் 254). ஒவ்வோர் ஆடவனுக்கும் சண்டையில் ஈடுபட ஒரு முறை இருந்தது எனத் தெரிகிறது. ஓர் ஆடவன் தன் மறமாண்பு அதிகமாக தன்முறைகெட பகைவரை விலக்கிப் போர் செய்யும் ஆர்வமேலீட்டால் முன் வருகிறுனும்.

"என்முறை வருக என்ஞன் கம்மென
எழுதரு பெரும் படை விலக்கி
ஆண்டு நிற்கும் ஆண்தகை யன்னே"

என்று புறம் (292) கூறுகிறது. வயது வந்த ஆடவர்கள் அனைவருமே போராற்றினர். எனவே தேவைப்படும் காலத்து தம் திறமையைக் காட்டும் ஆயுதந்தரித்த ஆடவர் கள் இருந்தனர் எனத் தெரிகிறதே தவிர, தனியான ஒரு நிரந்தரப்படை (Standing army) இருந்திருக்கவில்லை என அறிகிறேம். ஆனுல் அரசு தோன்றிய பின்னுல் ஆயுதங்களை எவர் ஏந்த வேண்டும் என்ற விதிமுறைகள் திணிக்கப் படுகின்றன. இதை தொல்காப்பியர் பிற்காலத்தில் இலக் கண வாழ்வியல் மரபாக மாற்றுகிறுர். பாதிக்கப்படும் மக்கள் ஆயுதங்கள் வைத்திருப்பதைத் தடுப்பதற்கு எண்ணற்ற வழிவகைகளிலே ஆளும்வர்க்கம் முயலும் என்பதும், மக்களை நிராயுதபாணியாக்குவதிலும ஆளும் வர்க்கம் அக்கறை செலுத்திக் கொண்டிருக்கும் என்பதும் வரலாற்றில் புதுமையான விஷயமன்று. இங்கேதான், பலாத்காரம் ஸ்தாபன வடிவமாகத் தொடங்குகிறது. அதன் பெயர் படை என்பது. பொதுப்படை எனும் பெயர் தாங்கி ஆளும் பிரிவினர்களுக்குச் சேவை செய்வதை தொழு

லாகக் கொண்ட படைவீரர்கள் நியமனம் செய்யப்படு கின்றனர். இவர்களைத்தான் படையணிமறவர் (புறம் 351, 72) என நம் பழம் இலக்கியங்கள் பெருமை கூறும். பொதுவாக இலக்கியங்களில் விதந்தோதப்படும் நால்வகைப் படை கள், எழுச்சி பெற்ற அரசர்களையே சார்த்திக்கூறப்படும். எனவே, நிரந்தரமான முறையான படை என்பது, பண்டைய தமிழ்ச் சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட கட்டத் திலேதான் பிரசவமாகிறது இந்த ஆயுதப்பிரவேசம் அரசின் தோற்றம்எனும் நோயினின்று உற்பத்தியான கிருமி யாகும். இது தமிழக நிலப்பரப்பிலே ஆரம்பக் காலத்தில் செய்த சேவகம் என்ன என்பதை பின்னால் போரின் விளைவு கள் எனும் பகுதியிலே காண்போம்.

அடுத்து நால்வகைப் படைகள் பற்றி பெரிதும் தமிழ் இலக்கியம் எடுத்துச் சொல்கின்றது (புறம் 72, 351; பதிற் 22; ம. கா 47 — 54) யானை, குதிரை, தேர், காலாட் படைகள் எனப் பிரிக்கப்படும். இவற்றுள் நடு இரண்டு படைகளும் குதிரையோடு தொடர்புடையன. யானை, குதிரை, தேர்ப் படைகள் பகை நாட்டை அழிப்பதனைப்பற்றி புலவர் பெரு மக்கள் தம் கவிதா ஆற்றலால் அனுதாபம் தெளிவுபடவும், அடுத்து கிடைக்கவிருக்கும் பரிசில் பெறும் விருப்பத்துடன் பாண்கடனாகவும் வர்ணித்துப் பாடுகின்றனர் (பதிற் 25) ஆனால் இலக்கியம் காட்டும் போர்களின் வர்ணனைகளைப் பார்க்கும் போது போர்களில் தேர்கள் பயன்பட்டதாகத் தெரியவில்லை என்பர்[19] 'கால் தந்த கலன்' கொடுத்த புரவி நந்தமிழகத்திற்கு இறக்குமதிப் பொருளே. குதிரை பூட்டிய தேர்களை பெருவீரர்கள்—தலைமக்கள் வாகனமாகப் பயன் படுத்திய செய்திகள் அகப்பாடலில் நிறைய வருகின்றன. குதிரைகளைப் போரில் அதிகமாகவும் வலுவாகவும் பயன் படுத்தியிருப்பார்களா என்று ஐயமிருக்கிறது. போர்கள் நெய்தல் நிலத்திலேதான் நிறைய நடைபெற்றிருக்கலாம். என்றாலும்கூட மலைப்பாங்கான கரடுமுரடான காட்டுப் பகுதிகளிலும் போர்கள் நடந்தேறியதற்கான சான்றுகள் உண்டு. அங்கே குதிரையை விரைவாகச் செலுத்த குதிரை

வீரர்கள் தம் காலில் இரும்பு அணியை அணிந்து கொண்டு போரிடுகின்றனர்.

கடுமாகடை இயுவிடுபரி வடிம்பின் (புறம் 378)

ஆயின் குதிரையை அதிகமான காலம் வலுவோடு கரடுமுரடான சமவெளிகளிலும் மலைப்பாங்கானபோர்க் களத்திலும் பயன்படுத்துவதற்கேதுவான "லாடம்" அடிக்கும் பழக்கம் காணப்படாதது போல் தோன்றுகிறது. எனவே போர்க் களத்தில் குதிரையின் பயன்பாட்டைப் பற்றியும் அதன் பெருமைகளைச் சொற்கோலமிடும் புலவர் தம் பாடல் களிலும் நமக்கு இயல்பாகவே ஓர் ஐயம் எழுகிறது. பிற்கால நூலாகிய களவழி நாற்பதில்கூட "காலார் சோடு அற்ற கழற்கால்" என்று குதிரை வீரனின் கால் அணிகளைப் பற்றி குறிப்பு காணப்படுகிறது. எனவே வெளி நாட்டுச் சரக்கான குதிரைக்கு லாடம் அடித்துப் பயன் படுத்தும் முறையில் இப்பழக்கம் நீண்ட காலத்துக்கு தமிழகத்தில் தெரிந்திருக்கவில்லை என்று அறியலாம். இது குறித்து கி. பி. 13 ஆம் நூற்ருண்டு வெனீசு நகர மார்க்கோ போலோ இதுபற்றி கூறுகிருர்.

> "இந் நாட்டினர் குதிரை வளர்ப்பதில்லை; ஆகையால் ஆண்டுதோறும் குதிரைகளைஇறக்குமதி செய்வதில் கணக்கில்லாத பொருள்களைச் செல விடுகின்றனர். குதிரையை எப்படி நடத்துவது என்பதை அவர்கள் அறியார்.
>
> அவர்கள் நாட்டில் லாடம் அடிப்பார் கிடையாது. வெளிநாட்டு குதிரை வர்த்தகரும் தம் நாட்டு லாடக்காரர் தென்னிந்தியாவிற்கு செல்லாமல் பார்த்துக் கொண்டனர்"[20].

இதே போன்ற கருத்தை அராபியப் பயணியான (கி. பி. 13 ஆம் நூற்) அப்புல் வகாப் அவர்களும் குறிப்பிடு கின்ருர்[21] எனவே குதிரைப்படை தேர்ப்படை ஆகிய வற்றின் பயன்பாட்டைப்பற்றி நமக்கு பெருத்த ஐயம் வலுக்கிறது. ஆனுல் இந்திய விலங்காகிய யானையின் தேவையைப் பெரிதும் உணர முடிகிறது. மண் கோட்டை

செங்கற்கோட்டை ஆகியவற்றை இடிப்பதிலும் மூர்க்கத் தனமான தரைப்போரிலும் இதன் தேவையை உணர் கிறோம். குமிந்துவரும் எதிரிகளைச் சிதற அடிப்பதிலே யானைக்குப் பெரிதும் வேலை இருக்கிறது. இத்தகைய நேரத்திலே களிற்றினை மாய்ப்பவனே பெருவீரனாகக் கருதப்படுகிறான். களிற்றைக் கொல்லும்போது அப்போது செத்தாலும் கவலையில்லை என லட்சியமாக்கிச் சில பாடல் கள் எழுகின்றன. இவற்றைப் பிற்காலத்தார் களிற்றுடனிலை என்பர். இங்கே போர்களில் சுயபாதுகாப்பு முன்னிறுத்தப்படாது தியாகமே முன்னிறுத்தப்படுகிறது. ஏனெனில் பரந்த வெளி யில் சண்டை புரியும் வீரர்கள் முன்னால் இரண்டே வழிகள் தாம் உண்டு. ஒன்று, வெற்றியைப் பெறல் அதாவது எதிரியை அழித்தல்; இன்னொன்று, தோல்வி அதாவது தான் அழிந்து போதல். போர்க்களத்திலிருந்து அஞ்சி தப்பி ஓடினாலும் உயிர் பிழைத்தல் அரிது. ஆர அலறத் தாக்கும் சந்தர்ப்பம் பரந்த சமவெளியில் நடக்கும் போர்களில் உண்டு. போர் நடக்கும் இடத்தை அங்குமிங்கும் மாற்றாது ஒரே இடத்தில் போர் நடத்திய நம் பண்டைய சமூக மறவர்களுக்கு இதைத்தவிர வேறு வழியில்லை. அதுவும் முன்னேறுதல், பின்வாங்குதல், விட்டுக்கொடுத்தல், எதிரியை தம் நிலப்பகுதிக்குள் உள் இழுத்தல் போன்று எதிரியைப் பலமிழக்கச் செய்து ஆற அமர நடத் தும் நீண்டகாலப் போர்களல்ல அவை; மிகக் குறுகிய நாட்போர். இவற்றைநாட்போர் என்றே இலக்கியம் சொல்லும். காலை தொடங்கி மாலை முடியும் போர்க்கள வர்ணனைகள் இலக்கியத்தில் உண்டு. எனவே இங்கு சமவெளிப் பகுதி களிலே நேருக்கு நேரே எதிரிகளையும் களிறுகளையும் சந்திக்க வேண்டியுள்ளது. நல்ல புளித்துப் போன தெளிந்த கள்ளைக்குடித்து தூய நல்ல வெண்மை ஆடை அணிந்தும் தலையில் அடையாளப் பூச்சூடியும் தன்னை வெளியே அலங்கரித்துக் கொண்டு உள்ளுக்குள்ளே அரசனுக்கான சேவகப் பெருமையோடும் (புலவர்களால் லட்சியப் படுத்தப்பட்ட) மறவர்கள் போர்களத்தில் கொண்டுபோய்

நிறுத்தப்படுகின்றனர். எனவே இங்கே அஞ்சி ஓடுதல், புற முதுகுகாட்டல் என்பது உயிர் இழத்தலுக்குச் சமம். அதற்குப் பதிலாக எதிரியிடம் மார்பில் வேல்தாங்கி இறத்தல் நலம் என நம் புலவர்கள் கூறுகின்றனர். ஆனால் புலவர்கள் கருத்துநிலைபாட்டையும் மீறி யதார்த்தம் நடக்கத்தான் செய்தது சண்டை நடக்கின்றது; பகைவர் கள் முதுகிட ஓடுகின்றனர்; வீரர்கள் ஆரவாரிக்கின்றனர்; இதுகண்டு பகைவர்கள் பொருது, உயிர்கொடுக்க இதுவே தருணம் என போரிட்டு மடிகின்றனராம்

ஓன்றத் தெவ்வர் உலை விடத்து ஆர்த்தன
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர் (மலைபடு 386—87)

அஞ்சி ஒடுவதைப்பற்றியும் அடிபணிவதைப் பற்றியும் குறிப்புகள் பல இருப்பினும் (புறம் 178; பதிற்று 63), புலவர்கள் புறமுதுகு காட்டாத தன்மையை இலட்சியப் படுத்துவதற்குக் காரணம் இதுவாகவே இருக்கலாம். இத்தகைய சரியான சந்தர்ப்பங்களில் தான் நம் புலவர் களின் பாண்கடன் நம்மை வியப்படையச் செய்கிறது. சண்டை செய்தல் எனும் சமுதாயக் கடமைக்கு ஆற்றல் வாய்ந்த இளம் வீரர்களைத் தூண்டிவிடும் புலவர் செயல்கள் அன்றைய வரலாற்றுக்குப் பொருந்துவதாகவே இருந் தாலும் கூட, இன்றைய ஆய்வாளர்களும் புலவர் பெரு மக்களும் அவர்தம் செயல்களை வேறு விதமாகப் பொருள் படுத்துவதைப் பார்க்கிறோம். இது குறித்து பின்னர் பார்ப் போம்

வெற்றிபெற்ற அரசுகள் அச்சம் தரத்தக்க செயல் களைப் புரிகின்றன. பகைவர் மதிலை அழித்து கழுதை ஏரால் உழுது வெண் வரகு விதைக்கின்றனர் (புறம் 15,392); மருத நிலவயல்களை எரித்து எதிரிகள் பயிர்களைப் பயன் படுத்தாத வண்ணம் சேதப் படுத்துகின்றனர் [புறம் 7, 16, 52,; பதிற் 25, 71; ம. கா 125—126; 154—156; பா. பா 261, 369) தோற்ற அரசனின் பசும் பொன் முடியினால் வீரக் கழல் செய்கின்றனர் (புறம் 40); ஆரமிழைத்து மார்பில்

அணிகின்றனர் (பதிற் 4); பகைவர் காவல் மரத்தை வெட்டி காவல் முரசமாக்குகின்றனர் (பதிற் 44); பகைவர் ஊரை அழித்து அவ்வூர்ப் பெண்களின் கூந்தலைக் கயிறாகத் திரித்து அதனால் யானைகளைப் பூட்டிச் செல்கின்றனர் (பதிற் 5 ஆம் பத்து பதிகம்); எனவே எதிரி நாட்டுத் தலைவன், வீரர்கள் பெண்கள் ஆகிய அனைவருக்கும் மிகப்பயங்கரமான அச்ச உணர்வு தருவதற்கு அதிபயங்கரமான வேலைகளையும் கொடுமைகளையும் செய்தனர். இந்நிலையில் பண்டைக் காலத்தில் போர் முறைகள் மிகவும் அறிவழிப் பட்டதாக இருந்ததென ஆய்வாளர்களாகவும் ஆர்வலர் களாகவும் உள்ள சிலர் கூறுகின்றனர். உதாரணம் ந. சஞ்சீவி போன்றோர். ஆனால் அன்றைய நேரத்தில யதார்த்தம் ஆவல் மிகு ஆய்வாளர்களின் கனவுகளையும் நினைப்புக்களையும் தாண்டி இருந்தது என்பதுதான் உண்மை. ஆனிரை, பார்ப்பனர், பெண்டிர், பிணியுடையோர் பிள்ளை யற்றோர் ஆகியோர்மீது எம்மன்னர் அம்பு தாக்காது என ஒருபுலவர் (நெட்டிடையார்) பல்யாக சாலை முது குடுமிப் பெருவழுதி மீது பாடுகிறார் (புறம் 9). இப்பாட்டில் ஆரிய இனச்செல்வாக்கை நாம் காண்கிறோம். இது கசிந்துபோன குரலாக ஆனால் தனித்த பலவீனமான குரலாக ஒலிக்கக் காண்கிறோம். கொள்ளை மேவலை அறமாகக் கொண்ட காலத்தில், அறவழிப்போர் முறைகள் என எண்ணுவது வரலாற்றுணர்வுக்கு முரணிய சிந்தனையாகும்.

பண்டைக்காலத்தில் போர்வீரர்கள் சண்டைக்கு முன்னே, தங்கள் வாள்களை உயர்த்திக்கொண்டு போருக் குரிய அடையாளப் பூச்சூடி தம் தலைவனை வாழ்த்திக் கொண்டு ஒருவித நடனமாடுவது உண்டு. வீரர்கள் பாசறையில், போர்க்குரிய தும்பை மாலை அணிந்து, அடையாளப்பூ ·பனந்தோட்டைச் சொருகி, சினம் பொருந்தி ஆடும் குரவைக்கூத்தின் ஓசை கடல் போலக் கேட்கிறதாம்.

" பைந்தும்பை
மிசையலங் குளைய பனைப்போழ் செரீஇச்

சினமாந்தர் செறிக்குரவை
ஓத நீரற் பெயர்பு பொங்க
வியன் பாசறை" (புறம் 22)

இத்தகைய போர் நடனங்களை நாம் மிகப் பழமையான மனித குலங்கள் மத்தியிலே காண்கிறோம். சான்றாக, இரோகுவாய் கணங்களிடைய காணப்பட்ட ஒரு தன்மையைப் பற்றி பேராசான் ஏங்கல்சு கூறுகிறார்[22]

"எதிரிகளின் மேல் நடத்திச் சொல்லும் படையெடுப்புகளை ஒரு சில தலை சிறந்த வீரர்கள் திட்டமிடுகின்றனர். அவர்கள் ஒரு போர் நடனம் புரிந்தனர். அந்த நடனத்தில் கலந்து கொள்கிறவர்கள் அனைவரும் அதன் மூலம் படையெடுப்பில் கலந்து கொள்வதற்கு தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தனர். உடனே ஒரு படை அமைக்கப்பட்டு போருக்குப் புறப்பட்டுச் சென்றது"

மிகப்பழமையான குலமாகிய நம் தமிழ்ச் சமூகத்திலும் இத்தகைய போர் நடனங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு என்பதையே நம் இலக்கியம் கூறுகிறது எனலாம்.

போர் முடிந்த பின்னாலும் வெற்றியைக் கொண்டாடுவதற்காக நடனமாடுவதும் உண்டு. வென்றிமுரசம் ஒலிப்ப, வாளை உயரத்தூக்கி பூச்சூடி வெற்றிபெற்ற வீரர்களுடன் சேர்ந்து இனிது ஆடும் மன்னனைப்பற்றி இலக்கியம் கூறுகிறது.

மன்பதை பெயர அரசுகளத் தொழிய
கொன்று தோள்ஒச்சிய வென்றாடு துணங்கை

என பதிற் (77) இப்படிபாடுகிறது இதைப்போன்று பதிற்றுபத்தில் இன்னும் சில சான்றுகள் உள்ளன (பதிற் 45, 56, 57) இது போருக்கு முன்னால் ஆடும் குரவைக் கூத்தை விட சிறிது மாறுபட்ட துணங்கை ஆட்டமாகும். துணங்கைக் கூத்தில் மகளிர்கள் மன்னர்களுடன் தலைக்கை தந்து ஆடுவது வழக்கமாக இருந்தது. என்பதை குறுந்தொகை (346) கூறுகிறது. எனவே போர் வெற்றிக்குப்

பின், வீரர்களும் தலைவர்களும் மகளிர்களுடன் சேர்ந்து ஆடும் நடனம் என ஒருவாறூக ஊகிக்க இடமிருக்கிறது. இம்மாதிரி ஆரிய இனத்தில், போர் வெற்றி பெற்றபின் கைப்பற்றப்பட்ட பெண் கைதிகளுடன் (நம்தமிழில் இவர்களைக் கொண்டி மகளிர் எனச் சொல்வர்—பட்டினப் பாலை) வீரர்கள் ஒருவித புணர்ச்சி நடனம் புரிவதில் ஈடு படுகின்றனர் என்றும், அந்நடனத்தில் வீரர்கள் தலைவனைத் தலைமை தாங்குபடி கேட்டுக் கொள்கின்றனர் என்றும் பண்டைய ஆரிய சமுதாய அமைப்பு முறையை ஆராய்ந்தவர் கூறுகிறார்[23] போர்க் காலத்தில் தொடங்கிய போர் நடனப்பழக்கம் போர்கள் இல்லாதகாலத்தில் அதனை நினைவு கூர்தல் போல மரபாக—வெறும் சடங்காக மாறி விடுகிறது. சாதாரணமாக பெண்கள் துணங்கைக் கூத்து ஆடுங்கால் மன்னர்கள் தமக்குள் விளையாட்டுக்காக வேனும் சண்டையிட்டு இதை ஒரு சடங்காக மாற்றுகின்றனர் என அறிகிறோம் (குறுந் 314). எனவே நம் தமிழ் மன்னர்கள் போருக்கு முன்னும் பின்னும் போர் வெறியோடும் வெற்றிக் களிப்போடும் நடனம் புரிந்தனர் என்று தெரிகிறது.

இவ்வாறு பல விதமான முறைகொண்டு போர் நிகழ்த்தியதால் தமிழக நிலத்திலே ஏற்பட்ட வரலாற்று பூர்வமான மாற்றங்கள்—விளைவுகள் யாவை? அந்த விளைவு கள் எவ்வாறு நமது தமிழ்நிலத்தில் அரசியல் சமூகப் பொருளாதாரத்துறைகளிலே தம்செல்வாக்கைச் செலுத்தி யது? இவற்றைப் பார்ப்போம்.

ஏராளமான விளைநிலங்களைக் கைப்பற்றுகின்றனர். பாண்டியன் நெடுஞ்செழியன் போரில் வென்றபின், வேள் எவ்வி, பழையவேளிர்கள் ஆகியோரின் மருதவயல்களைக் கைப்பற்றுகிறான் (புறம் 24); விளைவயல்களை எல்லாம் கவர் பூட்டுகின்றனர் (புறம் 17); 'தடந்தாள் நாரைபடிந்து இரை கவரும் முடந்தை நெல்லின் கழையமல் கழனிப் பிழையா விளைவுகள் நாட்டை' அகப்படுத்துகின்றனர் (பதிற் 32) வெற்றி பெற்றபின், விளையாபூமியையும் நெல்விளை கழனி

ஆக்குகின்றனர் (பதிற் 3); இவ்வாறு கொள்ளையடித்த நிலங்களையும் நன்கலங்களையும் யாருக்குக் கொடுத்தனர்? தங்கள் கிளைகளுக்கும் பெருவீரர்களுக்கும் புலவர்களுக்கும் கொடுத்தனர் எனத்தெரிகிறது. ஏற்கனவே அங்கங்கே கிழார்கள் என்றழைக்கப்படும் பெரிதும் நிலமுடையவர் களைப்பார்த்தோம் (அம்பர்கிழான் புறம் 365; கரும்பனூர்க் கிழான் 381, 384; வல்லான் கிழான் அகம் 356) இவர்க ளெல்லாம் அக்கிராமங்களுக்கே உரிமையுடையவர்களாக இருக்கலாம் என்பர் துரை அரங்கனார்.[24] ஒருமன்னனே பாடக்கூடிய அளவுக்கு செல்வாக்குப் பெறும் அளவுக்கு ஒரு கிழார் இருந்துள்ளதாக அறிந்தோம். இப்படி செழும்பல் குடிகள் பல இருந்தன. இவ்வாறு நிலத்தையே பெரிதும் சார்ந்துள்ள செல்வாக்கு மிக்க அரசியற் குழுக்கள் உருவெடுத்தன. இந்த குழுக்கள் வேந்தனின் அரசு விவகாரத்திலும் கூடதலையிடுகிற அளவுக்கு சில நேரங்களில் இருந்ததாகவும் அறிகிறோம் (நலங்கிள்ளி—நெடுங்கிள்ளி வாரிசுரிமைப்போர்—கோவூர்கிழார்; சோழன் குளமுற்றத்துத் துஞ்சியகிள்ளிவளவனின் கருவூர் முற்றுகை—ஆலத்தூர் கிழார்) மேலும்,

“ வருபடை தாங்கிப் பெயர் புறத்து ஆர்த்துப்
பொருபடை தரூஉம் சொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கில் நின்றதன் பயனே
பகடு புறந்தருநர் பார மோம்பிக்
குடிபுறந் தருகுவை ஆயின்நின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே[25]”

என ஒருபுறப்பாடல் கூறுகிறது. வேந்தனின் அச்சாணியான படைக்கே ஊன்று கோலாக இருப்பது நில உற்பத்தியே ஆகும் என்றும், அதைச் செய்கின்ற குடிகளை—கிழார்களைப் பாதுகாக்க வேண்டும் என்றும், அப்படிப் பாதுகாக்கின்ற போதுதான், அரசுக்கு மேலும் வெற்றி பல கிட்டும் என்கிறார் புலவர். இந்த சமூகக் குழுக்கள் அரசியல்

அதிகாரத்தில் மேலும் மேலும் பங்கு போட்டுக்கொண்டு வருவதைப் பார்க்கிறோம்.

அதேநேரத்தில் உள்நாட்டுப் பண்டமாற்றின்போது துளிர்த்த வணிகர்கள் வெளிநாட்டு வாணிபத்தின் விளைவாகச் செல்வக் குவியலைப் பெறுகின்றனர். விவசாயத்தினின்று கைத்தொழில் வேலைப் பிரிவினை பிரிந்த பின்னால் ஏற்பட்ட கைத்தொழிலின் வளர்ச்சியால் வாணிபம் அதிகரித்தது. கைவினைஞர் பற்றி மதுரைக்காஞ்சி (511—578) பெரிதும் பேசும். தொடக்க காலத்தில் வேளாண்மைக் கருவிகளைத் திருத்தமுறச் செய்த கைவினைஞர்கள், கொஞ்சம் கொஞ்சமாக வணிகர்களின் நிழலிலே ஒதுக்கித் தள்ளப்படுகின்றனர். வாணிபத்தின் வளர்ச்சியிலும் வணிகர்களின் செல்வ உயர்வுக்கும் இவர்கள் ஒரு குறிப்பிட்ட காரணமாக அமைகின்றனர். இந்த வணிகர்கள் தமக்குள் குழுக்களாகவே இயங்குகின்றனர். இதற்கு சாத்துகள் எனப்பெயர். இவர்களும் பெருகிவரும் செல்வத்திற்கேற்ப அரசனிடத்தில் செல்வாக்குப் பெற நெருங்குகின்றனர். "திங்கள் அனைய எம்மனோர்க்கு" என்று கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் தம்மினத்து மக்களுக்கு அரசன் திங்களாகக் குளிர்ச்சி தருவதைப் பெருமிதம்படப் பாடுகின்றார் (புறம் 59). பொதுவாகவே வேளாளர்களுக்கும் வணிகர்களுக்கும் எவ்வித ஆபத்தும் வாராதபடி அரசன் பாதுகாக்க வேண்டும் என்று கூறும் நொதுமலாளரையும் காண்கிறோம் (பதிற் 13: 23—24). இவ்வணிகர்கள் இடும் ஏவலை நிறைவேற்றும் சிறு குறுந்தொழுவர்கள், ஏவல் மகளிர்கள், அடியோர்கள் வினைவலர்கள், ஏவலர்கள், கைவினைஞர்கள் ஆகியோர் கைகட்டி நிற்கும் சமூகத்தைக் காண்கிறோம் (மதுரைக் காஞ்சி); ஆக, இப்போது சமுதாயத்தில் ஒருவருக்கு ஒருவர் இருக்கும் நிலைவேறுபாடுகள் பெரிதும் அதிகமாகிக் கொண்டே போகின்றன. (அகம் 54, 58, நற் 69, 75, 84, 127, 140, 169, 228, 264, 274, 311, 321; குறுந் 335, 346, 358) என்பர்[25] பண்டைய கால வேடர்களும் இடையர்களும் "கல்லாமாக்கள்" ஆகி

(அகம் 75, 100, நற் 367, ஐங் 204) இழிந்து விடுகின்றனர். சமுதாயத் தலைமட்டத்தில் ஒரு புறம் கிழார்கள்; அவர் களுக்குக் கீழே எண்ணற்ற உழவர்கள் நிறைய இருந்தனர் (கைவினை மாக்கள் குறுந் 10, 309; எருமை உழவர்—நற் 60; நெல் அரிவனர் நற் 275, 350, 400; எருதெறிகளமர்—நற் 125; ம. கா. 262; சிறுகுடிகள் ம. கா. 122; கடைசியர் புறம் 61) இவர்கள் எறத்தாழ வீட்டு அடிமை முறைக்குப் (House hold slavery) பக்கத்திலேயே நிற்கின்றனர் எனத் தெரிகிறது. சமுதாயத்தின் தலைமட்டத்தில் இன்னொரு புறம் வணிகர்கள்; அவர்களுக்குக் கீழ் எண்ணற்ற கைவினை ஞர்கள், ஏவலர், குற்றேவலர், வினைவலர் இளையர்கள், அடியோர்கள் எனப்பிரிவினர் வாழ்ந்து வந்தனர். இவர் களுக்கிடையே சற்று சில நிலைபாடு வித்தியாசங்கள் இருப்ப தாகத் தெரிந்தாலும் இவர்கள் எல்லாம் பொதுவில் வணிகர்கள் நிழலிலே தங்கள் வாழ்வை நடத்த வேண்டிய நிர்க்கதியான நிலையில் உள்ளனர். இவர்கள் எல்லாம் சமுதாய உற்பத்தியில் (அதாவது இவர்கள் ஆற்றும் உற்பத்தியில்தான்) பெறும் பங்கு மிக மிகக் குறைவாகவே காணப்படுகிறது. சமுதாயத்தின் தலைமட்டங்களுக்கும் அடித்தள மக்களுக்கும் உள்ள வேறுபாடுகள் தெளிவாகக் காணப்படுகின்றன. மக்கட் சமுகத்தின் மூன்று அடிப்படை தேவைகள் எனச் சொல்லப்படும் உணவு உடை உறையுள் ஆகியவற்றில் பெருத்த வேறுபாடுகள் மலிந்து காணப்படு கிறது. மொத்தத்தில் வர்க்க வேறுபாட்டின் தொடர்ச்சி யாக இவர்களின் வாழ்நிலைகளிலும் வேறுபாடுகள் தொடர்ந்தன.

சமுதாயத்தில் நலிவுற்றவர்க்கத்தைச்சார்ந்த பெண்ணின் நிலைமையை ஒரு கவிஞன் மிகவும் இயல்பு படவர்ணிக்கிறான் பசியினால் வருந்தும் மெல்லிய இடையை உடையவள்; வீட்டிலே உணவாக்குவதற்கு ஒரு பொருளும் இல்லை; குப்பையிலே பயிரான கீரையைக் கூர்மையான நகத்திலே கிள்ளியெடுத்தாள்; உப்பின்றியே வேக வைத்தாள்; இதை எவராவது பார்த்தால் பரிகாசம் செய்வரே என்றெண்ணி

நாணமுற்று வாயிற் கதவை அடைத்துவிட்டு நிறைந்த சுற்றத்தோடு உட்கார்ந்து அதனை உண்டாள் என நல்லூர் நத்தத்தனார் வர்ணிக்கிறார்.

"குப்பைவேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்"
(சிறுபாண் 137—139)

என வரும் இவ்வடிகள் அப்பெண்ணின் வறுமை வாழ்க்கை நிலையைத் தெளிவாக்குகிறது. இதே போன்ற நிலைமையை புலவர் பெருஞ்சித்திரனாரின் வறுமை நிலைமையைத் தெரிவிக்கும் பாடல்களிலே காண்கிறோம். நிலத்திலே உண்மையாக உழைத்துப் பயிர் செய்யும் உழவனது நிலையோ இன்னும் மிகமிக மோசமாயிருந்தது. வரகரிசிச் சோற்றை புழுக்கிய அவரையோடு கலந்து பெருகிய சோற்றை அவர்களே உண்டனர்.

" குறுந்தாள் வரகின்குறளவிழச் சொன்றி
அவரை வான்புழுக் கட்டிப் பயில்வுற்று
இன்சுவை மூரல்"

என பெரும்பாணாற்றுபடை (192—194) கூறுகிறது. இதனை ஆராய்ந்த சாமிசிதம்பரனார் இது குறித்துக்கூறுகிறார்; "இந்த உழவர்கள் நிலமற்றவர்கள் தாழ்ந்த வகுப்பினர்கள். வேளாளர்கள் அல்லர்" [26] இவர் கூறும் இக் கருத்து சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் மிகவும் முக்கியமானது. ஏறத்தாழ இந்தியாவின் மூன்றில் ஒரு பங்கினரான (20 கோடி மக்கள்) தாழ்த்தப்பட்ட மக்கள் பெரிதும் நிலமற்ற கூலி விவசாயிகளாகவே இருக்கின்றனர். இவர்களில் உடல் உழைப்புக்கேற்ற வயது வந்தவர்களில் அதாவது சுமார் 10 வயதில் இருந்து நிலத்திலே உழைப்பவர்கள் தொகை 95 சதவீதம் என்றும், இந்தியாவில் உள்ள நிலமற்ற கூலி விவசாயிகளின் தொகையில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் என்றும்

ஓர் அறிக்கை கூறுகிறது (தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நல அறிக்கை— இந்திய அரசு—1975) ஏறத்தாழ நம்தமிழகத்தில் கூட இதே அளவு இருக்கலாம். பழைய பாடல்களில் உழவர்களுக்கு கடைசியர் (புறம் 61) எனும் சொல் உண்டு. இதுவே இவர்களின் சமூகத் தகுதியைக் குறிக்கும் சொல் குறியீடாக இருக்கின்றது. சம்பந்தர் பாடல்களிலும் இக் "கடைசியர்கள்" குறிப்பிடப்படுகின்றனர். அதற்கு பின்னே பள்ளங்களில் (வயல்களில்) உழைப்பதனால் "பள்ளர்கள்" என்றழைக்கப்படுகின்றனர். என்னதான் இன்று அரிசனங்கள் என்ற புது நாமம் இட்டு அழைக்கப்பட்டாலும், அக்காலத்திய நிலைமையினின்று பெருத்த மாறுதல் ஏற்படவில்லை என்று தெரிகிறது. இவ்வாறு தாழ்த்தப்பட்ட வகுப்பினரின்—நிலமற்ற விவசாயிகளின்தோற்றம் வளர்ச்சியை சில பல கால வித்தியாசங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் ஆயவேண்டியது இன்றைய ஆய்வுலகத் தேவை மட்டுமல்ல; இந்திய சமூகத்தில் வர்க்க வேறுபாடுகள் எப்படி சாதி வேறுபாடுகளாக வடிவெடுத்தன என்பது பற்றியும் எப்படி சாதி அமைப்புகள் பல்வேறு வகையான சிக்கலான பின்னணிகளுடன் இங்கு கெட்டிதட்டிப்போய் கனத்துக் காணப்படுகிறது என்பது பற்றியும் மிக ஆழமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது இன்றைய காலத்தேவையும ஆகும். ஆனால் இதுபற்றி ஆராய இது சந்தர்ப்பமன்று.

தாழ்த்தப்பட்ட நிலமற்ற விவசாயியின் உணவைக் காண்பித்த அதே கவிஞன் அதே பாடலில் இன்னொரு சமூக ஓவியத்தையும் காட்டுகிறான். வரகரிசியை உண்டு வயிறு நிரப்பும் இந்த உழவர்கள் உழுது, அதன் மூலம் வரும் வெண்ணெல் அரிசியை கிழார்கள் வேளாளர்கள் பிடுங்கிக் கொள்கின்றனர். அவர்கள் வெண்ணெல் அரிசியை பெட்டைக் கோழியின் பொரியலோடு உண்ணுகின்றனராம்.

"மடியா
வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனைவாழ் அளகின் வாட்டோடும்"

என பெரும்பாண் (254—256) கூறுகிறது. மேலும் சொந்த நிலமுள்ள வேளாளர்களின் வீடுகளுக்குச் சென்றால் என்ன கிடைக்கும்?

" தண்தலை உழவர் தனிமனைச் சேர்ப்பின்
தாழ் கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்
குலைமுதிர் வாழை கூனி வெண் பழம்
திரள் அரைப் பெண்ணை நுங்கொடு பிறவும்
(பெரும்பாண் : 355—360)

இச் செய்திகளால், சமுதாயத்தின் தலைமட்டத்தில் ஒரு புறமிருந்த வேளாளர்கள் உணவு நிலைமை பற்றியும், தாழ்த்தப்பட்ட நிலமற்ற ஆனால் உழைப்பில் சோர்வு காட்டாத (மடியாவினைஞர்) உழவர்களின் உணவு நிலைமை பற்றியும் இருந்த வேறுபாடான நிலைகளை—வர்க்க வேறு பாட்டு நிலைகளை—அறிகின்றோம். ஒரே நூலிலே இது கூறப்பட்டுள்ளது, நம் கருத்துக்கு மேலும் வலு சேர்க்கும். இதனையே மீண்டும் வலியுறுத்துகிறார் சாமி சிதம்பரனார்.[27]

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் நிலமற்ற உழவர்கள் இருந்தனர். நிலமற்ற வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கள் எனக் கருதப்பட்டனர். நிலமுள்ள உழவர்கள் வேளாளர்கள் என்னும் உயர்ந்த வகுப்பினராகக் கருதப்பட்டனர். இவ்விரு வகுப்பினரும் ஒழுக்கத் திலும் நாகரிகத்திலும் பழக்க வழக்கங்களிலும் மாறுபட்டிருந்தனர் உழவரைப் பற்றியும் வேளாள ரைப் பற்றியும் இந்நூலாசிரியர் 'தனித்தனியே கூறியிருப்பதைக் கொண்டு இவ்வுண்மையை உணர லாம்."

உண்மையை ஒருவாறு உணர்ந்த அறிஞர் சிதம்பரனாரின் கூற்றை இன்னும் செழுமையாகச் சொன்னால், வர்க்க வேறுபாடுகள் பெருத்துவிட்ட அக்காலத்தில் அந்தந்த வர்க்க நிலைகளுக்கேற்பவே அவரவர்கள் வாழ்க்கை நிலைகள் காணப்பட்டன எனலாம். சமுதாயத்தில் ஒரு பக்கம்

"அடுபசி உழந்த இரும்பேர் ஒக்கலைக்" காண்கிறோம்; இன்னொரு பக்கம், "தொல்பசி அறியாத் துளங்கா இருக்கை" யினரையும் காண்கிறோம்.

பண்டைய காலத்தில் தமிழகக் கைவினைஞர்கள் நெசவுத் தொழிலில் சிறந்திருந்தனர். "நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கனிந்து அரவுரியன்ன அறுவை" நெய்யும் அளவிற்கு கைவினை நெசவு நுணுக்கம் அடைந்திருந்தது (பொருநர் ஆற்றுப்படை 82—83). செழும்பாக்கத்துப் பெண்டிர்கள் பட்டாடை அணிந்தும் பெருநிதி வணிகர் களின் பெண்டிர்கள் மென்னூல் கலிங்கம் அணிந்தும் தத்தம் கணவரோடு மகிழ்ந்திருந்ததாக இலக்கியம் கூறும் (ப. பாலை 10; ம. காஞ்சி 554) பளிச்சென்று தெரியும் கரை போட்ட பட்டாடையைத் தரிப்பதிலே பெரு விருப்பம் கொண்டுள்ளனராம் (பொருநர் ஆற்றுப்படை 185). இதே பொருநர் ஆற்றுப் படையில் இன்னொரு சொல் ஓவியம் உண்டு. "ஈரும் பேனும் கூடிக் குலாவி என் உடையில் அரசு புரிகிறது; அது வேர்வையில் நனைந்து நாற்றமடிக்கிறது; என் உடை, வேறு நூல்கள் நுழைந்திருக்கின்ற தையல் போட்ட கிழிந்த கந்தை" என்கிறார்.

" ஈரும் பேனும் இருந்து இறை கூடி
வேரொடு நனைந்து வேற்றிழை நுழைந்த
துன்னல் சிதார்" (பொருநர் 80—72)

என்ற கவிஞரின் அழகான சொல்லோவியத்துப்பின்னால், மறைந்து ஒலிக்கும் சோகமயமான குரலை நம்மால் கேட்க முடிகிறது. மேலும் 'அக்காலத்தில் பிரபுக்களையும் அரசர் களையும் தவிர மற்ற ஆண்கள் இரண்டே துணிதான் அணிந் திருந்தனர். இடையில் ஒரு துணியையும் தலையில் ஒரு துணி யையும் (தலைப்பாகை) அணிந்திருந்தனர். பெண்கள் இடையில் மட்டுமே துணியணிந்து கொண்டு, தங்களைத் திருப்திபடுத்திக் கொண்டதாகத் தெரிகிறது, என்பார்.[28]

மேலும், அக்காலத்தில் சாதாரண கீழ் நிலை மக்கள் வைக்கோலால் வேய்ந்த சிறு குறுங்குடிசைகளில் வாழ்ந்த

னர் (அகம் 87; பட்டினப்பாலை 80—81). வைக்கோலால் வேய்ந்த கூரை மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து கருமை ஆகிவருகிறதை உவமை நயம்பட உரைக்கின்றார்.

பருவ வானத்துப் படுமழை கடுப்ப
கருவை வேய்ந்த கவின் குடிச் சீறூர்
(பெரும்பாண் 190—191

உழைப்பவர்கள் குடிசை நிறத்தால் வானமாகி விடுகிறது! எப்படி? குடிசையின் கருமை நிறம் அதனை வானக்கருமைக்கு ஒருபுடை ஒப்புமைப் படுத்திவிடுகிறதாம். அதே நேரத்தில், வானம் தொட இருந்த மாட மாளிகைப் பற்றிய வர்ணனையும் காட்டுகின்றார்,

விண்பொர நிவந்த வேயா மடத்து பெரும்பாண் 348

நெடுந் தூண்டிற் கோலைச் சாத்திய குறுகிய கூரையை உடைய "குடியிருப்பைப் பற்றிக் கூறும் பட்டினப் பாலையில் மாளிகை வர்ணனையும் உண்டு

" குறுந்தொடை நெடும் படிக்காற்
கொடுந் திண்ணைப் பஃற வைப்பிற்
புழை வாயிற் போகிடை கழி
மழை தோயும் உயர் மாடத்து" (142—145)

இந்த வான்தோய் மாடங்களையும் அதன் இலக்கிய வர்ணனைகள் பற்றியும் அகழ்வாராய்ச்சியாளர் ஐயம் கொள்கின்ற போதிலும், பண்டைய காலத்தில் செங்கற் கல் வீட்டு அமைப்பு இருந்தது என்பதை ஒப்புக் கொள் கின்றனர். காவேரிப்பூம்பட்டினம், திருச்சி மாவட்டம் ஆலகரை, கொற்கை ஆகிய இடங்களில் நடந்த அகழ் வராய்ச்சிகள் இதைத் தெரிவிக்கின்றன. அரிக்கமேடு அகழ் வாரய்ச்சி செங்கல் சுட்ட சுண்ணும்பு ஆகியவற்றையும் பயன்படுத்தியதையும் தெரிவிக்கின்றது[20] எனவே புல், வைக் கோல் ஆகியவற்றால் வேய்ந்து குறுகியதாய் உள்ள கருநிறம் பெற்ற குடிசைகள் வாழ்ந்த சமுதாயத்திலே குறைந்தபட்சம் செங்கற்கள், சுட்ட சுண்ணும்பு ஆகிய

வற்றைப் பயன் படுத்திக் கட்டப் பட்ட சிறுவாயில், பெரிய வாயில், இடைகழி, பெரிய மாடம் கொண்ட மாளிகை களையும் நாம் பார்க்க முடிகிறது.

இதெல்லாம் நமக்குத் தெரிவிப்பது என்ன? வர்க்க வேறுபாடுகள் பெருகியிருந்தன என்பதையே காட்டுகிறது. சமூகத்தில் வேறுபாடுகள் பெருகும் போது ஆளும் அரசு களுக்கும் அதன் பின்னணியால் இருந்து கொண்டு தம் வர்க்க நலன்களைப் பெரிதும் பேணிக் கொண்டு நிற்கும் அரசியல் அதிகாரக் குழுக்களுக்கும்—இங்கே கிராமப் புறக் கிழார்களுக்கும் நகர்ப்புற வணிகர்களுக்கும் (புறம், 59 பதிற் 13) நெருக்கடிகள் பெருகலாயின. உற்பத்திச் சாதனமாகிய நிலங்களைப் பெருக்கியதால் அதிகம் உற்பத்தி செய்வதற்கு நிறைய மக்கள் தொகையும் உழைப்பும் தேவைப்படலா கிறது. ஆனாலும் நாள்தோறும் ஆளும் வர்க்க நலன்களால் உரிக்கப்படுவதால் இம்மக்களால் அதைப் பொறுத்துக் கொள்ளவும் முடியவில்லை. எனவே இப்போது உருவாகி யுள்ள அரசுகளுக்கு இன்னொரு பணி—சிறப்பானபணி— ஒன்று காத்துள்ளது அதாவது, உள்நாட்டு ஆளும் வர்க்கங் களின் உடமைகளைப் பாதுகாத்துக் கொடுப்பது என்பதாம். கொலை கடிந்தும் களவு நீக்கியும் கீழ்நிலை மக்களை மேல் நிலை மக்கள் வாழவைத்தனர் என்று கூறுவது கவிஞனின் உள்ளார்ந்த விருப்பமாகவே உள்ளது. இந் நிகழ்ச்சி களையெல்லாம் நம் பண்டைய இலக்கியங்களில், பின் வந்த அரசர்களும் அரசவைப் புலவர்களும் தொகுத் தாகத் தெரிகிறது. எப்படியோ. அரசு தொடர்பான அறிஞர் கள் தொகுத்துள்ளனர் தொகுப்பிலும் எண்ணிக்கையைப் பொறுத்து பெருத்த கருத்து வேறுபாடுகள் உள்ளன. எனவே சாதாரண கீழ்நிலைக்குடிகளின் இத்தகைய வெறுப் புணர்வைப் பதிவு செய்யும் பாடல்களை இவர்கள் தொகுப் பில் விடுபடச் செய்திருக்கலாம். ஆனாலும் கூட அங்கங்கே அணைக்கட்டில் கசிந்து வரும் நீரைப் போல வரும் கருத்துக் களே நமக்குப் போதிய அளவில் மறைமுகமாகச் செய்தி கூறும் குறிப்புகளாக உள்ளன.

அங்கங்கே உள்ளே பொதிந்து காணப்படும் சிற்சில குறிப்புகளின் மூலமாக நாம் இதை அறிய முடிகிறது. 'செல்வத்தைப் பெற்றவர்கள் தாமே அனுபவிக்க வேண்டும் என நினையாது செல்வத்துப் பயன் ஈதல் என எண்ண வேண்டும்; இல்லையெனில் செல்வம் உங்களிடமிருந்து அகன்று தவறிவிடும்' (புறம் 189) என கணக்காயனார் மகனார் நக்கீரனார் எச்சரிக்கை விடுகிறார். ஆளும் வர்க்கத்துக்கு அற நெறிகள் தேவைப்படும் காலத்திய கருத்துக்கள் இதிலே கொழுந்துகள் விட்டிருப்பினும், செல்வம் பணக்காரனிடமிருந்து தப்பி விடும் நிலைமையிலும் சமுதாயம் இருந்தது என்பதையும் காட்டும் காலக் குரலாகவே இது தோற்ற மளிக்கிறது. இப்பாடலுக்கு உரை எழுதும் போது அவ்வை துரைசாமி பின்வருமாறு கூறுகிறார்.

> "பெரிதீட்டி தமித்து உண்பவர்பால் செல்வம் மிகுதலால், அம்மிகுதிக்காட்சி, சிறிதீட்டி பலர் சூழ இருந்துண்பவராகிய வறியர்க்கு, அறிவு நலம் கெடுப்பதற்கு ஏதுவாகிறது; அதுவே செல்வர்க்கும் எளியர்க்குமிடையே ஒற்றுமை நிலைபெறாது, தீயகருத்துகளும் செயலும் பிறக்கிறது. அதனால் செல்வர் வறியவர் எல்லோருடைய வாழ்வும் பொருட் குறையுற்று, அறமும் இன்பமும் இன்றிச் சீரழிவது ஒருதலை என்பதறிக. இதனால் செல்வர் ஈதலைக் கடனாகக் கோடல் அறனும் என்றும், அஃது அவர்கட்கேயன்றி மக்களுலகுக்கே நலம்பயப்பதாம் என்றும் துணியாம். இந்த அறவுணர்வுக்குறைவே இக்காலத் தொழிலாளர் கிளர்ச்சிக்கும் பொருள் முட்டுப்பாட்டுக்கும் வாழ்வு நிரம்பாமைக்கும் வாயிலாதல் தெற்றெனத் தெளியப்படும்" (தடித்த எழுத்துக்கள் எம்மால் இப்பட்டவை) (புறம்—கழகப் பதிப்பு—பால் 189—உரை)

அற்றைக்கால உழைப்பாளர்கள் முதல் இற்றைக்காலத் தொழிலாளர் வரை அவர்களிடத்துக் காணப்படும் கிளர்ச்சிக்கும் பொருள் முட்டுப்பாட்டுக்கும் வாழ்வு நிரம்பா

மைக்கும் அவ்வை துரைசாமிப் பிள்ளையவர்கள் ஒருவாறு காரணம் சொல்லும் இக்கூற்றைச் சிறிது பார்ப்போம். அப்போது தான் அற்றைக்கால உழைப்பாளர்களின் வறுமை நிலையைப் பார்ப்பதோடு, அந்நிலைமைக்கான காரணந்தேடும் இற்றைக்கால ஆய்வாளர்கள் சிலரின் (அவ்வை துரைசாமி, டாக்டர் மு. வரதராசனர், ந. சஞ்சீவி) ஆய்வுச் சமூகக்கண்ணோட்டத்தின் பலவீனத்தையும் தவருன போக்கையும், இவர்கள் தங்கள் ஆய்வுகளின் மூலம் தெரிந்தோதெரியாமலோ செய்யும் தொண்டுழியமும் நமக்கு நன்கு புலப்படும். முதலில், அக்காலச் சமூகத்தில் "வறியவர்களின் அறிவு நலம் கேடு எய்துவதற்கும்" "தீய கருத்துக்களும் செயலும் பிறப்பதற்கும்" காரணமாக அங்கே வேறுபாடுகள் மலிந்திருந்தன என்பதை ஒப்புக் கொள்கிருர். அடுத்து அவ்வை அவர்கள், "தீயசெயல்கள்" (அதாவது செல்வரை எதிர்த்த கலகங்கள் அவைபோன்ற நிகழ்வுகள்) நிகழ்ந்தேறின என்பதையும் ஒப்புக்கொள் கிருர். கலகங்கள் நிகழ்ந்தன என்பதைக் கூறிய அவ்வை அவர்கள், அதன் விளைவுகளையும், தீர்வுகளையும் பின்னர் கூறுகிருர். இந்த "தீய கருத்துகளும் செயல்களும் நடைமுறை யாளுல், வறியவர் செல்வர் எல்லோருடைய வாழ்வும் பொருட் குறைவுற்றுச் சீரழியும் என அதன் விளைவுகளைச் சுட்டுகிருர். அவ்வை குறிப்பிடுகிற தொழிலாளர் கிளர்ச்சியின் போது கூட, சற்றேறக்குறைய இதே கருத்தினையே அவ்வை துரைசாமிப்பிள்ளை போன்ற அறிவுஜீவிகள் இன்றும் குறிப்பிடுகின்றனர். அன்று, "குறுங் கூரைக்குடி நாப்பண்" இருந்து, "ஈரும் பேனும் இறைகூடி வேரொடு நனைந்த துள்ள" ஆடை யணிந்து "குப்பை வேளைக் கீரையை உப்பில்லாமல் வேகவைத்து நாணிக் கதவடைத்து இரும் பேர் ஒக்கலோடு" இருந்து உண்ணும் வறியவர்களுக்கு குறை வதற்கும் சீரழிவதற்கும் என்ன இருந்தது? விண்பொர வேய்ந்த மாடத்தில், கொட்டைக்கரைய பட்டுடை உடுத்தியும், மடியாவினைஞர்தந்த வெண்ணெல் அரிசியை அளகின் வாட்டோடு, உண்ணும் செல்வர்களுக்கு வேண்டு

மானுல் பொருள் குறைவதற்கும் அதன் வழி இன்பக் குறை பாடுகள் நேர்தற்கும் வழியுண்டு' எனவே இந்த "அறிவு நலக் கேடுகளும்" "தீயகருத்துக்களும் செயல்களும்" விளைச்சலானுல் அதை அறுவடை செய்யும் போது அங்கே உடைப்பெருஞ் செல்வர் வாழ்வே குறைபட ஏதுவா யுள்ளது. இதுதானே யதார்த்த நிலைமையும் கூட. எனவே, செல்வர்கள் ஈதலைக்கடமையாகக் கொண்டால் வறிய வர்களின் "தீயகருத்துக்களையும் செயல்களையும்" சற்று தற்காலிகமாக தாமதப் படுத்தலாம். எனவேதான் பல்வேறு செல்வச் செழிப்புள்ள சமூகங்களில், ஈதலைக் கடமையாகக் கொள்ளவேண்டும் எனச்சமயச்சான்றோர்கள் கூறுகின்றனர். இதற்கு அடுத்த கால கட்டத்தில் அறநெறிக் கருத்துக்களே சமூகத்தில் மலிந்து காணப்படுவதும் இதன் தொடர்ச்சி யான செயல் வடிவ மாகும். இரந்தும் உயிர் வாழ வேண்டிய சமூகத்தில்தான் ஈதல் இசைபட வாழ்தல் எனும் கருத்து பிறப்பெடுக்கிறது. வறியவர்களின் வாழ்வு நிரம்பா மைக்குக் காரணம் இந்த அறநெறிவுணர்வுக் குறைவு என்பதல்ல. பல்வேறு விதமான சாதனங்களையும் கருவி களையும் வைத்துக்கொண்டு, உழைக்கும் மக்களின் உழைப் பைப் பயன்படுத்தி அபரிமிதமான உற்பத்தியைப் பெருக்கி, அப்பெருக்கத்தைத் தமது உடைமையாக்கிக் கொண்டுள்ள சக்திவாய்ந்த வர்க்கங்களின் அப்பட்டமான வெட்ட வெளிச்சமான சுரண்டல் முறையே ஆகும். இம்முகத்தை மறைப்பதற்கான முகமூடியே அறநெறி எனும் கருத் தாகும். அன்றைய "அறவுணர்வுக் கருத்தே" சற்றேறக் குறைய சில வித்தியாச வடிவமைப்புகள் பெற்று இன்றளவும் நிலவுகிறது. இலக்கியத்தை ஆயும் போதுகூட, பிற் போக்குத்தனமான கருத்துக்களும் தெரிந்தோ தெரியா மலோ தொண்டு ஊழியக் கருத்துக்களும் தோற்ற மளிக்கக் கூடும் என்பதற்கு அவ்வை துரைசாமிப்பிள்ளை போன்ற ஆய்வாளர்கள் நமக்கு நிதர்சனமான உண்மை யாக விளங்குகின்றனர்.

இந்த வறியவர்களின் "அறிவு நலக்கேடுகளையும்"

"தீயகருத்துக்களையும் செயல்களையும்" தடுக்க வேண்டியுள்ளது. அந்த நேரத்தில்தான் போரின் விளைவுகளாகத் தோன்றியிருக்கும் அரசுகளுக்கும் அவற்றின் உறுப்புகளுக்கும் முக்கியமான பணி காத்துள்ளது. இதற்கு இரண்டு நிறுவனங்கள் தேவைப்படுகின்றன. போர்க்களத்தில் பயன்பட்ட படைப்பிரிவுகள் இப்போதும் இன்னும் நல்ல முறையில் செழுமையடைய வேண்டியுள்ளது. அதற்கடுத்து சாஸ்திரங்கள் எனப்படும் அறநூல்கள் தேவைப்படுகிறது. "அறிவு நலக்கேடுகளையும் தீயகருத்துக்களையும்" முளையிலே கிள்ளி எறிந்து மக்களை மழுங்கச் செய்வதற்கு அறநூல்கள்; அதை மீறி "தீய செயல்கள்" பிறப்பெடுத்தால் அங்கே அதை ஒடுக்குவதற்கு படைகள் காத்துள்ளது. இப்போது ஆளும் வர்க்கம்—பண்டைய போர்களின் விளைவாக கூட்டுச் சமுதாயத்தின் அழிவுச் சாம்பலிலிருந்து பிறப்பெடுத்த அரசுகள்—இரண்டு ஆயுதங்களைக் கைக்கொண்டுள்ளன. ஒன்று மிக மென்மையான தோற்றம் கொண்டது; அறநூல்கள்—தர்மசாஸ்திரங்கள், நல்லொழுக்கக் கோட்பாடுகள்; இன்னொன்று மிக வன்மையான தோற்றமும் செயல்பாடும் கொண்டது; கொலைக் கருவிகள் அடங்கிய படைகள். ஆக அன்றைய காலத்தில் அரசுகளுக்குத் தேவைப்பட்ட அறநூல்களும் அவற்றை ஏந்திச் சொன்ன சமய நிறுவனங்களும் படைப்பிரிவுகளும் எல்லோருக்கும் பொதுவானது அல்ல. வர்க்க சமுதாயத்தின் கூறுபாடுகளும் தன்மைகளும் அவற்றில் நிரம்பவே இருந்தன. ஆனால் இவை இரண்டு நிறுவனங்களும் வறியவர் செல்வர் ஆகிய எல்லோருக்கும் பொதுவானவை என்று எடுத்துச் சொன்னதிலும் பிரச்சாரம் செய்ததிலும் அதில் வெற்றியடைந்ததிலும் தான் அன்றைய ஆளும் வர்க்க அறிவு ஜீவிகளின் சாமர்த்தியமும் வெற்றியும் அடங்கியுள்ளது. ஆனால் இவற்றின் தோலை உரித்துப் பார்த்தோம் எனின் அங்கே இவற்றின் பணி, உடைப் பெருஞ்செல்வரின் உடைமைப் பாதுகாப்பு என்பதுதான் என்ற உண்மை அம்பலமாகி விடுகிறது.

இந்த "அறிவு நலக் கேடுகளும்" "தீய கருத்துகளும் செயல்களும்" தமிழக வரைப்பிலே நடந்தேறியிருந்ததற்கு சிற்சில சான்றுகளைத் தவிர, வேறு வெளிப்படையான— பெரும்பாலான சான்றுகள் இலக்கியத்தில் காணப்பட வில்லை என்றாலும், இலக்கியத்தில் அங்கங்கே காணப்படும் கசிவுகளையும் மீறல்களையும் புகைச்சல்களையும் பார்த்தோம் என்றால் அவற்றின் அடியிலே நடந்தேறிய செயற்பாடுகளை யும் நாம் உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு நகரவர்ணனையிலும் படைமறவர்கள், படைக்கலங்கள், படை இருப்பிடங்களையும் அறிகிறோம் (புறம் 27, 98, சிறுபாண் 203—206; ம. கா 343,—366; ப. பா 283—287; மலைபடுகடாம் 127) விசேஷமான ஆயுதந் தாங்கிய இம்மறவர்கள் மக்களிடமிருந்து வேறுபடுத்தப் பட்டனர். பழமையான கூட்டுச் சமுதாயத்தில் இளையர் முதியர் வேறுபாடின்றி எல்லோரும் ஆயுதம் வைத்திருக்கும் சமூக உரிமை பெற்றிருந்தனர். ஆனால் வர்க்க வேறுபாடுகள் பெருத்துவிட்ட சமூகத்தில்—அரசு சரியானபடி நிறுவன மான பிற்கால சமூகத்தில் ஆயுதங்கள் வைத்திருப்பதற் கான சமூக உரிமை அனைவருக்குமில்லை. ஒரு குறிப்பிட்ட குழுக்களே ஆயுதந் தரித்தன. மக்கள் நிராயுதபாணியானார் கள். இங்கே செல்வாக்குப் பெற்ற குழுவினர் ஆயுதந்தரித் ததை இலக்கியம் (மதுரைக் காஞ்சி) கூறும். இந்நிலையைத் தான் பிறகு தொல்காப்பியம் தொகுத்துரைக்கிறது.

"இடையிரு வகையோர் அல்லது நாடிற்
படைவகை பெறாஅர் என்மனார் புலவர்" —தொல் மரபியல் 71

" வில்லும் வேலும் கழலும் கண்ணியும்
தாரும் ஆரமும் தேரும் மாவும்
மன் பொரு மரபின் ஏனோர்க்குரிய —தொல் மரபு 84

இடையிரு வகையோர் எனின் வணிகரும் வேளாளரும் ஆவர். "ஏனோர்" எனின் அவ்விருவகையினர் தாம் எனபர் இளம்பூரணர் (இளம்பூரணர் உரை—தொல்—மரபு 84) எனவே இப்போது நமக்குத் தெளிவாகிறது. பண்டைய

சமூகத்தில் அரசன் வணிகர் வேளாளர் ஆகிய பிரிவினர் களிடம் ஆயுதம் இருந்தது. படைகளிடம் ஆயுதம் இருந்தது. ஆனால் 'அன்னராயினும் இழிந்தோர்க்கில்லை, (தொல்—மரபு 85) என மக்கள் நிராயுதபாணியான செய்தி யையும் தெரிவிக்கிறது. இந்த விசேஷமான நிரந்தரமான படையணி மறவர்க்கு இரண்டேயிரண்டு வேலைகளே ஏற்பட்டன. ஒன்று, இந்த அரசியல் பொருளாதார குழுக் கள் தத்தம் அதிகாரப் பெருக்கத்திற்காக ஏற்படும் நிலத் துக்கான போர்களில் ஈடுபடுதல்; இது இதனுடைய வெளிப்பிரதேசப்பிணி. இன்னொன்று, அதுதான் மிக முக்கிய மானதாக பிற்காலத்தில் மாறிவிட்டது; உள்நாட்டு மக்களிடமிருந்து இந்த அரசியல் பொருளாதாரக் குழுக் களுக்கு ஏற்படும் நெருக்கடிகளினால் இவை தளர்ந்துவிடும் நிலை ஏற்படும் போது நிராயுதபாணியாக்கப்பட்ட மக்களை அடக்கி அக்குழுக்களைக் காப்பாற்றுவதே ஆகும். இது இதனுடைய உள்நாட்டுப்பணி.

ஒரு புலவன் ஓர் அரசனின் பெருமையைப் பேசுகிறான் "உன் நாட்டில் தீமையே இல்லாததாக்கி நன்மையே மிகவும் புரிந்து கடலாலும் காடு கழனிகளாலும் பெற்ற செல்வங் களால் பயன்பெற்ற மக்கள் ஒருவரையொருவர் நலியா மலும் மக்கள் பிறர்க்கு உரிமையுள்ளதாய் தமக்கு இயைபு இல்லாத பொருள்களை விரும்பாமலும் மக்களை வழி நடத்தும் தம் படையணி மறவரை உடையவனாக"

என அவன் புகழப்படுகிறான் (பதிற் 22). வெளிநாட்டுப் போர்களினால்பெற்ற பலன்களைத் தம்மைச்சுற்றியுள்ள கிளை இனத்தார்க்குக் கொடுத்து அதுபோக எஞ்சியவற்றைத் தான் எடுத்துக் கொள்பவனாகவும் உள்நாட்டில் வருத்த முற்று தளர்ச்சியுற்ற குடிகளுக்கு அவர்தம் தளர்ச்சியைப் போக்குபவனாகவும் உள்ள மன்னனை இன்னொரு புலவர் பாடுகிறார்.

" பெருங்கிளை உவப்ப
ஈத்தான்று ஆனா இடனுடை வளனும்
துளங்கு குடி திருத்திய வலம்படு வென்றியும்"

என அப்பாடல் (பதிற் 32) கூறுகிறது. இது அரசன் அவனுக்கு வலம்படு வென்றிதரும் படையின் இரு பணி களையும்—வெளிப்பிரதேசப் பணி உள்நாட்டுப்பணி—ஆகிய வற்றைத் தெரிவிக்கிறது. தமக்கு விழுத்துணையாக இருக்கும் இக்குடிகளுக்கும் எதிராக நடக்கும் செயல்களை ஒடுக்குவதிலே அரசு இயந்திரம் அதன் படை பலத்தை முடுக்கிவிட்டதாகத் தெரிகிறது. இதனால் விழுத்துணைக் குடிகள் (வேளாளர், வணிகர்) இருள்நீங்கப் பெற்று திங்கள் ஒளி பெற்றதாக பாடல்கள் கூறுகின்றன.

" மணிநிற மையிருள் அகல
கோடு கூடு மதியம் இயல் உற்றுங்குத்
துளங்கு குடி விழுத்துணை திருத்த முரசு கொண்டு
ஆண்கடன் இறுத்த ..."

என்று (பதிற் 31) கூறுகிறது. இதே கருத்துக்கு பதிற்றுப் பத்து 37ஆம் பாடலும் சான்று பகர்கின்றது. குடி என்றால் அது முதலில் வேளாளர்களை நிலமுடையவர்களைக் குறித்தது என்றும் (புறம் 35; ப. பாலை 20), பின்னர் அவர் களை விட சமூகத்தில் சிறிதளவு உயர்ந்த வணிகர்களை 'பெருங்குடி' என குறிக்கப்பட்டது என்றும் அறிகிறோம். மேலும்,

" படுபிணம் பிறங்கப் பகைவர் நூறி
கெடுகுடி பயிற்றிய கொற்றவேந்தே"

எனப் பாடப்படுகின்றது (பதிற்—69). வெளிப் பிரதேசங் களில் உள்ள பகைவர்களைப் போர்க்களத்தில் கொல்கிறான்; உள்நாட்டில் துளங்குடிகளை, தளர்ச்சியடைந்த குடிகளை கெடுகுடிகளை—நிலை கெட்டுப் போன குடிகளை தளர்வி லிருந்தும் கெடுதல் தன்மையிலிருந்தும் நீக்கி மீண்டும் வாழச்செய்கிறான். இதே போன்ற கருத்தை பரக்கக் காணலாம்.

" நட்டவர் குடி உயர்க்குவை
செற்றவர் அரசு பெயர்க்குவை"—ம.காஞ்சி 131—132

" செற்றோரை வழிதபுத்தனன்
நட்டோரை உயர்வு கூறினன்" —புறம் 239

" மலைந்தோர் தேஎம் மன்றம் பாழ்பட
நயந்தோர் தேஎம் நன்பொன்பூப்ப"
(பெரும்பாண்—423—24)

வெளிப் பிரதேசங்களில் உள்ள செற்றவர், மலைந்தவர்கள் ஆகியோரை ஒழிக்கும் அதே நேரத்தில், உள்நாட்டில் உள்ள நட்டோர், நயந்தோர்களின் குடிகளுக்கு ஏற்படும் கலக்கங்களையும் தளர்வுகளையும் கெடுதல்களையும் திருத்துவதற்கும் அரசுகள் தம் படைகளைப் பயன்படுத்தின என அறிகிறோம்.

இந்த ஆயுத சக்திகளைப் பராமரிக்க வேண்டி மக்கள் பங்கு தருவது அதாவது வரிகள் தருவது அவசியப்படுத்தப் பட்டது.

இதற்கு முந்தைய பழமையான கூட்டுச் சமுதாய வாழ்வில் வரிகளைப்பற்றிக் கொஞ்சமும் மக்கள் அறிந்திருக்கவில்லை. இப்போது ஆளும் சக்திகளின் நலன்களுக்காக மக்களைச் சாமார்த்தியமாகக் கொள்ளையடித்தனர். மகாபாரதம் இந்த வரிகளைப் பற்றி பின் வருமாறு கூறுகிறது.

"தூங்குபவன் எழும்வரையில் அவன் உணர முடியாத வகையில் அவனிடமிருந்து இரத்தத்தைக் குடிப்பதற்காக அட்டை உறிஞ்சுவது மாதிரி மிருதுவாகவும் வலியில்லாமலும் வரிவசூலிக்க வேண்டும்" (தடித்த எழுத்துகள் என்னால் இடப்பட்டவை)

இங்கே யானை புக்கபுலம் போல வரன்முறையில்லாது வரி கொளாது நெறியறிந்து இறை கொள வேண்டும் என பிசிராந்தையார் பக்குவமாக வரிவாங்க வேண்டியதன் தன்மையை எடுத்துக் கூறுகிறார் (புறம் 184).

அடுத்து, போர்களின் விளைவுகள் சகல உறவுகளிலும் தென்பட்டன. போர்களின் விளைவாகப் பலப்படுத்தப் பட்ட தனியுடைமை அடிப்படையிலான குடும்பமுறையும் அதைத் தொடர்ந்தஆணின் ஆதிக்கமும், சமூகவேலைப்பிரிவினையிலும்

அதன் உற்பத்தியிலும் பெண்களை நிராகரித்து. இதன் விளைவாக பெண்களுக்கு இருந்த சுதந்திரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக உரித்துவிட்டு பெண்களை வீட்டுஅடிமைக்குப் பக்கத்திலே ஆனால் அதனின்று சற்று வேறுபாடான நிலைகளிலே கொண்டு போய் நிறுத்தியது. இது அப்போது சமுதாயத்தில் பலம் பெற்ற ஆணின் பலாத்காரத்தாலே உருவாக்கப்பட்டது. சமூக உற்பத்தியிலே தன்னுடைய உழைப்பையும் கொடுத்த போது ஆணுக்கு நிகராய் பெண்கள் இருந்த கூட்டுச் சமுதாய நிலையிலிருந்து, இப்போது தலைகுப்புறக் கவிழ்ந்து. அவள் வீட்டு வேலை செய்யும் பெண்ணாக உருமாறி விடுகிறாள். சுருக்கமாக ஆனால் சாரம்சமாகச் சொன்னால் இப்போது அவள் ஆணின் சொத்துடைமையாக இழிந்து போனாள். வினையே ஆடவர்க்கு உயிர் ஆக இருக்கும் நேரத்தில், அந்த ஆடவர்களே வாள்நுதல் மகளிர்க்கு உயிராக இருக்கிறார்கள் என்று மாறி விடுகிறது. இப்போது, அவள் அடிமுதல் நுனிவரை—பாதாதிகேசம்வரை—அலங்காரம் செய்யப்பட்டு ஆடவனால் அனுபவிக்கப்படும் அழகுப் பொருளாக மாற்றப் படுகிறாள். தந்தையுரிமை, தனியுடைமை, பரம்பரைச் சொத்துரிமை ஆகியவை இப்போது ஒருத்தி ஒருவனையே மணக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தத் தொடங்கி விட்டது. அப்போதுதான் குழந்தையின் தகப்பன் யார் என்பதை உறுதிப்படுத்தி தன் உதிரத் துளிர்களையே தன் உடைமைக்கு வாரிசாக்க முடியும். எனவே, அன்றைய காலத்தில்தான் ஒருதாரமணம், பெண்களின் பதிவிசுவாசம் ஏற்படுகிறது. அதன் உடன் நிகழ்வாகவே, கற்பு வலியுறுத்தப் படுகிறது. பல்வேறு சமுதாய அம்சங்களில் நிலவும் "பக்க வாதத் தன்மையே"—ஒருசார்புத் தன்மையே இதிலும் வலியுறுத்தப்படுகிறது. நடை முறையில் கற்பு என்பது பெண்களுக்கு மட்டும்தான் வலியுறுத்தப்படுகிறது. 'ஒருதார மணமுறை'' உருவானதோடு ஆண்சமூகத்தின் திருப்தியடையாத உணர்வுகளின் கழிவாயிலாக "பரத்தமைமுறையும்" சீக்குப் போல வந்து சேர்கிறது. மகளிர்களில்

சிலர், ஆண் தலைமக்களாக இருக்கும் சமூகத்தில் அவர்களின் மோகத்துக்காக, வரைவின் மகளிர்களாகவும் பல்வேறு வகைப்பட்ட பரத்தையர்களாகவும் சமுதாயத்தின் இழி நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதெல்லாம், போர்களின் விளைவாக தமிழ்ச் சமுதாயத்தில்—உறுதிப் படுத்தப்பட்ட அரசு சமுதாயத்தில்—தனியுடைமை கோலோச்சிய சமுகத்தில் பெண்களுக்கு ஏற்பட்ட இழிதகைமையாகும்.

அடுத்து. சண்டையில் மரணம் அடைந்த வீரர்களுக்கு அவர்கள் நினைவாக கல்அமைதது, நெல்தூவி வழிபட்டனர் என்று தெரிகிறது. (புறம் 335)

வேல் ஊன்றி, அதற்கு கிடு நிரைத்தனர் (பட்டினப் பாலை). மயிற்பீலி அணிவித்து, நெல்தூவி, கள், செம்மறி ஆட்டு இறைச்சியையும் படைக்கின்றனர் (புறம் 232). இந் நடுகல் வழிபாடே இறந்த பெருங்குடி மனிதர்களின் கல்லறைகளையும் காலப்போக்கில் வணங்குவதற்குதொடக்கமாக இருக்கலாம் என்பர். பிற்காலத்தில் கட்டப்பட்ட வட்டமான நிலப்படமுள்ள கோயில்களைக் கவனிக்கும் போது, இவற்றின் தொடக்கம் இப்புதைகுழிகளிலேதான் அடங்கியுள்ளது என்பர்[30] போர்களின் விளைவாக உண்டான நடுகல்வழிபாடு, சமயவழிபாட்டு முறைகளிலே தொடங்கிய மாற்றத்தன்மைகளை நாம் இங்கே மிகச் சுருங்கிய அளவில் பார்க்கிறோம்.

சமுதாயத்துள்ளே ஏற்படும் முரண்பாடுகளின் வளர்ச்சி நிலைமைகள் ஒரு கட்டத்திற்கு முற்றியபின் அவற்றைத் தீர்ப்பதற்கான அதிவுயர்ந்த வடிவமே போர்கள் என்பதை விளக்கத்துடன் கண்டோம்.

உற்பத்திச் சாதனங்களையும் (கால்நடைகள், நிலங்கள், தொழிற்சாலைகள் போன்றவை), உற்பத்திக் கருவிகளையும் (கூர்மையான கற்கள், இரும்பு, ஏர் கலப்பை, டிராக்டர், பெரும்பெரும் எந்திரங்கள், அறிவியலின் நுணுக்கமான கண்டுபிடிப்புகள்) வைத்திருப்பவர்கள், தங்களுக்கேற்றாற் போன்று ஒருவிதமான உற்பத்தி முறையைக் கட்டுப் பாட்டின் கீழ் கொண்டிருப்பார்கள். இவர்கள் மேலும்

மேலும் தம் உற்பத்தியைப் பெருக்கிக், கொள்வதற்கும், அதன் மூலம் சாதாரணமக்களைச் சுரண்டுவதற்கும் அல்லது குறைந்த பட்சம் உற்பத்தியாளர்களிடத்தில் நிலவும் போட்டியில் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் இன்னும் மிகமிக அதிகமான சாதனங்களையும் கருவிகளையும் சம்பாதிக்க வேண்டியிருக்கிறது. அதற்கு போர்கள் சரியான வாய்க்காலாக அமைகின்றன. வர்க்க சமுதாயத்தின் உடன் பிறப்பான தனிமையுடமையின் கொப்பூழ் கொடியிலே தோன்றிய போர்கள் தனியுடமை அமைப்பின் அழிவுக்குழியிலேதான் தன்னை அஸ்தமித்துக் கொள்ளும். இது, வரலாற்றின் தவிர்க்க இயலாத நியதியாகும். எனவே தான், அடிமைச் சமுதாயம், நிலப்பிரபுத்துவச் சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம், அதன் உச்சகட்டமான ஏகாதிபத்திய சமூகம் என்று பல்வேறு வகைப்பட்ட தனியுடமையின் சகல விகாரமான முகங்களிலும் அவ்வப்போது போர்ப்பருக்கள் கொப்பளித்து வெடித்துக் கொண்டிருக்கின்றன. அடிமைகளுக்கான சண்டை, கால் நடைக்கான சண்டை, நிலக் கொள்ளைக்கான போர். நாடுகளை அகலச் செய்வதற்கான போர், பெருகிவரும் பொருள்களை விற்பதற்கான வாணிபச் சந்தைகளைப் பெறுவதற்கான உலகப் பெரும் போர்கள், எண்ணெய் வயல்களுக்காக மத்திய ஆசியாவின் பாலைவனங்களில் நடக்கும் போர், இயற்கையின் கனிவளங்களுக்காக ஆப்பிரிக்கா காடுகளில் நடக்கும் போர்கள் இவையெல்லாம் பல்வேறு கால கட்டங்களிலே அந்தந்தக் காலத்திலே தேவைப்படும் பொருள்களுக்கான யுததங்களாகவே உள்ளன. இதைத்தான் நம் தமிழ்ச் சமுதாயமும் காட்டுகிறதே தவிர, சிலர் சொல்வதை போல தமிழர் மறமாண்பு கொண்டவர்கள், அதனலே தான் போர்கள் புரிந்தனர் என்பதல்ல காரணம். ஆனல் போர்கள் அக்காலத்திய தவிர்க்க இயலாத நிகழ்வுகள் என்பது மட்டுமல்ல; பரந்து சிதறிக் கிடந்த பல இடங்களைத் தமிழகமாக்கி தமிழ்ச் சமுதாயத்தை நாகரீக வாசலுக்குக்

கொண்டுவந்ததே போர்கள் தாம் என்பதையும் உணர்கிறோம். ஆகவே தான் அன்றைய தமிழ்ச் சமுதாயம் மறமாண்பை தன் அடிமடியில் வைத்துப் பேணியது என்பதையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

இதுவரை இங்கே நடந்தேறிய பெரும்பாலானபோர்கள், கீழ்நிலையில் நசுக்குண்டு கிடக்கும் மொத்த மக்களின் முழு நலத்துக்கானவையாக இல்லாமல், மேல்நிலைவர்க்கங்களின் நலன்களுக்கிடையிலான போட்டிகளின் தவிர்க்க இயலாத விளைச்சல்களாகவே உள்ளன. கீழ்நிலைமக்களின் போராட்ட உணர்வுகளும் செயல்பாடுகளும் வரலாறு நெடுகிலும் காணப்பட்ட போதிலும் அந்தந்த நேரங்களில் மேல்நிலைமனிதர்கள் தத்தம் உள்முரண்பாடுகளைச் சற்றே ஒதுக்கி வைத்து விட்டு, இப் போராட்டங்களை நசுக்குவதில் முனைப்பாக இருந்ததையும் நாம் நம்முடைய வரலாற்றுக் குறிப்புகளில் காண்கிறோம். சில நேரங்களில், கீழ்நிலை மனிதர்களுக்கிடையே உள்ள முரண்பாடுகளைப் பகையாக்கி, அவர்களுக்குள்ளேயே சண்டைகளை—போர்களை, மூட்டிவிட்டு, அவர்களைத் தமக்கு எதிராக ஒன்றிணைய விடாது, அதிலே குளிர்காயும் மேல்நிலைமனிதர்களைப் பற்றியும் வரலாறு பதிவு செய்யாமல் இல்லை. 'கள்ளனை விட்டுப் பள்ளனை அடி; பள்ளனைவிட்டுக் கள்ளனை அடி' என்று நம் தம் தமிழகத்தில் இன்னும் நிலவிவரும் முதுமொழி நமக்கு இந்த உண்மைகளைத் தெரிவிக்கிறது.

இதுகுறித்து வேறொரு சந்தர்ப்பத்தில் பேராசான் கார்ல் மார்க்ஸ் கூறியதை நினைவு கூர்வது இங்கே இடங் கருதிப் பொருத்தமாயிருக்கலாம்[31]

"சமுதாயத்தில் இதுவரை (அதாவது கி.பி 1850—அடைப்புக்குறி என்னால் போடப்பட்டது) நடந்தேறிய புரட்சிகளெல்லாம் ஒரு குறிப்பிட்ட ஆளும் வர்க்கத்தின் இடத்தை இன்னொரு வர்க்கம் இட்டு நிரப்பிய நிகழ்ச்சியாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் இதுவரை இருந்து வரும் ஆளும் வர்க்கங்கள் எல்லாம் அடக்கி ஆளப்படும் பெரும்பான்மையான மக்களோடு ஒப்பிட்டுச் சாண்மையில்

மிகவும் சிறுபான்மை யினராகவே காணப்படுகின்றனர்.

ஆளும் சிறுபான்மை வர்க்கத்தினர் அகற்றப்பட்டு வேறு சிறுபான்மை வர்க்கத்தினர் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றி அரசு நிர்வாகத்தைத் தம் நலன்களுக்கு பயன் படுமாறு மாற்றுகின்றனர்."

எனவே, உடமை வர்க்கங்களின் பைகளில் சிக்குண்டு கிடக்கும் தம் நலன்களைப் பெறவேண்டுமாயின், உழைக்கும் வர்க்கங்கள் தத்தமக்குள் ஒன்றிணைந்து போர்கள் நடத்து வதும் அவசியமே. அந்தப் போர்கள் இதுவரை நடந்தேறிய போர்களைவிட தன்மையிலே வேறுபட்டவை. உடமை வர்க்கத்தின் ஒரு பகுதியினரை அகற்றி இன்னொரு பகுதியனரை அமர்த்துவதல்ல அதன் தன்மை; உடமைகளைச் சமுதாய மயமாக்கும் நோக்கம் கொண்டவை.

அவை வசதிக்கான போர்களல்ல; வாழ்வுக்கான போர்களே. 'ஒரு போர் இன்னொரு போரை உற்பத்தி செய்கிறது' என்ற அவலமான விதிகளெல்லாம் அங்கே பயன்படாது. ஏனெனில் அவை போர்களே இல்லாத சமுதாயத்தை உருவாக்கக் கூடிய போர்களாக அமையும். இதைத்தான் நமக்கு சமூக விஞ்ஞானமும் சொல்கிறது.

மேற்கோள் பட்டியல்


1. வ. சுப. மாணிக்கம்— "எந்தச்சிலம்பு"—பக்60.
2. P. T. Srinivasa Iyengar—"History of Tamils" —p 155
3. எம். எஸ். கோவிந்தசாமி — "அசோகரும் அவருடைய காலமும்"—பக்137.
4. K. N. Sivaraj Pillai — "Chronology of Early Tamils"—p. 195
5. I.A. Report 1967-68 — p. 26-30.
6. Clarence Maloney — "Archeology in South India" in " Essays on South India"—ed. by Burton Stein— p. 6

7. Dr. K. Sivathambi — "The Development of Aristocracy in Ancient Tamil Nadu"—p. 33

8. Clarence Maloney — "Archeology in South India'in "Essays on South India"—ed. by Burton Stein— p. 8

9. Ibid — p. 6

10. Dr. K. Sivathamby — "The Development of Aristocracy in Ancient Tamil Nadu"—p. 35

11. பிராடரிக் எங்கெல்சு — "குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்" (தமிழ் மொழிபெயர்ப்பு) பக் 167—169.

12. Jeannine Aoboyer — "Daily Life in Ancient India 200 B. C. to 700 A D."—p. 85

13. P. T. Srinivasa Sastriyar — "History of Tamils"—p. 139

டாக்டர். மா. இராசமாணிக்கனார்—"புறநானூற்றுச் சொற்பொழிவுகள்"—பக்54

14. Dr. Caldwell — "Comparative Grammar of Dravidian Languages"—p. 18

15. K. N. Sivaraj Pillai — "Chronology of Early Tamils"—p. 85

16. Dr. K. Kailasapathy — "The Heoric Poetry" —p. 73

Dr. M. Arokiasamy — "The Classical Age of Tamils"—p. 34

17. Ibid — p. 36

18. Ibid — p. 60

19. C. E. Ramachandran — "The Akananooru in Historical Setting"—p. 55

20. Marcopolo Travels — Edited by Yale and Cordier Vol. II—p. 385

21. Elliot and Dowban — "History of India" Vol. III — p. 33

22. பிராடரிக் ஏங்கெல்சு — "குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்"— பக் 146.

23. எஸ். ஏ. டாங்கே. "பண்டைய ஆரிய சமூகம்" —மொழிபெயர்ப்பு—பக் 143—144.

24. Dr. M. A. Dorai Aranganar — "Surname in Sangam Literature"—p. 48

25. Dr. K. Sivathamby — "The Development of Aristocracy in Tamil Nadu"—p. 45

26. "பத்துப்பாட்டும் பண்டைத்தமிழர் வாழ்வும்" —சாமி. சிதம்பரனர்—பக் 86.

27 மேற்படி நூல்—பக் 88.

28 Dr. M. Arokiyasamy — "The Classical Age of Tamils"—p. 87

29. Clarence Maloney — "The Archeology in South India" in " Essays on South India"— ed. by Burton Stein—p. 15

30. கலாநிதி. க. கைலாசபதி—"பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்"—பக்45.

31. காரீல் மார்க்ஸ் — "பிரான்சில் வர்க்கப் போராட்டம்" (தமிழ் மொழிபெயர்ப்பு) —முன்னுரை.

# 2. புலவரும் புரவலரும்

## புறநானூற்றில் காணப்படும் புலவர்—மன்னர் உறவுமுறை

இலக்கியம் என்பது எண்ணங்களின் தொகுப்பே. குறிப்பிட்ட காலத்தின் சமூக—பொருளாதார நிலைமைகளுக்கேற்பவே, அக்காலத்தின் எண்ணங்களும் அமைகின்றன. இந்த எண்ணங்களை உலகியல் நிலைமைகளே படைக்கின்றன. இப்படிப் படைக்கப்பட்ட எண்ணங்கள் சமூக, பொருளாதார நிலைமைகளுக்குப் பொருந்துவனவாகவும். மேலும் சேவை செய்வனவாகவும் அமைகின்றன. கட்டிடத்தின் அடித்தளத்தில் ஏற்படும் மாற்றங்கள்—விரிசல்கள் மேல் தளங்களைப் பாதித்து, அவற்றின் உயிர்ப்பை நிர்ணயிக்கின்றன. அதைப்போல. அடிப்படையில் ஏற்படும், சமூக பொருளாதார அமைப்பில் ஏற்படும் தன்மை மாற்றங்களே கருத்துகளைத் திசைதிருப்பி அவற்றின் போக்கை நிர்ணயிப்பதில் முதன்மை பெறுகின்றன. பழைய நிலைகள் மாறும் போது பழைய கருத்துகள் மாறுகின்றன; அவ்விடத்துப் புதிய கொடிகள் படரும்போது, புதிய பூக்களும் மலர்கின்றன. எனவே, கருத்துகள் என்பவை சுயேச்சையானதல்ல. ஒவ்வோர் காலத்து இலக்கியத்தின் உட்கருவும் ஒவ்வொன்றாக இருக்கின்றது. எடுத்துச்காட்டாக, நம் பழந்தமிழ் இலக்கியம் போர்பாடும்—வீரம் சிறப்பிக்கும் இலக்கியமாகவும், சங்க மருவிய காலத்தில் அறநெறித் தன்மை கொண்டதாகவும், பிற்கால சோழ—பல்லவ

பாண்டியர் ஆட்சியில் பக்தி இலக்கியமாகவும் காணப் படுகிறது.

போர், சமூகத்தின் நிகழ்ச்சியாகவும் மக்களின் அனைத் துத் தன்மைகளையும் பாதிக்கும் சக்தியாகவும் இருக்கும் போது போர் பற்றிய அர்த்தமுள்ள பாடல்கள் வருகின்றன; அதற்கு அடுத்து, போரினால் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களாலும் மக்களிடம் பெறும் வரிகளாலும் குபேரனை ஒத்த அரசர்களும், வேளாண்மை விளைச்சல் பெருகியதாலும் வணிகம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விரிந்ததாலும் தங்கள் கருவூலங்களை நிரப்பிய வேளாண் மைப் பிரபுக்களும் வணிகர்களும் இருந்த காலகட்டத் தில்—அதாவது தனியுடைமையின் மதிப்பு மிக ஆழ மாக வேரூன்றிய காலத்தில்—சமூக பொருளாதார நிலைகள் மாறின. இத்தகைய அடிப்படையை உறுதிசெய்வதற் காகப் படைக்கப்பட்டு, இதற்குப் பொருந்தக்கூடிய— சேவை புரியக்கூடிய இலக்கியம் எழுதப்படுவது அக்காலத் தில் தவிர்க்க முடியாததாகிறது. களிறெறிந்து பெயரும் காளைகள் வாழும் காலத்தில்,

அடுதலும் தொலைதலும் புதுவதன்று இவ்
வுலகத் தியற்கை (புறம் 76)

என்ற குரலைக் கேட்கிறோம். உடைமைகளைப் பாதுகாக்க வேண்டிய காலத்தில்,

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல் (குறள் 292)

என்று அதற்கு முரண்பட்ட குரலையும் நாம் இலக்கியத்தில் சந்திக்க நேரிடுகிறது. இதைக் கவனிக்கும்போது, நம் பழஞ்சான்றோர்கள் தத்தம் காலத்தின் கருவிகளாகச் சரியான முறையில் செயல்பட்டுள்ளனர் என்று தெரிகிறது. எனவே காலத்தை விடுத்துக் கருத்தைக் கவனிக்கமுடியாது.

சங்க இலக்கியம் போரைப் பற்றியும் வீரத்தைப் பற்றி யும் — அகப்பாடல்கள் உட்பட — பாடுவதற்கும் அந்தக்

கருத்துகள் சமூகத்தில் மேலாண்மை பெற்றதற்கு காரணங்கள் யாவை? பழைய மக்களின் தொழிலாக வேட்டையாடல், ஆடுமாடுகள் வளர்த்தல், விவசாயம் செய்தல், குடிசை—கைத்தொழில்கள், வாணிபம் ஆகியவை குறிக்கப்படுகின்றன. இதனால் மனிதனின் உழைப்பாற்றல் தம் தேவைக்கு அதிகமாகவே உற்பத்தி செய்ய முடிந்தது. மேலும் இரும்பின் பயன்பாடு இதற்கு அரிய தூண்டு கோலாக விளங்கியது.

இரும்பு பயன் படுக்குங் கருங்கைக் கொல்லன் (புறம் 170)
இரும்பு செய் விளக்கின் (நெடுநல்வாடை)
கருங்கைக் கொல்லன் இரும்பு விசைத்தெறிந்த
(பெரும்பாண் ஆற்றுப்படை)

என்பனவும்,

வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே (புறம் 312)
இரும்பு கவர்வுற்றன பெரும்புன வரகு (மலைபடுகடாம்)

என்ற செய்திகளும் இரும்பின் பயன்பாடு அதிகமாக இருந்ததைக் காட்டுகின்றன. இரும்பின் பயன்பாடு அதிக மாகத் தெரிந்ததன் விளைவாகப் பண்டைய உலகத்தில் வேளாண்மை வளர்ச்சி துரிதமாகியது; காடுகள் வெட்டி யழிக்கப்பட்டன; வாய்க்கால்கள் தோண்டப்பட்டன; ஏராளமான தரிசு நிலங்கள் விளைநிலங்களாயின என்பர் அறிஞர் பெர்னல் அவர்கள்[1] இதையே 'காடுகொன்று நாடாக்கி குளந்தொட்டு வளம் பெருக்கி' என்பர் பின்வந்த பட்டினப்பாலைப் புலவர். இப்படிப்பட்ட நேரத்தில் ஒவ்வொரு குலத்தையும் சேர்ந்த உறுப்பினர் நாள்தோறும் செய்யும் வேலையும் உற்பத்திப் பொருள்களும் பெருகின. இன்னும் உழைப்புச் சக்தியிருப்பது நல்லது எனவிரும்பினர். இந்த விருப்பத்தைப் போர் நிறைவேற்றியது. தங்களுக்கு இருக்கும் 'இடம் சிறிது எனும் ஊக்கம் துரப்ப, (புறம் 8) போரிடுகின்றனர். இதுவே போருக்கான புறவயமான—முதன்மையான காரணம் ஆகும். இதற்கு மேலே, 'இவன் இளையன்' என்று சொன்னதால் போர் நடந்தது என்பதும்,

நல்லிசைக்காகப் போர் நடந்தது என்பதும் போர் ஏற்படு வதற்கான துணைக்காரணங்களைச் சொல்வதாகும். வெற்றி பெறும் அரசர், பகைப்புலத்திலின்று பொருள்களையும் வீரர்களையும் மகளிர்களையும் கொண்டு வந்தனர் என்று இலக்கியம் சொல்கிறது.

இப்போர்களின் விளைவாக, பழைய குல மரபுக் கிளை களாகிய ஆய், ஆயர், இளையர், எயினர், அருவாளர், மழவர் குறும்பர், வேளியர், வில்லாளர், பழையன் இன்னோரன்ன பிறர் தம்முள் முட்டி மோதிக் கொண்டும் (வேளியர் தித்தன் —இளையர் சேந்தன்—அகம் 122, 137; தித்தன் வேளியன்— போர்ப்பழையன்—அகம் 326; தித்தன் வேளியன்—எயினர் அகம் 208; தித்தன் வேளியன்—கழாஅர் மத்தி அகம் 153) இந்தப் பழைய கிளைகளிலிருந்து உதித்தெழுந்த சேர, சோழ, பாண்டிய இணைப்புக் குலங்கள் மீண்டும் குலமரபுக் கிளைகளோடும் குறுநில அரசுகளோடும் தம்மை நிலை நிறுத்துவதற்காகப் போராடிக் கொண்டும் (மலையமான் திருமுடிக்காரி—கிள்ளிவளவன்; பாரி—மூவேந்தர்) இருப்ப தைப் பார்க்கின்றோம். போரில் தோற்றோர் தம் தலைவன் இறந்த பிறகு, வெற்றி பெற்றவனின் படையுடன் இணைக்கப்பட்டு, அதன் பிறகு நடந்த வேறு போர்களில் ஈடுபட்டுள்ளனர் (பசும் பூண்பாண்டியனுக்கும் ஆய்தித்த னுக்கும் போர் நடக்கிறது; அதில் ஆய்தித்தன் இறக் கின்றான்—அகம் 162; பின் ஆய்தித்தனின் வீரர்கள் பாண்டியன் படையில் இணைக்கட்பட்டு கொங்கர்களை அடக்கும் போரில் ஈடுபடுத்தப்பட்டனர்—அகம் 253). எனவேதான், 'தமிழின் பழைய பாடல்களில் பெரும் பகுதி இப்படி ஒரு மாறுதல் கட்டத்தை—அதாவது பழைய குல மரபுக் கிளைகள் அழிக்கப்பட்டும் புதிய அரசுகள் மலர் கின்றதுமான மாறுதல் கட்டத்தை—விளக்கும் பாடல் களாகவே உள்ளன' என்பர் க. கைலாசபதி.[2] இப்படிப் போரின் பலாபலன்கள் சமூகத்தின் நிலைமைகள் ஒவ்வொன் றையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்குகின்ற— பாதிக்கின்ற காலச் சூழலில் பாடப்பட்ட புறப்பாடல்களை

இணைத்து, பிற்காலச் சான்றோர் "புறநானூறு" என்ற நூலாகத் தொகுத்துள்ளனர். அந்த புறநானூற்றில் புலவர்களுக்கும் மன்னர்களுக்கும் இடையே உள்ள உறவு முறையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சற்றுமுற்றும் போர் மேகங்களே சூழ்ந்திருக்கும் இப் புறநானூற்றில் காணப்படுவோரை மூன்று வகையினராகப் பிரிக்கலாம். 'அரசன்—கவிஞன்—குறுநில மன்னர் என்ப வரே அம்மூவர். சில தனிப்பட்ட நபர்களின் பெயர்கள் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டிருக்கலாம். ஆனால் அது பெரும்பான்மையானதல்ல' என்பர் கே. என். சிவராஜ் பிள்ளை.[8] இவர்களுள் புலவர்களின் உலகியல் வாழ்க்கை நிலையைக் காண்போம்.

புலவர்களின் உலகியல் வாழ்க்கை

சில புலவர்களைத் தவிர, பெரும்பாலான புலவர் களுக்குப் புலமையே தொழிலாக இருந்தது எனத் தெரி கிறது. 'கறி சோறுண்டு வருந்து தொழிலல்லது பிறிது தொழில் அறியாது, (புறம் 14) உள்ளனர். பாணர்கள் மட்டும் சில நேரங்களில் மீன்பிடித் தொழிலில் இருந்தனர் என்றுந் தெரிகிறது (அகநானூறு 126; 216). மொத்தத்தில் இவர்கள் பிறரை அண்டியிருந்தனர்; வறுமையோடிருந் தனர். அந்த வறுமையின் கோரக் கொடுரத்தைப் பல்வேறு கோணங்களில் வளமான இலக்கியங்களாக்கினர் (புறம் 68, 139, 159, 164, 196, 210, 211, 266, 375, 376. 373); பழுத்த மரம் நாடும் பறவைகள் போல் ஊர் ஊராகச் சென்று வள்ளல்களைத் தேடுகின்றனர் (புறம் 209; மேனியெலாம் வியர்வை நாறி, வயிறு ஒட்டி, பசியால் வருந்துகின்றனர் (புறம் 370); வள்ளல்களின் அடிநிழலில் படிந்திருக்கும் அடியில் வாழ்கின்றனர் (புறம் 198); 'என் கிழிந்த அழுக்க டைந்த கந்தல் துணியில் ஒட்டிய ஈரும் பேனும் பகையா? என்னை வருத்தும் பசி பகையா?' என்று வேதனையின் விளிம்பிலே சென்று வினுத்தொடுக்கின்றனர் (புறம் 136); பசியால் தின்னப்பட்ட, வாட்டமுற்ற, முடக்கங்கொண்ட

புலவர்களை உடைய குடல் குளிரும்படி சோற்றை அரச னிடம் எதிர்பார்க்கின்றனர் (புறம் 150; 160). அரிசி வேண்டி அரண்மனை வாயிலில் இறைஞ்சுகின்றனர் (புறம் 140). இதுதான் 'வெய்துண்டலால் அல்லாது செய்தொழி லால் வியர்ப்பறியாத' புலவர்களின் மாதிரி நிலைமை. எனவே அக்காலப் புலவன் தன் வாழ்க்கைக்கு ஏதோ ஒரு விதத்தில் அரசனை அண்டியிருக்க நேரிடுகிறது. இதை "அரசன் குடிமக்களைப் பாதுகாத்ததற்கு அடுத்தப்படியாகத் தன்னைப் பாக்களால்...புகழ்ந்து பாடும் இரவலர்களால் சூழப்பட்டிருந்தான். அதற்குப் பரிசிலாகக் கள்ளும் சோறும் கொடுத்தனர்'' என்பர் பி. டி. சீனிவாச அய்யங்கார்.[4] ஆக, இந்தப் புலவர்களின் வாழ்க்கைக்கு 'கொடி படர்வ தற்கேற்ற கொழு கொம்பாக' அரசன் இருக்கிறான் என்பர் கே. என். சிவராசபிள்ளை[5] அதே நேரத்தில், புராதன காலந்தொட்டு இவர்களுக்குச் சமூகத்தில் பெருமதிப்பு இருந்து வந்துள்ளது. சடங்கு செய்யும் மாந்திரிகராகவும் நல்லது கெட்டது அறிந்தவராகவும்இருந்தனர். ''முதுவாய்ப் புலவன்'', "அருஞ் சொல் நுண் தேர்ச்சிப் புலவன்'', ''பொய்யா மொழி'' எனும் தொடர்கள் இவர் தம் சமூக உறவுகளின் பெருமையை ஓரளவு புலப்படுத்துகின்றன.

எனவே, அரசர்களை விடுத்தால் புலவர் தம் வாழ்க்கை இயங்காது. இந்நேரத்தில் சிலபுலவர்கள் சில அரசர்களோடு மனமுரண் கொண்ட பாடல்கள் நினைவுக்கு வரல் பொருத்தமே.

## அரசர்களுடன் முரண்படல்

இவர்கள் மன்னர்களோடு மனமுரண் கொண்ட பொழுது, பணிவோடு அவர்களுக்குத் தெரிவித்து. உடனே அமைதி கொள்கின்றனர்; இல்லையெனில், அடுத்த அரச னுடன் தொடர்பு வைத்துள்ளனர் என்றுந் தெரிகிறது. தாமப்பல் கண்ணனார் எனும் புலவர் மாவளத்தானோடு வட்டாடுகையில், புலவர் மீது மாவளத்தான் வட்டுக் கொண்டு எறிந்துவிடுகின்றார் (புறம் 43); உடனே

அவனோடு மாறு கொண்டு, சிலவற்றைச் சொல்லி, கடைசியில் "நீ பிழைத்தாய் போல் நாணினையே" என்கிறார். அதாவது, தவறு செய்தவனைப் பார்த்து, தவறு செய்தவனைப் போல நாணுகின்றாயே என்கிறார். அடுத்து இப்படி அரசனின் தவறான செய்கையை எப்படியோ சுற்றி வளைத்துச்சொன்ன பிறகு, "யானே பிழைத்தேன்" என்று மிகவும் பணிவோடு சொல்லி, தனக்குள் தானாகவே அமைதி கொள்கிறார். மன்னர் உயிர்த்தே மலர் தலையுலகமாகிய காலத்தில், புலவன் அரசனோடும் அவன் குடும்பத்தினரோடும் முரண் படல் என்பது பொதுவாக நடக்க இயலாத செயலாகும். இதைத்தான் தன்னோடு ஊடிய தலைவியின் ஊடலைத் தீர்க்கு மாறு தலைவன் சொல்கின்றான்:

> மருந்தின்று மன்னவன் சீறில் தவறுண்டோ நீநயந்த
> இன்னகை ஏதோ இலேன் (கலித்தொகை 89)

இதற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர், "தவறு இல்லையாயினும் அரசன் சினங்கொள்வான்; அங்ஙனம் சினம் கொண்டவிடத்து அதற்கொரு பரிகாரமும் இல்லை' என்பர்[6] இதுதான் அக்காலச் சமூக நிலைமை. அதை மீறிப் புலவர் தாமப்பல் கண்ணனார் போன்றவர்களால் செயல்பட இயலவில்லை.

ஆனாலும், சில புலவர்கள் அரசனோடு முரண் கொண்டு, அமைதியடையாததையும் பார்க்கின்றோம். பெருஞ்சித்திரனார் இளவெளிமான் கொடுப்பக் கொள்ளாது, இரு பாடல்களைப் பாடியுள்ளனர் (புறம் 207, 237) ஆனால் அவர் குமணனிடம் சென்று அவன் வாள்—தாள்—செல்வம் ஆகியவற்றைப் பலபட ஏத்தி, 'எந்நாளும் வேந்தர் நாண' (புறம் 116) யானைப் பரிசு கொடு என்று இரக்கிறார். பிறகு இளவெளிமானிடம் சென்று தான் பெற்ற யானையைக் காட்டி "இரவலர் புரவலை நீயுமல்லை" (புறம் 162) என்கிறார். ஆக "எந்நாளும் வேந்தர் நாண" (புறம் 161) என்பதில் "வேந்தர்" என்பவன் இளவெளிமானுகக்கூட இருக்கலாம். ஆகவே புலவர் ஓர் அரசனோடு முரண்படுகிற

போது, சில குறிப்பிட்ட நேர்வுகளில்—பிற அரசனோடு தமக்கிருக்கும் சமூக உறவுகளை நினைத்து முரண்படு கின்றனர் எனலாம். அப்போதுதான் "பெரிதே உலகம் பேணிநர் பலரே" (புறம் 207) எனும் குரலைக் கேட்கிறோம்.

இதே பெருஞ்சித்திரனார் அதியமானிடம் இரக்க, அவருக்குக் காணாது பரிசளிக்கிறான். உடனே,

காணாது ஈத்த இப்பொருட்கு யானோர்
வாணிகப் பரிசிலேன் அல்லேன் (புறம் 208)

எனச் சொல்லி அகல்கின்றார். அதியமான் பெருஞ்சித்திர னாருக்குக் காணாது ஈத்தமைக்குக் காரணம் எது? "தன்பால் அரசியல் அலுவல் மிகுதியாக இருந்ததனாலோ எதனாலோ அதியமான் இவரை நேரிற் கண்டு அளாவளாவ இயலாத வனாயினான். பின் அதியமான் மனங் கனிந்து நேரிற் கண்டு பிழை பொறுக்குமாறு வேண்டிப் பெருஞ்சித்திரனாரது புலமையன்பு பெற்று உடல் பூரித்தான்" என்பர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை.[7] இதே போன்ற காரணத்தையே தனக்கே யுரித்தான ஆங்கில நடையில் எழுதுகிறார் மறைமலையடிகள்[8] ஆனால் பெருஞ்சித்திரனார் பாடிய பத்துப் புறநானூற்றுப் பாடல்களிலும், அதியமானைப் பற்றியதாக ஒரே பாடல்தான் உள்ளது(புறம்208). இதிலும் ஏனைய புறப் பாடல்களிலும் அரசியல் அலுவல்களினால் காணாது ஈத்தான் என்றும், பிறகு நேரிற் கண்டு பிழை பொறுக்குமாறு வேண்டினான் என்றும் நமக்குச் சான்றுகள் இல்லை. மறைமலையடிகளும் ஔவை துரைசாமிப் பிள்ளை யவர்களும் பழைய காலத்து வரலாற்று நிகழ்ச்சிகளை அந்தந்த வரலாற்றுக் கட்டங்களின் நிகழ்ச்சிகளோடு பொருத்திப் பார்க்கத் தவறியதாலே இந்த விஷயத்தைப் பொறுத்தமட்டில் — இங்கே — அவர்கள் அதியமான் சார் பாகப் பேசுவதாகத் தெரிகிறது. பின், எதற்காக அதிய மான் பெருஞ்சித்திரனாருக்குக் காணாது ஈத்தான்? இதே அதியமானைப் பற்றி ஔவையார் பாடுகின்றார்.

சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே
பெரியகள் பெறினே
யாம்பாடத்தான்மகிழ்ந்து உண்ணும் மன்னே (புறம் 235)

ஒரு மன்னன், ஒரு புலவனுக்குத் தாம் பெற்ற பொருள் சிறியதாக இருந்தால் அவனுக்கே கொடுத்தும், பெரியதாக இருந்தால் தானும் உண்டும் மகிழ்கின்றான்; இன்னொரு புலவனுக்குக் காணாது ஈகின்றான். ஆக, அதியமானைப் பொறுத்தமட்டில் பெருஞ்சித்திரனாரிடம் ஒருவித உறவு நிலை; ஔவையிடத்தில் ஒருவித உறவுநிலை. இது புறநானூற்றில் சிறுபான்மை நிலையல்ல; மாதிரி நிலைமை (typical Situation) 'எனவே மன்னனிடத்தில் புலவர் அனைவரது உறவும் சமநிலையில் இல்லை எனத் தெரிகிறது. இக்கட்டத்தில்' சங்க காலத்தில் "புலவர்கள் பலர் இருந்திருப்பினும் எல்லோரும் சமநிலையில் போற்றத்தக்கவராயிருந்திருக்கிறார்கள். ஏனையோர் நிலையைக் கடந்து நிற்கும் புலவர் எவரையும் நாம் அங்குக் காணவில்லை"[9] என்று கூறும் திரு மு. அருணாசலம் அவர்களின் கூற்று ஏற்புடைத்தாகத் தெரியவில்லை. அதியமானின் இருநிலை மனப்பான்மைக்குக் காரணம் என்ன? ஒரு புலவர் அவனது அரசு வளர்ச்சிக்குப் பொருந்துவதாகவும் சேவை செய்வதாகவும் இலக்கியம் படைக்கிறார்; இன்னொரு புலவர் அதைச் செய்ததாகத் தெரியவில்லை. ஆகவேதான், ஔவைக்கு "சாதல் நீங்கச் சிறியிலை நெல்லித் தீங்கனி" கொடுக்கிறான். பெருஞ்சித்திரனாருக்குக் காணாதே—அலட்சியப்படுத்தி—ஈகின்றான். அரசு வளர்ச்சிக்குப் பொருந்தும் இலக்கியம் படைப்பவர்களுக்கு,

ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல (புறம் 94)

இனியராகவும், அவ்வாறு படைக்காத புலவர்களுக்கு.

அருகிற் கண்டும் அறியார் போலவும் (புறம் 94)

மன்னர்கள் இருக்கின்றனர். இதையே "மேல் நோக்கிற்குத் தெரியும் கொடைச் சிறப்பிற்கு அடிப்படையாக ஆளும்

வர்க்கத்துக்கு அனுசரணையாகப் புலவன் பிரசாரம் செய்த பணி தெரிய வருகிறது'' என்பர் கலாநிதி கைலாச பதியவர்கள்.[10]

புலவர்களின் பிரச்சாரப் பணி

இவர்கள் பிரச்சாரம் செய்வது ஏன்? அதன் மூலமாக மன்னர்—புலவர் உறவு முறை எப்படி அமைகிறது? சமூகத்தின் பொருளியல் நிலைமைகள் அனைத்தையும் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிற ஆளுகின்ற பிரிவுகள் அத் தகைய கட்டுப்பாட்டை நிரந்தரமாகச் செலுத்துவதற்கு ஆயுதந் தாங்கிய சிறப்புப் படையினர் — வீரர்கள்— தேவைப்படுகின்றனர். அவர்கள் தம்நலன்களைப் பாது காக்கத் தேவையான நிர்வாக அமைப்பு—அரசு முறை நீதி முறை வைத்துக் கொள்ளுதல் வேண்டும். அதே நேரத்தில் மக்களை மன ரீதியான முறையில் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. அதற்குத் தத்துவார்த்தமான பிரச்சார முறைகளை ஏற்படுத்தல் அவசியமாகின்றது.

இதையே, "தன் ஆட்சியைப் பாதுகாக்க மனிதர்களின் மனத்தை எப்போதும் அரசு தன் கட்டுப்பாட்டில் வைத் திருக்க விரும்பும். சமூகத்தின் அறிவார்ந்த சக்திகளைத் தன் கட்டுப்பாட்டில் வைத்து, தங்களுக்குத் தேவையான கருத்துகளைப் பிரச்சாரம் செய்ய வைக்கும். இப்பிரச்சார மெல்லாம் அரசின் மேலான ஆதிக்கத்தை வலியுறுத்து வதாகவும் அந்த ஆதிக்கப் பாதையில் எதிர்வரும் தடைக் கற்களைத் தகர்த்தெறிவதாகவும் அமையும்'' என்பர் அறிஞர் மாரிசுகார்ன் போர்த்.[11] ஆகவே நம்பழந் தமிழ்ச் சான்றோர்கள், புதிதாக உருவெடுத்துக் கொண்டிருக்கும் அரசுகள் தம் மேலான ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் போராட்டத்தின் பிரச்சார அணியைத் தம் பாக்களால் நிறைவு செய்கின்றனர். இவர்கள் தம் அரசர்களின் 'இகழ்பாடுவோர் எருத்தடங்கவும் புகழ்பாடுவோர் பொலிவு தோன்றவும்' (புறம் 40) பிரச்சாரப் பேரிகை முழங்கு கின்றனர். எனவேதான் பாண்டியன் நெடுஞ்செழியன்,

'மாங்குடி மருதன் தலைவனாகப் புலவர் பலரும்' தன்னைப் பாட விரும்புகின்றான்; 'அறிவுடையோன் ஆறு அரசுஞ் செல்லும்' (புறம் 183) என நிலைமையைத் தலைகீழாக்கிச் சொல்கிறான் பாண்டியன் அறிவுடை நம்பி. 'மன்னர் உயிர்த்தே மலர்தலையுலகம்' (புறம் 186) என்று பிரச்சாரத்தின் கொடுமுடிக்கே சென்ற மோசிகீரனாருக்குத் தான் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை கவரிகொண்டு வீசுகிறான் (புறம் 50). இப்படி அரசுக்காகப் புலவர்கள் பிரச்சாரம் செய்வதும், அதற்கீடாகப் பரிசில் கொடுப்பதுமான உறவுநிலைமையை — அதாவது பண்டமாற்றுப் பரிவர்த்தனையை—

> யானே பெறுக அவன்தாள் நிழல் வாழ்க்கை
> அவனே பெறுக என்நாவிசை நுவறல் புறம் 379)

எனும் பாடலில் காணலாம். இதையேதான் தன் தெளிவான பொருள் பொதிந்த நடையில் உ. வே சாமிநாதய்யர் கூறுகிறார் "அவர்களிடமிருந்த (புலவர்களிடமிருந்த) எல்லாக் குணங்களிலும் செய்ந்நன்றியறிதல் எனுங்குணம் மிகச்சிறப்பாக விளங்கியது. இது அவர்கள் பாடல்களால் விளங்கும்."[12]

நம் சான்றோர்கள் எப்படியெல்லாம்—யார் யாரிடத்தில் பிரச்சாரம் செய்தனர்? இவர்கள் அரசனுக்காகப் போரிடும்படி வீரர்கள் நடுவிலும், அரசனுக்கு இணங்கித் திறை செலுத்தும் படியாக எதிரி மன்னர்களிடத்தும், அரசனின் செல்வச் சிறப்பையும் எழில் நலன்களையும் போர் ஆண்மையையும் பற்றி மகள் கொடுக்க மறுக்கும் பழைய இனங்களிடத்தும், இந்த அரசனின் நாடுதான் நாடென்றும் சொர்க்கமென்றும் இங்குதான் அமைதியுள்ளதென்றும் சொல்லி அரசனைத் தெய்வத்துக்கு இணையாகப் புகழ்ந்து மக்கள் நடுவிலும் பிரச்சாரம் செய்கின்றார்கள். தம் பாட்டுத் திறத்தாலே இதைத் தேனோடு கலந்த மருந்தாய்ப் பக்குவமாகச் சேர்த்துள்ளார்கள்.

வீரர்களிடையே பிரச்சாரம்

"களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" (புறம் 34) எனத் 'தாய் வாக்காகவே' சொல்லி இலட்சிய வீரர்களை உருவாக்குகின்றனர். 'உன் தந்தை இவ்வரசன் தந்தைக்குத் தந்தையின் நலனுக்காய் வாழ்ந்து போரில் மாண்டான்' எனச் சொல்லி வீரர்களின் 'பழம் பெருமையைத்' தூண்டிவிடுகின்றனர். 'களிற்றோடு வீழ்ந்த வீரனுக்காக அரசனும் போர்க்களத்தில் வீழ்ந்துபடும் இயல்புடையவன். (புறம் 307) எனச் சொல்லி வீரர்களின் போர் உணர்வில் அரசர்களும் ஐக்கியமாவார்கள் என்ற கருத்தைப் பிரச்சாரம் செய்கின்றனர். "பிறர்நாடு கொள்ளுங் காலை திறங்கு கதிர்க்கழனி நின் இளையரும் கவர்க" (புறம் 57) என்றும் "கூர்வில் அம்பின் கொடுவில் கூளியர் கொள்வது கொள்க" (புறம் 23) என்றும் பாடி போரின் கொள்ளையிலே வீரர்க்கும் பங்குண்டு என்பதை நினைவூட்டி உற்சாகப் படுத்துகின்றனர்.

எதிரிகளிடையே பிரச்சாரம்

இவர்கள் எதிரி மன்னனிடத்தில் சென்று தம் அரசனின் வளர்ச்சிக்கான கருத்துகளை எடுத்துச் சொல்கின்றனர்.

> நின் பகைவர் கேட்டொறும் நடுங்க ஏத்துவென்
> வென்றதேர் பிறர் வேந்தவை யானே (புறம் 382)

என்கின்றனர். அதாவது, 'பிறநாடுகளிலே போரிட்டு நீ வென்ற தேர்களின் சிறப்பைப்பற்றி பிற மன்னர்களின் அவைகளிலே சென்று நின் பகைவர்கள் கேட்ட பொழுதே நடுங்கும்படியாகப் புகழுவேன்' என்று சொல்கின்றனர். இதிலிருந்து எதிரி மன்னனிடத்தும் பிரச்சாரம் நடந்தது என்பது தெரிய வருகிறது. "என் அரசன் அருளையிழந்த அரசர்கள் ஈசலைப்போல ஒரு பகல் வாழ்க்கைக்கு உலமருவோர்" (புறம் 51) என்றும், "என் அரசனைச் சினக்கச் செய்த நாடு தாயில்லாத உண்ணாத குழந்தை போல

ஒழியாது கூப்பாடு போடும்" (புறம் 4) என்றும் பாடி இவர்கள் எதிரிகளை மலைக்கவைக்கின்றனர். தம் அரசனுடன் போருக்கு எழுந்து நிற்கும் எதிரி வீரர்களைப் பார்த்து,

பிணிக்கதிர் நெல்லின் செம்மல் மூதூர்
நுமக்குரித்தாகல் வேண்டிற் சென்றவற்கு
இறுக்கல் வேண்டும் திறையே (புறம் 97)

என்றும், அப்படி மறுத்தால் எம் அரசனோடு போரிட்டு நீங்கள் உம் மகளிர்தோள் பிரிதல் வேண்டும் என்றும் எச்சரிக்கை விடுக்கிறார்.

பழைய இனங்களிடையே பிரச்சாரம்

தங்களுடைய மதிப்பைச் சமூகத்தில் மென்மேலும் உயர்த்துவதற்காகவும் அமைதியான முறையிலான நில இணைப்பிற்காகவும் அரசர்கள் பழைய இனங்களிடையே பெண் கேட்கிறார்கள். ஆனால் பழைய இனங்கள் மறுக்கின்றன. அக்காலத்தில், அரசனது உருவச் சிறப்பு—செல்வச்சிறப்பு இவற்றைப் பற்றியும் அவனோடு போரிட்டால் பழைய குலங்கள் அழிந்து ஒழியும் என்பதை எடுத்துச் சொல்லியும் அரசர்களுக்குப் பக்கபலமாக நின்று பிரச்சாரம் செய்கின்றனர்.

மக்களிடத்துப் பிரச்சாரம்

எங்கு நோக்கினும் போரும் அதன் அழிவு நிகழ்ச்சிகளும் இருக்கும் காலத்தில், தன் மன்னன் நிலத்தில்தான் அமைதியும் மக்கள் வாழ்வதற்கான சூழலும் உள்ளதென மக்களிடையே எடுத்துச் சொல்கின்றனர். இந்த அரசனுடைய நாட்டில்தான் சோறுக்கும் தீயும் ஞாயிற்றின் வெம்மையும் தவிர வேறு கொடுமை கிடையாது எனச் சொல்லி, இந்நாடுதான் அமைதியான நாடு என மக்களிடையே பிரச்சாரம் செய்கின்றனர். அதாவது,

சோறுபடும் தீயொடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிது தெறல் அறியா" (புறம் 20)

நாடு இது என்கிருர் புலவர். இவ்வரசன், மக்களைக் குழந்தைகளைப்போலப் பாதுகாப்பான் என்றும் (புறம் 50), புலியானது தன் குட்டியைப் பாதுகாப்பதைப் போல அரசன் மக்களைக் காப்பாற்றுவான் என்றும் (புறம் 42), மக்களிடத்தில் அரசனுக்கு ஒர் அரிய உருவத்தை (image) உருவாக்கப் பாடுபடுகின்றனர். 'மாரிபொய்ப்பினும் வாரிகுன்றினும் காவலர் பழிக்கும் கண்ணகல் ஞாலம்' (புறம் 35) என்று பாடி, இயற்கை தவறும் காலங்களில் ஏற்படும் பாதிப்புக்கு அரசன் பொறுப்பேற்க முடியாது என மக்களிடையே அரசனுக்குத் தேவையான அனுதாப உணர்வை ஏற்படுத்த முயல்கின்றனர். "மூவருள்ளும் அரசெனப்படுவது நினதே... நாடெனப்படுவது நினதே" (புறம் 35) என்று, தம் பரிசிலரது நாடுதான், நாடென்றும், அவனது அரசுதான் அரசென்றும் மக்களிடத்து உணர்வைப் படைக்கின்றனர். பழைய குலங்கள் முட்டி மோதிக்கொண்டு அதனிடையே தோன்றிய வர்க்கப்பிரிவினைகள் தம்முன் இணக்கம் காண முடியாததால் ஏற்பட்ட அரசு அமைப்பில் பழைய இனத்திற்கும் புதிய அரசுகளுக்கும் ஏற்பட்ட முரண்பாடுகளைச் சமரசப்படுத்துவதற்கு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று புதியதொரு விரிந்து பட்ட தேசப்பற்றைச் செலுத்தி, அக்கால அரசுக்குச் சேவை செய்யும் இலக்கியம் படைக்கின்றனர். இவர்கள் மன்னர் உருவ எழில் நலன்களையும் குலப்பெருமையையும் எடுத்துக்கூறி அவர்களுக்கு நிலைபேறு தேடுகிருர்கள். கடைசியில் அவர்களைத் தெய்வத்துக்கு இணையாக உருவகிக்கின்றனர்.

முருகன் சீற்றத்து உருகெழு குரிசில் (புறம் 161)

கூற்றொத்தீயே மாற்றருஞ் சீற்றம்
வலியொத்தீயே வாலியோனை
புகழ் ஒத்தீயே புகழ் இகழுநர் அடுநனை
முருகொத்தீயே முன்னியது முடித்தலின் (புறம் 56)

என்றெல்லாம் பாடி மக்கள் மனத்தில் அரசனைத் தெய்வ

மாக உருவகிக்க முயல்கின்றனர். இப்படி இவர்கள் அரசனின் புகழைப் பாடும்போது, அரசன் செயல்களை— போர்களைப் பாட வேண்டிய அவசியம் தவிர்க்க இயலாத வகையில் ஏற்படுகிறது.

### புலவர்களும் போர்களும்

போர்களைப்பற்றிப்படும்போது நம் சான்றோர்கள் கவித்துவத்தின் எல்லைக்கே சென்று பாடுகின்றனர். போரை "நல்லமர்" என்றே சொல்கின்றனர் (புறம் 16; 125). பகைவர் வயலில் குதிரையைச் செலுத்தல் (புறம் 15), வயலைக் கொள்ளையிடல் (புறம் 7, 16, 57); அரணை அழித்துக் கழுதை ஏரால் உழுதல், அதில் வரகு, கொள் விதைத்தல் (புறம் 15, 392) ஆகியவற்றை வர்ணிக்கும்போது போரின் கொடூரங்களைத் தக்க உவமைகளாலும், கற்பனைகளாலும் ரசவாதப்படுத்துகின்றனர். மேலும்,

> வாடுக இறைவநின் கண்ணி ஒன்னார்
> நாடுசுடுகமழ் புகழ் யெறிந்த லானே (புறம் 6)

என்றும்,

> களவின் அரியன காணு நனவின்
> செருச் செய்முன்ப (புறம் 41)

என்றும் போர்க் கொடுமைகளைச் சுவைபடச் சொல்கின்றனர், 'பிறநாட்டைக் கைப்பற்றும்போது, உன் வீரர்கள் நிலத்தைக் கொள்ளையடிக்கட்டும்; அகன்ற இடத்தையுடைய பெரிய ஊரைத் தீ சுடட்டும்; மின்னல் போன்று ஒளியுமிழும் நின்வேல் பகைவரைக் கொல்லட்டும்' (புறம் 5) என்று தம் பாடுதிறனால் பாடுபொருளின் இயல்பைச் சுவைபடச் சொல்கின்றனர். இதனையே, "அரசர்களின் போர்ச் செயல்களை—கொள்ளையை நியாயப்படுத்தியே பெருமையோடு பாடுகின்றார்கள்" என்பர் கலாநிதி க. கைலாசபதி.[18] இரண்டு அரசர்கள் (சோழனும் பாண்டியனும்) சேர்ந்திருக்கும் போதுட் (புறம் 58 இன் அடிக்குறிப்பு), 'நீவிர் இருவரும்

இன்றுபோல் ஒருங்கு இருந்தால், குன்று சூழ்ந்த பிறர்நாடு களில் உங்கள் இலச்சினைகளைப் பொறிக்கலாம்' என்று சொல்லி,

வென்று அடுகளத்து உயர்க நும்வேலே (புறம் 58)

என்றும் குறிப்பிடுகின்றார் காரிக்கண்ணனார். அதாவது, இரு அரசர்கள் இணைந்திருக்கும்போது, வேறு அரசுகளின் மீதான படையெடுப்பைப் பற்றி புலவர் பாடுகின்றார். மேலும், போர்க் காலங்களில் அரசர்கள் தளர்ந்திருக்கும் போதும் இவர்கள் கிரியா ஊக்கிகளாய்ச் செயல்பட்டு தம் பாடல் நெம்பு கோலால் அரசனை நிமிர்த்துகின்றார்கள். 'கதிரவன் தோன்றினால் காரிருள் எங்கு ஒளியும்' என்றும், 'நினது மண்ணைக் கொண்டு ஆர்க்கும் வீரரும் உளரோ' என்றும், 'பொருநரும் உள்ரோ நீ களம் புகினே' என்றும், 'பொருநரும் உளரோ நீ களம்புகினே' என்றும் (புறம் 90) பாடுகின்றனர். இவ்வாறு பல பாடல்களில் பரக்கக் காணப்படும் போர் பற்றிய புலவர்களின் கருத்துகளுக்குச் சமாதானம் சொல்லும் வண்ணம் சில ஆராய்ச்சியாளர்கள் விளக்கியுள்ளனர்.

"அந்தோ! தமிழகமே! யாது குறை செய்தனையோ நீ! உன் புகழ்க்கோயிலையும் கோட்டையையும் பொசுக்கும் தீயாக அன்றோ இப்போர்த் தீ உள்ளது! போரின் பெயரால் எண்ணற்ற தமிழ் வீரர்களின் தலை தமிழகத்தில் தமிழர் களாலேயே உருளுவதோ? கொடுமை! பெருங்கொடுமை! அறத்தை நம்பாது அம்மை நம்பும் சிறுமையை என்னென்று உரைப்பேன்' என இவ்வாறு எண்ணி அவரது (ஔவை யாரது) தாய்மையுள்ளம் துடித்திருக்க வேண்டும்" என்பர் டாக்டர். ந சஞ்சீவி அவர்கள்[14] அடுத்து, அவ்வை துரை சாமிப்பிள்ளையவர்கள் பின் வருமாறு எழுதுகிறார்.

"இதனை (போரின் அழிவுகளை) இச்சான்றோர் விரித் தோதுவது வேந்தன் உள்ளத்தில் அருள் பிறப்பித்துப் போரைக் கைவிடுத்தல் கருதி என்று அறிதல் வேண்டும்."[15]

இதற்கு—இத்தகைய சமாதானங்களுக்கு—கலாநிதி

கைலாசபதி அவர்கள் சொல்லும் பதில் சிந்திக்கத்தக்கதாக இருக்கிறது.

"இத்தகைய வாதம் சங்கச் சான்ருேர் சார்பில் எம்மிடம் மன்னிப்புக்கோரும் வகையில் உள்ளது. அருள் பிறப்பிப்பது அக்காலப்புலவர்களின் நோக்கமாக இல்லை. அதற்கு நேர்மாருக அவர்கள் போர்க்களத்திற்கே சென்று வீரர்களையும் மன்னரையும் உற்சாகப்படுத்தினர். போர் விஷயத்தில் அக்காலப் புலவர்கள் உற்சாகப்படுத்தினர். போர் விஷயத்தில் அக்காலப் புலவர்கள் எளிதில் வெறுப் படைபவராயிருந்தாரல்லர்" என்பர்[16] பிற்காலத்தில் தமிழகத்தில் வேரூன்றத் தொடங்கிய சமண பௌத்த சமயங்களின் கொல்லாமைக் கோட்பாட்டைக் கொண்டு அவ்வை துரைசாமிப்பிள்ளை போன்ருேரும் இக்காலத்திய தமிழ் உணர்ச்சி—பற்றுக் கோட்பாட்டைக் கொண்டு டாக்டர் ந. சஞ்சீவி அவர்களைப் போன்ருேரும் பழைய புறப்பாவலர்களின் கருத்துக்களை ஆராய்தல் வரலாற்று உணர்வுக்கு முரணிய செயலாகத் தோற்றமளிக்கிறது. மேலும் பிற்காலங்களில் அதனதன் காலச் சூழலுக்கு ஏற்பத் தோன்றிய கொள்கைகளுக்குப் பழைய பாடல்களில் ஆதாரம் தேடும் வீண்முயற்சியாகவும் தெரிகிறது. பழைய இலக்கியத்தை அது தோன்றிய காலத்து வரலாற்று நிகழ்ச்சிகளின் தவிர்க்க முடியாத தேவை என்று உணர்ந்து, அந்த அடிப்படையில் ஆய்வு நடத்தினுல் அது நம்மை உண்மைக்குக் கொண்டு செல்லும்.

### புலவரும் அறிவுரையும்

ஆனுலும் சில புலவர்கள் அரசனின் போர் விவகாரத்தில் தங்களுடைய வரையறைகளுக்குட்பட்டுத் தலையிட்டுள்ளார்கள். இதற்காக அவர்கள் போரின் எதிரிகள் என்ருே அடிப்படையிலே முரண்பாடுகளுக்கு எதிரானவர்கள் என்ருே அர்த்தம் கிடையாது. சில குறிப்பிட்ட நேர்வுகளில் குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அப்படி அவர்கள் இருக்கின்றனர். நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் இடையே

நடந்த பதவிச் சண்டையில் கோவூர் கிழார் (புறம் 44, 45) தலையிடுகின்றார். அதில் சோழ இனங்களுக்குள் போர் நடந்துவிடக்கூடாதே என்று குறியாயிருக்கின்றார். இவர் அடிப்படையிலே போருக்கு எதிரி இல்லை என்பது இவரின் பிறபாடல்களால் அறியலாம் (புறம் 3, 33). அடுத்து, கிள்ளி வளவன் கருவூரை முற்றுகையிடும்போது ஆலத்தூர்கிழார் தலையிடுகின்றார் (புறம் 36). மலையமான் மக்களை யானைக்கு இடும் நேரத்தில் கிள்ளிவளவனுக்கும், இளந்தத்தனைக் கொல்லப்புகும் நேரத்தில் நெடுங்கிள்ளிக்கும் கோவூர்கிழார் அறிவுரை சொல்லியதாகத் தெரிகிறது (புறம் 46. 47). அறிவுரை சொல்லும்போதே தங்கள் வரையறைகளுக்குட் பட்டு அரசர்களின் நாணத்திற்கும் ஒழுக்கத்திற்கும் குடிப் பெருமைக்கும் வேண்டுகோள் விடுகின்றனர்.

மலைத்தனை என்பது நாணுத் தகவுடைத்து (புறம் 36)
நாணுத்தக வுடைத்தது காணுங்காலே (புறம் 44)

அதனால்

குடிப்பொருளன்று நுஞ்செய்தி

என்பன போன்ற வரிகள் இதைத் தெளிவாக்குகின்றன. ஆனால் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் — கோவூர் கிழாரின் அறிவுரையையும் மீறிப் போர் நடந்ததாகத் தெரிகிறது; கிள்ளிவளவன்—ஆலத்தூர் கிழாரின் அறிவுரை யைத்தூக்கி எறிந்து கருவூராேடு பொருதுகின்றான்; வெற்றி பெறுகின்றான் (புறம் 39; புறம் 373-இன் அடிக் குறிப்பு). இளந்தத்தன் மலையமான் மக்களைப் பொறுத்த நிகழ்ச்சிகளில் புலவர்களின் அறிவுரையின் விளைவுகளுக்கு நாம் அடிக்குறிப்பை மட்டுமே சார்ந்து இருக்க நேரிடுகிறது. இவர்கள் பணிவோடு அறிவுரை கூறும்போது முடிவை அரசனிடமே விடுகின்றனர். அதுதான் அக்காலச் சூழலும் கூட. ஆனால் தற்கால ஆய்வாளர் ஒருவர், "தம்மைப் புரக்கும் புரவலராயினும் தீது மொழிந்த விடத்தும் தீமை செய்த இடத்தும் சீறித் திருத்தும் இயல்போடு புலவர்கள் இருந்தனர்" என்று குறிப்பிடுகின்றார்.[16] நம் சான்றோர்

களிடம் "சீறித்திருத்தும் போக்கு" இருந்ததாகத் தெரிய வில்லை. தம் காலத்தின் சூழ்நிலையைச் சரிவரப் புரிந்து கொண்ட நம் சான்றோர்கள்,

அடுநை யாயினும் விடுநை யாயினும்
நீயளந் தறிதிநின் புரைமை (புறம் 36)
கேட்டனை யாயின் நீவேட் டது செய்ம்மே (புறம் 46)

என்று மிகப் பணிவாகவே அரசனிடம் அறிவுரை சொல் கின்றனர். இப்பாடல்களிலும் ஏனைய பாடல்களிலும் சீறித்திருத்தும் இயல்பு காணப்படவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. இப்படி அரசனுக்கு அரசு ரீதியான கருத்து களைச் சொன்னவர்கள் பெரும்பாலோர்—விரல்விட்டுத் தவிர்க்கக்கூடிய சிலரைத்தவிர—கிழவர்களாகவே காணப் படுகின்றனர். இது ஏன்? இதற்கான காரணங்களை மறை மலையடிகள் ஒருவாறு கூறுகின்றார்.

"அவர்களிடத்தில் துணிவு—பெருந்தன்மை—பாகுபாடு காட்டாத தன்மை—வலுவான அறநெறியுணர்வு ஆகியவை உள்ளன. இவைதாம் அரசர்களிடத்தில் அவர்களுக்கு மிகுந்த செல்வாக்கை ஏற்படுத்தின."[13]

இக்காரணங்களுக்கும் மேலாக—இன்னொரு காரணம்—மற்றெல்லாக் காரணங்களையும் இரண்டாந்தரமாக்கும் காரணம் ஒன்றுண்டு. கிழார்களின் கருத்தளவில் ஏற்பட்ட காரணங்களுக்கு எது அடிப்படை? இவர்களில் பலர் மற்ற புலவர்களின் பாட்டுடைத் தலைவர்களாகவும் இருந்திருக் கின்றனர், (புறம் 177, 179, 180, 402). சோழன் கிள்ளி வளவனே சிறுகுடி கிழானைப்பற்றிப் பாடியுள்ளான் (புறம் 173). அரசர்கள் பெண் கேட்டு. மறுக்கும் அளவுக்கு சமூகச் செல்வாக்கு கிழார்களுக்கு இருந்தது (இது புறம் 349 பெருஞ்சிக்கல்கிழான் மகட்கொடை மறுத்தது என்பர் இளம்பூரணர் தொல் — புறத்திணைசூத் 19; நச்சினார்க் கினியர் தொல்—புறத்திணை சூத் 24). கிழார் எனுஞ் சொல்லே உரிமையுடையவன் எனப் பொருள்படுகிறது. எதற்கு உரிமையுடையவர்கள்? நிலத்துக்கு—சொத்துக்கு—உரிமையுடையவர்களாக இருந்தார்கள்.

வேலியாயிரம் விளைகநின் வயலே
காவிரி யணையுந் தாழ்நீர் படப்பை (புறம் 391)

நெல் விளைகழனி யம்பர் கிழவோன் (புறம் 385)

என்பன போன்ற சில பாடல்கள் இவர்கள் செல்வநிலையைச் சுட்டுகின்றன. இக்கிழார்களில் ஒருவன் பாண்டிய அரசனுக்கு, "படைவேண்டுவழி வாளுதவியும் வினை வேண்டுவழி அறிவு உதவியும் வேண்டுப வேண்டுப" உதவி செய்துள்ளான் (புறம் 179). "இறைகொண்டு பெயர்க்கும் செம்மலும் உடைத்தே" (புறம் 156) எனும் பாடல் வரியினின்று திறைபெறுபவராகவும் சிலர் இருந்தனர் என்றுந் தெரிகிறது. ஆக இவர்களின் பொருளியல் மேம்பட்டு சமூக வாழ்வில் பெருமையோடு உயர்கின்றனர். மனிதனின் உலகியல் வாழ்வின் சூழ்நிலைகளிலும் சமூக உறவுகளிலும் சமூக வாழ்விலும் ஏற்படும் ஒவ்வொரு மாறுபாட்டோடும் அவனது கருத்துகளும் கொள்கைகளும் கண்ணோட்டங்களும் அதாவது அவனது உணர்வு மாறுகிறது. இவ்வாறு கிழார்களின் பொருளியல் வாழ்க்கையானது விசுவரூபமெடுக்கும்போது அவர்களின் உணர்வும் அரசன் அருகே நிற்கிறது. செல்வ அளவிலே அவர்களுக்கு ஏற்பட்ட வளர்ச்சியும் மாற்றமும் பெருகப்பெருக, அது அவர்களின் உணர்வுத் தன்மையிலேயே மாற்றத்தை ஏற்படுத்துகிறது. ஆக கிழார்களிலே பாடத் தெரிந்தவர்கள்—பணக்காரப் பாடகர்கள்—அரசுப் பணியில் சில அறிவுரைகள் சொல்கின்றனர்; அதுவும் குறிப்பிட்ட வரையறைகளுக்குட்பட்டே எனத் தெரிகிறது.

புறநானூற்றில் கிழார்களுக்கும் சாதாரணப் புலவர்களுக்கு மிடையே உள்ள நுண்ணிய வேறுபாடுகளை வையாவிக்கோப் பெரும் பேகனுக்கு—அவன் இல்லற வாழ்க்கையில்—அறிவுரை சொன்னவர்களை வைத்துக் கொண்டே தெளியலாம். பேகனிடத்தில் 'கண்ணகியிடம் செல்க' என்று சொல்ல வந்த கபிலர்—பரணர் போன்றோர் விஷயத்தை மறைமுகமாகவும் சுற்றி வளைத்தும் தொட்டு

வேண்டுகோள் விடுக்கின்றனர். ஆனால் இதே அறிவுரையைச் சொல்லும் அரிசில் கிழாரோ தன் விருப்பத்தை உரிமை முறையிலே எடுத்துச் சொல்லி, "வண்பரித்தேர் பூண்க நின்மாவே" (புறம் 146) என கண்ணகியிடத்து பேகனை விரைவுபடுத்துகின்றார். மன்னர்களைப் பொறுத்து சாதாரணப் புலவர்களைவிட கிழார்ப் புலவர்கள் நெருங்கியுள்ளனர் என்று தெரிகிறது. அடுத்து வேளாண்மை தொடர்பாகவும் நிலவரி பற்றியும் புலவர்கள் அரசனுக்குக் கருத்து சொல்கின்றனர். குடபுலவியனார் எனும் புலவர் பாண்டியனிடத்தில் வேளாண்மைக்கு அதிக முக்கியத்துவம் தரச் சொல்கிறார் (புறம் 18). யானைபுக்கபுலம் போல வரிவசூலித்த பாண்டியன் அறிவுடை நம்பிக்கு நெறியறிந்து "இறைகொள்க" (புறம் 84) என்கிறார் பிசிராந்தையார். அரசனது போர்க்கள வெற்றிக்கு ஏர்க்களவிளைவு அடிப்படையாக இருந்த காலத்தில்,

> பகடு புறந்தருநர் பாரம் ஓம்பிக்
> குடிபுறந் தருகுவை (புறம் 35)

என்கிறார் வெள்ளைக்குடி நாகனார், நிலச் சொந்தக்காரர்கள் அரசு நிலவரியமைப்பைச் சீர்திருத்தி அதன் அதீதக்கொடுமையிலிருந்து தப்ப முயலுகின்றனர். அவர் தம் முணுமுணுப்பைத் தம் பாடல்களில் பதிவு செய்து அரசனிடம் எடுத்தியம்புகின்றனர். அக்காலத்தில் நிலம் யாரிடம் இருந்தது? போரில் அருஞ்செயல்கள் புரியும் வீரர்க்கு நிலம் கொடுப்பதுண்டு. அதிலும் வீரர்கள் விளைச்சல் சரியில்லாத சீறூர்களை வேண்டாது, மருத நிலங்களையே பெரிதும் விரும்புவர்களாம்.

> சீறூர்க்
> கோள் இவண் வேண்டேம் புரவே
> தண்ணடை பெறுதலும் உரித்தே (புறம் 297)

எனும் பாடலில் இதையுணரலாம். மேலும்,

> வாரிப் புரவிற்கு ஆற்றாச் சீறூர் (புறம் 330)

எனும் பாடல் மூலமாக நிலவரிக்கும் ஆற்ருத அளவுக்கு விளைச்சல் தரும் நிலமும் கொடுப்பதுண்டு என உணர்கின்றோம். மேலும் கிழார்களுக்கு நிலம் சொந்தம் என்பதை மேலே பார்த்தோம் "புரவுத் தொடுத்து உண்குவையாயினும்" (புறம் 260) எனும் பாடல் வரியும், தன் குன்றுகெழு நாடெல்லாம் புலவர்க்குக் கொடுத்த பாரியின் செயலும் (பாடல் 110) புலவர்களுக்கு நிலமிருந்ததை தெரிவிக்கும் பாட்டுச் சான்றுகளாக விளங்குகின்றன. "புரவு என்பதற்கு அரசிறை — அரசனால் அளிக்கப்படும் இறையிலி நிலம் — ஆறு முதலியவற்றிலிருந்து நீர் பாயும் வயல் நிலம்" என்று பொருள்கொள்வதுண்டு.[10] நிலம் புலவர்களிடத்தும் கிழார்களிடத்தும் இருந்தது. அரசிறை அதிகமாகும் போது இவர்கள் செலுத்த முடியாதவராகின்றனர். நிலவரி செலுத்துவதற்குக்கூட விளையாத சீறூர் (புறம் 330) என்பது இதையே உறுதிப் படுத்துகிறது. மேலும் இவர்கள் இப்படி வரி செலுத்த இயலாத வேளாண்மையினரின் வேதனைக் குரலை அரசனுக்கு எடுத்துச் சொல்லி, அரசனிடத்தில் நெருங்க முயல்கின்றனர். வெள்ளைக்குடி நாகனார் பழைய நிலவரியினின்று விடுதலை பெற்றார் (புறம் 35இன் அடிக்குறிப்பு) என்ற செய்தி இவர்களின் கோரிக்கையின் வெற்றியையும் புலப்படுத்துகின்றது. இவ்வாறு இவர்கள் அரசுக்குச் செய்த சேவைகளுக்குப் பதிலாய்ப் பரிசில்கள் பல கிடைத்தன.

## புலவர் பெற்ற பரிசில்கள்

முதல் இவர்தம் வறுமை நீங்கியது. பின் பொற்காசுகள், பகைவர் யானையின் ஓடைப்பொன் (புறம் 126) யானை—குதிரை (புறம் 129, 130), வரி பாக்கி விடுதலை (புறம் 35), பகை நாட்டில் கொள்ளையடித்த பொருள்கள் (புறம் 373) நிலம் (புறம் 110, 260) போன்ற பரிசில்கள் பல்வேறு புலவர்களுக்குக் கிடைத்தன. தங்களுக்குப் பரிசு கொடுப்பதை "பாண்கடன்" என இலட்சியப் படுத்துகின்றனர்.

எனவே புறநானூற்றில் புலவர்—மன்னர் உறவுமுறை

யைப் பற்றி அந்தப் பாடல்களையும் அவை தொடர்பாய்க் கிடைக்கக் கூடிய வேறு செய்திகளையும் (திணை—துறை — அடிக்குறிப்பு போன்றவை) ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது.

(1) அரசனைப் புலவன் அண்டியிருக்க வேண்டியுள்ள தென்றும், (2) அரசனோடு மனமுரண் கொள்கையில், பணிவாக முரண்பட்டு அமைதி கொள்கின்றனர் என்றும் இல்லையெனில் அடுத்த அரசனுடன் தொடர்பு கொண்டுள் ளனர் என்றும்,

(3) அரசனது நிலை பேற்றுக்கு தம் அறிவைச் சரியான பிரச்சாரக் கருவியாக்கியுள்ளனர் என்றும்,

(4) காலத்தின் தவிர்க்க இயலாத அம்சமாகிய போரைச் சிறப்பித்து, நியாயப்படுத்திப் பாடியுள்ளனர் என்றும்,

(6) தம் உலகியல் வாழ்வில் உயர்ந்த கிழார்களும் புலவருமாயிருப்போர் தம் கருத்துகளை வரம்பு அறிந்து பணிவோடு தெரிவித்துள்ளனர் என்றும்,

(6) இன்னோரன்ன சேவைகளுக்காகப் போரில் கொணர்ந்த பொருள்கள் உட்படப் பல பரிசில்கள் பெற்ற என்றுந் தெரிய வருகிறது.

மொத்தத்தில் பெரும்பாலான புலவர்கள் அரசுகளின் நிலைபேற்றுப் போராட்டத்தில் தம்மை அறிவு பூர்வ மாகவும் உணர்வு பூர்வமாகவும் முழுமையாகவே ஐக்கியப் படுத்திக்கொண்டு, தவிர்க்க இயலாத அம்சங்களை உட்கிர கித்து மன்னனிடத்தில் சரியான இடந் தேடிப் போராடு கின்றார்கள்; வெற்றி பெறுகின்றார்கள். அரசுகளும்— அவற்றின் பிரிவுகளும்—இந்தப் புலன் உழுது உண் மார்களை — அறிவுஜீவிகளை — வேண்டிய வேண்டியாங்கு பயன்படுத்தி அவர்களைத் தக்க இடத்தில் வைத்திருக்கிறது. இவ்வாறு அவர்களுடன் தொடர்பு கொண்டுள்ள புலவர்கள் நிரந்தரமாகவே அவைகளில் வீற்றிருக்க ஆரம்பிக் கின்றனர்.

மேற்கோள் பட்டியல்


1. J. D.Bernal — Science in History — Part-I Page 149.
2. K. Kailasapathy — Tamil Heroic Poetry — Page 74.
3. K. N. Sivaraj Pillai—Chronology of Early Tamils—Page 51.
4. P. T. Srinivasa Iyengar—History of Tamils from Early Times to 600 AD—Page 19.
5. K. N. Sivaraj Pillai—Chronology of Early Tamils—Page 18.
6. நச்சினார்க்கினியர் உரை, — கலித்தொகை, பாடல்—எண் 89.
7. அவ்வை துரைசாமிப் பிள்ளை உரை—புறநானூறு பாடல் எண். 208.
8. Maraimalai Adigal—Ancient and Modern Tamil Poets—Page 27.
9. மு. அருணாசலம் — இலக்கியக் கொள்கை— உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்—பக். 94.
10. க. கைலாசபதி—பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்—பக். 27,
11. Maurice Cornforth-Historical Materialism —page 124.
12. டாக்டர். உ. வே. சாமிநாதய்யர் — சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்—பக். 13.
13. K. Kailasapathy—Tamil Heroic Poetry—Page 81.
14. டாக்டர். ந. சஞ்சீவி—சங்க காலச் சான்றோர் —பக். 38-39.

15. அவ்வை துரைசாமிப் பிள்ளை உரை—புற நானூறு-பாடல் எண் 49.

16. க. கைலாசபதி—பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்—பக். 33.

17. அ. அ. மணவாளன்—இலக்கியக் கொள்கை —உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்—பக்.53.

18. Maraimalai Adigal—Ancient and Modern Tamil Poets—Page 30.

19. Tamil Lexicon-university of Madras-Vol V Part II—Page 2771.

புலமை : காலாண்டு ஆய்வு இதழ் மார்ச் 1977.

# 3. மாயையும் உண்மையும்

## சங்கம் பற்றிய கருத்துகள்

"சங்கத் தமிழ் மூன்றும் தா"

என்று பாடுகிறார் அவ்வையார். சங்கம் என்பதே இல்லை என சிலர் வாதிடுகின்றனர். ஒரு சங்கமாவது இருந்திருக்கும் என்று தாராளமாக சிலர் கூறுகின்றனர். 'சங்கம் வைத்துத் தமிழ் பரப்பிய தங்கத் திருநாட்டிலே' என்று மேடையெல்லாம் இன்று முழங்கப்படுகிறது.

இவ்வாறு பல்வேறு வகைபட்ட கருத்துகளைத் தாங்கி 'சங்கம்' நமக்குக் காட்சி தருகிறது. அக்கருத்துகளின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றைக் காணலாம். மேலும், அது நமக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திய வரலாற்றாகவும் அமையும் எனலாம். அத்தோடு அதன் உண்மைத்தன்மையும் நமக்கு விளங்கும்,

முதலில்,சங்கம் இருந்ததற்கான அகச் சான்றுகளாக நம் தமிழ்ப்பேராசான்கள் கூறுவதைக் காணலாம்.

"தொல்லாணை நல்லாசிரியர்
புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்"
(மதுரைக் காஞ்சி 761-762)

என்ற பாடல் வரிகளை இரா. இராகவையங்கார் சான்று காட்டி, பின்வருமாறு விளக்குகிறார்.

"புணர்கூட்டு-புணர்ந்த கூட்டு எனினும் அமையும், கூட்டுண்ட என்பது 'அவரோடு கலந்துய்த்த'

என்றும் பொருந்தும். எங்ஙனமாயினும், இது நல்லாசிரியர் கூடியிருந்த நல்லவையையே குறிக்கும் என்று துணிந்துகொள்க"[1]

அடுத்து சில மேற்கோள்கள் தருகின்றார் (புறம் 58; கலி 68; சிறுபாண் 66-67). பாண்டியன் நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறியதாகப் பாடல் ஒன்றில் (புறம் 76),

" ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக"

என்று ஓர் அவையைக் குறிப்பிடுகின்றனர். 'இதனின்று பாண்டியன் அவையில் புலவர் பலர், ஒரு புலவர் பெருமானின் தலைமையில் ஒத்து வாழ்ந்தனர் என்பதை இனிதின் உணரலாம்' என்பர்[2]

இப்பேராசான்களின் கூற்றுகளிலிருந்து, பண்டைய காலத்தில் மன்னர்களைச் சுற்றி புலவர் இருந்துள்ளனர் என்பதை அறிகிறோம். அடுத்து, புறச்சான்றுகளைப் பார்ப்போம். முதன்முதலாக நமக்குத் தரப்படும் புறச் சான்று, அப்பர் சம்பந்தர் ஆகியோர் பாடல்களிலிருந்து எடுக்கப்படுகிறது.

"அற்றன்றி அந்தண் மதுரைத் தொகை ஆக்கினனும்"

என சம்பந்நர் பாடலும்,

''நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற் கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்''

என்ற அப்பர் பாடலும் தரப்படுகின்றன.

அகச் சான்றுகளாகச் சொல்லப்பட்டவற்றுள் நாம் பார்த்த புணர், கூட்டு, அவை, கூடல் என்பன போன்ற சொற்கள் இங்கே சங்கம், தொகை என்று வேறு வடிவமெடுத்து வந்துள்ளன. மேலும், அகச்சான்றுகளில் காணப்படாத 'ஆக்கினனும்' 'அருளினோனும்' புறச்சான்றுகளில் முக்கியத்துவம் பெற்றுள்ளதையும் நாம் கவனிக்க நேரிடுகிறது. இந்த வேறுபாடுகள் பற்றிய விவரத்தையும் விளக்கத்தையும் பின்னர் காணலாம்.

அடுத்து, கி. பி. 8 ஆம் நூற்றாண்டு ஆண்டாள், திருமங்கை ஆழ்வார் பாடல்களிலும் சங்கம் பற்றிய கருத்துகள் காணப்படுகின்றன. இத்தகைய குறிப்புகளின் மூலம், தமிழைச் 'சங்கம்' எனும் அமைப்போடு தொடர்புபடுத்துவதையும், அதனோடு மதுரையையும் இறைவனையும் பின்னிப் பிணைப்பதையும் தாம் உணர முடிகிறது. ஆக சங்கம் மதுரை–இறைவன் ஆகிய இம்மூன்றையும் தமிழோடு தொடர்பு படுத்தும் குறிப்புகள் கி.பி. 7 ஆம் நூற்றாண்டு முதல் இருந்து வருவதைப் பார்க்கிறோம். இப்போது மிகவும் பெருமையோடு பேசுகின்ற முச்சங்கங்கள் அன்று கருத்தளவில் கூட இல்லை என்பதை இத்தகைய சான்றுகள் இயல்பாகவே தெரிவிக்கின்றன.

அடுத்து சங்கம் பற்றிய தம் கருத்துக்கு வலுச்சேர்க்க, இலண்டன் பொருட்காட்சியில் உள்ள சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகளைத் துணைக்கு அழைப்பர்[3]. இரண்டாம் இராசசிம்மன் மாறவர்மன் (கி. பி. 900—920) வெளியிட்ட சின்னமனூர்ப் பெரிய செப்பேட்டில்

> " வள மதுரை நகர் கண்டும் மற்றதற்கு மதில்வகுத்தும்
> வளமிக்க மதியதனால் ஒண்தமிழும் வடமொழியும்
> பழுதறத் தானாராய்ந்து.........
> .........
> மகாபாரதம் தமிழ்ப்படுத்தும்மதுராபுரிச்சங்கம் வைத்தும்"

என்று காணப்படுகிறது. இன்னொரு செப்பேட்டில்,

> " தென் மதுராபுரம் செய்தும்
> அங்கதனில் அருந்தமிழ் நற்சங்கம் இரீஇத் தமிழ் வளர்த்தும்"

என்றும் காணப்படுகிறது. இச்செப்பேடுகளில் பாண்டிய மன்னர்களின் பழம் பெருமையை நினைவு கூரும்போது, தமிழ் வடமொழி ஆகியவற்றை ஆராய்ந்தது பற்றியும் வடமொழிப் பாரதத்தைத் தமிழ்ப்படுத்த சங்கம் வைத்த செய்தியும் நமக்குக் கிடைக்கிறது. கடல் கடைதல்,

அமிர்தம் கொணர்தல், இந்திரன் மாலை அணிதல், அவன் முடிமேல் வளையை உடைத்தல், வேலை வீசிக் கடலை மீளச் செய்தல், இராவணனுடன் சமாதானம் செய்தல், கௌர வர்களின் அழிய யானைப்படை ஏவல், அர்ச்சுனனின் வசு சாபத்தை நீக்கல் போன்று பழம்பாண்டிய மன்னர்கள் "ஆற்றிய" அருப்பெருஞ் செயல்களை விளக்கிக் கூறிய பின்னுல்தான், மதுரையில் தமிழும் வடமொழியும் ஆய்ந்த தையும் மகாபாரதம் தமிழ்ப்படுத்த சங்கம் வைத்த செய்தி யையும் இச்செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. இங்கே, சங்கம் பற்றிய கருத்து குறிப்பிடப்படுவதோடு மட்டுமன்றி தமிழை ஆராய்ந்து வளர்த்தல் என்ற கருத்தும் கூறப்படுவது கருதத்தக்கது. ஏறத்தாழ இதே காலகட்டத்துக்குச் சற்று முன்னுல் வாழ்ந்த மணிவாசகரின்,

> " உறைவான் உயர் மதிற்கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழின்
> துறைவாய் நுழைந்தனை யோ" —(திருக்கோவை-20)

எனும் கோவை வரிகளை, மேற்சொன்ன 'ஆய்தல்' கருத் தோடு இணைத்துப்பார்த்தால், இத்தகைய கருத்துப்போக்கு கி.பி. 9, 10 நூற்றுண்டில் உதயமானது என்றமுடிவுக்கு வருவதில் தவறில்லை எனலாம். ஆயினும், இச்செப்பேடு களே பாண்டிய மன்னர்களைச் சங்கத்தோடும் தமிழோடும் இணைத்து எழுதிய பிற்காலப்பாடல்களின் கருத்துக்கு (உதாரணம்: கம்பராமாயணம்: கிட்கிந்தா: ஆறுசெல் படலம் [58]) வித்திட்டன எனலாம்.

அடுத்து, சங்கம் பற்றி நமக்கு விரிவான செய்தி தருவது இறையனுர் களவியல் உரை ஆகும். தலைச் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என மூவகைப்பட்ட சங்கம் இரீஇயனுர் பாண்டியனுர்' என்று தொடங்கி, அவற்றின் புலவர்கள், புரவலர்கள் பற்றியும், காலம் பற்றி யும் விரிவாகவே அதில் கூறப்படுள்ளன.

மூன்று சங்கங்கள் பற்றி முதன் முதலாகச் சான்று சொல்லும் களவியல் உரையில் அதுகாறும் சங்கம் பற்றிச் சொல்லப்பட்ட கருத்துகளெல்லாம் தொகுக்

கப்பட்டு விரிவாகவே எடுத்துச் சொல்லப்படுகின்றன. பாண்டியன், இறைவன் ஆகியவர்களோடு சங்கம், தமிழ் ஆகியவற்றை இணைத்துப் பேசப்படுவதைக் காண லாம். சம்பந்தர் காலம் முதல் சங்கம் பற்றிச் சொல்லப் பட்ட கருத்துகளையெல்லாம் ஒன்று திரட்டி ஒரு திட்ட வட்டமான வடிவத்தில் களவியல் உரை தருகிறது. சுருங்கச் சொன்னால், சங்கம் என்பதை ஒரு நிறுவனவடிவ மான கருத்தாகவே தருகிறது எனலாம்.

சங்கத்தின் உண்மையும் இன்மையும் பற்றி ஆய்ந்த அறிஞர்கள் பெரிதும் வேறுபடுகின்றனர். இறையனார் களவியல் உரையில் சொல்வதைப் போன்று மூன்று சங்கங் கள் இருந்தன என்பார் உளர்; மூன்று சங்கங்கள் இருந்திரா விடினும், ஒரு சங்கமாவது இருந்திருக்கலாம் என்று சொல்பவரும் உண்டு.[4] சங்கம் என்ற அமைப்பே இல்லை என மறுப்பாரும் உண்டு.[5]

சங்க இலக்கியம் என்று சொல்லப்படும் எந்நூலிலும் புலவர்கள் கூடித் தமிழாய்ந்த சங்கம் இருந்ததாக அகச் சான்றுகள் கிடையாது. எந்நேரத்தும் போர் மேகம் சூழ்ந்திருந்த ஒரு காலகட்டத்தில், அரசியல் பின்னல் வலை களால் சமூகம் அமைதியற்றுக் கிடந்த கால கட்டத்தில் இத்தகைய அமைப்புரீதியான சங்கம் என்பது சாத்திய மில்லாததாகும். மேலும் புலவனின் நோக்கம், தன் பாடலைப் பாடிப் பரிசில் பெற்று பசி நீக்க வேண்டும் என்பது தானே தவிர, அவையில் வைத்து ஆராய்ந்து சீர் தூக்கிப் பார்க்க வேண்டும் என்பதல்ல என்றும் கூறுவர்.[6] எனினும், சம்பந்தர் அப்பர் பாடல்கள் முதற்கொண்டு இறையனார் களவியல் உரை வரை சங்கம் பற்றிய கருத்து கள் கொஞ்சம் கொஞ்சமாகவே வளர்ந்து கொண்டு வருவதைக் காண முடிகிறது. களவியல் உரையின் கருத்து களும் காலவரையறைகளும் புலவர் புரவலர் வரிசைகளும் நம்பும்படியாக இல்லை.[7]

பண்டையபாடல்களில் சங்கம் இருந்ததற்கு சான்றுகள் இல்லையென்பதாலும், அந்நேரத்தில் சமூக நிலைமைகளில்

இத்தகைய அமைப்பு ரீதியான சங்கம் இருந்திருப்பதற்கான நிலைமைகள் தோன்றவில்லை என்பதாலும், இதுபற்றிய புறச் சான்றுகளில் பெருமளவில் கற்பனைகளே மிஞ்சியிருப்பதனுலும், 'சங்கம்' இருந்திருக்கச் சாத்தியமில்லை என்ற முடிவுக்கு வருகிறோம். இதனையே,

"மூன்று சங்கங்கள் இருந்தனவா என்பதை வலியுறுத்தும் சான்றுகள் போதுமான அளவில் இல்லை......ஆயினும், ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் எழுந்த நூல்களைச் சங்கஇலக்கியம் என்று வழங்கும் மரபு பயனுள்ளதாகி விட்டது."

என்று மு. வரதராசனர் வேறு சொற்களில் கூறுகிறார்.[8] மரபுரீதியான பயன் கருதி மு. வ. போன்றவர்கள் இதை ஏற்றுக் கொண்டாலும், இது வரலாற்றில் வலுக்கட்டாயமான திணிப்பாகும் என்பர்[9] அதோடு மட்டுமல்ல. இது தேவையான திணிப்பாகும். அது என்ன தேவை? யாருக்கா தேவை? இவற்றை ஓரளவு சுருக்கமாக ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

சங்கம் எனும் அமைப்பு இல்லை என முடிவுக்கு வருகிறோம். இவர்கள் கூறுவதைப் போன்று புறவுலகில் இருந்திராத ஒன்றைக் கருத்துலகில் இருந்ததாகச் சொல்வதற்குப் பொய்ம்மை (Illusion) என்று பெயர். ஆயின், கருத்துகளின் தோற்றங்களைப் பற்றிப் பார்த்தோமானல், எந்தக் கருத்தும் வெறுமையினின்று உதிப்பதில்லை. கருத்துக்களின் பக்குவச் சேர்க்கையாகிய கலைகளுக்கும் இவ்விதிபொருந்தும். முற்றிலும் கற்பனையாகவே ஒன்றை உருவாக்கிட முடியாது, எகிப்து நாட்டு 'ஸிப்ங்ஸ்' உருவச் சிற்பமும், இந்திய நாட்டு அன்னப்பறவை வர்ணனைகளும், தமிழகக் கோயில்களின் யாளிச்சிற்பங்களும், இங்கிலாந்து நாட்டுக் கதைகளில் வரும் கடற்கன்னிகளும் (mermaid) கலைஞர்கள் தாங்கள் இந்தப் புறவுலகில் பார்த்த பல உண்மைப்பொருட்களையும் அவற்றின்தோற்றங்களையும் அளவிலும் தன்மையிலும் கூட்டியோ குறைத்தோ ஆக்கிய கலைப் படைப்புகள் ஆகும். புறவுலக யதார்த்தத்தை விடுத்து

முழுமுற்றான கற்பனை என்பதே கிடையாது எனலாம். கலைஞன் பார்க்காத-கேட்காத-அனுபவிக்காத எதையும் கலையாக ஆக்க முடியாது. எனவே, இல்லாத ஒன்றை இருந்திருந்ததாகச் சொல்லும் 'பொய்ம்மை' என்பது கூட, ஏதோ ஒரு விதத்தில் மங்கலான உண்மை நிலையைச் சிறிதளவேனும் கொண்டு இருத்தல் கூடும். அதைப் போன்று கருத்துலகில் உருவாக்கப்படும் பொய்ம்மை (I deological Illusion) என்பதும், ஏதோ ஒரு கால கட்டத்தில் புறவுலகில் தோற்றமளித்த மிகச் சிறிய உண்மையை காலத்தின் தேவையைக் கருதி, மிகவும் கற்பிதக் கதைகளையும் வலுக்கட்டாயமான திணிப்புகளையும் மிகைபடச் சேர்த்து பெரிது படுத்தி எடுத்துச் சொல்வதாகும். இந்திய நாட்டுத் தத்துவங்களை அறிவியல் ரீதியில் ஆராய்ந்த தேவி பிரசாத் சட்டோபாத்யாயா எனும் பேரறிஞர் இது பற்றி (Idelogical Illusion) எடுத்துச் சொல்வது இவ்விடத்தில் நினைவுகூர்தல் பொருத்தமாகும்.

> "மிகச் சிறிய அளவிலேனும் உண்மை இன்றி பொய்ம்மையை உருவாக்க முடியாது; பொய்ம்மை எதையும் நோக்கமின்றியும் உருவாக்க இயலாது; மிகக் குறைந்த அளவிலேனும் உண்மை கலந்திருப்பினும், இதில் மிகைப் படுத்திக் கூறும் தன்மைகள் நிறைய உண்டு. பொய்ம்மைக்கும் உண்மைக்கும் இடையே சில பொதுவான அம்சங்களாவது இருக்க வேண்டும். இத்தகைய பொதுவான அம்சங்கள் இல்லையெனில், கருத்துப்பொய்ம் மையை உருவரக்க இயலாது. எனவே, பொய்ம்மை எதற்குள்ளும் உண்மையின் கூறுபாடுகள் மிகக் குறைந்த அளவிலேனும் உண்டு என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்" [10].

எனவே, சம்பந்தர் அப்பர் போன்ற பிற்காலப் பெருமான்களின்பாடல்கள் முதல் இறையனார்களவியல் உரைவரையில் கூறப்படும் சங்கம் பற்றிய பொய்ம்மையான கருத்துகளுக்கு, முழு அளவிலேனும் எவ்வித அடிப்படையும்

இல்லாமலில்லை என்ற முடிவுக்கு வருகிறோம். இத்தகைய தமிழ்க்கவிஞர்களின்காலத்திற்கு முந்தைய இலக்கியங்களில், அரசவையைப்புலவர்கள் அலங்கரித்து அரசனைப் புகழ்ந்து பாடினார்கள் என்ற செய்திகளும், மதுரை நகரோடு தமிழின் தொடர்புகள் பற்றி பல செய்திகளும் கிடைக்கின்றன (புறம் 58, 76, கலி 35, 68; பரிபாடல் 6: 60; ம. கா. 761—763; சிறுபாண் 66— 67. சிலம்பு புறஞ்சேரி 130—132; மேகலை 25: 131; தொல்—பாயிரம்). அரசர்களின் நாளோலக்கத்தில் கற்றறிந்த புலவர்கள் இருந்துள்ளனர் என்றும், அவர்களை வள்ளல்களாக இருந்து அரசர்கள் ஆதரித்துள்ளனர் என்றும் நமக்கு வேறுபல பாடல்களிலிருந்து செய்திகள் கிடைக்கின்றன. இத்தகைய மிகச்சிறிய செய்திகளை வைத்துக் கொண்டு—அறிஞர் தேவிபிரசாத் சொல்வதைப்போல—சில பொதுவான அம்சங்கள் அடங்கிய மிகச் சிறிய மங்கலான உண்மைகளை வைத்துக் கொண்டு—சம்பந்தர், அப்பர் முதற்கொண்டு களவியல்உரை ஆசிரியர்வரை தத்தம் காலவளர்ச்சிகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்றாற்போல, சங்கம் பற்றிய கருத்துகளை எடுத்துரைத்திருக்கின்றனர் எனலாம்; இதை நம் முன்னோர்கள் வேண்டுமென்றே செய்தனரா இல்லையா என்பது பின்னால் ஆராயப்பட வேண்டியதொன்றாகும். இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் பேரறிஞர்களும் (உதாரணம் இரா. இராகவ அய்யங்கார், மு. இராசமாணிக்கனார்) வரலாற்று அறிஞர்களும் (கே. ஏ. நீலகண்ட சாத்திரியார் கே. கே பிள்ளை), இத்தகைய செய்திகளை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு தான் ஒரு சங்கமாவது இருந்திருக்க வேண்டும் என்று தாராளமான முடிவுக்கு வருகின்றனர்.

எனவே, சங்கம் என்பது தமிழகக் கருத்துலகில் ஏவி விடப்பட்ட பொய்ம்மை என்று தெரிகிறது. இதையே, 'தமிழின் தொன்மையையும் அதன் தெய்வத் தன்மையையும் வற்புறுத்துவதற்கு எழுந்த கற்பிதக் கதைகள் என்பர் வையாபுரிப் பிள்ளை அவர்கள்[12] இங்கே, பேராசிரியரின்

கருத்தை நாம் விரிவாகப் பார்க்க வேண்டியிருக்கிறது தமிழின் தொன்மையையும் அதன் தெய்வத் தன்மையையும் கற்பிக்க வேண்டிய தேவையென்ன? அத்தேவை, சம்பந்தர் அப்பர் காலத்தில் ஏன்தோன்றியது? அந்தத் தேவையைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பு சம்பந்தர் அப்பர் போன்ற சைவசமயக்குரவர்களுக்கிடைத்ததின் பொருளென்ன? இத் தகையவினாக்களுக்கு விடைகண்டாலே இக்கருத்துப்பொய்ம் மையின் தோற்றத்தையும் தேவையையும் ஓரளவு கண்டறிந் தவர்களாவோம். மேலும், 'சங்கம்' என்ற அமைப்பின் வரலாற்றுப் பணி முழுமையும் கலந்து நிலைமை தெளிவாக ஏதுவாகும்.

இத்தகைய வினாக்களுக்கு சமூகஅறிவியல் பதிலளிக் கிறது. கருத்துகள்—கருத்துப் பொய்ம்மைகள் ஆகிய வற்றின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் ஆராய வேண்டு மானால், இவைகளை மட்டுமே ஆராய்வது போதுமான தல்ல. சமூகத்தின் கருத்துகளும் கோட்பாடுகளும் அவற் றைத் தாங்கிய நிறுவனங்களும் சமூகப்பொருளியல் நிலைமை களிலிருந்தே தோன்றுகின்றன; அதற்கேற்றுப் போன்றே வளர்கின்றன. எனவே கருத்துகளின் வளர்ச்சிகளை அவற்றுள் மட்டும் ஆராயாது, அந்தக் குறிப்பிட்ட வரலாற்றுப் போக்குகள், சமுதாய வாழ்க்கை நிலைமைகள் இவற்றை ஒட்டியும் ஆராய வேண்டும்.

எனவே, சங்கம் எனும் பொய்ம்மையான கருத்தின்—வையாபுரியாரின் சொற்களில் சொல்லப் போனால் சங்கம் எனும் 'கற்பிதக் கதையின்'—தோற்றம் வளர்ச்சியைப் பார்க்க வேண்டுமானால், அந்தக் குறிப்பிட்ட காலத் தமிழகத்தின் வரலாற்றுக் கட்டம், மக்கட் பிரிவினரின் பொருளியல் நிலைமை, சமுக வாழ்க்கை நிலைமை ஆகியவை பற்றி ஓரளவுக்காவது ஆராய்வது தவிர்க்க இயலாத தாகிறது.

அதற்கு முன்னதாக, 'குறிப்பிட்ட காலம்' எது என்ப தைத் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. கருத்துமாயைக்குத் தொடக்கப் புள்ளி வைத்த சம்பந்தர், அப்பர் காலத்தையும்

அதை முடித்துச் செழுமைப்படுத்திய களவியல் உரையின் காலத்தையும் குறிப்பிட வேண்டிய அவசியம் உள்ளது தமிழகத்தின் பண்டைய இலக்கிய நூல்களின் காலத்தைக் கணிப்பதில் மிகவும் சிரமம் உள்ளது. காலம் கணிப்பதில் நமக்கு அகச்சான்றுகள் அதிகம் கிடைக்கவில்லை என்ற உண்மை ஒரு புறம் இருக்க, உணர்ச்சி மோதல்களும் வெறும் ஆரவாரமான மேலோட்டமான பற்றுதல்களும் இங்கே அறிவியல் ரீதியான அணுகு முறைக்குத் தடையாக உள்ளன என்பதையும் நாம் புறக்கணிக்கத் தயாராக இல்லை. சில பண்டைய நூல்களின் காலத்தை வேண்டு மென்றே முன்னிழுத்துச் சென்று, 'பழம் பெருமை' பேசுவதும் அல்லது வேண்டுமென்றே பின்னிழுத்துச் சென்றுஅந்தப் பழம்பெருமையைக் 'குலைப்பதும்' இங்கே சாதாரண நடைமுறைகளாகி விட்டன. ஆசைபற்றி அறையலுற்ற இக்கணிப்புகள் எல்லாம் அறிவியல் ரீதியான அணுகு முறைக்குத் தடையிடுகிறது.

ஆயினும், சம்பந்தர், அப்பர் இருவரும் ஒரேகாலத்தில் (கி. பி.7ஆம் நூற்றாண்டு) வாழ்ந்து சமயத் தொண் டாற்றினர் என்று அனைவரும் ஒத்துக் கொள்கின்றனர். ஆனால், இறையனார் களவியல் உரையின் காலத்தைப் பற்றி வேறுபாடுகள் நிறைய இருக்கின்றன. கி. பி. முதலாம் நூற்றாண்டு என்று சிலரும்[12], கி. பி.8ஆம் நூற்றாண்டு என்று சிலரும்[13] குறிப்பிடுகின்றனர். கே. ஏ. நீலகண்ட சாத்திரியாரோ, ஒரு நூலில் கி. பி. 8ஆம் நூற்றாண்டு என்றும்[14] இன்னொரு நூலில் கி. பி.9 ஆம் நூற்றாண்டு [15] என்றும் கூறுவர். பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதி எனச் சிலரும்[16] குறிப்பிடுவர். கி. பி. 11அல்லது 12ஆம் நூற்றாண்டு என்பாரும் உளர்[17] 'சங்கம்'பற்றிய பொய்ம்மை யான கருத்து நன்கு செழுமைப்பட்டு, நிறுவன வடிவமாக ஆனது இறையனார் களவியல் உரையில் தான் என்பதால், அதன் காலத்தைத் தெளிவாக்கிக் கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

இறையனார் களவியல் உரையில், சிலம்பின் பாடல்கள்

மேற்கோள்களாக எடுத்தாளப் பட்டுள்ளன (சூத்3 சிலம்பு கானல்வரி8; சூத் 6—கானல்வரி 39. சூத் 10—கானல்வரி39). எனவே, இது சிலம்புக்குப் பிற்பட்டதாகும்- அடுத்து, இவ் வுரையின் மேற்கோளாகக் காட்டப்படும் பாண்டிக் கோவையில் சில வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. பாழி, பூலந்தை, சேவூர், கடையல், விழிஞம், கோட்டாறு, நெல்வேலி, வல்லம், வயவர், நறையாறு ஆகிய இடங்களில் நடந்த போர்கள் குறிப்பிடப் படுகின்றன. ஒரு மன்னனைப் பற்றிய பாடல்களே பாண்டிக் கோவையிலுள்ளன என் பாரும் உளர்[18] ஆனல், பல மன்னர்களின் பெருமைகளைப் பாண்டிக் கோவை உரைக்கின்றது என்பாரும் உளர்[19]. இக்கூற்றுக்களை ஆராய்ந்தால், பாண்டிக்கோவையின் காலம் புலனாகும். இதில், அரிகேசரி பராந்தக நெடுமாறன் (கி. பி. 670), நடத்திய பாழி, நெல்வேலி, சங்கரமங்கை போர்கள் குறிப்பிடப்படுகின்றன (பாழிப்போர் 3, 13, 90, 121, 165, 252, 262, 278, 319: நெல்வேலி 22, 54, 109: சங்கர மங்கை 272). இவனைப்பற்றி,

> "வில்லவரும் நெல்வேலி உம்விரி பொழிற் சங்கரமங்கைப்
> பல்லவரும் பிங்கண்ட பராங்குசன்"

எனச் சின்னமனூர்ப் பெரிய செப்பேடுகள் குறிப்பிடுகிறது சுந்தரர் தம் திருத் தொண்டத் தொகையில் இம்மன்னனை நெல்வேலிப் போரோடு தொடர்பு படுத்திப் பாடுகின்றார். இவனுக்கு அடுத்து பட்ட த்துக்கு வந்த கோச்சடையன் ரண தீரன், சேரர் சோழர்களை வென்றடக்கியதால் வானவன் செம்பியன் என்ற பட்டங்கள் பெற்றான் என்பர் 'செறிகழல் வானவன் செம்பியன் மாறன்' என ஒரு மன்னனைப் பற்றிப் பாண்டிக்கோவை கூறுகிறது (பாடல் 254) மேலும், 'இடியார் முகில் உருமேந்தியகோன் இரணோதயன்' (பாடல் 325) என்றும், 'வேல் நின்ற வெஞ்சிலை வேந்தன் இரணகந்தன், (பாடல் 138) என்றும் கூறுகிறது. இவை யெல்லாம் கோச் சடையன் இரண தீரனைக் குறிப்பிடுவதாக இருக்கலாம். அடுத்துவரும் முதலாம் மாறவர்மன் நரசிம்மன்

(கி. பி740—765) தேர்மாறன் எனப்பட்டான். இவனே, களவியல்உரை மேற்கோளில் வரும் தேர்வரோதயன் என்பார் கல்வெட்டு அறிஞர் வெங்கையா அவர்கள்[20]. இவன் வல்லபஅரசனுடன் போரிட்டு, அவனை வென்றடக்கி, அவன் மகளைத்தன் தன்மகனாகிய ஜெடிலபராந்தகனுக்குப் பரிசாகப் பெற்றான் என வேள்விக் குடிச் செப்பேடுகள் கூறுகின்றது. மேற்கோள்பாடல்களும் (எண்கள் 104, 111) தேர்வரோதயன் வல்லத்துப் போரில் ஈடுபட்டான் எனக் கூறுகின்றன. அடுத்து, பட்டத்துக்கு வந்த பராந்தக நெடுஞ் சடையன் (கிபி. 765-815) போரில் வெற்றி பெற்ற பின் கங்க நாட்டு இளவரசியைத் திருமணம் செய்து கொண் டான். பாண்டிக்கோவை,

> " கங்கை மணாளன் களிமதனன் கடிமா மணற்றி
> மங்கை அமரட்ட கோன் வையை நாடன்" என

மங்கையை அமரிலே பெற்ற செய்தியைத் தெரிவிக்கிறது. அடுத்து, விழிஞம் போர் பற்றிய பாடல்கள் பல உள்ளன (4, 7, 10, 30, 62, 113, 139, 277). இம்மன்னன், தென்திரு விதாங்கூரில் உள்ள வேணாட்டைக் கைப்பற்றி, விழிஞம் எனும் கடற்கரைக் கோட்டையைத் தாக்கி அழிக்கிறான். இது இவனது 17 ஆவது ஆட்சியாண்டில் நடந்தது என்பர். கி.பி. 782 இல் நடந்த இப்போருக்குப் பின் பத்தாவது ஆண்டில் (கி.பி. 792), மீண்டும் விழிஞத்தைத் தாக்க நேரிடுகிறது என்று திருவனந்தபுரம் அருங்கலச் செப்பேடு களில் (Inscriptions No. 277/1895), காணப்படுவதாகக் கூறுவர்[21]. எனவே, பாண்டிக்கோவையில் குறைந்தது நான்கு மன்னர்களைப் பற்றிய பாடல்கள் உள்ளன என்றும் இதில் கூறப்பட்டுள்ள போர்களிலே விழிஞம் போரே கடைசியாக நடந்தது என்றும் அறிகிறோம். எனவே, விழிஞம் போர் நடந்த காலமாகிய (கி.பி 782 அல்லது கி.பி. 792) எட்டாம் நூற்றாண்டின் கடைசி ஆண்டுகளுக்கு முன்னால் பாண்டிக்கோவை எழுதப்பட்டிருக்க இயலாது என்று அறிகிறோம். எனவே இதை மேற்கோளாகக் குறிக்

கும் களவியல் உரையின் காலமும் கி.பி. 8 ஆம் நூற்றாண்டுக்கு முன் எழுதப்பட்டிருக்க வாய்ப்பில்லை எனலாம்.

களவியல் உரையில், "நிகண்டு நூல்... ....." (சூத்1-இன் உரை) என ஓரிடத்தில் குறிப்பு வருகிறது. முதல் நிகண்டாகிய திவாகரநிகண்டின் காலம் கி. பி. 9 ஆம் நூற்றாண்டு ஆகும். எனவே, நிகண்டு நூலைப்பற்றிக் குறிப்பு வரும் இறையனார்களவியல் உரை இதற்குப் பிற்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகும். இறைவனே சூத்திரங்கள் அறுபதையும் செய்து வைத்தான் என்று குறிப்பிடுகிறது களவியல் உரை. இத்தகைய புராணக் கதை பிற்காலத்திய சரக்காகும். காஷ்மீரில் சைவசூத்திரம் காணாமற்போன நேரத்தில் சிவன் இமாலயப் பாறைகளில் சூத்திரங்களைப் பொறித்து, வசுகுப்தர் எனும் பிராமணர் கனவில் தோன்றியதாக ஒரு புராணக் கதை உள்ளது. இக்கதையின் காலம் கி. பி. 9 ஆம் நூற்றாண்டு என்பர் அறிஞர்[22]. எனவே, இது போன்ற புராணக் கதையைத் தாங்கும் களவியல் உரையும் கி.பி. 9ஆம் நூற்றாண்டின் பிற்பட்டதாகலாம்.

பாண்டி நாட்டில் பன்னீராண்டு வறுமை வருவதை அறிந்த பாண்டியன் சிட்டரை எல்லாம் அழைத்து, உம்மைக் காத்துக் கொள்க என்று அனுப்புகிறான். இதைப்போன்று குப்த நாட்டில் பன்னீராண்டு வறுமை வரப்போவதை அறிந்த பத்திரபாகு எனும் முனிவர், சமணர்களை அழைத்துக் கொண்டு சிரவண பெள்கொள எனும் இடத்திற்கு வந்தார். இதைக் கன்னடத்து அரிஷேகசனரின் "பிருகத் கதா கோசம்" எனும் நூல் வெளியிடுகிறது. இவர் காலம் கி.பி. 931-ஆகும். அதாவது, இத்தகைய கதைகளின் காலம் கி.பி. 10 ஆம் நூற்றாண்டாக உள்ளது. இதே போன்ற கதையைச் சொல்லும் இறையனார் களவியல் உரையின் காலமும் கி.பி. 10—ஆம் நூற்றாண்டு அல்லது அதற்குப் பிற்பட்டதாக இருக்கலாம்.

மதுரை நகர் தொடர்பான புராண நிகழ்ச்சிகளைச் சொல்லுதல், பொதுவாகவே தமிழிலக்கியத்தில் உரை

எழுதும் காலம், நாலடி, சிந்தாமணி ஆகிய நூல்களின் சொற்றொடர்களும் சொற்களும் பயின்றுவருதல், மிகை யான வட சொற்கள் அதிகம் விரவி வருதல், யாப்பதி காரத்தைத் தனியாகப் பிரித்துச் சொல்லுதல் போன்ற கருத்துகளையும் ஆராய்ந்து பார்த்தால், இக்களவியல் உரையின் காலம் உறுதியாக கி.பி. 10 ஆம் நூற்றாண்டு அல்லது கி. பி. 11-ஆம் நூற்றாண்டு எனத் தெளிவாகச் சொல்லலாம். நமக்குத் தேவையானதெல்லாம், சங்கம் பற்றிய பொய்ம்மையான கருத்துகள் நிறுவனவடிவமாக மாறியது இறையனார் களவியல் உரையின் காலத்தில் அதாவது கி.பி. 10, 11-ஆம் நூற்றாண்டுகளில்தான் என்பதே ஆகும்.

எனவே, கி. பி. 7, 8, 9, 10 ஆகிய நூற்றாண்டுகளில் தமிழகத்து அரசியல் பொருளாதார நிலைமைகளையும், அக் கால மக்கட் பிரிவினர்களையும் அவர் தம் சமூக வாழ்க்கை நிலைமைகளையும் அதற்கேற்றாற் போன்ற அவர்களின் உணர் வுகளையும் பற்றி ஓரளவுக்கு விளங்கிக் கொண்டாலே, இக் கருத்துப்பொய்ம்மையின் தோற்றம் வளர்ச்சியைப்பற்றியும் இதன் சமூகத் தேவையையும் நாம் ஊகிக்க முடியும்.

பண்டைய காலத்தில் வாணிபம் பெருமளவில் நடந் ததை நமது இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. பண்டைய தமிழக வணிகர்கள் உள்நாட்டில் வாணிபம் செய்ததோடு மட்டுமின்றி வெளிநாட்டினரோடும் வாணிபப் பரிவர்த்த தனைத் தொடர்பும் வைத்திருந்தனர். உள் நாட்டு வாணி பத்தில் உப்பு, மிளகு, நெல் போன்றவற்றை விற்றனர். உள்நாட்டு வாணிபப் போக்குவரத்திற்கு வண்டிகளையும் கழுதைகளையும் (பெரும்பாண் 71-81) எருதுகளையும் (சிறு பாண் 55) ஒடங்களையும் (பட்டினப் 28-30) பயன்படுத்தினர். பொதுவாக, உள்நாட்டு வாணிபம் பண்டமாற்று முறை யிலே நடந்தேறியது (குறுந் 221,209: நற் 183,239; ஐங்குறு— மருதம் 47, 48, 49; அகம் 130, 320, 340, 390; புறம் 35, 343; பெரும்பாண் 155-163) வெளிநாட்டு வாணிபத்தில் முத்து, சங்கு, மிளகு, புடவை, சந்தனம், அரிசி போன்ற பொருட்

களைப் பரிவர்த்தனை செய்தனர். முதலில், பெரும் பாலும் அரேபிய வணிகர்களுடன் பரிவர்த்தனையில் ஈடுபட்டனர். தமிழக மேற்குக்கரையோரப்பகுதிகளில் விளையும் மிளகு பெரும் பாலும் எகிப்து நாட்டு அலெக்சாந்திரியா துறைமுகத்திற்குக் கொண்டு செல்லப் பட்டு மீண்டும் அங்கிருந்து மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்நிலை கி.மு. முதலாம் நூற்றுண்டு வரை நீடித்தது எனலாம். கி.மு. முதல் நூற்றுண்டில் ரோமானிர்கள் தம் வன்மையால் எகிப்தைக் கைப் பற்றினர். அலெக்சாந்திரியா துறைமுகத்தைத் தம் ஆளுகைக்குள் கொணர்ந்து, கீழ்த்திசை நாடுகளிடம் அரேபியருக்குள்ள வாணிபச் செல்வாக்கைப் பிடுங்கிக் கொண்டனர். மேலும், அதற்கு முன்னுல் மேலைக் கடலில் நடுவில் பருவக் காற்றின் துணை கொண்டு பயணம் புரியும் முறை அறியப் படவில்லை. ரோமானியப் படையில் பணியாற்றிய எகிப்து மாலுமியான இப்பாலஸ் என்பவன் கி. பி.45—ஆம் ஆண்டில் துறைமுக இருப்பிடங்களையும் கடலின் இயல்புகளையும் ஆராய்ந்தும் பருவக்காற்றின் தன்மையை அறிந்தும் பெருங்கடலின் குறுக்கே கலம் செலுத்தும் முறையைக் கண்டு பிடித்தான். அதற்குப் பின்னுல் குறுகிய காலத்தில், ரோமுக்கும் இந்தியாவின் மேற்குக்கரையோரப் பகுதிகளுக்கும் இடையே கடல் போக்குவரத்து அதிகமாயிற்று. கடல் நடுவில் பயணம் செய்யும் வசதி ஏற்பட்டதால், கொள்ளைக்காரர்களின் தாக்குதலும் வெகுவாகக் குறைந்து போயிற்று. பேராசிரியர் நீலகண்ட சாத்திரியார் சொல்வதைப் போல, அதற்குமுன்னர் எகிப்திலிருந்து இந்தியாவை நோக்கி ஆண்டுக்கு இருபதுக்கும் குறைவாகக் கப்பல்கள் வந்ததற்கு மாருக, நாள் ஒன்றுக்கு ஒரு கப்பல் வீதம் வந்ததாக அறிகிறோம்[23]. இதற்குப் பின்னுல், தமிழக வெளிநாட்டு வாணிபத்தில் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. ஏராளமான கலங்கள் மேலை நாடுகளிலிருந்து வந்து, இங்கேயிருக்கும் மிளகு, அரிசி, யானைத்தந்தம் போன்றவற்றைப் பெற்று, பொன்னும் பொருளும் வழங்குகின்றன.

இத்தகைய இடங்களில் நடக்கும் வாணிபம் பற்றி வெளி நாட்டினர் குறிப்பு பின்வருமாறு கூறுகிறது [24].

> "இந்த வாணிப நகரங்களில்கிடைக்கும் மிளகு, பட்டுத்துணி, யானைத் தந்தம், மணிக்கற்கள், ஆமையோடு, அரிசி, சந்தனம், போன்ற பண்டங்களை ஏற்றிச் செல்வதற்கான கலங்கள் பல வருகின்றன. அவற்றுக்கு ஈடாகப் பல பொருட்கள் வழங்குகின்றன. அவற்றுள் முதன்மையானவை நாணயங்களே ஆகும். அடுத்து, பூப்போட்ட லினன். அஞ்சனக்கல், பவழம், கண்ணாடி, செம்பு, ஈயம், வெள்ளீயம், மது, அகல்விளக்கு ஆகிய பல பொருட்கள் இறக்குமதியாகின்றன"

வெளிநாடுகளில் இருந்து கடலில் வந்த மரக்கலங்கள் கொணர்ந்த பண்டங்கள் துறைமுகத்தை நிரப்பின (பட்டினப் 126—132). முதவில் அரேபியர்கள் ஈடுபட்ட இத்துறையில், பின்னர் ரோமானியர்கள் செல்வாக்கு அதிகரித்தது. பொதுவாக இவர்கள்தாம் இங்கிருந்து பொருட்களை வாங்கி வெளிநாடுகளில் இவர்களே கொண்டு போய் விற்றனர். இது பற்றிய கருத்து பின் வருமாறு.

> "அராபிய வணிகர்களும் மேலை நாட்டு வணிகர்களும் இந்தியாவில் பொருட்களை வாங்கித் தத்தம் நாடுகளில் அதிக விலைக்கு விற்றனர். இதற்காகவே இவர்கள் இந்தியாவில் தங்கினர். அக்காலத்தில் இந்தியர்கள் அங்கங்கே போய் வணிகம் செய்தற்கான சான்றுகள் போதுமான அளவில் கிடைக்கவில்லை. இவர்கள், தூரத்திற்கு ஏற்ப விலையை நிர்ணயம் செய்தார்கள். பொருள்களை மட்டுமல்ல, அடிமைகளையும் கொண்டு வந்தனர். இவ்வாருக இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்ட ஆண் அடிமைகள் பாது காவலர்களாக நியமிக்கப் பட்டனர்; பெண்அடிமைகள், இசைக் கலைஞர்களாக—நடனப்பெண்டிர்களாக — அந்தப் புறப் பணிப் பெண்களாக நியமிக்கப் பட்டனர்"[25]

ஏறத்தாழ, தமிழக வாணிப நிலைமையும் இதேதான் எனலாம். தமிழக வணிகர்கள் இங்கேயுள்ள பொருட்களை வாங்கி, வெளிநாட்டு வணிகர்களிடம் இங்கேயிருந்து கொண்டே பரிவர்த்தனை செய்தனர் என்று தெரிகிறது. இவர்கள் வெளி நாடுகளுக்குப் போய் விற்ற செய்திகள் இல்லை எனலாம். அதாவது வெளி நாட்டு வாணிபத்தில் இவர்கள் நேரடியாக ஈடுபடாது இடையாளர்களாக இருந்தனர் என்று தெரிகிறது. யவனர்கள் கலங்களில் வந்து பொன்னை இறக்கிப் பொருட்களை ஏற்றிச் சென்றதையே நம் இலக்கியமும் கூறுகிறது. 'கலம் தந்த பொற் பரிசம்' (புறம் 343); யவனர் தந்த வினைமாண் நன் கலம் பொன்னொடு வந்து கறியொடு பெயரும்' (புறம் 56) மதுரைக்காஞ்சி 322—323) இதையே விளக்குகிறது தென்னிந்திய வாணிபத்தைப் பற்றி எழுதிய எந்த அயல் நாட்டு அறிஞர் பயணக்குறிப்புகளிலும் பண்டைய காலத்தில் தமிழர்கள் நேரடி வாணிபத்தில் ஈடுபட்டனர் என்பதற்குச் செய்திகள் இருப்பதாகத் தெரியவில்லை[26] நம் பாடற் குறிப்புகளிலும் உள்நாட்டில் கலங்களைப் பயன் படுத்தியதாகத்தான் குறிப்புகள் உள்ளன. கடலில் பருவக் காற்றை ஆட்கொண்டு செலுத்தியதாக ஒரு இடத்தில் குறிப்பு வருகிறது (புறம் 66). பருவக் காற்று கொணரும் கலங்கள் பற்றிச் செய்தி கிடைக்கிறது (ம. கா. 134). ஆனாலும், தமிழ் வணிகர்கள் அன்றைய நேரத்தில் நேரடி வாணிபத்தில் ஈடுபட்டனரா என்ற ஐயம் மிகவும் வலுக்கிறது. அப்படி ஈடுபடவில்லை என்பது உண்மையாகில், இவர்கள் வாணிபம் இரண்டு மூன்று நாடுகளில் ஏற்படும் அரசியல் மாற்றம், வாணிப நிலைமை ஆகியவற்றை. ஆதாரமாகக் கொள்ளவேண்டிய நிலையில் உள்ளதாக இருந்திருக்கலாம். இது குறித்துப் பின்னால் பார்ப்போம்.

இவ்வாறு வெளிநாட்டு வாணிபம் பெருகப் பெருக துறைமுகப் பட்டினங்கள், நகரங்கள் வளமிக்கதாகவும் செல்வாக்கோடும் திகழ்ந்தன. வணிகர்களுடைய வாழ்க்கை நிலையும் பெருமளவில் செல்வத்தில் திளைத்தது. ஏராள

மான பொற் குப்பையைப் பெற்ற வணிகர்களின் வாழ்க்கை நிலைமை சிறந்ததின் விளைவாக, அரசியலிலும் சமூகத்திலும் வணிகர்களுக்குப் புதிய தகுதி கிடைத்தது. வணிகர்கள் பொன்னிட்ட உடைவாள் பெற்றிருக்கும் உரிமைபெற்றனர். அரசனுக்கு உரிய வேப்பம் பூமாலையை அணியும் சமூகத் தகுதிபெற்றனர் (ம.கா. 131 142). 'கம்பமில்லாக் கழிபெரும் செல்வராகிய வணிகர்கள் (மணிமேகலை 17:635)பொருட்களை விற்கும் அங்காடித் தெரு அரசு விழைதரும் தெருவாகவே உள்ளது (சிலம்பு மனையறம் படுத்தகாதை) செவ்விபார்க்கும் செழுங்குடிச் செல்வர்கள் வையங்காக்கும் காவலர்களோடு மகிழ்தரு வீதியில் இணையாகச் செல்லும் அளவுக்கு சமூகத் தகுதி பெற்றிருந்தனர் (சிலம்பு 14: 144—145). இவர்களுக்கு 'எட்டி' எனும் பட்டமும் 'பொற்பூ' ஒன்றும் பரிசாகக் கொடுக்கப் பட்டது. 'மன்னர் பின்னோர்' என சுருக்கமாகவும் செல்லமாகவும் இவர்களைச் சொல்லி மகிழ்கிறது சிலம்பு. மேலும், மதுரை மாவட்டம் போடி அருகிலும் சென்னை மாம்பலத்திலும் தோண்டி எடுக்கப்பட்ட பொன் நாணயங்கள் ரோம நாணயங்களைப் போல இருப்பதாகவும், அதே நேரத்தில் அவற்றுக்குரிய இயல்பான எடைகுறைந்தும், ஒருபக்கம் பாண்டிய மீன்இலச்சினையைப் பொறிக்கப் பட்டும் காணப்படுகின்றன என்பர்[27] இந்த நாணயங்களை ஆராய்ந்த அறிஞர்,இவற்றை அரசர்களே அன்றிப்பாண்டிய நாட்டு வணிகர்களும் வெளியிட்டிருக்கலாம் என்றும், அப்படியிருப்பின், வணிகர்களின் சமூகப் பொருளாதார செல்வாக்கு நமக்கு பிரமிப்பு ஊட்டும் வண்ணம் உள்ளது, என்றும் கூறுவர்[28].

தமிழகத்தில் உற்பத்தியான பொருட்களை வாங்கி வெளிநாட்டு வணிகர்களிடம் பரிவர்த்தனை செய்து பொற் குப்பையைப் பெற்ற வணிகப் பெருமக்கள், சமுதாயச் செல்வத்தில் தாங்கள் பெறும் பங்கைப் பொறுத்துய் அதைப் பெறுகின்ற விதத்தைப் பொறுத்தும் சமூகத்தில் ஒரு பிரிவினராகவே இருந்தனர். அவர்கள் வாழ்நிலை அவர்களை "ஒரு தனிக்குடிகளாகவே" (சிலம்பு மங்கல

வாழ்த்துப் பாடல்) வைத்திருந்தது. கிலம்பு சொல்வதையே இன்னும் சரியாகச் சொல்லப் போனால் அவர்கள் ஒரு வர்க்க மாகவே வாழ்ந்தனர். இவர்கள் கூட்டம் கூட்டமாகவே வணிகத்தில் ஈடுபட்டனர். உள்நாட்டு கூட்டத்திற்கு சாத்து என்று பெயர். மாங்குளம் கல்வெட்டின் மூலமாக, வணிகக் குழுக்கள் இருந்தன என்றும், அவற்றுக்கு நிகாமா என்ற பெயருண்டு என்றும் அறிகிறோம். இக் குழுவின் தலைவருக்குக் காவிதி என்ற பட்டம் கொடுப்பதுண்டு எனவும், இதில் உள்ள வணிகர்கள் தங்கள் செல்வத்திற் கேற்றாற் போன்று அறச்செயல்கள் புரிந்தனர் என்றும் அறிகிறோம்.[29] ஒருவேளை இத்தகைய குழுக்களே, ஒருபுறத்தில் மீன் இலச்சினையைப் பொறித்த ரோம நாணயங்களை வெளியிட்டிருக்கலாம். இக்குழுக்களின் தலைவராகிய காவிதிப்பட்டம் பெற்ற வணிகரின் குடும்பங்களோடு, அரசர்கள் மண உறவு கொண்டனர் எனப் பிற்காலத்து நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார்(தொல்—எழுத்து 154—நச்சு. உரை).

கருத்துகளின்றி மனித சமுதாயம் நடைபோட முடியாது. அரசு விழைதரு தெருவில் பண்ணியம் பகர்ந்து, கம்பமில்லாக் கழிபெரும் செல்வத்தைக் கொண்டு, காவிதி என்று பட்டங்கள் பெற்று, வையகங் காக்கும் காவலர்களோடு மகிழ்தரு வீதியில் ஒருங்கு சென்று 'ஒருதனிக்குடிகளாக' வாழ்க்கை நடத்திய வணிகர்களும் தங்களுக்கென்று சிற்சில கருத்துகளைக் கொண்டிருந்தனர். தம் வாழ் நிலைமையிலிருந்து இத்தகைய கருத்துகளை உருவாக்கிக் கொண்ட தமிழ் வணிகர்கள், தம் செல்வ நிலையை நிலைநிறுத்திக் கொள்ளவும் அதை வளர்த்துக் கொள்ளவும் ஆன தத்துவங்களைக் கைக் கொண்டனர். வரம்பறியாத செல்வத்தை ஈட்டுவதற்கும் அதைப் பாதுகாக்கவும் நினைத்த வணிகர்கள், அதற்காகப் 'பொருள் வரைதல்' எனும் கருத்தைப் புனிதமாக்குகின்றனர். மேலும், கள்ளாமை, கொல்லாமை போன்ற தத்துவங்களையும் உருவாக்குகின்றனர்.

இவ்வாறு இவர்களின் பொருளியல் நிலைமைகளைப் பாது காக்கவும் வளர்க்கவும் ஆன கருத்துக்கள், ஒரே இடத்தில தங்கி விடுவதில்லை; அவை இயங்குகின்றன; மற்ற பிரிவினர் களிடையே பரவுகின்றன. பெரும்பாலும் இந்தக் கருத்து களோடு ஒத்துப் போகிற அல்லது இவற்றைப் பரப்புகிற எந்த இயக்கத்தையும் இவர்கள் பயன்படுத்தத் தவறுவது இல்லை.

நம் பண்டைய வணிகர்கள் தம் கருத்துக்களைப் பிரதி பலிப்பதற்கு வடநாட்டிலிருந்து வந்த சமணம், பௌத்தம் கைகொடுத்தன. எனவேதான்,பெருமளவில் அன்றைய வணி கர்கள் சமணர்களாகவோ புத்த சமயத்தினராகவோ இருந்தனர் என்று தெரிகிறது. தமிழ் பிராமிக் கல் வெட்டுகளை ஆராய்ந்த ஐ. மகாதேவன், தமிழ் வணிகர்கள் பெருமளவில் புத்த சமயத்தினராகவோ சமணர்களாகவோ இருந்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகின்றார்.[30] பொதுவாகவே இந்திய வணிகக் குடும்பங்களின் வளர்ச் சியல் சமணம் அதிகம் பங்கேற்றுள்ளதை வரலாற்றறிஞர் களும் ஒப்புக் கொள்கின்றனர்.[31]

சமணர்கள் உலக வாழ்வைச் சாவகதர்மம் (இல் வாழ்வு) யதிதர்மம் (துறவுவாழ்வு) என இரண்டாகப் பிர்பபர். இதில் சாவக தர்மம் நோற்பவர்கள், பொருள் வரைதல், கள்ளாமை, கொல்லாமை, பொய்யாமை, பிறன் பொருள் விழையாமை என்ற ஐந்து விரதங்களையும் நோற்க வேண்டும். இல்லறத்தில் ஈடுபட்டுக்கொண்டு, வாணிபத்தல் பொருள் குவித்த பிரிவினர்கள் இத்தத்துவக் கொடியின் கீழ் ஒருங்கிணைந்தனர். பொருள் வரைதல் என்பது மிகவும் முக்கியமாகக் கருதப்பட்டது. இந்தியச் சமயங்களிலே சமணத்தைப் போன்று பொருளீட்டுவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த சமயம் ஏதுமில்லை எனலாம்[32]. தாம் பெற்ற பொருள்களைப் பிறரிடமிருந்து பாதுகாக்க, வறுமையில் உழல்கின்ற பிரிவினர்களுக்கு கள்ளாமை, கொல்லாமை, பிறன் பொருள் விழையாமை போன்ற தத்துவங்கள் போதிக்கப்படுகின்றன. இத்தகைய

கருத்துக்களை ஓரளவும் பேரளவும் உணர்ந்து இலக்கியங்கள் எழுகின்றன. சமண சமய இலக்கியம் என ஒரு சாரார் கருதுகின்ற குறளிலும் பிற இலக்கியங்களிலும் இதைக் காணலாம். "செய்க பொருளை" (75:9) எனக் கட்டளையிடும் வள்ளுவப் பெருந்தகை, 'பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை' என்று பொருளின் அவசியத்தை வற்புறுத்துகின்றார். சமணக் காப்பியமான வளையாபதியோ, "இல்லெனில் வாழ்க்கையு மில்லை" (பாடல் 39) என்ற தத்துவத்தை நன்குணர்ந்து 'இன்மை இளிவாம்' (பாடல் 37) எனப் போதிக்கிறது. வணிகர்கள், கள்வர்களிடமிருந்து களவுத்தன்மையையும் பரதவர்களிடமிருந்து கொலைத்தன்மையையும் நீக்கினர் என்று பட்டினப்பாலை (197-199) கூறுகிறது. எல்லாச் சமண இலக்கியங்களும் இதையே வலியுறுத்துகின்றன. சொத்துடைமைத் தருமத்தைப் பாதுகாக்க வேண்டி வள்ளுவம் தன் கருத்துக் கரங்களை நீட்டுகிறது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் இதை அளவுக்கு அதிகமாக வலியுறுத்துகிறது. இன்றளவும் கூட வணிகத் துறையிலே பெரிதும் ஈடுபட்டுள்ள சமணக்குடி மக்கள் அவர்கள் எம்மொழியினராயினும் — கள்ளாமை, கொல்லாமை, அகிம்சா பரமோத் தர்மா ஆகிய கொள்கைகளின் கீழேதான் தங்கள் வணிகத்தை வியக்கத் தக்க அளவில் பெருக்குகின்றனர் என்பது வெளிப்படை (உதாரணம் : தமிழ்நாட்டில் சமணர்கள்—பெரும்பாலும் மார்வாரிகள்—5 லட்சம் பேர் உள்ளனர். இவர்களில் வணிகர்கள் மட்டும் அரசின் வருவாயில் $6\frac{1}{2}$ சதவீதப்பங்கு செலுத்துகின்றனராம்—(Jain Dairy—Edited by C.L. Metha-p301).

தங்கள் பொருளியல் நிலைமையின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் துணை புரிகின்ற சமணத்தை வணிகர்கள் பெருமளவில் ஆதரித்ததில் வியப்பு ஏதுமில்லை. சமண மதத்துறவிகளுக்கு மடங்கள் குகைகள் கட்டித்தரப்பட்டன. அவர்கள் நிறுவனங்களுக்கு நிலங்கள் தானமாகக் கொடுக்கப்பட்டன. சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற வணிகர்கள் சமணத்தைத் தழுவியபடியால், ஏனையமக்களும் இதைத் தழுவுவராயினர்.

அரசர்களில் பலரும் சமணத்தைச் சேர்ந்திருந்தனர். இவர்களால் சமணத்துக்கு ஆதரவும் செல்வாக்கும் ஏற்பட்டது. வணிகர்கள் சமணத் துறவிகளுக்குக் குகைகள் கட்டித் தந்துள்ளனர் என்று தெரிகிறது.

> " மத்திரைய் பொன் கொலவன் ஆதன் அதான
> ஊழ் வணிகன் வியகன் நெடுமலன்
> கொழு வணிகன் என சந்தன்
> வெண் பணிய் அறுவை வணிகன் ..........."

என்று அழகர் கோயில் சமணக் குகையில் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. இதில் காணப்படும் பெயர்களிலிருந்து இக் குகையை வணிகர்கள் தானமாகக் கட்டித்தந்திருக்கலாம் எனத் தெரிகிறது. சமணக் கல்வெட்டுகள் பெரும்பாலும் வணிகர்கள் பெருகி வாழும் நகரங்களை ஒட்டிய பகுதிகளிலே கிடைப்பதும், வணிகர்களுக்கும் சமணர்களுக்கும் உள்ள தொடர்பை நமக்கு வலியுறுத்துகிறது. உதாரணமாக, மதுரையைச் சுற்றியுள்ள ஆனைமலை, அழகர் மலை, திருப்பரங்குன்றம், திருவாதவூர், மாங்குளம், முத்துப் பட்டி, வரிச்சியூர், விக்கிரமங்கலம், கீழ்வளவு, கருங்காலக் குடி ஆகிய இடங்களில் சமணக் கல்வெட்டுகள் கிடைக்கின்றன.

'மன்னர் பின்ஞேர்கள்' ஆதரித்ததோடு மட்டுமின்றி மன்னர்களும் ஆதரித்துள்ளனர் என்றும் தெரிகிறது. இவர்கள் கிராமங்களையும் நிலங்களையும் சமணமத நிறுவனங்களுக்குப் பள்ளிச் சந்தங்களாக வழங்கினர் என்று தெரிகிறது. (Inscriptions No. 64/1923; 416/1921; S. I. I. vol VIII No. 67, 79) தொண்டை மண்டலத் திருப்பருத்திக் குன்றம் சமணக் கோயிலுக்கு 2000 குழி நிலம் கொடுக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

இவ்வாறு வளம்பெற்ற வணிகர்களாலும் ஆளுகை புரியும் அரசர்களாலும் ஊட்டி வளர்க்கப்பட்ட சமண சமயம் கி. பி. 7 ஆம் நூற்றுண்டு அளவில் வீழ்ச்சியடைத் தொடங்குகிறது. சமணக் கருத்துகளை வேறு . சமயக்

குரவர்கள் தாக்குகின்றனர். அதன் செல்வாக்கு மங்குகி கிறது. இறுதியில் மன்னர்களும் சமணச்செல்வாக்கு மண்டலத்திலின்று விலகியவுடன், அதுவரை உச்சியில் பறந்த சமணச் செல்வாக்கு தாழத் தொடங்கியது.

சமணநிலை தாழ்ந்தது என்றால் என்ன பொருள்? கி. மு. 4 ஆம் நூற்றாண்டு அளவிலே தமிழகம் வந்த தாகச் சொல்லப்படும் சமணம், கி. பி. ஆரம்ப நூற்றாண்டு களிலே வெளிநாட்டு வாணிபத்தால் பொற்குப்பையைப் பெற்ற வணிகர்களின் நலக் கருத்துகளைத் தன்னுள் அடக்கி வெளியிட்டதால் அவர்களின் வளர்ச்சியோடே தானும் வளர்ந்தது. இது உடன் நிலை நிகழ்ச்சி ஆகும். வணிகர்கள் செல்வாக்கின் உச்ச பீடத்தில் இருந்த போது, பட்டி மண்டபங்களிலே கொடிகட்டிப் பறந்த சமணம், அதற்குப் பிந்தைய நூற்றாண்டுகளிலே அனல் வாதங்களிலும் புனல் வாதங்களிலும் அல்லலுறுகின்றது; கழுவேற்றங்களால் தமிழகத்திலே கரைந்து போயிற்று. இதனூடே சமணக் கருத்துகளுக்கும் நிறுவனங்களுக்கும் எதிராக வேற்றுச் சமயத்தார் மாற்றுக் கருத்துகளையும் நிறுவனங்களையும் உருவாக்கும் போக்கு ஏற்பட்டது. அப்போக்கின் தன்மை யிலே, மிக மெல்லிய நூலிழைபோல் இருந்ததையெல்லாம் பெரிதாக்கிக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே சில கருத்துகளையும் நிறுவனங்களையும் பொய்ம்மை யாகவேனும் சுட்டிக் காட்ட நேரிடுகிறது. இதன் தொடர் நிலையாகவே, சங்கம் பற்றிய பொய்ம்மையான கருத்துகள் பெரிதுபடுத்தப்பட்டு, ஒரு குறிப்பிட்ட கட்டகத்தில் நிறுவன வடிவமாக மாறுவதையும் காண்கிறோம். இதை விரிவாகக் காண வேண்டுமாயின், அந்த வேற்றுச் சமயம் எது என்பதையும் அது யாருடைய நிழலாக இயங்கியது என்பதையும் அதன் தேவையையும் காண்பது இன்றியமை யாததாகின்றது.

வணிகர்களின் பொருளியல் நிலைமை வீழ்ச்சியடைந்தது என்று பார்த்தோம். இதற்குக் காரணம் என்ன? இவர்கள், பரிவர்த்தனையாளர்களாகவே-இடையாளர்களாகவே- இருந்

துள்ளனர். நேரடி உற்பத்தியிலும் ஈடுபடவில்லை. நிலம் வைத்துள்ளவர்களுக்குக் கிழார், ஊரன் என்ற அடைமொழிகள் கொடுக்கப்பட்டதுண்டு. இவை எதுவும் வணிகர்க்கு இல்லை என்று தெரிகிறது. வெளிநாட்டு வாணிபம் மிக வளமாக நடைபெற்றபோது இவர்கள் வெறும் பரிவர்த்தனையாளர்களாக இருந்தாலும், இவர்களின்றிப் பரிவர்த்தனை கிடையாது எனும் நிலைமை இருந்ததால், உற்பத்தியைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க நேர்ந்தது ஆனால், பண்டைய வாணிபத்திற்குப் பெரிதும் சார்ந்திருந்த ரோமானியப் பேரரசு தன் வலிமையை கி. பி. 3 ஆம் நூற்றாண்டு முதற்கொண்டு இழக்கத் தொடங்கியது. அதன் சங்கிலித் தொடர் விளைவாக, நம் வெளிநாட்டு வாணிபமும் மெல்ல மெல்லக் குறைந்து போயிற்று என்பர்; மேலும் தமிழகத்தில் தோண்டி எடுக்கப்படும் பண்டைய ரோமானியப் பொன் நாணயங்கள், கி. பி. 3 ஆம் நூற்றாண்டு வரை ஆண்ட மன்னர்களின் காலத்து நாணயங்களாகவே உள்ளன எனச் சொல்வதும் இக்கருத்துக்கு வலு சேர்க்கும்[28] தமிழக வணிகர்கள் தாமே கலங்களில் பொருளை ஏற்றிச் சென்று, வெளிநாடுகளில் நேரடியாக வாணிபம் நடத்தினரா என்ற நம் ஐயப்பாடு இங்கே மேலும் வலுக்கிறது. ரோமப் பேரரசின் வாணிபத் தொடர்பு குன்றியவுடன், இங்கே வணிகர்களின் பரிவர்த்தனை குறைந்து போனதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

வணிகர்களின் வீழ்ச்சியை இன்னொரு காரணத்தோடும் தொடர்பு படுத்திப் பார்க்கலாம். இவர்களுக்கும் வேளாளர்களுக்கும் இடையேயுள்ள முரண்பாடுகள் வலுப்பெறலாகின்றன. மனித சமுதாயம், நாகரிகமடைந்த காலம் முதல் வாழ்நிலைமைகளைப் பொறுத்தும் உணர்வுகளைப் பொறுத்தும் பல பெரும் பிரிவுகளாகப் பிரிந்தே இருக்கின்றது. இந்தச் சமுதாயப் பெரும் பிரிவுகள் தத்தம் நலன் கருதி, ஒன்றுக்கொன்று ஒருமித்தும் வரலாற்றை நகர்த்திச் செல்கின்றன. எந்த ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திலும் அதன் சில உறுப்பினர்களின் வேட்கைகள், இதர உறுப்பினர்களின்

வேட்கைகளுடன் மோதிக்கொள்கின்றன என்பதும் சமுதாய வாழ்வில் முரண்பாடுகள் மலிந்து கிடக்கின்றன என்பதும் சரித்திரம் நமக்கு வெளிப்படுத்தும் உண்மைகளாகும்.

பழைய காலத்தில் வணிகர்களின் அருகே வேளாளர்களும் இருந்ததை அறிகிறோம். இவர்கள் வயல் வெளிகளுக்கு உரிமையாளர்களாக இருந்தனர்.

"வேலி ஆயிரம் விளைக நின் வயலே" —புறம் 391

"காவிரி அணையுந் தாழ்நீர் படப்பை
நெல்விளை கழனி அம்பர் கிழவோன்" —புறம் 385

என்பன போன்ற பகுதிகளில் இருந்து, இவர்கள் செல்வ நிலைமை நமக்குப் புலனாகிறது. இவர்கள் கிழார் கிழவோன் (உரிமை உடையவன்) என்று அழைக்கப்பட்டனர். உடையவர், இல்லாதவர் என்ற வர்க்க வேறுபாடுகள் தோன்றி வளர்ந்த கால கட்டத்தில், பெருமளவில் நெல் மணிகள் கிழார்களின் வீடுகளில் சேமித்து வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது (நற் 26, 60); புலவர் பாடும் புகழுடையவர்களாகவும் விளங்கினர். (புறம் 177, 179, 180, 390, 402;) இவர்களில் சிலர் திறை பெறுபவர்களாகவும் இருந்துள்ளனர் (புறம் 156); புலமை நிரம்பிய அரசர்களும் இவர்களைப் பாட்டுடைத் தலைவராகப் பாடியிருக்கின்றனர் (புறம் 173); அரசர்களுக்குச் செயல் துணையாகவும், படை வேண்டுங்காலத்துப் படையுதவியும் செய்துள்ளனர்.

"படைவேண்டுழி படையுதவியும்
வினைவேண்டுழி வினையுதவியும்" —(புறம்)

என்று ஓர் பாடல் கூறுகிறது. இதனுடைய வளர்ச்சி பெற்ற செழுமையான வடிவத்தைத்தான் நாம் பிற் காலத்திய நிலமானியச் சமூக அமைப்பில் காண்கிறோம். இவர்களின் சமூகத் தகுதியைப் பற்றி இன்னும் பல நூல்கள் விரிவாக எடுத்துரைக்கின்றன.

உற்பத்தியில் ஈடுபட்ட வேளாளர்களும் உற்பத்திப் பொருள்களைப் பரிவர்த்தனை செய்வதில் மட்டும் ஈடுபட்ட வணிகர்களும் தமிழ்ச் சமுதாயத்தில் அருகருகே வாழ்கின்றனர். இவர்கள் இரு பிரிவினருக்கும் அரசனிடத்தில் செல்வாக்கு இருக்கிறது. வணிகர்கள் தாமின்றி உற்பத்திப் பொருட்கள் பரிவர்த்தனை ஆகாது என்ற நிலையை உருவாக்கியதால் வேளாளர்களுடன் முரண்பாடு உருவாகியது. இம்முரண்பாடுகளை வேறு விதமாக இவர்கள் அனைவரும் வெளிப்படுத்திக்கொண்டனர். பொதுவாகவே, சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட கட்டம் வரை, சமுதாயப் பிரிவினர்களின் கருத்துகளைச் சொல்லும் போர்வையாகச் சமயங்கள் இருந்து வந்துள்ளன என்பர்[34]. இங்கே சமணர் பள்ளிகளுக்கு அருகருகே அந்தணர் இருக்கைகள் உள்ளன (மதுரைக் காஞ்சி 468—674). பல்வேறு சமய அறிஞர்கள் தத்தம் கருத்துகளைச் சமயக் கொடிகள் ஊன்றி—வாதிட்டு விமர்சித்துத்தீர்த்துக் கொண்டனர். (பட்டினப்பாலை99—101) சிலம்பிலும்கூட, சமயங்கள் அருகருகே இருந்து கொண்டு போட்டியிடுவதைக் காணலாம். ஆனால் மணிமேகலையினோ நிலைமை சிறிது வேறுபடுகின்றது.

“பற்று மாக்கள் தம்முடன் ஆயினும்
செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின்”
(விழாவறை காதை)

என்று ‘மேகலை’ கூறுகிறது. ‘பற்றுமாக்கள்’ இதுவரை பட்டி மண்டபம் ஏறி, தங்கள் கருத்து முரண்பாடுகளைத் தீர்த்துக் கொண்டதற்கு மாறாக, ‘செற்றமும் கலாமும்’ செய்யும் நிலைக்கு வரக்காரணம் என்ன? முரண்பாடுகள் கூர்மை அடைந்ததே ஆகும். முரண்பாடுகள் கூர்மை யடைந்து, இறுதியில் பகைமை உற்றதின் காரணத்தையும் விளைவுகளையும் அறிவியல் ரீதியாகக் கண்டறிந்தாலே தான், இக்கருத்துகளுக்கு எதிரான மோதல்களையும் அவற்றின் சமூக அவசியத்தையும் நாம் சரியாக உணரக்க முடியும். இக்கருத்து முரண்பாடுகள், இவற்றை வெறும் நிழல்களாக

வைத்துக் கொண்டு போராடும் வர்க்கங்களின் முரண்பாடு களது வெளித்தோற்றம் என்பதை முன்னரே தெளிவாகக் கண்டோம். இக்கருத்து முரண்பாடுகள் எப்போது பகைமை யாக மாறுகின்றது? உலகப் பேராசான்களுள் ஒருவர் இதை மிகத்தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

> "மனித வரலாற்றிலே ஒன்றுக்கொன்று முரண்பட்ட இரண்டு வர்க்கங்கள் நீண்ட காலத் துக்கு ஒரேசமூகத்தில் அடுத்தடுத்து வளர்கின்றன; ஒன்றோடொன்று போராடுகின்றன. ஆனால் இரண்டுக்குமிடையே உள்ள முரண்பாடு, ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடைந்த பின்னரே அது வெளிப்படையாக பகை வடிவத்தை மேற் கொள் கின்றது."

எந்தக் குறிப்பிட்ட கட்டத்தை அடைந்ததும், அவைகளுக் குள்ள முரண்பாடுகள் பகைவடிவம் எடுக்கின்றன? பாங் கறிந்து பட்டிமண்டபம் ஏறித் தங்கள் கருத்து முரண் பாடுகளைத் தீர்த்துக் கொண்டவர்கள், எந்தக் குறிப்பிட்ட கட்டத்தை அடைந்ததும், 'செற்றமும் கலாமும் உற்று, அனல் வாதம் புனல் வாதம் ஆகியவற்றால் தங்கள் கருத்து முரண்களைத் தீர்க்க முனைந்து, முடிவில் 'கழுவேற்றங்களால்' தீர்த்துக் கொள்கின்றனர்?

இதன் அடிப்படைச் சமூகப் பின்னணியைக் காண் போம். பரிவர்த்தனை செய்வதற்கேற்ற வாணிபப் பொருட் களை உற்பத்தி செய்யப்படுவதில் மட்டுமே வணிகர்கள் நாட்டம் கொண்டுள்ளதால், வணிகர்களுக்கு உற்பத்திப் பொருட்கள் மீது கட்டுப்பாடு இருந்தது. வணிகர்களுக்கு அதிகலாபம் தரக்கூடியதான வெளிநாட்டுச் சந்தைக்கு வேண்டிய பொருட்களை மட்டுமே உற்பத்தி செய்ய வேண் டிய அவசியம் இருந்ததனால், நிலவுரிமை பெற்ற கிழார் களுக்கு உற்பத்தியில் அவ்வளவு கட்டுப்பாடு இல்லாமற் போயிற்று. கைத்தொழில், உழவு போன்ற தொழில்கள் இவர்களின் 'கருணையில்' இருந்ததனால், அவை இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டன. அடுத்து, சமணமத நிறுவனங்

களுக்கும் கோயில்களுக்கும் துறவிகளுக்கும் பள்ளிச்சந்தம், தானம் என்ற பெயரில் பெரும் பெரும் வணிகர்களும் அரசர்களும் போட்டியிட்டுக் கொண்டு நிலங்களைக் கொடுக்க ஆரம்பித்தனர். நில உடைமையாளர்கள் பொதுவில் அனுபவிக்கும் கிராம நிலங்கள் பறிபோகலாயின. இதுவரை வணிகர்கள், 'உற்பத்தி பொருட்கள் மீது மேலாதிக்கம்' மட்டுமே செலுத்தி வந்தனர். ஆனால் இப்போது உற்பத்திக்குச் சாதனமாயிருப்பதும் நிலக்கிழார்களுக்குச் சொந்தமானதுமான நிலங்களையே சமயப் போர்வையில் பறித்தெடுக்க முனையும்போது—வேளாளர்களின் பொருளாதார நலன்களை முழு முற்றாக அழித்து ஒழிக்கப்படும் நிலை வரும்போது —அதுவரை வேளாளர்களுக்கும் வணிகர்களுக்கும் இடையிலான மோதல்கள் வேறு வடிவம் எடுக்கிறது; அதாவது பகை வடிவம் (Antogonistic) எடுக்கிறது. நட்பு ரீதியான முரண்பாடுகளைத் (Non-antogonistic) தீர்ப்பதற்கு பயன்படுத்திய அதே வழிவகைகளை — பட்டிமண்டபம் நடத்தி அமைதியாக விவாதித்தல் போன்ற வழிவகைகளை —இப்போதுபயன்படுத்த இயலாது. இப்போது முரண்பாட்டின் தன்மை மாறி விட்டது. எனவே தன்மையிலே மாறுபட்ட முரண்பாட்டை, தன்மையிலே மாறுபட்டதீர்வுகளைக் கொண்டுதான் நீக்க முடியும். ஆகவேதான், பற்றுமாக்கள் செற்றமும் கலாமும் செய்கின்றனர்; அனல்-புனல் வாதங்கள் அறிமுகமாகின்றன; கழுவேற்றங்களின் கதை தொடர்கின்றது.

தங்களிடமிருந்து சமயம் எனும் போர்வையிலே கொஞ்சம் கொஞ்சமாக பறிக்கப்பட்ட நிலங்களை—உற்பத்திச் சாதனங்களை—மீண்டும் தாங்கள் கைப்பற்றிக் கொண்டு, உற்பத்தியில் தாங்கள் இழந்த கட்டுபாட்டை நிலை நிறுத்த வேண்டும் என்ற பொருளாதார உண்மையை வேளாளர்கள் உணர்ந்தனர்; இதற்காக சமணப் பிடிக்குள் இருக்கும் அரசர்களையும் குறுநிலத்தலைவர்களையும் அதிலிருந்து விடுவித்துத் தங்கள் செல்வாக்கு மண்டலத்துக்குள் கொணர வேண்டும் என்ற அரசியல் அவசியத்தையும்

உணர்ந்தனர்; வணிகர்களின் 'கருணையில்' வாழ்ந்த கைவினைஞர்கள் உட்பட சமூகத்தின் சகல மட்டங்களிலும் வாழும் பரந்துபட்ட மக்கட் பிரிவினரை ஒரேகொடியின் கீழ் ஒன்றிணைத்து வணிகர்களோடு போராட வேண்டிய சமூக அவசியத்தையும் அறிந்தனர்.

இத்தகைய சமூக அரசியல் பொருளாதாரத் தேவைகளை உணர்ந்து வேளாளர்கள் செயல்பட ஆரம்பிக்கின்றனர். அவர்கள், கருத்து உலகிலும் தங்கள் போராட்டத்தை நடத்த வேண்டியுள்ளது. அங்கே, கொடி கட்டிப் பறந்த சமணக் கருத்துகளை—வணிகர் நலக்கருத்துகளை—எதிர்த்துப் போராட வேண்டியுள்ளது. ஆகவே வேளாளர்களுக்கும் ஒரு சரியான கருவி தேவைப்படுகிறது. வரலாற்றில் அந்த வாய்ப்பு எதற்குக் கிடைத்தது?

இதற்கு, தமிழகத்தில் நடைபெற்ற அன்றைய சமயப் போக்கை ஊன்றிக் கவனித்தல் நலம் பயக்கும். பண்டைய தமிழ்மக்கள் கொற்றவை, சிவன், திருமால், முருகன் ஆகிய தெய்வங்களை வணங்கி வந்தனர். கொற்றவை, முருகன் வழிபாடு பெரிதும் பேணப்பட்டது. சிவ வழிபாடு அவ்வளவாகப் பேணப்படவில்லை. சிவன் ஒரு நிலத்துக்கேனும் உரிய தெய்வமாகக் கருதப்படவில்லை என்பது மனங்கொளத் தக்கது. எளிமையான இயற்கையான வழிபாட்டு நெறிகளை ஏற்றுக் கொண்டிருந்த பண்டைத் தமிழர்கள், வைதிக நெறிகளாகிய வேள்வி செய்தல், பலியிடுதல் போன்றவற்றை முதலில் அவ்வளவாகக் கையாளவில்லை. ஆனால் ஆரியர் செல்வாக்கு அதிகமாக அதிகமாக தமிழர் சமயத்தோடு வைதீக சமயமும் கலக்க ஆரம்பித்தது. இரு சமயக் கடவுள்களும் கொள்கைகளும் கலந்தன. தமிழர்களின் இயற்கைத் தெய்வமாகிய வேலன், வைதீகமதத்தின் கார்த்திகேயனாக மாற்றப்படுகிறான். வேள்வி செய்தலை வெறுக்கும் தமிழர்களின் தெய்வமான வேலன், கார்த்திகேயனாக மாறிய பிறகு, அந்தணர்களின் வேள்விகளைப் பாதுகாக்கும் தெய்வமாக மாறிவிடுகிறான். (திருமுருகாற்றுப் படை 32) தமிழ்ச் சிவன், வைதீக உருத்திரனோடு இணைக்கப்

படுகிறான். தமிழரின் வீரக் கடவுளான கொற்றவை, மலைமகள் இவர்களெல்லாம் பார்வதியின் வெவ்வேறு அம்சங்களாக இணைக்கப்பட்டு, சிவனுக்கு மனைவியாகிறாள். கொற்றவையின் மகனான முருகன், சிவன்—பார்வதியின் மகனாக மாறி, அதுவரையிருந்த நிலையிலிருந்து இறங்கி சிறு தெய்வமாகிறான். சிவன், திருமால் எனும் இரு தெய்வங்கள் மட்டுமே முக்கியத்துவம் பெறப்பட்டு, இதற்குத்துணையாகப் பல புராணக் கதைகளும் கற்பிக்கப்பட்டன. இதை யொட்டி வழிபாட்டு நெறி முறைகளும் மாறலாயின. வேள்வி செய்தல், பலியிடுதல் போன்ற கடும் நெறி முறைகளை வைதீகம் கை கழுவிவிடுகின்றது. இவ்வாறு பல காலங்களில் படிப்படியான மாறுதலுக்கு உள்ளாகி உருப் பெற்ற வைதீக—திராவிட சமயம் அக்காலத்திலே, பக்தி இயக்கமாக வளர்ந்தது- வைதீகமும் திராவிடமும் சேர்ந்து பெற்றெடுத்த இக்கடவுளை "முத்தமிழும் நான் மறையுமாய்" எண்ணி, ''செந்திறந்த தமிழோசை வட சொல்லிலேயே'' பாடிப் பரவினர்.

இவ்வாறு புதியதாக எழுச்சி பெற்ற இச்சமயத்தை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த வேளாளர்கள் தயங்கவில்லை. சமுதாயத்தின் கொடுமுடியில் இருந்த வணிகர்களுக்கு எதிராக, பலசாதி, தொழில் பிரிவினர்களைப் பரந்து பட்ட அளவில் நின்று திரட்டினர். வண்ணார், குயவர், செக்கார், பறையர், இடையர், நுளையர், புலையர், வேடர், சாலியர் போன்று சமுதாயத்தின் அடித்தள மக்களையும் கைவினைஞர்களையும் ஒன்றிணைத்து, "எல்லோரின் பொது நலன்'' எனும் போர்வையில் ''சேரவாரும் செகத்தீரே'' என்று முழங்கப்பட்டது. சமுகத்தில் முரண்படுகின்ற இரண்டு வர்க்கங்கள், வளர்ச்சி பெறுகின்ற சிறுபாண்மை வர்க்கம் தம் நலன்கள் கருதி,ஆனால் 'எல்லோரின் பொதுவான நலன்' எனும் போர்வையில், அடித்தள மக்களையும் இணைத்துக் கொண்டு செயல்படுவது வரலாற்றில் புதுமையன்று.

சங்க நிதி பதுமநிதி பெற்றுள்ள வணிகர்களை உதறி

விட்டு, ஆவுரித்துத் தின்னும் புலையரோடும் கூட்டுச் சேர்கின்றார், அப்பர் பெருமானார். ஆனால், இது உண்மையாகவே சமுதாயம் முழுவதிலும் உள்ள எல்லாப் பிரிவினர்களின் நலன்கள் கருதிய போராட்டம் அல்ல; தமிழக வரலாற்றிலே இதற்கு அடுத்தடுத்து நடந்த சம்பவங்களை வைத்துக் கொண்டு பார்க்கையில் அப்பரின் இக்கொள்கை" "போர்க்கால இசைவு ஒன்றாக இருந்ததே தவிர, நிரந்தர சமூகத் தத்துவமாக இருக்கவில்லை" (க. கைலாசபதி — அடியும் முடியும்— பக் 273). இந்தப் போராட்டத்தை அடுத்து, வணிக வர்க்கம் செல்வாக்கிழந்தபின், நிலவுடைமையாளர்கள் ஆதிக்கமே மேலோங்கியது. அப்போது அப்பரால் "கடவுள்களாக" மதிக்கப்பட்ட புலையர்கள், 'உழப்பறையர்கள்' எனச் சொல்லப்பட்டு, ஊருக்கு வெளியே புன்கூரைக் குடிலில் ஒதுக்கித்தள்ளப்பட்டனர். வணிகர்களுக்கு எதிரான போராட்டத்தில் கைவினைஞர்களையும் தங்களோடு சேர்த்துக் கொண்ட வேளாளர்கள், தாங்கள் வெற்றி பெற்றபின், இவர்கள் நிலக்கிழார் அனுமதியின்றி வேறு கிராமங்களில் போய் வேலையேற்கக் கூடாது என இவர்களின் தொழில் சுதந்திரத்தையும் சுயேச்சையையும் பறிக்கின்றனர் (Inscription No. 205/1919) மேலும் மேலாடை அணிந்து கொள்ளும் உரிமை கேட்டு கைவினைஞர்கள், நிலக்கிழார்களின் சபைக்கு விண்ணப்பிக்கும் அளவுக்கு அவர்களது கலாச்சார சுதந்திரத்தையும் பறிக்கின்றனர். போராட்டத்தின் போது, ஒருவிதக் குண இயல்பைக் கொண்டிருக்கும் ஒரு வர்க்கம், அதில் வெற்றி பெற்ற பின் வேறு புது குணும்சங்களை—முற்றிலும் மாறுபாடான எதிர்மறையானகுணும்சங்களை—கொண்ட வர்க்கமாகத் தன்னைத் தானே முற்றிலும் எதிர் மறையாக மாற்றிக் கொள்வது வரலாற்றில் புதுமையன்று. சமுதாயத்தில் இன்று வரை நடந்த புரட்சிகளெல்லாம் ஒரு குறிப்பிட்ட ஆளும் வர்க்கத்தின் இடத்தை இன்னொரு வர்க்கம் இட்டு நிரப்பிய நிகழ்ச்சிகளாகவே இருந்துள்ளன என்று உலகப் பேராசன் மார்க்ஸ் வேறொரு சந்தர்ப்பத்தில் கூறிய கருத்தை இங்கு

நினைத்துப் பார்ப்பது பொருத்தமாயிருக்கலாம்.

மேற் சொன்ன சமணர்—சைவர் போராட்டங்களின் பின்னணியில், வேளாளர்கள் தங்கள் பொருளாதாரப் போராட்டத்தை நடத்தினர். சமணர் நிலங்கள் பிடுங்கப் பட்டன. கோயில்கள் இடிக்கப்பட்டன. தத்துவ நூல்கள் அழிக்கப்பட்டன. அரசர்களின் இசைவோடு சமணர்கள் கழுவேற்றம் செய்யப்பட்டனர்.

அப்பரைத் துன்புறுத்திய பல்லவன் மகேந்திரவர்மன், சைவ சமயம் மாறியபின், திருப்பாதிரிப் புலியூரில் உள்ள சமண மடப் பாழிகளை இடித்துத் தள்ளி, அவற்றின் சிதைவு களைக் கொண்டு, திருவதிகையில் குணபரஈசுவரம் என்ற சிவன் கோயில் கட்டினான் (S. I. 1. vol I. No 33)

இரண்டாம் நந்திவர்மப்பல்லவன், சில குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட பகுதிகளை அதன் நீர்ப்பாசன உரிமை யோடும் சைனக் கடுங் கோட்பாடுகளை எல்லாம் விலக்கி யும் பிராமணர்களுக்கு இறையிலியாகக் கொடுத்தான் (உதயேந்திரச் செப்பேடுகள் S. I. I.vol 2 Part 3 No 74) இதைப்பற்றிச் சொல்லும்போது தாமஸ் போக்ஸ் எனும் அறிஞர், 'இந் நிலத்துக்கு உரியர் சமணர். அவர்களை அழித்து இந்நிலத்தைப் பிராமணர்களுக்குக் கொடுத்தது பல்லவர் வரலாற்றில் களங்கமாகும்'[85] என்பர்.

சமணர்களின் நிலபுலன்களைக் கவர்ந்ததோடு மட்டு மின்றி, அவர்களை ஊரைவிட்டும் துரத்துகின்றனர்.

"அவரை ஒட்டத்தொடர்ந்து துரந்ததற்பின்
பின்னும் பாழிப் பள்ளிகளும் பறித்து"

என்று அக்கால நிகழ்ச்சிகளைப் பெருமையோடு நினைவு கூர்கிறது பெரிய புராணம் (தண்டியடிகள் புராணம் பாடல் 27)

சமணர்களைக் கடுமையாக விமர்சித்தால்தான் தாங்கள் வளர முடியும் என்ற நிலை வந்த பின்னால், மக்கள் மத்தியில் அவர்களைப் பற்றிய அருவெறுப்பான நாகரிகமற்ற தோற் றத்தைப் படைத்துக் காண்பித்து அவர்களை வெறுப்புக்

குரியராகவும் கிண்டலுக்கு உரியராகவும் நாயன்மார்கள் படைக்கின்றனர்.

"பாசிப்பல் மாசு மெய்யர் பலமிலாச் சமணர்"

"உண்மையை உணராக் குண்டர்"

"அறம் தெரியா ஊத்தை வாய் அறிவில் சிந்தை"

"முடையரைத் தலைமுண்டிக்கும் மொட்டையரை"

"அமணே நின்றுண்ணும் கள்ளர்"

"மந்திபோல் திரியும் அந்தகர்கள்"

என்றெல்லாம் ஆளுடைய அரசு, சமணர்களைக் கடுமையாகவும் கிண்டலாகவும் தாக்குகிறார். ஆளுடைய பிள்ளையும் தம் கடமையை நிறைவேற்றாமல் இல்லை. துட்டர், துன்மதியர் என்று சமணர்களை அர்ச்சித்த சம்பந்தரின் தேவாரம் பற்றிய நுணுக்கங்களையெல்லாம் ஆராய்ந்த செஞ்சொற் கொண்டல் சிங்கார வேலனார் உரை இங்கே நோக்கத் தக்கது.[36]

"சமணர் கூறும் உரைகள் பொய்யானவை; கருணையில்லாதவை, பொருளற்ற சொற்கள் என்று புறக்கணிக்கத் தக்கவை. அவர்கள் கூறும் உரைகள் அவத்தம் ஆவன. இந்திரசாலம் போன்றவை; உண்மையில்லாதவை; பெருமையற்றவை; விடத்தினும் கொடியவை; பயனற்றவை; அவர்கள் புறங்கூறும் இயல்பினர் என்றெல்லாம் பிள்ளையார் எடுத்துரைக்கும் பகுதிகளை எண்ணற்றனவாகக் காணலாம்."

ஒரு சமயத்தை வளர்க்க நினைக்கிறவர்கள், எதிர்ச் சமயத்தினரைத் தாக்குவதோ கிண்டல் செய்வதோ புதுமையன்று. இங்கே ஆரம்பத்தில் கிறிஸ்துவ சமயத்தைப் பரப்ப வந்தவர்கள், இந்து சமய சாமியார்கள் மீது இத்தகைய கிண்டல் கதைகளைப் பரப்பினர் என்பதையும், வீரமா முனிவரின் பரமார்த்த குருவின் கதையில் வரும் சாமியாரின் செயல்களையும் நினைவு கூர்தல் பொருத்தமாயிருக்கும்.

இது மட்டுமின்றி தமிழக வரலாற்றில் அதுகாறும் நடந்திராத கொடூரங்கள் பல நடந்தேறின. வணிக வர்க்கத்தினர்க்குத் தத்துவார்த்த சேவகம் புரிந்த சமண சமயத் துறவிகளை சைவ நாயன்மார்கள் அரசர்களின் துணையுடன் கழுவேற்றம் செய்கின்றனர்; யானையின் கால்களால் மிதிக்கச் செய்கின்றனர்.

'அன்பே சிவம்' என பிற்காலத்தில் பேசப்பட்ட சைவ சமயத்தின் முந்தைய கால வரலாற்றை நடத்திக் காண்பித்த நாயன்மார்கள் இத்தகைய செயல்களில் ஈடுபட்டவர் என்று சொல்லும்போது பக்திப்பரவசத்தில் ஆழ்ந்துள்ள சில பேராசான்களுக்கு இது தவறான கருத்தாகத் தெரிகிறது. ஆனால் வரலாறு இதைத்தான் சொல்கிறது. மேலும் சம்பந்தரின் பெற்றோர்கள் சமணர்களை அழிப்பதற்கென்றே தமக்கு ஒரு பிள்ளை வேண்டும் என்றே நோற்கின்றனர் எனச் சேக்கிழார் இதற்குச் சான்றளிக்கிறார் (பெரிய புராணம்—சம்பந்தர் புராணம் 18-19) அப்பர் பெருமானின் ஆசைக்கிணங்க, திருப்பழையாறையில் அரசன் சமணர் மீது யானைகளை ஏற்றி அழிக்கின்றான்.

" மூக்கி னல்முரன் றோதியக் குண்டிகை
தூக்கி னார்குலம் தூரறுத்தே" —தேவாரம் 5:58:1

என்றும்.

" வாயி ருந்தமி ழேபடித் தாளுரு
ஆயி ரஞ்சம ணும் அழி வாக்கினான்" —தேவாரம் 5:58:9

என்றும் அப்பர் பெருமானே நமக்கு மேற்சொன்ன கருத்தைத் தெளிவாக உணர்த்துகிறார். மேலும் இது சைவ உலகில் மட்டும் காணப்பட்ட தனித்த போக்காகவும் தென்படவில்லை. அக்காலத்திய வைணவ சமயத்தைச் சேர்ந்த தொண்டரடிப் பொடி ஆழ்வார் பாடலிலும் காணலாம்.

வெறுப்போடு சமணர் முண்டர் விதியில் சாக்கியர்கள் நின்பால்
பொறுப்பரி யனகள் பேசிப் போவதே நோய தாகிக்
குறிப்பெனக் கடையு மாகில் கூடு மேல் தலையை ஆங்கே
அறுப்பதே கருமங் கண்டாய் அரங்கமா நகருளானே"

சமயப்போர் முற்றிக் குரோத உணர்வுகள் பெருக்கெடுத்து முட்டி மோதிக் கொண்டிருந்த காலத்தில், இத்தகைய நிகழ்ச்சிகளே இயல்பாக நடந்தேறியிருக்க முடியும்; இத்தகைய உணர்வுகளையே பாடலிலும் வெளிப்படுத்தி இருக்க முடியும். பக்திப் பாசத்தை விடுத்துப் பற்றற்ற நிலையில் ஆய்ந்தால் இம் முடிவுக்குத் தான் வர இயலும்.

கழுவேற்றங்கள் நடந்ததற்குப் பிற்காலத்திய திருவிளையாடற்புராணமும் தக்கயாகப் பரணியும் இலக்கியச்சான்று பகர்கின்றன. மதுரை மீனாட்சி கோயிலின் பொற்றாமரைக் குளத்துச் சுற்றுச் சுவர் ஓவியங்கள் சிலவும், காஞ்சி வைகுந்தப்பெருமான் கோயிலில்உள்ள கழுவேற்றநிகழ்ச்சி ஓவியமும் இன்றளவும் கலைச்சான்றுகளாக இருக்கின்றன. மேலும் இன்றளவும் மதுரை மீனாட்சி கோயிலில் ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் நடக்கும் பத்துநாள் விழாவின் ஆறுவது நாளன்று, 'கழுவேற்றும் உற்சவம்' நடைபெறுவதும், அக் காலத்தில் கழுவேற்றம் நடந்தேறியது என்பதையே நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கிறது.

பக்தி இயக்கம் எனும் பெயரில் சமணர்களை-குறிப்பாக அதன் பின்னணியில் இருந்த வணிகர்களின் மேலாதிக்கத்தைத் தாக்கி அழிக்கப் பயன்பட்ட நாயன்மார்கள், மிகத் தீவிரமாகவே சேவகம் செய்திருப்பதாகத் தெரிகிறது.

"பெண்ணகத்து எழில் சாக்கியப் பேய் அமண்
தெண்ணற் கற்பழிக்கத் திருவுள்ளமே"
(சம்பந்தர் தேவாரம்)

என்று பாலறுவாயரான சம்பந்தப்பெருமான் அருளொருகப் பாடுகின்றார். சமயப் போராட்டத்தின் உக்கிரமான கால கட்டத்திலே சாக்கிய சமணப் பெண்களைக்கற்பழிக்கத் திருஉள்ளம்தேடுகின்றார் சம்பந்தர். இவர் போன்ற தத்துவப் பிரசாரகர்கள் இந்த அளவிற்குச் செல்வதை நாம் வரலாற்றின் சில இடங்களில் காண்கிறோம். மேலும் இன்றளவும் சீர்காழியில் ஏப்ரல் மாதம் நடக்கும் திருமுலைப்பால் விழா

வில் இப்பாடல் பாடுவதைக் கேட்கலாம் என்றும் சொல்வர்.[37]

சமயம், அரசியல், தத்துவம் போன்ற நிறுவனங்களின் சமுதாயப் பின்னணியை அறிவியல் ரீதியாக உணர்ந்தவர்களுக்கு நம் நாயன்மார்களின் பாடல்களில் தொனிக்கப் படும் குரோத உணர்வுகளும், தாக்குதல் மொழிகளும், தலை வாங்கும் தத்துவங்களும், ஆச்சர்யத்தையும் அதிர்ச்சியை யும் தராது; ஆனால் இது குறித்த சில பேராசான்களின் சிந்தனைகள் தாம் வியப்பைத் தருகின்றது.

தேவாரத் தத்துவத்தைப் பற்றி ஆராய்ந்த திரு. மொ. அ. துரையரங்கனார் பின் வருமாறு இது குறித்து எழுதுரூர்.[38].

> ' இந்நாயன்மார்களுடைய பாடல்களையெல்லாம் முதலில் படிக்கும்போது, இவைகள் கருணையற்றவையாகவும் பொதுமைக் கண்ணோட்டத்துக்கு மாறாகவும் தோற்றமளிக்கும். ஆனால் சாக்கிய சமணர்களைப் பற்றிய இவர்கள் கருத்துக்கள் எல்லாம், பொதுவாக எல்லாச் சாக்கிய சமணர்களுக்கும் பொருந்தாது........சைவ சமயம் பற்றிப் புறம் கூறியும், சைவசமயத்தினரைப் பற்றி அலர் தூற்றியும் பிழைப்பு நடத்தும் சமணர்களையே இவர்கள் தாக்குகின்றனர் எனலாம். கடுமையான தாக்குதல்கள் எல்லாம், இத்தகைய பொல்லாப்புறம் கூறும் சமணர்களை மட்டுமே குறிக்கிறது எனலாம். நமது சமயக் குரவர்களுக்கு அவர்கள்மீது எந்தகைய வெறுப்பும் இல்லை. ஆனால் அத்தாக்குதல் களெல்லாம். செல்வாக்கை இழந்து கொண்டிருக்கும் சமயத்தில் உள்ள வெறியாகளுக்கு எதிரான தாக்குதல்களே ஆகும்.''

ஏறத்தாழ இதே கருத்தையே திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரும் தமக்கேயுரித்தான நடையில் 'சம்பந்தரும் சமணரும்' என்ற தம் நூலில எழுதுகிறார்.

பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடிய பாவாணர்

களின் பாடல்களில் உள்ள குரோத உணர்வுகளுக்கும், கொடூரமான தாக்குதல்களுக்கும் நம் அறிஞர்கள் அமைதி காண்கின்றனர். சமணர்களை நல்லவர்கள் கெட்டவர்கள் என்றும், அன்பர்கள் வெறியர்கள் என்றும் சம்பந்தர் பிரித்துப் பாடியிருப்பதாக இப்பேராசான்கள் தமக்குள்ளே எண்ணிக் கொள்கின்றனர். ஆனால் 'வெறுப்போடு சமணர் முண்டர்' என்று பேசி அவர்தம் தலையை அறுப்பதே கருமம் என்று தலை வாங்கும் தத்தவம் பேசிய காலத்திலே—

" மந்தி போல் திரிந்து ஆரியத்தோடு செந்தமிழ்ப் பயன்
அறிகிலா அந்தகர்கள்"

என்று தாக்கிய காலத்திலே—பாண்டிய நாட்டில் எண்ணா யிரம் சமணர்கள்மீது யானைகளை ஏவிக் கொன்று குவித்த காலத்திலே— சமணர்களின் நிலங்களைப் பறித்தும் மடங் களைத் தரைமட்டமாக்கியும் பள்ளிகளை பாழ்படுத்தியும் சமயப் போர் தொடுத்த காலத்திலே—சாக்கியப் பெண் களைக் கற்பழிக்கத் திருவுள்ளம் தேடியலைந்த காலத்திலே— இந் நாயன்மார்களுக்குக் கருணைக் கண்ணோட்டமும், பொதுமை மனப்பான்மையும் இருந்தது என்றால் அது உண்மைக்குப் புறம்பான கூற்றல்லவா? நல்ல சமணர், தீய சமணர் என்று பிரிந்துப் பாடியதாக சம்பந்தர், அப்பர் பாடல்களில் இல்லை. ஆனால் அது நம் பேராசான்களின் கருத்துகளிலே மட்டும் இருக்கிறது. கருத்துக்களின் தோற் றங்களையும், காரணங்களையும், விளைவுகளையும் அந்தந்த கருத்துகளிலே மட்டும் பார்க்கும் இயல்பினாலும், நிகழ்ச்சி களை அது நடந்த காலத்தின் புறஅம்சங்களோடு பொருத்தப் பார்க்காது, தம் மனத்தளவிலேயே அவற்றைக் கணிக்கும் இயல்பினாலும் நம் பேராசான்கள் இவ்வாறு உரைக்க முடிகிறது.

ஆனால் அக்கால நிலைமைகளைப் புறஅம்சங்களோடு பொருத்தி அவற்றை அறிவியல் ரீதியாக ஆராய்ந்தவரான திரு க. கைலாசபதி இது குறித்து பின் வருமாறு கூறுகிறார்.

"வணிக வர்க்கத்தாரின் பொருளாதார ஆதிக்

கமும் நெருக்கடியும் சமுதாய உணர்வுகளிலே பிரதிபலித்தன. அரசியல் செல்வாக்கு மதத் துறையிலே தெளிவாகத் தோற்றமளித்தது. ஏனெனில் மக்களின் உணர்ச்சியுடன் நெருங்கித் தொடர்பு கொண்ட மொழி, இலக்கியம், கலை, கல்வி, தத்துவம், சமயம் முதலான துறைகளிலே சமணத்தின 'பிடி' பாரதூரமாக இருந்தது. எனவேதான் வணிகவர்க்கத்தினருக்கு எதிரான பொருளாதாரக் குரோதமானது, சமண சமயத்தவருக்கு எதிரான கண்டனக் குரலாக உருவெடுத்தது?[39]

சுருங்கக் கூறின், பொருளாதார அடித்தளத்தின்மேல் உள்ள இலக்கியம், மொழி, தத்துவம், சமயம் முதலிய பல அம்சங்களில் வணிகர்களுக்கு எதிரான போராட்டமே சமணத்துக்கு எதிரான போராட்டங்களாக அமைந்து விட்டதைக் காண்கிறோம்.

இத்தகைய கருத்துப் போராட்டத்தில் ஒரு பிரிவினர் தம் நலன்கள் கருதி ஒரு கோட்பாட்டை (Thesis) உருவாக்குகின்றனர். அப்பிரிவினரை எதிர்க்கின்றவர்கள் அக்கோட்பாட்டுக்கு எதிரான தன்மை கொண்ட எதிர்க் கோட்பாட்டை (anti thesis) உருவாக்கி மக்களைத் தம் பக்கம் கவர்ந்திருக்க வேண்டியுள்ளது. இவ்வாறு எதிர்க்கோட்பாட்டை உருவாக்கும்போது, சில சிறு செய்திகளை பெரிய வடிவமாக்கிச் சிலவற்றைப் படைக்கவும் நேர்கிறது. சமணர்கள் மக்களைத் தமது பிடிக்குள் வைத்துச் சில கோட்பாடுகளை எடுத்துச் சொல்லி அவற்றைப் பரப்புகின்றனர். சமணர்களை எதிர்த்து, அவர்கள் 'பிடியிலிருந்து' மக்களை விடுவித்து தமது 'பிடிக்குள்' கொண்டு வர நினைத்த சைவ சமயக் குரவர்கள், அதற்குச் சில எதிர்க்கோட்பாடுகளை எடுத்துச் சொல்கின்றனர்.

சமண சமயம் கடவுளை மறுக்கிறது. பந்தத்தினின்று விடுபட்ட மோட்சமடைந்த உயிரே கடவுளாகும். உயிர்களைக் கடவுள் படைக்கவில்லை. அது தன் சொந்த முயற்சியாலே மோட்சம் எய்த முடியும். இதுதான் உயிரின் இயல்

பாகும். இதுவே கடவுள்—உயிர் பற்றிய சமணக் கோட்பாடாகும்.

இதற்குச் சைவம் எதிர்க்கோட்பாட்டை நிறுத்துகிறது. இறைவன் உயிர்களின் பொருட்டே உலகைப் படைக்கிறான். உயிர்களின் கர்மமலத்தைப் பக்குவப் படுத்தி, அறியாமை ஆணவமலத்தைப் போக்குகிறான். ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களும் இறைவனால் உயிர்களின் பொருட்டே நிகழ்த்தப்படுகின்றன.

" தோற்றநிலை இறுதிப் பொருளாய் வந்த மருந்து அவன்"

" அத்தர் தாமுளர் அஞ்சுவ தென்னுக்கு"

என்பன போன்ற நாயன்மார்கள் பாடல் வரிகள் இதை விளக்குகின்றன.

இதற்கு முன் எடுத்த பிறவிகளில் செய்த செயல்களெல்லாம் ஒருங்கே சேர்ந்து அனுபவிப்பது வினை ஆகும் வினை—ஊழ் என்ற கோட்பாட்டை இந்திய நாட்டுச் சமயங்கள் காலத்திற்கேற்றாற்போன்று வற்புறுத்தியுள்ளன என்றாலும், சமண சமயம் இதை அதிகமாகவே வற்புறுத்திக் கூறுகிறது. ஊழ்வினைப் பயனை அடைவதிலிருந்து எதுவும் தடுத்து நிறுத்திவிட முடியாது. மற்றொன்று சூழினும் தான் முந்தும். மனிதனுக்கு வரும் கேடுகளுக்கும் நன்மைகளுக்கும் வேறு எதுவும்—யாரும் காரணமில்லை. 'தீதும் நன்றும் பிறர் தர வாரா'—மானிட சமுதாயம் வளமையாகவும் வறுமையாகவும் பிரிந்து கிடப்பதற்குக் காரணம் வினைப்பயன் என்றும், அதை என்றென்றும் மாற்ற முடியாதென்றும் சொல்லி, மானிட சமுதாயத்தைச் செயலிழக்கச் செய்யும் இத்தத்துவம், பணத்தை வைத்துக் கொண்டு பொருள்களை வாங்கிப் பரிவர்த்தனை செய்து, 'திருத்துஞ்சும் திண் காப்புடைய' எழுநிலை மாடங்களில் வாழ்ந்த செழுங்குடி மக்களுக்கு—வணிகர்களுக்கு—சாதகமாகவே அமைந்ததில் வியப்பில்லை. 'கடலிறவின் சூடுதின்றும் வயல் ஆமைப்

புழுக்கு உண்டும் 'நெடுந் தூண்டிலிற் காழ்சேர்த்திய குறுங் கூரைக் குடியில்' மக்கள் வாழ்வதற்குக் காரணம், இந்த வினைப் பயன்தான் என்று அவர்களைச் செயலிழந்தவர் களாக்கச் செய்வதற்கு இத்தத்துவம் நன்கு பயன்படவே செய்தது. ஆன் வினையைவிடச் சூழ்வினையே வலிமையானது என்று சொல்லிச் சிலம்பு காப்பியம் படைக்கிறது. வள்ளுவப் பெருந்தகையோ,

"ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி"

என்று வினைக் கோட்பாட்டை இலட்சியப்படுத்துகிறார்.

இதற்குச் சைவம் எதிர்க்கோட்பாட்டை நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆனல் அதே நேரத்தில் மக்களை மயக்கும் தன்மையுள்ளசமயங்களின் மையஅச்சான வினைக் கோட்பாட்டை அடிப்படையில் தகர்த்தெறிவதும் தம் வர்க்க நலன்களுக்கும் முரணானது எனச் சைவம் நினைக் கிறது. எனவே, வினையை மறுக்காது, வினையின் முதன் மைத் தன்மையை மறுக்கின்றனர். வினைக்கும் மேலாக இறைவனை நிறுத்துகின்றனர். சமணரின் கடுங்கோட் பாடாகிய வினையின் வெம்மைத் தன்மையை நீக்கி இறை வனின் கருணைத் தன்மையை வைக்கின்றனர். 'மற்றொன்று சூழினும் தான் முந்துறும்' என்பதற்கு மாறாக, 'பாங்கனை தாள் தொழுவார் வினையாய பற்று அறுமே' என்று, இறைவனை வணங்குபவர்கட்கு வினை அகலும் என்று பிரச்சாரம் செய்கின்றனர்.

அடுத்து, இவ்வுலகம் நிலையற்றது என்றும் இதில் இன்பம், செல்வம், இளமை, யாக்கை அனைத்துமே நிலை யற்ற பொருட்களாகவே உள்ளன என்றும் நிலையாமைத் தத்துவம் பேசும் மதங்களில், சமண மதமே அளவிற்கு அதிகமாக இத்தத்துவத்தை வலியுறுத்துகின்றது. கூத்தாடும் அவையில் கூட்டம் சேர்தல், கலைதல் போன்றே செல்வத் தின்நிலையும் என்கிறார் வள்ளுவர் (குறள் 33.2). வாழ்க்கை வெறுப்புக்குரிய நிலையாமை பற்றிய கருத்துகளை—அள

விறந்து வற்புறுத்தும் இந்நூல்கள் வாழ்க்கையில் துன்பம் அல்லது ஏமாற்றம் அடைந்தவர்களுக்கே ஒரு விதமான மனச்சாந்தியை அளிக்கிறது என்பர்.[40]

இளமை, செல்வம், யாக்கை இவற்றின் நிலையாமைத் தன்மையை சைவக் குரவர்கள் ஒப்புக் கொண்டாலும் கூட, இறைவனை வணங்கி வழிபட்டால் உலக இன்பம் பெறலாம் என்கின்றனர். பொய்யான மனச்சாந்தியளித்த சமணத்தின் பிடியில் இருந்து மக்களை விடுவித்து, அவர்கள் ஏக்கப் பெருமூச்சுகளை விடுவதற்கும் சைவக் குரவர்கள் களம் அமைத்துத் தருகின்றனர். வாழ்க்கையை வறள் நிலமாகக் காட்டி அதை நியாயப் படுத்திய தத்துவத்திற்கு மாறாக, வாழ்க்கையை வீக பொய்கையாக வீங்கிள வேனிலாகப் படம் பிடித்துக் காட்டுகின்றனர்.

“மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணி நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை”.

என்று சம்பந்தர் நல்ல வண்ணம் வாழும் வகை சொல்கின்றார். இறைவனை வணங்கி வழிபட்டால், ‘இம்மை வானவர் செல்வம்விளைந்திடும்’ (தேவாரம் 5: 14: 4:) என்றும் ‘என்றும் இன்பம் தழைக்க, இருக்கலாமே’ (5: 42: 1:) என்றும் அப்பர் பாடுகின்றார்.

இங்கே நாம் ஒன்று கவனிக்கலாம். சமணர் கருத்துகளை மறுத்து சைவர்கள் எதிர்க்கருத்துகளை முன்வைக்கும்போது, சமயத்தின் அடிப்படைக் குண இயல்புகளைத் தாக்கவில்லை. வினை, நிலையாமை, வீடுபேறு ஆகியவற்றை அடிப்படையில் மறுக்கவில்லை. ஆனால் இறைவன் மீது அன்பு செலுத்தினால் வினையின் நீங்கி, மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து அவன் தாள் அடையலாம் என இறைமை நெறியை மிக எளிதாக்குகின்றனர். சமணத்துக்கு எதிரான இத்தகைய கண்டனக் குரலானது, வணிக வர்க்கத்தினருக்கு எதிரான பொருளாதாரக் குரோதத்தின் எதிரொலிதான் என்பதையும் நாம் மறப்பதற்கில்லை.

சமண ஆச்சாரியர்கள் தம் சமயத்துக்குரிய சிறப்பு

மொழிகளாக வடமொழியையும் பிராகிருதத்தையும் கைக்கொண்டனர். துறவிகளும் மடங்களும் இவற்றையே தம் பிரச்சாரத்துக்குப் பயன் படுத்தினர். மகேந்திரவர்மன் ஆதரித்த பாடலிபுத்திர மடத்துத் துறவிகளான சிம்மசூரி, சர்வநந்தி போன்றவர்கள் வடமொழியிலேயே பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். சமணத்தை ஆதரித்த பல்லவ மன்னர்களும் வடமொழி—பிராகிருதம் ஆகியவற்றையே ஆதரித்தனர்.

இவை மக்கள் வழங்கும் மொழிகளில்லை, சமூக முழுமைக்கும் இயங்கக்கூடிய குறையீடாகிய மொழியின் வாழ்வு, சமூகத்தின் எழுச்சியோடும் வளர்ச்சியோடும் பின்னிப் பிணைந்துள்ளது. எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள மொழி இன்றியமையாத கருவி என்பதாலும மொழி இல்லையேல் மனித சமுகத்தில் கூட்டு நடவடிக்கைகளே இல்லை என்பதாலும், மொழி ஒரு சமூகப் பொருளாகவே உள்ளது. எனவே மக்கள் வழங்கும் பழகு மொழியின்றி எந்தக் கருத்தும் பரிமாறிக் கொள்ள இயலாது. ஆனால் இங்கே, சமணர்கள் வடமொழியிலேபிரச்சாரம் செய்தனர். சில பல நூல்களை தவிர தமிழிலும் பெரிய நூல்கள் அக்காலத்தில் தோன்றவில்லை.

ஆனால் பரந்து பட்ட மக்களின் அணியையைக் கட்டுகிறவர்கள் உலகத்தில் எங்கு இருந்தாலும்— அந்தப் பகுதி மக்களுடன் கலந்து உறவாடித் தாங்கள் பிரச்சாரம் செய்வதற்கும் தம் நலன்களுக்காக அவர்களையும் செயலில் ஈடுபடச்செய்வதற்கும் அந்தந்தப் பகுதி மக்களின் மொழியைப் பயன் படுத்தத் தவறுவதில்லை இதற்கு நம் சைவர்களும் விதி விலக்கல்ல.

பழைய வைதீகமும் பழைய திராவிடச் சமயமும் கலந்து தேவையின் உந்துதலால் உருப்பெற்ற பக்தி இயக்கம், வடமொழியையும் விட்டு விடாது, அதே நேரத்தில் தமிழுக்கும் சேர்த்து ஏற்றம் தருகின்றது. சமயக் குரவர்கள் தாய் மொழியின் மூலம் இறையுணர்வை உண்டு பண்ண முடியும் என்ற முனைப்பில் மொழியைப் பயன்

படுத்தத் தலைப்பட்டனர். சைவக் குரவர்களின் இத்தகைய செய்கை. உண்மையில் மொழி பற்றிய சிந்தனையன்று; சமுதாயச் சிந்தனையே ஆகும் என்பர்[41].

அதுமட்டுமல்ல 'தமிழ்' என்ற சொல்லுக்குப் புதிய பொருளையும் கொடுத்தனர். தமிழ் என்றால் காதல், வீரம், ஒரு மொழி என்றுதான் அதுவரை பொருளுண்டு (குறிஞ் பாட்டின் அடிக்குறிப்பு; புறம் 39; சிலம்பு xxvi 161). அதாவது, மக்கள் தம் வாழ்வில் எவற்றையெலாம் முக்கியமாகக் கருதப்பட வேண்டுமோ, அவற்றுக்கெல்லாம் 'தமிழ்' எனும் பெயர் கொடுத்து உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்திருந்தமையை இது நமக்குப் புலப்படுத்துகிறது. எனலாம் நம் நாயன்மார்கள் தமிழுக்கு, காதல் வீரம் ஆகிய தன்மைகளுக்கு அடுத்து, பக்தித் தன்மையையும் கொடுக்கின்றனர், மக்களைத் தம் பக்கம் இழுப்பதற்கு எல்லாக் காலங்களிலும் தத்துவவாதிகள் மொழியை மிகச் சரியான கருவியாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற பொதுவான விதிக்கு நாயன்மார்கள் விதிவிலக்காக இருக்க முடியவில்லை.

"நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்"

"பண்ணிய நூல் தமிழ் பாடு வித்து"

என்றெல்லாம் இவர்கள் பாடும் போது, தமிழ் என்பது 'பக்தி' எனும் பொருளாகவும் உருமாறி விடுகிறது எனலாம். இதனுடைய கொடு முடியாக, தமிழுக்குத் தெய்வத் தன்மை ஏற்றும் நிலை வந்து விடுகிறது.

"மறையிலங்கும் தமிழ்"

"தவம் மல்கு தமிழ்"

என்றெல்லாம் தமிழுக்குத் தெய்வத் தன்மை கொடுக்கின்றனர். அடுத்து இன்னும் மேலே சென்று, தமிழையே இறைவனாகப் பாவிக்கின்ற தன்மையும் வந்து விடுகிறது.

"வடமொழியும் தென் மொழியும் ஆனவன் காண்"

"செந்திறத்த தமிழோசை வட சொல்லாகி"

என்றெல்லாம் நாயன்மார்கள் பாடிப்பரவும்போது, தமிழ்

எனும் மொழிக்கு அன்றைய காலத்தில் கிடைத்த நிலைபற்றி நம்மால் வியக்காமல் இருக்கமுடியவில்லை. ஆனால் அதே நேரத்தில் சமணரின் வடமொழி, பிராகிருதம் ஆகியவற்றை எதிர்ப்பதற்காக, வைதிக சமயத்தாரின் வடமொழியை உட்கொண்டு, தமிழ்நாட்டின் பொதுவான மொழியாகிய தமிழுக்குப் புதிய புதிய பொருள்களையெல்லாம் கொடுத்து மக்களை உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திப் பக்தி இயக்கம் நடத்தினர்.

இத்தகைய கருத்துப் போராட்டத்தில், கோட்பாடு களுக்கு எதிராக மாற்றுக் கோட்பாடுகள் நிறுவப்படு கின்றன. அதேபோல், தம்முடைய நலன் கருதி ஒரு பிரிவு நிறுவனம் ஒன்றை அமைக்கின்றது என்றால், அதைஇன்னொரு பிரிவு எதிர்த்து மாற்று நிறுவனம் ஒன்றை அமைக்க வேண்டி யுள்ளது. சமண சமய வளர்ச்சிக்காகச் சமயத்துறவிகள் அமைப்புகள் நிறுவுகின்றனர். அதற்குச் சங்கம் என்றுபெய ருண்டு. அதிலே சமண சமயதத்துவ இலக்கிய நூல்கள் எழுதப்பட்டன. இந்தச் சங்கங்களுக்குச் சமண மன்னர்களின் ஆதரவு இருந்தது. பாடலிபுத்திரத்தில் லோக விபாகம் எனும் திகம்பர சமண நூல் படியெடுக்கப்பட்டு, அது பிரச் சாரம் செய்யப்பட்டது. சிம்மவிஷ்ணு காலத்தில் காஞ்சி வேகவதி ஆற்றங் கரையில்உள்ள திருப்பருத்திக் குன்றத்தில் நந்தி சங்கம் இருந்ததாகவும், அதில் சமணத் துறவிகள் பலர் ஈடுபட்டுச் சமய விசாரணை செய்தனர் என்றும் தெரிகிறது. அதைப் போன்றே, சமண ஆச்சாரியார்களுள் ஒருவரும் பூஜ்யபூமி நாதரின் சீடருமான வஜ்ர நந்தி என்பவர் தக்காணத்தில் உள்ள மதுரையில் திராவிட சமண சங்கம் ஒன்றை ஆரம்பித்தார் என்றுதெரிகிறது.[42] இவ்வாறுபல்லவ பாண்டிய நாடுகளில் தொடங்கப்பட்ட சங்கங்கள், வணிகர் கள் அரசர்கள் ஆகியோரின் துணைகொண்டு, சமணம் விரைந்து பரவுதற்குப் பணியாற்றின. சமயப்பணிகள் மட்டுமின்றி சமயம் சார்ந்த இலக்கியப் பணிகளையும் ஆற்றின. தமிழில் உள்ள கீழ்க்கணக்கு நூல்கள் பல இத் தகைய சங்கங்களைச் சேர்ந்தவர்களால் இயற்றப்பட்டிருக்

கலாம் எனக் கருதுதல் பொருத்தமாகும் என்பர்.[43]

கருத்துலகின் அனைத்து முனைகளிலும் சமணத்தை எதிர்த்துத் தாக்குதல் நடத்தி எதிர்க் கோட்பாடுகளை நிறுவிய சைவத்திற்கு, தற்போது சங்கம் எனும் அமைப்புகளையும் சமாளிக்க வேண்டியிருக்கிறது. அதாவது இவர்களுக்கும் சங்கம் தேவைப்படுகிறது. மேற்சொன்ன கோட்பாடு—எதிர்கோட்பாட்டுப் போராட்டத்தில் தன்னைக் கடுமையாக ஈடுபடுத்திக் கொண்ட சம்பந்தர் பெருமானின் பாடலில் சங்கம் பற்றிய பொய்ம்மையான கருத்தை முதலில் காண்கிறோம்.

பாண்டி நாட்டில் பரவியுள்ள சமணத்தை ஒழிப்பதற்காகச் சோழநாட்டிலிருந்து புறப்பட்ட ,பரசமயக் கோளரி'யான சம்பந்தர், பாண்டி நாட்டில் வஜ்ரநந்தி தொடங்கிய திராவிட சங்கத்தின் செல்வாக்கைக் கண்டு, அதற்கு மாற்றான சைவச்சங்கம் ஒன்றை எடுத்துச் சொல்கின்றார் எனலாம்.

"அற்றன்றி அந்தண் மதுரைத் தொகை ஆக்கினனும்" என்று சம்பந்தர் பாடுகின்றார். தொகை என்ற சொல்லைச் சம்பந்தர் தமிழ்ச்சங்கம் என்ற பொருளில் குறியீடாகப் பயன்படுத்துகிறார் என்பர்.[44] ஞானசம்பந்தப் பெருமானின் திருவுள்ளக்கிடக்கையை நன்கறிந்த சேக்கிழார் பெருமான் இதற்குமேலும் விளக்கம் கொடுக்கிறார்.

" ஆன அற்றன்றி என்ற அத்திருப் பாட்டில் கூடல்
மாநகரத்துச் சங்கம் வைத்தவன் தேற்றத் தேறு"
(பெரியபுராணம்)

சம்பந்தரால், "தொகை ஆக்கினன்" என்று குறிப் பிடப் படுவது "மாநகரத்துச் சங்கம் வைத்தவன்" என்று விரிந்த அளவில் பெரியபுராணத்தில் உருமாற்றம் பெற்றுவிடுகிறது. மொழிக்குத் தெய்வத்தன்மை கொடுத்த காலத்தில், மாற்றுச் சமயத்தவர்க்கு, எதிராக மாற்றுக் கருத்துகளைப் படைக்கும் போது, மொழியோடு தொடர்பு உள்ளதாகக்

கருதப்பட்ட சங்கத்தையும் தெய்வத்தோடு தொடர்பு படுத்திப் பேசுகின்றனர்.

" நன் பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி "

என அப்பரும் (தேவாரம் 6:73:3) இறைவனைப் புலவனாகச் சொல்லித் தம் புலமையை வெளிப் படுத்துகிறார்.

போராட்டத்தின் போது எழும் கருத்துக்களும் இயங்குவது உண்டு. அவை அப்போராட்டத்தின் ஏற்றஇறக் கங்களுக்கேற்ப மாறுதல் பெறும். கி. பி. 7 ஆம் நூற்றாண்டு பிறப் பெடுத்த 'சங்கம்' அதற்குப் பிறகு வந்த சமண சமய எதிர்ப்பாளர்களால் ஊட்டி வளர்க்கப்பட்டது. அந் தந்தக் காலங்களில் ஏற்பட்ட கருத்துகள் சிலவற்றையும் உள்ளடக்கிக் கொஞ்சமாக மாறுதல் பெற்று வளர்க்கப் பட்டது. கி பி. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆண்டாள், திருமங்கை ஆழ்வார் போன்ற சமண எதிர்ப்புக் கவிஞர் களாலும் கி. பி9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மணிவாசகப் பெருமானாலும் இது விரிவாக எடுத்தோதப்பட்டது.

இவ்வாறு தேவையின் நிர்ப்பந்தமாக உருவாக்கப்பட்ட கருத்து, கொஞ்சம் கொஞ்சமாக வளர்ச்சி பெறுகிறது. சமண சமயத்தின் செல்வாக்கை ஒழிக்க முனைந்த சைவர் களின் சார்பாகவே எழுந்ததாகச் சொல்லப்படும் இறை யனார் களவியல் உரையில்[45], இதை நிறுவன வடிவமாக ஆக்குகிறார்கள். போராட்டத்தில் இருந்த கருத்து நிறுவன மாகிறது என்றால், அங்கே சைவர்களின் கருத்துக்கள் செல்வாக்கு மிக்கதாகவும், அதன் பின்னணியில் இயங்கிய வேளாளர் வர்க்கம் மேலாண்மை பெற்ற வர்க்கமாகவும் உருப்பெற்று விடுகிறது என்று பொருளாகிறது அதற்குப் பின்னால் தமிழக மண்ணில் அடுக்கடுக்காய் நடந்த நிகழ்ச்சி ளெல்லாம் வேளாண்மைப்பிரிவினர்களின் மேலாதிக் கத்தை உறுதிப்படுத்தும் செயல்களே ஆகும் என்பதில் ஐயமில்லை. பொன்னையும் பொருளையும் குவித்து வைத்து, பரிவர்த்தனையில் மட்டுமே ஈடுபட்டு, உற்பத்தியைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்ட வணிகப்

பெருங்குடி மக்களைப் போராட்டத்தில் வீழ்ச்சியடைச் செய்த வேளாளர் வர்க்கம், தங்கள் வெற்றிக்குப் பின்னால், கிராமங்களில் விளையும் பொருட்களின் உற்பத்தியையும் பங்கீட்டையும் தாங்களே நிர்ணயம் செய்துள்ளது என்று தெரிகிறது.[46] இது அவர்கள் அடைந்த பொருளியல் ஆதிக்கத்தைக் குறிக்கிறது எனலாம். இவர்கள் பூமிபுத்திரர், நாட்டு மக்கள் என்றழைக்கப் படுகின்றனர் (Inscriprion No 209/ 1937, 117/ 1900) உற்பத்தி சாதனமாகிய பூமி, நிலம் இவர்கட்கே சொந்தமானதை இக்கல்வெட்டுகள் குறுக்கின்றன எனலாம். வணிகர்கள் சமயப் போர்வையில் கைப்பற்றிய நிலங்களை மீட்கும் போரட்டத்தில், வேளாளர்கள் தம்முடன் பரந்துபட்ட மக்கட்தொகுப்மை இணைத்துக் கொண்டு வெற்றி பெற்று விளங்கியதையும் இவை தெளிவாக்குகின்றன.

இவர்கள் பெற்ற பொருளியல் மேலாதிக்கதைத் தொடர்ந்து சமூகத்தகுதியும் மெல்லமெல்ல வளரலாயிற்று. அரசனின் மெய்க் கீர்த்திகளில் காணப்படும் அரசனுக்குரிய மரியாதைச் சொற்களை வேளாளர் அமைப்பு ஒன்று தன் கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளது என்று அறிகிறோம். இதை எண்ணும் போது, இவர்கள் பெற்றுள்ள சமூகத் தகுதி நம்மை பிரமிப்புக்கு உள்ளாக்குகிறது என்பர்.[47] மன்னர் பின்னோர்களாக இருந்தவர்கள் உண்மையிலே பின்னுக்குத் தள்ளப்பட்ட நிகழ்ச்சி தமிழகத்தில் அன்று உறுதியாயிற்று. வேளாளர்கள் தங்கள் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தியபின், அவர்கள் சார்பான கருத்துகளும் உறுதிப்படுத்த பட்டவையாக மாறத் தொடங்கின.

இன்னொரு ஐயம் நமக்கு இயல்பாகவே எழுகிறது. தமிழகத்தில் பல இடங்கள் இருந்தாலும் பாண்டியர் தலைநகரில் மட்டுமே சங்கங்கள் இருந்தன என்று பொய்மையான கருத்தைப் பரப்புவதற்கு—கதைப்பதற்கு—காரணம் என்ன?

அக்கால அரசியல் நிலைமைகளை எடுத்துக் கொண்டால்,

பாண்டிய மன்னன், பல்லவமன்னன் ஆகியோர்களே பெரு வேந்தர்களாகக் காணப்படுகின்றனர். இதில் தமிழ் மன்னராகிய பாண்டியர்களையே தேர்ந்தெடுத்து அவர்களின் தலைநகரங்களையே தமிழின் தலைமையமாகச் சொல்லியிருக்கலாம்.

மேலும், கருத்துப்பொய்மைக்கு அடித்தளமாகக் காணப்படும் மிகப்பழைய காலத்துத் தொன்மையான செய்திகளில் எல்லாம், தமிழ்மொழியானது மதுரையோடும் பாண்டிய மன்னனோடும் தொடர்பு படுத்தப் பட்டுள்ளதைக் காணலாம்.

"நிலந்தரு திருவின் பாண்டியன் அவையத்து"

"தமிழ் கெழு பெற்ற........மதுரை"

"தமிழ் கெழு கூடல்"

"தென் தமிழ் மதுரை"

கருத்துலகில் உருவாக்கப்படும் பொய்ம்மையில் இத்தகைய பழைய செய்திகளில் உள்ளபங்கை நாம் மறப்பதற்கில்லை. தமிழோடு தொடர்பு படுத்திக் காட்டப் பட்டுள்ள மதுரையையும் பாண்டியனையும் பிற்காலத்தில் கருத்துப் பொய்ம்மையை உருவாக்கியவர்கள் இணைத்து, தங்கள் பொய்ம்மைகளை உலவவிட்டுள்ளனர். இத்தகைய சிறுபான்மையானதும் மங்கலானது மான யதார்த்தத் தன்மை இல்லையென்றால், இவர்களால் ஏவிவிடப்பட்ட பொய்ம்மை நிலை பெற்றிராது.

இன்னொரு காரணம். சமண சங்கத்திற்கு எதிர்க்கோட்பாடாகவே சைவர்கள் சங்கம் எனும் கருத்தை உருவாக்குகின்றனர். சமண சங்கங்களுள் பாண்டி நாட்டு வஜ்ர நந்தி சங்கமே புகழ் பெற்றதாகும். இந்தப் பாண்டி நாட்டில் சைவ சமயம் பரப்பச் சென்ற சம்பந்தரின் பாடலிலேதான் இது பற்றிய முதற்குறிப்பும் வருகின்றது. எனவே இவர்களும் மதுரையிலே சங்கம் நிறுவியதாகக் 'கதைக்க'வேண்டியுள்ளது. எனவே தமிழ்—சங்கம் மதுரை—பாண்டியர்கள்—இறைவன் எனும் கூறுபாடுகளையெல்லாம் மிகச்சரியாக

இணைத்து பொய்ம்மையாகக் கருத்தைப் பரப்பியிருக்கின்றார்கள் எனலாம்.

இவ்வாறு, பண்டைய காலத்தில் வணிகர்களுக்கும் வேளாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள்—முரண்பாடுகள், சமய உலகிலே கண்டனக் குரல்களாக எதிரொலித்து, சமயத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்ட இலக்கிய உலகையும் பாதித்து, கோட்பாட்டுக்கு எதிர்க்கோட்பாடு நிறுவும் முறையில் கி. பி. 7 ஆம் நூற்றாண்டு அளவில் உருவாக்கிய சங்கம் பற்றிய பொய்ம்மையான கருத்து, அக்காலத்துக்கும் முந்தைய பாடல்களில் உள்ள சில செய்திகளையும் உள்ளடக்கிக் கொண்டு, பெரியதொரு நிறுவன வடிவமாக கி. பி. 10 ஆம் நூற்றாண்டு அளவில் தோற்றம் பெறுகிறது எனலாம். சே. என். சிவராஜ்பிள்ளை அவர்கள் சொல்வதைப் போல, இது வரலாற்றின் வலுக்கட்டாயமான திணிப்பு ஆகும். ஆனால் இக்கூற்று, உண்மையின் ஒரு பகுதி மட்டும்தான். இது ஒரு பிரிவினரின் தேவை கருதிய வலுக்கட்டாயமான திணிப்பு ஆகும் என்பதுதான் முழுமையான வரலாறாகும்.

கடைசியிலே நாம ஒன்றைக் கவனிக்க வேண்டியுள்ளது. கி. பி. 7 ஆம் நூற்றாண்டளவில் ஏவி விடப்பட்டு கி. பி. 10 ஆம் நூற்றாண்டு அளவில் நிறுவனமான பொய்ம்மையான கருத்துகள் இன்றளவும் தமிழ்ச் சமுதாயத்திலும் இலக்கியவுலகிலும் ஆளுமை பெற்ற கருத்துகளாகவே இருக்கின்றன. ஆனால் 'சங்கம்' தனது பழமையான சைவத் தொடர்பைக் கொஞ்சம் நெகிழவிட்டு இன்று அரசியல் போர்வையை அதிகமாகப் போர்த்திக் கொண்டுள்ளது. இதனுடைய இன்றைய தன்மையை ஆராயப் புகுந்தால் அது நம்மைத் தமிழகத்தின் கடந்த ஐமபது ஆண்டுக்கால அரசியல்—பொருளாதார—சமூக ஆய்வுக்குள் கொண்டு செல்லும் என்பதில் ஐயமில்லை.

மேற்கோள் பட்டியல்


1. இரா. இராகவையங்கார் — தமிழ்வரலாறு — பக் 46
2. மு. இராசமாணிக்கம்—தமிழ் மொழி இலக்கிய வரலாறு பக் 26
3. மேற்படி நூல் — பக் 42
4. மேற்படி நூல் பக் 43
   கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார்—தென் இந்திய வரலாறு (மொழி பெயர்ப்பு)—பக் 185
   கே. கே. பிள்ளை — தென்னிந்திய வரலாறு பக் 66,
5. K.N. Sivaraj Pillai—chronology of Early Tamils—p. 19
   P.T. Srinivasa Iyengar—History of Early Tamils—p. 252
   S. K. Iyengar—Beginnings of south Indian History—P. 253
   வையாபுரிப் பிள்ளை—இலக்கியச் சிந்தனை—பக் 36
6. K. N. Sivaraj Pillai — chronology of Early Tamils—p. 18
7. P. Sundaram Pillai—Madras Christian College Magazine—ix p. 128
8. மா.ரா. போ. குருசாமியின் சங்க காலம் நூலுக்கு மு. வரதராசனார் முன்னுரை
9. K. N. Sivaraj Pillai—Chron ology of Early Tamils
10. Devi Prasad Chattopadhyaya —what is living and what is Dead in Indian Philosophy—p. 339—340

11. வையாபுரிப் பிள்ளை— இலக்கியச் சிந்தனை —பக் 36

12. இறையனார் களவியல் உரை (கழகப்பதிப்பு) முன்னுரை—பக் 4.

13. N. Subramanian—History of Tamil Nadu to A.D. 1336—p. 38.

K.N. Sivaraj Pillai—Chronology of Early Tamils—p. 28

14. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார்—தென் இந்திய வரலாறு—பக் 185

15. K. A. Nilakanta Sastri—Pandyan Kingdom—p. 48— Foot Note No 2

16, மு. இராசமாணிக்கம்—தமிழ்மொழி இலக்கிய வரலாறு —பக் 34

17. வையாபுரிப் பிள்ளை—இலக்கிய தீபம்—பக் 29

18. N. Subramanian—History of TamilNadu to AD 1336—p. 118

19. K. A. Nilakanta Sastri—The Pandyan Kingdom—p.49

20. Annual Report of Epigraphy —1907—1908 —p. 57

21. K.A. Nilakanta Sastri—The Pandyan Kingdom —p. 49

22. P. T. Srinivasa Iyengar— History of Early Tamils—pp 227—228—Foot Notes.

23. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார்— தென்னிந்தியா பற்றிய வெளிநாட்டினர் குறிப்புகள்— —பக் 9

24 மேற்படி நூல்—பக் 98

25. Jeannine Aoboyer—Daily Life in Ancient India—200 B.C. to 700 A. D.—p. 85

26. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி—தென்னிந்தியா பற்றிய வெளிநாட்டினர் குறிப்புகள்—முன்னுரை

27. B. Ramachandran - Study of weight-Standards of Silver punch of marked Coins of Mambalam and Bodinayakkunur Hoards—Trans Arch. Soc. South India—1957-58.

28. Clarence Maloney—Archeology in South India : Accomplishments and Prespects—"Essays on South India"—ed.by. Burton stein —p. 20

29. I. Mahadevan—Brahmi Inscriptions of South India—p. 76

30. Ibid—p. 47

31. D. D. Kosambi—An Introduction of the Study of Indian History— p. 246
A.L. Basham—Aspeets of Ancient Indian Culture—p. 33

32. Mrs. Gusewa—Jainism (Translated from Russian by Y.S. Redkar)—p. 77

33. கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி—தென்னிந்தியா பற்றிய வெளிநாட்டினர் குறிப்புகள்—பக். 14

34. Mrs. Gusewa—Jainism— p. 14

35. Thomas Bokes—Indian Antiquary—Vol VIII p.281

36. செஞ்சொற்கொண்டல். சொ. சிங்காரவேலன் "திருஞான சம்பந்தர் வரலாற்று ஆராய்ச்சியும் தேவாரத்திறனாய்வும்" பக். 208

37. க. ப. அறவாணன்—தமிழ்நாட்டில் ஜைனம்

38. Dr. M.A. Dorai Arankanar—The Religion and Philosophy of Devaram—Vol II—pp 1135—1137

39. கலாநிதி க. கைலாசபதி—பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்— பக். 110

40. டாக்டர் ஆ. வேலுப்பிள்ளை—தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் —பக் 4)

41. டாக்டர் ப. அருணாசலம்—பக்தி இலக்கியம் —பக் 69

42. Journal of the Bombay Branch of Royal Society—Vol XVIII Part I No. XIVI —p.74 (P.T. Srinivasa Iyangar—History of Early Tamils—)

43. மு. இராசமாணிக்கம்— சைவ சமய வளர்ச்சி பக்—49.

44. Dr. M.A. Doral Arankanar—The Religion and Philosophy of Devaram—Vol II — P. 1102

45. மயிலை சீனி வேங்கடசாமி —கலைக்கதிர்— பொங்கல் மலர்— 1958

46. Journal of Indian History—XXV pp.274—276—

47. T.V. Mahalingam—Readings in South Indian History—p. 109

# 4. மண்ணும் மனித உறவுகளும்

*பிற்காலச்சோழர்காலம்:*
*பிரமதேயக் கிராமங்களின் சமூக அமைப்பு*

கி. பி. 9 ஆம் நூற்றுண்டில் தமிழகத்தில் தோன்றிய சோழப்பேரரசு வரலாற்றிலே தனிச்சிறப்பாக உள்ளது. காவிரிக் கரையில் அரும்பி கிருஷ்ணு நதிக்குத் தெற்கே யுள்ள பூமியனைத்தையும் வரலாற்றிலே முதன்முறையாக ஒருவலுமிக்க அரசு கட்டுப்படுத்தி வைத்திருந்தது. அதன் ஆட்சியதிகாரத்திற்குக் கலிங்கமும் கங்கமும், கங்கையும் கடாரமும், ஈழமும் சுமித்திராவும் கைகட்டி நின்றன. மேலைக்கடல் வழியால் அரேபியமும் கீழைக்கடல் வழியால் சீனமும் இப்பேரரசுடன் வணிகத் தொடர்பு வைத்துக் கொள்வதில் பெருமை கொண்டன.

விசயாலன் காலம் முதல் மூன்ரும் குலோத்துங்கன் காலம் வரை (கி. பி. 850—கி. பி. 1216) தமிழகத்திலே அதுவரை இல்லாத வியத்தகு மாற்றங்கள் உருவாயின. அதற்குமுன் அங்குமிங்கும் சிதறிக் கிடந்த பிரதேசங்களெல்லாம் ஒரே ஆளுகைக்குள் கொணரப்பட்டது. பாண்டியர் சேரர் பழப்பெருமையினின்று இறங்கினர். கடல் தொடர்பு நாடுகள் படைபலத்துச்குப் பணிந்தன. பரந்துபட்ட பேரரசைக் கட்டிக் காக்க சமூகத்தில் மாற்றங்கள் நிகழ்ந் தன. ஏராளமான விளை நிலங்கள் பெருகின; பயிர்த்தொழி லுக்கேற்பக் கிராமத்தொழில்கள் திருத்தி அமைக்கப் பட்டன. நிலம் முதல் முறையாக மிகத் துல்லியமாக

அளக்கப்பட்டது. ஆள்வதற்கு வசதியாகப் பேரரசு, மண்டலங்களாக — வளநாடுகளாக—நாடுகளாக—கூற்றங் களாக—கிராமங்களாக பிரிக்கப்பட்டது. கிராம ஆட்சி முறை சிறப்பாக நடந்தேறியது. சமூகத்தில் பலதரப்பட்ட மக்களின் 'உரிமைகளும் கடமைகளும்' தெளிவாக்கப் பட்டது. சாதிப்பழக்க வழக்கங்களும், வருணாசிரமத் தர்மங்களும், சமய நெறி முறைகளும் அழுத்தந்திருத்த மாகவே கற்பிக்கப்பட்டன. பெரிய பெரிய கோயில்கள் கட்டப்பட்டு ஏராளமான மானியங்கள் வழங்கப்பட்டன. இப்படி, ஆட்சிமுறை கலாச்சார முறை போன்றவற்றில் தமிழகம் புது வரலாற்றைப் படைக்கிறது.

வரலாறு என்பது தற்செயலான நிகழ்ச்சிகளின் சேர்க்கை அல்ல; சமுதாயத்திலே ஏற்படும் மாற்றங்கள் சில திட்டவட்டமான விதிமுறைகளுக்கேற்பவே அமை கின்றன. இத்தகைய விதிமுறைகளைத்தெரிந்துகொண்டால் சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களைத் தெளிவாக்கிக் கொள்ளலாம். எனவே பிற்காலச் சோழர் காலத்திலே காணப்படும் அரசியல் மாற்றங்கள், ஆட்சிமுறை வளர்ச்சி, கிராம சபைகளின் நிர்வாக அமைப்பு, சமய நெறி முறை களின் போக்கு ஆகிய இன்னோரன்ன பல்வேறு விதமான வியத்தகு மாற்றங்களைத் தெளிவாக்கிக் கொள்ள வேண்டுமானால், அம்மாற்றங்களுக்கான சமூகநியதிகளையும் வரலாற்று ரீதியாக அக்காலத்திலே ஏற்பட்ட விதிமுறை களையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அத்தகைய சமூக நியதிகளும் விதிமுறைகளும் யாவை?

'சங்க' மருவிய காலத்திலே பெருவளர்ச்சியுற்ற வணிகக் கூட்டங்களைக் காண்கிறோம். பொருள் உற்பத்தி யில் நேரடியாகப் பங்கு கொள்ளாமல் பரிவர்த்தனை யிலே ஈடுபடும் இக்கூட்டம் செல்வாக்குக் கொண்டுள்ள தாகக் காணப்படுகிறது. ஏராளமான பொற் குப்பையைக் கொண்டுள்ளதால், சமூகத்திலே மன்னர் பின்னோர் என்று பெருமை பேசப்படுகிறது. இந்த வர்க்கத்தின் வளர்ச்சியை யும் செல்வாக்கையும் நாம் சிலம்பு, மேகலை போன்ற

காப்பியங்களில் 'ஆடையிலே நூல் போல்' காண்கிறோம். தொலைதூர நாடுகளிலும் உள் நாட்டிலும் பெருத்த அளவில் வணிகம் செய்த வர்க்கம், பரிவர்த்தனைக்கேற்ற பொருள்களையே உற்பத்தி செய்வதிலும் மேம்படுத்துவதிலும் நோக்கம் கொண்டுள்ளதாயிருக்கும். வேளாண்மைப் பொருள் உற்பத்தியிலும் கைத்தொழிலிலும் போதுமான அளவு அக்கறை செலுத்தப்படவில்லை. எனவே, சமுதாயத்தில் வணிக வர்க்கத்தினருக்கும் அவர்களுக்கு கீழே உள்ள வேளாண்மை வர்க்கத்தினருக்கும் முரண்பாடு இருப்பதைக் காண்கிறோம். மன்னர்கள் வணிகப் பிரிவினரை ஆதரித்ததை நம் இலக்கியங்கள் காட்டும். மன்னர்க்கே உரிய வீதியில் தேரூர்ந்து மன்னருக்கு இணையாகச் செல்லக் கூடிய செல்வாக்கு வணிகர்க்கே இருந்தது. பாதிக்கப்பட்டவளாக இருந்தாலும், ஒரு மன்னனையே 'தேராமன்னு' என விளிக்கக்கூடிய அளவுக்கு கண்ணகி எனும் வணிக மகள் இருந்தனள் என 'சிலம்பு' கூறுகிறது. வெளியிடங்களின் தேவைக்கேற்பவே பொருள்களை உற்பத்தி செய்வதில் வணிக வர்க்கம் நாட்டம் கொண்டதால் நாட்டின் உணவு உற்பத்தி குறைந்துபோய் பஞ்சம் ஏற்படுகிறது. நாவுக்கரசர், சம்பந்தர் பாடல்களிலும் பல்லவர் காலச் சான்றுகளிலும், நாட்டில் "பஞ்சம்" ஏற்பட்டதாக அறிகிறோம். வேளாண்மை நெருக்கடியால் ஏற்பட்ட பஞ்சத்தால் அவதியுறும் மக்களுக்கு உதவும் பொருட்டு நாயன்மார் 'இறைவனிடம் பெற்ற' காசுக்கு வட்டம் கழித்தே பண்டம் கொடுத்ததாக வணிகர்களைப் பற்றிப் பெரியபுராணம் சொல்கிறது. வணிகர்கள் அரசனின் ஒப்புதலோடு வேளாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்த சைவ வைணவக் கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களைக் கைக்கொளத் தொடங்கினர். தென்னார்க்காடு மாவட்டம் தொண்டூரில் வணிகரைச் சார்ந்த வழுவாமொழிப் பெரும்பள்ளிக் கோயிலுக்கு அவ்வூர் குண்ணேரி மங்கலத் தோட்டமும் கிணறும் விண்ணவகோவரையன் வைரிமலையன் எனும் சிற்றரசனின் ஒப்புதலோடு வழங்கப்படுகிறது.[1] இது

போன்று பல சான்றுகளைக் காணலாம். வணிக வர்க்கம், வேளாண்மை வர்க்கத்தின் பொருளாதார அடிப்படையான நிலங்களைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள முனைகிறது. இதற்குரிய போர்வையாகச் சமயத்தைப் போர்த்திக் கொண்டது. பொதுவாகவே சமணம் பௌத்தம் ஆகியவை பெரு வணிகர்களின் சமயங்களாக இருந்தன என்பர் அறிஞர் D. D. கோசாம்பி[2]. வடார்க்காடு மாவட்டம் வாலாசாபேட்டை வட்டம் பூண்டி கிராமத்துச் சமணக் கோயிலுக்கு வீரவீரன் எனும் சிற்றரசன் கிராமங்களைத் தானமாகக் கொடுத்தான் என அவ்வூர்ப் பொன்னி வனநாதர் கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது[3]. இப்படி வேளாளர்களின் அடிப்படை வாழ்க்கையில்— பொருளாதாரக் கூறுபாட்டில்— வணிகர்கள் 'கைவைத்த' பின்னால் அதுவரை இருதரப்பினருக்குமிடையே இருந்த முரண்பாடு பகை வடிவமெடுக்கிறது. "பொதுவாகவே ஒரு வர்க்கத்துக்கும் இன்னொரு வர்க்கத்துக்கு மிடையே உள்ள முரண்பாடு, பொருளாதார நலன்களைப் பொறுத்துத் தான் பகைவடிவமெடுக்கும். அத்தகைய நேரங்களில் ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தின் மீது தன் நலன்களை வலுவில் திணிக்கும்; வலிய முறையில் அழிக்க நினைக்கும்" என்பர் சமூக வரலாற்றறிஞர் மாரிசு கார்ன் போர்த்[4] எனவே இந்தப் பகைமுரண்பாட்டுப் போராட்டத்தில், தங்களுடைய நிலங்களை மன்னர்களின் உதவிகொண்டு மீட்கவேண்டும் எனும் பொருளாதார நோக்கில் வேளாளர்கள் ஈடுபடுகின்றனர். வணிகரால் அலட்சியம் செய்யப்பட்டிருந்த கைவினைஞர்களையும் அரவணைத்துக்கொண்டு போராடுகின்றனர். இந்தப் போராட்டத்தின் போர்வையாகச் சமயம் பயன்பட்டது. பொதுவாகவே இந்தியாவில் சைவம் நிலக்கிழார்களின் சமயமாக இருந்தது என்பர் அறிஞர் கோசாம்பி[5]. 'பரசமயப்பவம் பெருக்கும் புரை நெறிகள் பாழ்பட, சராசரங்களெல்லாம் சிவம் பெருக' அவதரித்த சம்பந்தர், அப்பர் போன்ற குரவர்களெல்லாம் இப்போராட்டத் தளபதிகளானார்கள். அன்றாடத் தேவைப்பொருள் செய்யும் கைவினைஞர் முதல் ஆவுரித்துத்

தின்னும் புலையர் வரை அணிசேர்க்கப்படுகின்றனர் "யாம் எல்லோருமே அரனடியார்கள்; சேரவாரும் செகத்திரே" என்று "சிவஞானஜனநாயகத்தில்" (தொடர்: மு அருணசலம்பிள்ளை— தமிழிலக்கிய வரலாறு 12ஆம் நூற். பக் 323) 'பொதுமை' பேசப்படுகிறது. இத்தகைய அணிசேர்ப்புப் போராட்ட விளைவாக வணிகர்—சமணர்—வசமிருந்த நிலம் வலுக்கட்டாயமாகப் பிடுங்கப்படுகிறது. 'பன்னும் பாழிப் பள்ளிகளும் பறித்துக்குளம் சூழ் கரைப்படுத்து' என்று அத்தகைய நிகழ்ச்சியைச் சொல்லுகிறது பெரிய புராணம் (தண்டியடிகள் நாயனார் புராணம்—செய்யுள் எண் 27) இதனையே "இவ்வாறெல்லாம் கி. பி 7, 8, 9 ஆகிய நூற்றுண்டுகளிலே நிலபுலம் கவர்தல் முதலிய கலகங்களும் கொடுமைகளும் சச்சரவுகளும் போரட்டங்களும் இருந்து வந்தன" என்பர் மயிலை சீனி வேங்கடசாமியவர்கள்[3]

இவ்வாறு நடந்த போரட்டத்தின் முடிவிலே, நிலவுடைமையினர் வெற்றி பெறுகின்றனர். தொடக்கத்தில் மகேந்திரவர்ம பல்லவன், நின்ற சீர் நெடுமாறன் போன்ற மன்னர்களின் சமயமாற்றம் வலிமை பெற்று வந்த வேளாளர்களின் பால் மன்னர்களுக்கு இருந்த ஆதரவையே வெளிப்படுத்துகின்றது. இப்படி பொருளாதார நிலைமைகளிலும் சமூக நிலைமைகளிலும் ஏற்பட்ட மகத்தான மாறுதல்கள் தாம், அன்றைய தமிழகத்தின் பரிணாம வளர்ச்சியிலே காணப்படும் சுவாரசியமான நிரந்தரமான பகுதியாகும். இந்தப் பகுதிகளைத் தாம் நாம் ஓரளவுக்கு வரையறுத்து வரலாற்று விதிகளாக்க இயலும்.

வெற்றி பெற்ற நிலவுடைமை வர்க்கத்தினருக்கு வலுமிக்க நிலையான அரசு தேவைப்படுகிறது. அந்த நேரத்தில்—கி. பி 9 ஆம் நூற்றுண்டின் தொடக்க காலத்தில்—தமிழகத்தின் அரசியல் பூகோளம் நிலவுடைமை வர்க்கத்தின் அரசியல் நிலைபேற்றுக்கு ஏற்றதாயில்லை. சிறிய சிறிய நிலப் பகுதிகளையெல்லாம் ஒன்றிணைக்க வேண்டியுள்ளது. வளமான உற்பத்திக்குப் புதிய புதிய உறவு முறைகளைக் கொணர வேண்டியுள்ளது. அன்றைய தமிழகம் அதற்கு

உகந்ததாய் இல்லை. தெற்கே இரண்டாம் வரகுணவன்மன், சடையவன்மன் பாரந்தகப் பாண்டியன் போன்ற பலவீன மான பாண்டிய மன்னர்களும், நடுப்பகுதிகளிலே முத்தரையர், காடரையன், பழுவேட்டரையர் போன்ற குறுநில மன்னர்களும், வடக்கே அபராஜிதன், கம்பவர்மன் போன்ற பலவீனமுற்ற பல்லவர்களும் தாம் அன்றைய தமிழகத்தின் அரசியலில் கொலுவீற்றிருந்தனர். இவர்கள் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டேயிருப்பது, நிலவுடமை வர்க்கத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது. எனவே வெற்றி பெற்ற நிலவுடமை வர்க்கத்தினரின் பிரதேசங்களெல்லாம் ஒன்றிணைக்கப்பட்டு, அதன் உச்சியில் வலுவான அரசு உருவாக்கப்படவேண்டியது வரலாற்றின்தேவையாக இருந்தது. இதை விசயாலயனுக்குப் பின்னால் வந்த சோழர்கள் நிறைவேற்றினர்.

வெற்றி பெற்ற எந்தவொரு வர்க்கமும் இருபணிகளைச் செய்ய வேண்டியுள்ளது. முதலில், அது அரசியல் போராட்டத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும் (Stabilization); பிறகு தன் ஆதிக்கப் பரப்பை விரிவாக்கம் செய்ய வேண்டும் (Extension) நிலை பேற்றுக்கான போராட்டத்தை விசயாலயன், முதலாம் பராந்தகன், கண்டாரதித்தன் முதலியோர் ஈடுபட்ட போர்களிலே நாம் காணலாம். கி.பி. 985—ஆம் ஆண்டில் பட்டத்துக்கு வந்த அருண்மொழித் தேவன் என்ற முதலாம் இராசராசன் காலத்தில்தான் சோழப் பேரரசு இரண்டாம் கட்டத்துக்கு அதாவது விரிவுபடுத்தும் கட்டத்துக்கு வந்தது எனலாம். இவனை எதிர்த்த பாண்டிய சேர ஈழநாடுகளின் கூட்டணி முயற்சி தோல்வியாகிறது. இருமுறை பாண்டியரை அடக்கினான். தன்னை எதிர்த்த சேரரின் செறுமாப்பை அடக்கினான். வடக்கே கங்கபாடி, தரங்கைபாடி, நுளம்பபாடி முதலிய பகுதிகளை வெல்கிறான். இவன்காலத்தில் நாடுகளின்எல்லைக்கற்கள் மாற்றிஅமைக்கப் பட்டன. இதற்கு தரைப்படை மட்டுமின்றி, கடற் படையும் கைகொடுத்தது. சோழப்பேரரசு அகல அகலப் படைகளும் அதிகரித்தது. வெற்றிபெற்ற இடங்களில் விளை

நிலங்கள் பெருகின. இப்படியொரு கட்டத்திலேதான் முதலாம் இராசராசன் பிற்காலச் சோழர்களின் புகழ் பூத்த வரலாற்றை எழுதுகிறான்.

இங்கே நாம் ஒரு விஷயத்தைப்பற்றி கொஞ்சம் சிந்திக்க வேண்டி இருக்கிறது. முதலாம் இராசராசன் காலத்திலே நடந்த இந்த வரலாற்று நிகழ்ச்சிகளெல்லாம் இவனுடைய தனிப்பட்ட திறமையினாலும் போர்த் திறத்தாலும் அதிதீவிர சாகச் செயல்களாலும் மட்டுமே நடந்தேறின என சில வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். இதன் மூலம். மாபெரும் மனிதர்களாலேயே வரலாறு நகர்த்திச் செல்லப்படுகிறது என்ற தத்துவத்தை இவர்கள் கைக் கொண்டுள்ளனர் என்று தெரிகிறது. இவர்கள், சில தலைவர்கள் "இயற்கைத் திறமையுடன்" அவதரிக்கிறார்கள் என்றும், அவர்களை 'கருவிலேதிருவுடையவர்கள்' என்றும் கருதுகின்றனர். வரலாற்றில் மக்களுக்கு உரிய பங்கைப் பின்னுக்குத் தள்ளி, சில தனிப்பட்ட தலைவர்களை மட்டுமே முன்னிறுத்துகின்றனர். மக்கள் மட்டுமே சமுதாய வரலாற்றை முன்னெடுத்துச் செல்பவர்கள்; சமுதாய நடைமுறையை உருவாக்குவதில் பிரதான பங்கு வகிப்பவர்கள் ஆவார்கள். இப்படிச் சொல்வது வரலாற்றில் தனிபட்ட மனிதனின் திறமையை மறுப்பதாகாது. மேலும்தனிப்பட்ட மனிதனின் திறமை என்பதே மக்கட் தொகையால் உருவாக்கப்பட்ட சமூகநடைமுறையைச் சார்ந்தே இருக்கிறது. திறமை வாய்ந்த மனிதன் திடீரென உருவாகிவிடுவதில்லை. அதற்கான புறநிலைத் தன்மைகள் கனிந்து இருக்க வேண்டும். இத்தகைய புறநிலைமைத் தன்மைகள் கனிந்து இருப்பதால் தான், எந்த தனிப்பட்ட மனிதனும் அவன் அரசியல் வாதியானாலும், தத்துவ வாதியானாலும், கலைஞன் ஆனாலும் தன் திறமைகளை வெளிக்காட்ட முடிகிறது. இங்கே, விசயாலயன், முதலாம் பராந்தகன், கண்டாரதித்தன் போன்ற மன்னர்கள் தம் ஆளுகையைச் சரியாக நிலை நிறுத்திக்கொண்டார்கள். இவர்களுக்குப் பின்னே இருந்து கொண்டு தங்கள் ஆள் பலத்துடன் இவர்கள் வெற்றிக்கு

காரணமாக இருந்த வேளாளர்கள் தங்கள் செல்வத்தை யும் செல்வாக்கையும் நிலைநிறுத்திக் கொண்டார்கள். அடுத்து இவர்கள் தங்கள் ஆதிக்கத்தையும் செல்வாக்கை விஸ்தரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது; அதற்கான புற நிலைத் தன்மைகளும் கனிந்து இருக்கின்றன. இக்கால கட்டத்தில்தான் முதலாம் இராசராசன் என்ற மன்னன் வருகிறான். வேளாண்மைக்குடும்பத்தினரின் நம்பிக்கையைக் கொண்ட முதலாம் இராசராசன் வரலாற்றில் தனது முத் திரையைப் பதிக்கிறான். இத்தகைய முத்திரையைப் பதிப்ப தற்கு இராசராசனின் போர்த்திறம், சாதுரியச் செயல்கள், ஆட்சித்திறம் ஆகியவை பயன்பட்டிருக்கின்றன. ஆனால் அதற்கான காலமும் களமும் காரணமும் இல்லையெனில் இராசராசனின் இத்தகைய திறமைகளெல்லாம் "விடிவ தற்கு முன் கூவிய சேவல்" கதையாகிப் போயிருக்கும். ஆகவே, இங்கே புறநிலைத்தன்மைகள் முக்கிய பங்கு வகிக் கின்றது. சங்ககாலத்திலே நாம் ஒரு இராசராசனைச் சந்தித்திருக்க முடியுமா? வேண்டுமானால் கவித்துவம் வாய்ந்த நம் கவிஞர்களின் கற்பனையுலகிலே உலவியிருக்க லாம். ஆனால் உண்மையிலே சந்திக்க முடியவில்லை. ஏனெனில், அப்படித் தோன்றுவதற்கு அவசியம்கிடையாது. ஆனால் பிற்காலத்தில் ஒரு இராசராசன் தோன்றுவதற்கு அவசியம் இருக்கிறது.

> "அந்த அவசியத்திற்குஒரு சீடன் கருவியாகத் தேவைப்படுகிறான். அவனது சமூகத் தகுதியினால் படைக்கப்பட்ட மனப்பான்மை, ஒழுக்க நெறி ஆகியவற்றின் காரணமாக அவன் அப்படிப் பயன் பட்டுத்தான் தீரவேண்டும். அப்படிப்பயன்படாமல் இருக்க முடியாது. மேலும் அவன் அப்படிச் செய் தற்குதான் பேரார்வத்துடன் இருக்கிறான். அப்படி விருப்பமில்லாமல் இருக்க முடியாது."[7]

என்று பிளாக்கானேவ் எனும் தத்துவப் பேரறிஞர் கூறு வதை இந்தச் சமயத்தில் நினைவு கூர்தல் பொருத்தமா யிருக்கும்.

இத்தகைய வரலாற்றின் தேவையை நிறைவு செய்பவனாகவே முதலாம் இராசராசன் தோன்றுகிறான். இவன் காலத்திலே பேரரசு வல்லாண்மை கொண்ட மாபெரும் பேரரசாக விரிகிறது. இவனுக்குப் பின்னே வந்த முதலாம் இராசேந்திரன் காலத்தில் சோழர் கடற்படை உதவியுடன் மலேயா, ஜாவா, சுமித்ரா முதலிய பகுதிகள் வென்றெடுக்கப்பட்டன. மேலும் அதுவரை தமிழகக் கவிஞர்களின் கற்பனையிலேயே உலாவிக் கொண்டிருந்த எண்ணங்களையெல்லாம் முதலாம் இராசேந்திரன் செயல் படுத்திக் காட்டுகிறான். கலிங்கம் அடக்கி, கங்கை வரை சென்று மீண்டு "கங்கை கொண்ட சோழன்" எனப்படுகிறான்.

இம்மன்னர்கள் நடத்திய போர்களிலே வேளாண்மைக் குடும்பத்தார்களுக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. வீரஞ்செறிந்த செல்வாக்கு மிக்க வேளாண்மைக் குடும்பத்து இளைஞர்கள் தங்களுடைய ஆள் பலத்துடன் தம் திறமையைப் போர்களிலே காட்டினர் அதற்கீடாக நிலங்களை மானியமாகப் பெற்றனர். போரிலே ஈடுபட்டுத் திறமையை வெளிப்படுத்தும் வீரத் தலைவர்களுக்கு நிலம் மானியமாகக் கொடுக்கப் படும் என்பது 'எழுதப்படாதஒப்பந்தங்களாகவே' இருந்தன. உதாரணமாக முதலாம் இராசராசனுக்காகப் போரிலே ஈடுபட்ட வந்தியத்தேவன், குலோத்துங்கனின் கலிங்கத்துப் போரில் தந்திறன் காட்டிய கருணாகரன், முதலாம் பராந்தகனின் தளபதி பழுவேட்டரையன் கண்டன் அமுதன், விக்கிரம சோழன் காலத்தில் பாண்டிய, சேர நாட்டுப் போர்களிலே ஈடுபட்ட நரலோகவீரன் இன்னோரன்னபலர் செல்வாக்கு மிக்க நிலவுடைமைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களே. இதை அவர்களைப் பற்றிய கல்வெட்டுகளிலே காணப்படும் மூவேந்த வேளாளன், தொண்டை மண்டல வேளாளன் போன்ற சொற்கள் தெளிவாக்குகின்றது. இவர்கள் ஆற்றிய பணிகளுக்குச் சோழப் பெருவுடையார்கள். மானியமாக விளை நிலங்களை இறையிலியாகவே கொடுக்கின்றனர். அந்நிலங்கள் இவர்கள் பரம்பரைபரம்பரையாகவே அனுபவிக்கும்

ஜீவித நிலங்களாக இருக்கும். எடுத்துக்காட்டாக, முதலாம் பராந்தகனின் காலத்தில் பாண்டியர்களையும் சிங்களர்களையும் வெள்ளூர் எனுமிடத்தில் பழுவேட்டரையன் கண்டன் அமுதன் தன் வீரர்களின் துணைகொண்டு முறியடித்ததற்காக, அவனுக்கு நிலம்மானியமாகக் கொடுக்கப்பட்டது என்று திருப்பாற்கடலில் உள்ள கல்வெட்டு குறிப்பிடுகிறது[8] மேலும் பராந்தகனின் ஆறும் ஆட்சியாண்டில், பாணர்களை யும் இராட்டிர மன்னனாகிய இரண்டாம் கிருஷ்ணனையும் திருவில்லத்தில் தோற்கடிக்க, கங்க நாட்டைச் சேர்ந்த பிருதி வீபதி என்பான் துணை செய்கிறான். இந்த பிருதிவீபதிக் குப் பாணநாட்டு நிலங்களை மானியமாகக் கொடுத் தான் என்று தெரிகிறது[9] இத்தகைய போர்களிலே உயிர் நீத்தவர்களின் குடும்பங்களுக்கு மானியமாக நிலம் கொடுக்கப்பட்டது. இதை நீத்தார் பதிமானியம் 'ரத்தகுடங்கை" என்று கல்வெட்டுகள் சொல்லும்[10] மேலும், இராசராச சம்பூவரையர் எனும் குறுநில அரசன் கோவன் எனும் பெருவீரனுக்கு நிலம்மானியமாக வழங்கிய தாகவும், நெருக்கடி காலங்களிலே கோவன் வேறு யாருக்கும் துணை போகாது. இராசராச சம்பூவரையருக்கே துணை செய்ய வேண்டும் என ஒப்பந்தம் செய்யப்பட்ட தாகத் தென்னார்காடு மாவட்டம் திருவாமத்தூர் கல் வெட்டு கூறுகிறது என்பர் அறிஞர் அப்பாதுரை அவர்கள்[11] இவை போன்ற நிலமானியங்களைப் பிற்காலச் சோழர் கல் வெட்டுக்கள் பெரிதும் கூறும். இத்தகைய நிலவுடைமை வர்க்கப் போர்த்தலைவர்கட்கும் நிர்வாகிகட்கும் மாராயன் பேரரையன், அரையன், மூவேந்தவேளாளன், தொண்டைமான், பல்லவராயன், காளிங்கராயன், சேதிராயன், பல்லவராயன், மாவிலி வாணவராயன், கோளரசன், விழுப்பரையன், மழவராயன், நாடாள்வான் சோழகோன் என்பன போன்ற சிறப்புப் பட்டங்களை கொடுத்துக் கௌரவிக்கப் பட்டார்கள். போரிலே ஈடுபடுகின்றோர்க்கு நிலம் கொடுக்கும் பழக்கம் புறநானூற்றுக் காலத்திலே இருந்தாலும் கூட (புறம் 297, 330) அது மானிய வடிவமாக நன்கு செழுமைப் பட்டது

பிற்காலச் சோழர்களின் காலத்திலே தான் என்று தெரிகிறது.

சுருக்கமாகச் சொல்லப்போனால், ஏறத்தாழ கி. பி7ஆம் நூற்றாண்டளவில் தொடங்கிய வணிகர் வேளாளர் போராட்டத்தில் வேளாளர்கள் தம்முடன் ஆயர், பரதவர், வண்ணார், செக்கர், ஆமாத்தியர், குயவர், சாலியர் ஏகாலியர், பாணர், துளையர், புலையர் போன்ற பல்வேறு தொழில் இனத்தவரை இணைத்துக் கொண்டு போராடி, வெற்றி கொண்டனர் எனத் தெரிகிறது. இது அடிப்படையில் பொருளாதாரப் போரட்டம். சமயப் போர்வை போர்த்திக் கொண்டு நடந்த இப்போரட்டத்தின் பல்வேற அடிப் படைச் சராம்சங்களைத் தேவாரம்—திருப்பாசுரம் போன்ற பல்வேறு பக்தி இயக்க இலக்கியங்களிலே காணலாம் வெற்றி பெற்ற வேளாளவர்க்கத்துக்கு, பரந்துபட்ட நிலங்களை ஒன்றிணைக்கவும், அவற்றைப் பெரிதும் விளைச் சலுக்குக் கொணரத் தீர்க்கமான முறையில் உறவுமுறையை மாற்றியமைக்கவும் வலுவான அரசியல் அமைப்பு தேவைப் டடுகிறது. இத்தகைய வரலாற்றுத் தேவைகள் தோன்றிய தாலே இங்கே பேரரசு தேவைப்படுகிறது. இதை பிற்காலச் சோழர்கள் சரியான முறையில் நிறைவேற்றுகின்றனர். அவர் தம் காலத்தில் காணப்படும் கிராம வகைகளுள் ஒன்றாகிய சதுர்வேதிமங்கல கிராமங்களின் சமூக அரசியல் பொருளாதார அமைப்பை பற்றி ஆராய்வதே இக்கட்டுரை யின் மைய நோக்கமாகும்.

வலுவான மத்திய அமைப்போடு நாட்டை நிர்வாகிக்க நாடுபல பிரிவுகளாக பிரிக்கப்பட்டது மண்டலம், வளநாடு, நாடு, கூற்றம், கிராமம் எனப் பலபிரிவுகளாக்கப்பட்டது. சோழப் பேரரசின் நிர்வாகத் துறையில் அடித்தளமாக இருப்பது கிராமம்தான். இவை வெள்ளான்வகை, சதுர் வேதி மங்கலம் என இருவகைப்படும். சதுர்வேதி மங்கலம் என்பது பிரம்மதேயம், சர்வமானிய அக்கிரகாரம் என்றும் சொல்லப் படுவதுண்டு அரசனால் — அரசகுடும்பத்தினரால்—பெரும் செல்வத்தர்களால் நான்மறை அறிந்துணர்ந்த அந்தணர்

களுக்கு மானியமாகக் கொடுக்கப்படும் கிராமங்கள் சதுர்வேதிமங்கலம் எனப்படும். நான்மறையாளர்கட்கு நிலம் மானியமாகக்கொடுப்பது பல்லவர் காலத்திலும் இடைக்காலப் பாண்டியர் காலத்திலும் அருகிய வழக்கோடு இருந்தது உண்மைதான். உதாரணமாக "தண்டகநாட்டு கிராமமான புண்ணியத்தில் வாழ்பவனும்......ஆகிய ஜேஷ்ட பாத சோமயாஜி எனும் அந்தணனுக்குக் கொடுகொல்லியான ஏகதிரமங்கலம் பிரமதேயமாகக் கொடுக்கப்படுகிறது" என இரண்டாம் நந்திவர்ம பல்லவனின் (கி.பி. 826—849) காசாக்குடிச் செப்பேடு கூறுகிறது[12] இதே போல பாண்டியர் வழங்கியதைப் பற்றிச் சொல்கையில் 'பிரம்மதேயமாகக் காரண்மையும் மீயாட்சியும் உள்ளடங்கஸர்வபரிஹாரமாக நீரோட்டிக் குடுக்கப்பட்டதென' சென்னை அருங்கலச் செப்பேடு சொல்கிறது என்பர் கே. ஏ. என் நீலகண்ட சாத்திரியார்[13] இப்படிப் பிற்காலச் சோழர்கட்கு முன்னாலே நான்மறை அந்தணர்களுக்கு நிலம் மானியமாக — சதுர்வேதிமங்கலமாக — கொடுக்கப்பட்ட செய்திகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அருகியே காணப்படுகிறது. ஆனால் பிற்காலச் சோழர்கள் காலத்தில் தான் இம்மானியங்கள் அதிகமாகவும் நன்கு செம்மைப் பட்டும் காணப்படுகிறது. இதனுடைய சிறப்பைக் காண வேண்டுமானால் — பிரமதேயக் கிராமங்களின் சமூக அமைப்பை புரிந்து கொள்ள வேண்டுமானால்— அந்தக்காலத்திய சமூகத்தையும் குறிப்பாக அதற்கு அடித்தளமாக இருக்கும் உற்பத்தி முறையையும் காண வேண்டும்.

பொருள் உற்பத்தி என்பதுதான் மனிதர்களை விலங்கினின்று பிரிக்கின்ற முக்கியமான எல்லைக்கோடு. மனித சமூகம் தனக்குத் தேவையான பொருள்களைத் தானே உற்பத்தி செய்கிறது. ஒவ்வொரு சமூக அமைப்பிலும் ஒவ்வொரு வேறுபாடான முறையில் உற்பத்தி செய்யப்படுகிறது. இதையேதான் உற்பத்திமுறை என்று சமூக அறிவியலாளர் குறிப்பிடுகின்றனர். உற்பத்தி செய்யும்போது சிலவற்றைச் சாதனங்களாக்கி, கருவி

களைப் பயன்படுத்துகின்றனர். இந்த உற்பத்திச் சாதனங்களையும் உற்பத்திக் கருவிகளையும் பொதுவாக உற்பத்திச்சக்திகள் என்பர். மனிதசமூகத்தின் முன்னேற்றம் என்பதே இயற்கையோடு தொடர்ந்து போராடி வெற்றி பெறுவது என்பதுதான். உற்பத்தியிலே ஈடுபடும் மனிதன் இயற்கையை மட்டும் ஆதிக்கம் செலுத்தவில்லை. இன்னொரு மனிதனையும் ஆதிக்கம் செலுத்துகிறான். எனவே தவிர்க்க இயலாதவாறு மனிதர்கள் தங்களுக்கு இடையில் உறவு முறை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இதுவே சமுதாய உறவுமுறையாகப் பரிணமித்துவிடும். உற்பத்திச் சக்திகள் யார் வசம் இருக்கிறதோ அவர்கள்தான் உறவு முறையை நிர்ணயிக்க முடியும்; இந்த உறவுமுறைதான், உற்பத்திப் பொருள்களின் பங்கீட்டை நிர்ணயிக்கின்றது. இதுவேதான் எல்லா சமுதாயத்துக்கும் அடித்தளம் என்று சொல்லப்படும் உற்பத்தி முறை என்பது.

பிற்காலச் சோழர்கள் காலத்தின் கீழ் முழுமையடைந்த சமூகத்தை நிலமானியச் சமூகம் என்பர் வரலாற்றறிஞர்கள். அதன் பொருளாதாரமுறை, நிலமானிய பொருளாதாரமுறை என்பர் க. கைலாசபதி[14] இந்நிலமானியமுறையின் பல்வேறு கூறுபாடுகளைப் புரிந்து கொள்ளுவது, பிரமதேயக் கிராம அமைப்பைப் புரிந்து கொள்வதற்கு மிகவும் சாதகமாக இருக்கும்.

பண்டைய காலத்திலே, புராதன மானிட சமூகம் சிறு சிறு குழுக்களாகச் சேர்ந்து கூட்டுமுறையில் பொருள்களை உற்பத்தி செய்தது. அங்கே தனி மனிதனின் உழைப்பு என்ற பேசசேயில்லை. பொருள்களை கூட்டாகப் பயன்படுத்தும் முறையிருந்தது. பின், கல் கருவிகளைவிடுத்து, வில், அம்பு போன்ற கருவிகளைப் பயன்படுத்துகிறான். மிருகங்களைப் பிடித்து பழக்கத் தெரியாத மனிதன், பின் அவற்றைப் பழக்கிப் பயன்படுத்துகிறான். அதன் பின், வேட்டைத் தொழிலையே செய்த மனிதன், மேய்ச்சல், பயிர்த்தொழில் ஆகியவற்றில் ஈடுபடுகிறான். உணவு சேகரித்த நிலை போய் உணவு உற்பத்தி செய்யும் நிலைக்கு

வருகிறான். மனித சமுதாயத்தில் வேலைப்பிரிவினை தொடங்குகிறது. மனிதனின் உழைப்பாற்றல் தன் தேவைக்கு அதிகமாகவே உற்பத்தி செய்கிறது. தேவைக்கு அதிகமான உற்பத்தியை—உபரி உற்பத்தியை — பயன்படுத்துவது குறித்துக் கலகங்கள் ஏற்பட்டன. உற்பத்திக் கருவிகளையும் பொருள்களையும் வைத்திருப்பவர்கள் ஒரு பிரிவாகவும் அவை இல்லாதவர்கள் மறுபிரிவாகவும் கலகம் செய்கின்றனர். வர்க்கப்பிரிவினைகள் தோன்றலாயின. இவர்கள் தமக்குள் இணக்கம் காணமுடியாமல், ஒரு பிரிவினர் இன்னொரு பிரிவினரை அடக்கி ஆள ஒரு நிறுவனம் தேவைப்படுகிறது; அதுவே அரசு என்பது. பெரும்பான்மையான மக்களை வலுவான சிறுபான்மையினர் அடக்கவும் அடிமையாக் மாற்றவும் அங்கே சாத்தியக் கூறுபாடுகள் ஏற்படுகிறது. தொழிற்கருவிகள் சில பிரிவினருக்கே சொந்தமாகின்றது. அரசன், அந்தணன், வைசியன் ஆகிய மூன்று பிரிவினருக்கே தொழிற்கருவிகள் சொந்தம் என்று நம் தொல்காப்பியம் பின் வருமாறு சொல்கிறது.

> "ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவியும்
> யாரும் சார்த்தி அவையவை பெறுமே"
>
> (பொருளதிகாரம்—மரபியல் 75)

சமுதாயத்தில் உயர்ந்தோர் இழிந்தோர் என்ற பிரிவினைகள் ஏற்படுகின்றன. இழிந்தோர் தொழிலை எதற்கும் உவமிக்கக் கூடாது என்றே இலட்சியப் படுத்தப்படுகிறது (புறம் 82). சிவிகையில் அமர்ந்திருப்போன்—தூக்குவோன் என்ற காட்சியளவைகளால் இம்முறை தத்துவமாக்கப்படுகிறது. அடிமைகளை அதிகம் பயன்படுத்தியதால், பொருள் உற்பத்தி குவிகிறது; வாணிபம் பல்கிப் பெருகுகிறது. இதனையே அடிமைச் சமுதாய முறை என்பர். இரும்பைக் காய்ச்சி உருக்குவதிலும் பயன்படுத்துவதிலும் மேலும் மேலும் தேர்ச்சி கிடைத்தது. இரும்புக் கலப்பைகள், தறிகள் பயன்படலாயின. புதிய புதிய நிலங்கள் சாகு

படிக்கு உள்ளாயின. ஆனால் அடிமைக்கு வேலையில் அக்கறையில்லை; சுயமுயற்சியும் தேவையில்லை. எனவே இந்த உறவுமுறை உற்பத்திக்குத் தடையாக இருக்கிறது. இந்தத் தடையைத் துடைத்து எறியப் போராட்டங்கள் நடந்தன. இதன் விளைவாகவே, நிலப்பிரபுத்துவம் தோன்றுகிறது. ஆண்டான் — அடிமைஉறவு மாறிப் போய், நம் நச்சினார்க்கினியர் சொல்வதுபோல் உழுவித்துண்போர்—உழுவோர் என்ற உறவு ஏற்படுகிறது. மன்னனுக்குச் சேவை செய்தும் போர்க்காலங்களில் படையுதவி செய்தும் நிலப்பிரபு நிலம் பெறுகிறான். அந்நிலத்துக்கு அவனே உரிமையாளன். மேல்அதிகாரம் செலுத்துபவன். நிலப்பிரபுக்கு கீழே உள்ள பண்ணைஆட்கள் அவன் நிலத்தில் உழைத்து அவனுக்குக் கொடுத்து போக, எஞ்சியதைப் பெற்று வாழ்கிறார்கள். நிலப்பிரபு நிலத்தில் பரம்பரையாகவே உரிமையுடையவன் என்பதைக் "காணியாட்சி"[15] என்ற சொல்லாலும், மேலாதிக்கம் உடையவன் என்பதை "மீயாட்சி"[16] என்ற சொல்லாலும் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. பண்ணையாட்கள் நிலத்தில் பலாத்காரமாகவும் வலுக்கட்டாயமாகவும் உழுவிக்கப்பட்டனர். இதை "வெட்டி" (forced labour — Vetti) என்று சொல்கிறது கல்வெட்டு. நிலமானிய முறையின் உடைமை வடிவமானது நிலமாகவும் அதனோடு கட்டப்பட்ட பண்ணை ஆள்களாகவும் சிறுசிறு கைத்தொழிலாகவும் இருக்கிறது;

பிற்காலச் சோழர் காலத்தில் நிலத்திற்குக் கொடுக்கப்பட்ட மதிப்பைப் பார்த்தால் இது நமக்குத் தெளிவாகத் தெரியும். போரிலே ஈடுபட்ட வீரர்களுக்கு நிலம் மானியமாக வழங்கப்பட்டது என்பதைப் பார்த்தோம். அரசர்கள் விரும்பிய போது படைகளை அனுப்பி உதவும் பொருட்டு அப்படைகளின் தலைவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் படைப்பற்று, வன்னியப் பற்று என்று வழங்கின என்பர்[17] நிலம் வைத்திருந்து, அதிலிருந்து வரிசெலுத்தும் குடிகளை இறைகுடிகள் எனவும், அவ்வாறு செலுத்தாத மக்களை இறையிலி குடிகள் எனவும் சொல்லப்படுகிறது.[18] சில குறிப்பிட்ட

மக்களின் தகுதிகளையும் தேவைகளையும் அவர்களுக்குள்ள நிலத்தை வைத்தே கணக்கிடுகின்றனர்.[19] நிலவுரிமை முக்கியமாகக் கருதப்பட்டது. நிலவுரிமையை மாற்றும்போது அரசு அலுவலாளர்கள் அங்கே அவசியம் இருந்தாக வேண்டும்.[20] நிலங்கள் துல்லியமாக அளக்கப்பட்டன[21] நிலங்கள் நிலவளம், நீர்ப்பாசனவளம், விளைச்சல் ஆகியவற்றைக் கொண்டு தரம்பிரிக்கப்பட்டன. கி பி. 1074—ஆம் ஆண்டில் ஆதிராசேந்திரன் காலத்திய கல்வெட்டின் மூலமாக நிலம் 14 தரங்களாகப் பிரிககப்பட்டது என அறிகிறோம்.[22] இத்தரத்தைக் கொண்டே வரி நிர்ணயம் செய்யப்படுகிறது. எல்லாத்தொழில்களுமே நிலத்தை அடிப்படையாகக்கொண்டுள்ளன.நிலப்பிரபுகளுக்குப் பக்கத்திலேயே சொந்தஉழைப்பை அடிப்படையாகக்கொண்டு தொழில் செய்யும் கைவினைஞர்கள் இருப்பினும் இவர்கள் நிலப்பிரபுக்குச் சம்பந்தப்பட்டுத்தான் தீரவேண்டும். இவர்களுக்கு ஊதியம் சிறு சிறு நிலங்களாகத் தரப்படுகிறது. தொழில் வினைஞர்கள் நிலம் மானியமாகப் பெற்றனர்[23]. வைத்தியபோகம், தச்சக்காணி, உவச்சக்காணி, நிருத்தபோகம், பரதவிருத்தி. பட்டவிருத்தி, பதியிலார் காணி, நட்டுவக்காணி, சாக்கைக்காணி, கூத்தாட்டிக்காணி, வீணைக்காணி, மெய்மட்டுக்காணி, முரலியக்காணி, கணக்கக் காணி, பாணக்காணி, மெழுக்குபுறம், அம்பலப்புறம் என்று பல மானியங்களைப் பற்றி கல்வெட்டுக்கள் கூறுகின்றன[24].

இப்படி நிலமானியத்தின் பல்வேறு கூறுபாடுகளை நாம் பிற்காலச் சோழர் காலத்தில் காண்கிறோம். ஆனால் மேலைநாட்டு ஆராய்ச்சியாளர் பலர் இந்திய நாட்டில் நிலமானிய அமைப்பு முறை காணப்படவில்லை என எழுதியுள்ளனர். உதாரணமாகட் பாட்டன் ஸ்டெயின் (Burton Stein) என்ற வரலாற்றாசிரியர் பின் வருமாறு எழுதுகிறார்; "தென்னிந்தியாவிலோ இந்தியாவிலோ நிலமானிய அமைப்பு முறை இருந்தது என நிரூபிக்கும் முயற்சியானது, வலுக்கட்டாயமான வீணான முயற்சியாகும்"[25] பர்ட்டன்ஸ்டெயின்,

டேனியல்தார்னர், வில்லியம் குருக் போன்ற வெளிநாட்டு ஆசிரியர்களும், எஸ்.கே. மித்ரா, எஸ். கே. மைட்டி போன்ற இந்திய ஆசிரியர்களும், ஐரோப்பியாவின் நிலமானிய அமைப்பு முறையின் பல்வேறு அம்சங்கள் அதே வடிவத்தில் இந்தியாவில் காணப்படவில்லை என்றும், ஆகவே இந்தியா வில் நிலமானிய அமைப்பு முறையைக் காணுதல் வீண் முயற்சி என்றும் எழுதுகின்றனர்.

இதைக் கொஞ்சம் பார்ப்போம். ஐரோப்பியாவில் இங்கிலாந்தில் வில்லியம் மன்னரின் படைத்தலைமையின் கீழ் நேர்மானியர் 11ஆம் நூற்றுண்டில் கைப்பற்றியதில் இருந்து நிலமானிய அமைப்புமுறை அங்கே தொடங்குகிறது என்பர். அந்நிலமானிய முறையைப் பற்றிப் பெர்னல் எனும் அறிஞர் பின் வருமாறு கூறுகிருர்.

"நிலமானிய அமைப்பு முறையின் பொருளாதார அடித்தளம் நிலமாகும். வேளாண்மை உற்பத்தியும், அதைச்சார்ந்த பரந்துபட்ட கைத்தொழிலும் நன்குகவனிக் கப்பட்டது. ஒவ்வொரு நிலப்பிரபுவும் கிராமங்களையோ அல்லது கிராமங்களில் பெரும்பங்கு நிலத்தையோ வைத் திருக்கின்ருன். பண்ணைஆள்களைச் சுரண்டுவதால் சமூகப் பிளவு ஏற்படுகிறது. நிலபபிரபுக்கள் குழுக்களாக இயங்கி னர். நிலப்பிரபுக்கள் ஒரு பிரிவினர் படைத்தளபதிகளாக வும், மற்ருெரு பிரிவினர் மதகுருமார்களாகவும் இருந்தனர். பண்ணை ஆட்கள் பலாத்காரமாக அல்லது வாரத்துக்கு நிலத்தில் உழுவிக்கப்பட்டனர். தனக்கு நிலம் கொடுத்ததற் காக நிலப்பிரபு சமூகத்தைப் பல விதமாகச் சுரண்டுகிருன். கிராமியப் பொருளாதாரத்தின் ஒட்டுண்ணிகளாகப் படைத் தளபதிகளும் மதகுருமார்களும் இருந்தனர். பண்ணை அடி மைகளின் கடைசிச் சொட்டு ரத்தத்தையும் இவர்கள் உறிஞ் சினர். இவ்வாறு பிளவுண்டு கிடந்த சமூகத்தின் உறவு முறைகளை ஏற்றுக்கொண்டும் அதைத் தத்துவமாக்கியும் மக்களை ஏமாற்றியது, ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை. மன்னர்கள் பெருபளவுக்கு உதவிய கத்தோலிக்கத் திருச்

சபை தன்னவிளல் பெரும் நிலவுடமை நிறுவனமாகவே இயங்கியது''[26]

இங்கே நிலத்தின் மதிப்பையும், நிலப்பிரபுகள் வலுக் கட்டாயமாக வேலை வாங்கும் முறையையும் கைவினைஞர்கள் நிலையையும் பார்த்தோம் நிலப்பிரபுக்கள் தங்களுக்குள்ளே ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொள்கின்றனர். சித்ரமேழி என்று அழைக்கப்படும் இந்த அமைப்பின் உறுப்பினர்கள் பூமிபுத்திரர்கள், நாட்டு மக்கள் எனப்படுவர் [26a] ஒருவேளை நிலம், பூமி இவர்களுக்குச் சொந்தம் என்பதால் இப்பெயரிட்டு அழைத்திருக்கலாம். மேலும் இக்கிராமத்தின் நிலஉற்பத்தியையும்,பங்கீட்டையும் இச்சித்ரமேழிக்குழுதான் நிர்ணயம் செய்யும்.[27] இக்குழுவிற்குத் தவிர்க்க இயலாதபடி அரசனின் ஆதரவு இருந்தது.[28] இறை குடி, இறையிலிகுடி, உழுவித் துண்போர், உழுவோர் என்று பல்வேறு பிரிவுகளாகப் பிளவுண்ட சமுதாய உறவு முறைகளை ஏற்றுக் கொண்டும் இலட்சியப் பூர்வமாகக் காட்டியும் பிற்காலச் சோழர்காலக் கோயில்களும் அவற்றின் பின்னுலிருந்த பிராமணர் இனமும் மக்களை மாயையில் ஆழ்த்தினர். 'வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறைகள் விளங்க' மன்னர்களும் பெருங்குடிகளும் உதவினர். சிவன் கோயிலுக்குத் தேவதானமும், வைணவக் கோயில்களுக்குத் திருவிடையாட்டமும், மடங்களுக்கு மடப்புறங்களும் தானமாகக் கொடுக்கப்பட்டன. போரிலே கொள்ளையடித்த பொருள்களையும் உள்நாட்டுச் சுரண்டலில் கிடைத்த அபரிமிதமான பொருள்களையும் மன்னர்களும் பெருங்குடிகளும் மானியமாகக் கொடுத்தனர். உதாரணமாக, முதலாம் இராசராச சோழன் காலத்தில் ராசேந்திர சிம்ம வளநாட்டின் வீரநாராயண சதுர்வேதிமங்கலம் கிராமத்துச் சிவன் கோயிலுக்கு 19908 முத்துச்சதங்கைகள் கொண்ட கைப்பிடியுடன் 27.5 கழஞ்சு எடை கொண்ட பொன்னுலகிய குடை கொடுக்கப்பட்டது.[29] "ஐரோப்பியாவிலே கத்தோலிக்க நிறுவனங்கள் நிலவுடைமை நிறுவனங்களாக இருந்ததைப் போலவே இந்தியக் கோயில்களும்

நிலவுடைமை நிறுவனங்களாக இருந்தன" என்பர் அறிஞர் பெருமக்கள்.[30]

இப்படி நிலமானிய முறையின் பல்வேறு அம்சங்களைக் காண்கிறோம். ஐரோப்பாவின் நிலமானிய முறையின் அம்சங்கள் அதே வடிவங்களில் இல்லை எனச் சொல்லப்பட்ட போதிலும், நிலமானிய முறையின் அடிப்படை சாராம் சத்தை அதன் உள்ளடக்கம் மாறாமலே நாம் இங்கு காண்கிறோம். இந்தியாவின் நிலமானிய முறையை ஆய்ந்த பேரறிஞர் ஆர். எஸ். சர்மா 'ஐரோப்பாவின் நிலமானிய முறை அதேவடிவங்களில் இங்கே காணவில்லை என்ற போதிலும் நிலமானிய முறையின் அடிப்படை சராம்சத்தைக் காண்கிறோம். பண்ணை ஆட்களால் உற்பத்தி செய்யப்பட்ட உபரி உற்பத்திப் பொருள்களை நிலவுடைமை வர்க்கம் நிலத்தில் பண்ணை ஆள்கள் மீது உள்ள தனது ஆதிக்கத்தைப் பயன் படுத்திக் கைப்பற்றிக் கொள்ளும அமைப்பே நிலமானிய முறை என்பதாகும். இந்த அடிப்படைச் சாராம்சத்தை நாம் இந்தியாவில் பரக்கக் காண்கிறோம்' என்பர்[31]

இனி, நிலமானியப்பொருள் உற்பத்தி முறையை அடித்தளமாகக் கொண்ட பிற்காலச் சோழர்கள் காலத்திய பிரமதேயக் கிராமங்களைக் காணலாம். அந்தணர்களுக்கு தனியாகவும் கூட்டாகவும் கிராமங்கள் மானியமாக வழங்கப்படுவதுண்டு. தனியொரு பிரமாணனுக்கு வழங்கும் மானியம் ஏகபோகம் என்றும், நிறையப் பிராமணர்களுக்கு கூட்டமாகவும் தனித்தனியாகவும் வழங்கும் மானியம் கணபோகம் என்றும் வழங்கப்படும். சுந்தரசோழரின் அன்பில் செப்பேடுகளிலிருந்து அனிருத்த பிரமாதிராஜா எனும் பிராமணருக்கு 10 வேலி நிலம் மானியமாகக் கொடுக்கப்பட்டு. பின் அதற்கு கருணாகரமங்கலம் என்று புதுப்பெயர் கொடுக்கப் பெற்றது. அது விபரம் பின்வருமாறு:

"இந்த பூமிக்குச் சொந்தமான எல்லாப்பொருட்களும் கனிதரும் மரங்களும் நீர், நிலம், தோட்டம், ஆழ்கிணறுகள், புறம் போக்கு, மேய்ச்சல் நிலம், மன்றங்கள், கால்வாய்கள், ஆறு, குளங் எல்லாமே பிரமதேயமாகக் கொடுக்கப்

பட்டது. காராண்மை மியாட்சி உட்பட அனைத்துமே பிரம தேயமாகக் கொடுக்கப்பட்டது ... அரசனால் இக்குறிப்பிட்ட பூமியில் அனுபவிக்கப்பட்ட அனைத்துமே கொடுக்கப் பட்டது.'' (அன்பில் செப்பேடுகள்). கணபோகச் சதுர்வேதி மங்கலங்கள் சாலம் எண்ணிக்கையில் அதிகம் காணப்படு கிறது. 'அரசனின் ஆணைக்கிணங்க, அரசு அலுவலாளர் ஒரு கிராமத்தை விலைக்குவாங்கி, அதை 103 பகுதிகளாக்கி 106 பகுதிகளைப் பிரம்மதேயமாகவும், 2 பகுதிகளைக் கோயி லுக்கும் வழங்கி அக்கிராமத்துக்குத் தஞ்சைசாமந்தநாராயண சதுர்வேதி மங்கலம் என்று புதுப் பெயரிட்டனர்' என்று ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது[82] இவ்வாறு மானியம் பெறும் நிலத்தை அனுபவிக்கவும் அடமானம் வைக்கவும் விற்கவும் இவர்கள் உரிமை பெற்று உள்ளனர். இக்கிராமங்களிலே வேறு இனத்தார் நிலவுடைமையாளராக இருக்கக் கூடாது என விரும்பினர். முதலாம் இராசராசனின் 17ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டின் மூலம், இராசகேசரி சதுர்வேதி மங்கலக் கிராமத்தில், வேறு இனத்தவர் தம் நிலங்களைப் பிராமணரிடம் விற்று விடவேண்டும் என ஆணையிட்டதாக அறிகிறோம்[83] இதெல்லாம், ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் சிறுசிறு நிலங்களெல்லாம் நேர்த்தியான முறையில் சாகு படிக்குக் கொண்டு வரப்பட்டதையே நமக்குத் தெரிக் கிறது. இதையே பின்வரும் கூற்றும் நிரூபிக்கிறது.

"சோழநாட்டில் காவிரிக் கரையின் பகுதிகளிலே மக்கள் தொகை மிகவும் நெருக்கமாக இருந்தது. பிற பகுதிகளில் அவ்வாறு இல்லை. அந்தக் கரையோரப் பகுதிகள் பெரும்பாலும் பிரமதேயக் கிராமங்களாகவே காணப்படுகிறது. நிலத்தில் உழாதமக்களாவும் அதிகம் பயன்பெறும் மக்களாகவும் உள்ள பிராமணர்களின் குடி யிருப்பாகிய பிரமதேயக் கிராமங்கள் வளமான நீர்ப்பாசன மிக்க பகுதிகளிலே காணப்படுகின்றன'' என்பர் பர்ட்டன் ஸ்டெயின்[84] வண்டல்மண் நிலங்களையே பெரிதும் மானிய மாகப் பெற்ற பிராமணர்கள் அவற்றை இறையிலியாகவே பெற்றனர். இவ்வாறு வளம் பெற்ற நிலம் மானியமாக

வழங்கப்படும் காரணத்தைப் பின்னர் பார்ப்போம். இக் கிராமங்களின் தனித்தன்மைகள் குறித்து இது 'தனியூர்' என்றே சில இடங்களில் சொல்லப்படுகிறது. எனவே, "இக் கிராமங்கள், நிலத்தில் உழைக்காத ஆனால் நிலத்துக்குச் சொந்தமான வர்க்கத்தினர் குடியிருப்பாகும். நிலத்தில் உழைக்கும் பண்ணை ஆள்களின் மேல் ஆதிக்கம் செலுத்தும் நிலப்பிரபுவர்க்கத்தின் குடியிருப்பாகும்" என்பர் அறிஞர் அப்பாத்துரை அவர்கள்.[35] நிலம் கூட்டாக இருப்பதால் குத்தகையாளர்களுக்கு விடப்படுகிறது. இவர்கள் குறிப்பிட்ட வாரத்தை — பங்கை—சரியாகச் செலுத்த வேண்டும். இவர்கள் தம் வாரத்தைச் சரியாகச் செலுத்தாவிடில் ஒப்பந்தம்விலக்கப்பட்டு வேறொருவருக்குக்கொடுக்கப் படுகிறது[36] அவ்வாறு விலக்கும்போது, கீழேயுள்ள பண்ணை ஆள்களை நீக்கி விட்டும் கொடுக்கலாம்; நீக்காமலும் கொடுக்கலாம். இதை 'குடி நீக்கிக் காராண்மை' என்றும் 'குடி நீங்காக் காராண்மை' என்றும் கல்வெட்டுகள் கூறும். குத்தகையாளர்கள் தாம் பெற்ற நிலத்தை அடகுவைக்கவோ விற்கவோ, இன்னொருவருக்கு மாற்றிக் கொள்ளவோ முடியாது. நிலம் சரியான முறையில் பயிரிட்டு, வாரம் ஒழுங்காகச் செலுத்தப்படுவதற்கும், நிலம் எப்போதும் நிலவுடமையாளர் வசம் இருப்பதற்கும் ஏற்றாற்போல் நடைமுறைப் பழக்கவழக்கங்கள் இருந்ததையே காட்டுகிறது. இக்குத்தகையாளர்க்கும் கீழே, பண்ணை ஆள்கள் பயன்படுத்தப் பட்டனர். இவர்கள் பரம்பரை பரம்பரையாக நிலத்தோடு கட்டப்பட்டவர்கள். இவர்களைக் "கிழமைத் தொழில் உழவர்கள்" என்று பெரிய புராணம் பேசும் (திருநாளைப் போவார் நாயனார்புராணம்). இவர்கள் நிலைமை மோசமாக இருந்தது. நிலத்தில் அன்றாடக் கூலிகளையும் பயன்படுத்தினர் அடிமைக் கூலிமுறையும் இருந்தது. இவர்கள், தாம் சார்ந்துள்ள நிலப்பிரபு அந்நிலத்தை விற்கும் போது சேர்த்தே விற்கப்பட்டனர்[36]. நன்கொடையாகக் கொடுக்கப்படும் போது சேர்த்தே கொடுக்கப்பட்டனர்[37] இவர்களுக் கு

உழப்பறையர்கள் என்ற பெயருண்டு[38] பொதுவாக கீழ் நிலையில் உள்ள இத்தரப்பினர்களை அஃறிணைப் பொருள் களாகவே வைத்து எண்ணினர். எடுத்துக்காட்டாக, வரி களைப்பற்றிச் சொல்லும் கல்வெட்டு ஒன்றில், பெண்களின் ஆடை, பாக்கு, மிளகு, வெற்றிலை, உப்பு, பருப்பு போன்ற பொருள்களோடு இவர்களும் சேர்த்தே சொல்லப் பட்டனர்.[39]

இந்தக் கிராமங்களில், வாழ்வுக்குத் தேவையான கைத் தொழில் பிரிவுகள் காணப்படுகின்றன. தச்சன், குயவன் தட்டான், அம்பட்டன், தலையாரி, மருத்துவன்; செக்கார், இடையர், நெசவாளர் போன்ற இவர்கள், கிராமங்களில் ஒதுக்குப் புறமாக வாழ்கின்றனர். இதற்கு "கழனைகள்" என்று பெயர். இவர்கள் நிலக்கிழார்களுக்கு எவ்வகையி லானும் கட்டுண்டவர்களே. கி. பி 1123இல் திருக்கண்ணபுரம் சதுர்வேதி மங்கலத்திற்குச் சுற்றுவட்டாரக் கிராமத்தில் உள்ள நெசவாளர்கள் தம் பணியைச் சபையிடம் ஒப்ப டைத்தனர்; மகாசபையின் கட்டுப்பாட்டின் கீழ் அவர்கள் குடியேற்றம் ஏற்கப்பட்டது என்று தெரிகிறது[40] இவர்கள் நிலவுடைமையாளர்களின் கருணையிலே வாழ்வு நடத்த வேண்டியுள்ளது. இவர்கள் சேவைக்கு ஆங்காங்கே துண்டு நிலங்கள் கொடுக்கப்பட்ட போதிலும், இவர்கள் நில வுடைமையாளருக்கு கட்டுப்பட்டவர்களே என்பர் கே. ஏ நீலகண்ட சாத்திரியார்[41] இவர்கள் பரம்பரையாகவே சாதியை அடிப்படையாகக் கொண்டே தொழில் புரிகின்றனர். இவர்கள் அந்த அந்தக் கிராமங்களை விட்டு வெளியேறித் தொழில் செய்யக் கூடாதென்று தடுக்கப்பட்டனர் என்றும் அதை மீறிச் செல்பவர்கள் கிராமத் துரோகிகளாகக் கருதப்பட்டனர் என்றும் தெரிகிறது[42] இவ்வகை கிராமங் களில் சிறுபணியாள் (Menials) உண்டு. தோட்டக்காரன், காவற்காரன், சங்கு ஊதுபவன், அடிகீழ்நிற்பான் போன்ற பணியாள்களும் உண்டு. இவர்கள் நிவந்தம் (வரையறுக்கப் பட்ட ஊதியம்) பெறுவதுண்டு.

இப்படி உழைக்கும் பலம் கொண்ட மக்கள் தொகை

யையும் வளம் மிக்க நிலத்தையும் பிராமணர்களுக்கு மானியமாக அளிக்கக் காரணம் என்ன? இதற்கு, நாம் முதலில் அக்காலத்திய சமூகத்தில் பிராமணர்களுக்கு கொடுத்த செல்வாக்கைக் காணவேண்டும். சமூக ஏணியின் உயர் படிகளிலே பிராமணர்கள் வீற்றிருந்தனர். மக்களைப் பற்றிக் கூறும் கல்வெட்டு ஒன்றிலே 'அந்தணரிலிருந்து புல்லுப் பறிக்கிற பறமன் வரையில்' என்று சொல்லப்படுகிறது. அரசனும், பெருங்குடிகளும் போட்டியிட்டுக் கொண்டும் அந்தணரை ஆதரித்தனர். அரசர்களும் 'அருமறைமுழு துணர்ந்து அந்தணரை ஆதரித்தவர்' என்றே புகழப்படு கின்றனர். அரசர்களும் தம் எடைக்கு எடை பொன் கொடுத்தனர்; பொன்னால் செய்யப்பட்ட பசுவின்வயிற்றுள் புகுந்து, பின் அந்தப் பொற்பசுவையும் அந்தணருக்குத் தானமாகக் கொடுத்தனர். முறையே இவை துலாபாரம், இரணியகருப்ப தானம் எனப்படும். இருதானங்களும் ஒரே நேரத்தில் கூட நடைபெறுவதுண்டு

"சேமமார்த்தாண்ட சதுர்வேதிமங்கலத்து மகா சபையோம் கையெழுத்து: நம்முடைய சக்கர வர்த்தி உடையார் ஸ்ரீராஜராஜ தேவர் இவ்வூர்த் திருவிசலூர் மகாதேவர் ஸ்ரீகோயிலிலே துலா பாரப் புக்கருளின் அன்று நம்பிராட்டியார் நந்தி சக்திவிடங்கியார் ஹிரண்யகர்ப்பம் புக்கருளி"

என்று ஒரு கல்வெட்டுச் செய்தி இரண்டையுமே கூறுகிறது[43] பிராமணரை எதிர்த்துக் கலவரம் நடந்த போது, மூன்றாங் குலோத்துங்கன் அதை அடக்குமாறு ஆணையிட்டு, பிரா மணரை எதிர்ப்பவர்களிடமிருந்து தண்டம் வசூலிக்கப் படும் என எச்சரிக்கிறான்; அப்படி தண்டம் செலுத்தத் தவறினால் அவர்தம் நிலங்களிலிருந்து வெளியேற்றப்படுவர் எனவும் எச்சரிக்கிறான்.[44] பிராமணர் அல்லாத சிலர் கோயிலுக்குத் தீவைக்க முயன்றதாகக் குற்றம் சாட்டி, விசாரணையின் முடிவில் 1000 காசுகள் தண்டம் அவர் களுக்கு விதிக்கப்படுகிறது. தண்டம் செலுத்த யாரும் முன் வராததால் எல்லோருடைய நிலமும் விற்கப்பட்டு

அபராதத்துடன் 1060 காசுகள் அரசன் கருவூலத்தில் செலுத்தப்பட்டது. ஆறும் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் திருப்பனந்தாள் கோயில் நகைகளையும் பொன்பரிகலங்களையும் அபகரித்ததற்காக அந்தணர்கள் அரசன் முன் நிறுத்தப்பட்டனர். எல்லோருக்கும் மொத்தமாக 540 காசுகளே தண்டம் வழங்கப்பட்டது. அதில் ஓர் அந்தணன் தண்டம் செலுத்த முடியாது, தன் அர்ச்சகப் பங்கில் 4·5 நாள்களை விட்டுக் கொடுத்தான் எனத் தெரிகிறது[46] நீதி முறையிலும் அந்தணர்கள் செல்லக் குழந்தைகளாகப் பேணப்பட்டனர் என்றும் இதனால் அறிகிறோம். இந்தச் செல்வாக்குக்குக் காரணம் என்ன? அதுவே தான் மானியம் வழங்கியதற்குக் காரணம் ஆகும். அதை இங்கு பார்ப்போம்.

நிலமானிய வர்க்க சமுதாயமான சோழர் காலத்தில் சிலர் நிலக்கிழார்களாகவும் பலர் பண்ணை ஆட்களாகவும் இருந்தனர் என்றும், இதற்கிடையில் கைவினைஞர்கள் நிலக்கிழார்களுக்குக் கட்டுப்பட்டுத் தொழில் நடத்தினர் என்றும் பார்த்தோம் சமூகத்தின் பொருளியல் சக்திகளைத் தம் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஆளும் வர்க்கம் அக்கட்டுப்பாட்டை நிரந்தரமாகச் செலுத்துவதற்குப் படைபலம் தேவைப்படுகிறது. மேலும் நிர்வாக அமைப்பு, சட்டஅமைப்பு அரசுஅமைப்பு தேவைப்படுகிறது. இது மட்டுமல்ல அது எப்போதும். மக்கள் தொகுதியின் மனத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க விரும்பும். அதற்குத் துணை செய்யும் சமூகத்தின் அறிவார்ந்த சக்திகளுக்கு வேண்டியதைக் கொடுத்துத் தம் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளும். இங்கே தான் மதமும் சாதி உணர்வுகளும் கலாச்சார நிறுவனங்களும் தம் பங்கை நிறைவேற்றுகின்றன. மதம் பொதுவாகவே ஆளும் வர்க்கத்துக்கு அனுசரணையாகவே இருந்து வந்துள்ளது மதம் பிராமணர்களின் வாழ்க்கையாகவேயிருந்தது. நிலமானிய சமூகத்தில் உபரி உற்பத்தி செய்யும் பண்ணை ஆள்கள், அடிமைகள், கைவினைஞர்கள் ஆகியோரைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள மதம்

பயன்படுகின்றது. இதைப் படைபலத்தால், ஆணையிட்டுச் செய்துவிட முடியாது. இது காலங்காலமாக—மெதுவாக—ஆனால் அழுத்தந்திருத்தமாக செய்ய வேண்டிய பணி. இங்கேதான் சமயங்கள் கொடுக்கும் தத்துவம் பயன்படுகிறது. இந்த தத்துவங்கள் மக்கள் வாழ்வைப் பாதிக்கின்றன என்பதில் ஐயமில்லை.

இவர்கள் கற்பித்த வருணாசிரம தர்மங்களும் சாதி நெறி முறைகளும் சமுதாயத்திலே செல்வாக்கோடு திகழ்ந்தன. மன்னர்களும் மனுநீதிப்படியே ஆளுகிறோம் என்பதை வெட்டவெளிச்சமாகவே பறைசாற்றிக் கொண்டனர். வருணப் பாகுபாட்டில் கீழேயுள்ள சூத்திர இனம், பரம்பரை பரம்பரையாக உழைக்கக்கூடிய மக்கள், மேல் வருணத்தாருக்குக்கிடைக்கின்றனர். இத்தத்துவத்தைப் பரப்புவதற்காகத்தான் பள்ளிகள் கட்டி, அதில் மாணவர்களும் ஆசிரியர்களும் தங்கி வேத விசாரணையில் ஈடுபடுவதற்காக மானியங்கள் கொடுக்கப்பட்டன[46]. பிராமணர் வேதங்களிலும் மனுதர்ம சாத்திரங்களிலும் வல்லவராயிருந்தபடியால் பொது அம்பலங்களிலும் கோயில் திருமண்டபங்களிலும் அவற்றை மக்களுக்கு எடுத்துரைத்தனர். இதற்கு அரசர்கள் பாதை வகுத்துக் கொடுக்கின்றனர். தொண்டை நாட்டுத் திருவொற்றியூர் கோயிலின் கல்வெட்டு மூலமாக அக்கோயிலே வியாகரணதான வியாக்கியரன மண்டபம் அமைக்கப்பட்டதென்றும், அதில் வியாகரணம், சோம சித்தாந்தம், பாணிணீயம் ஆகியவை கற்பிக்கப்பட்டதென்றும் இதற்காக முதலாம் குலோத்துங்கனால் குலோத்துங்கக் காவனூர் எனும் 60 வேலி நிலமுள்ள கிராமம் மானியமாகக் கொடுக்கப்பட்டது என்றும் அறிகிறோம்[47]. ஒவ்வொரு சாத்திர நூல்களையும் மக்களிடம் போதிப்பதற்கு மானியம் வழங்கப்பட்டது. அதற்கு வியாகரண சாத்திர வியாக்கிய விருத்தி, பாவிஷ்யக்கிடைப்புரம், தைத்திரியக் கிடைப்புரம் என்று பெயருண்டு. உதாரணமாக, பாவிஷ்யம் கற்றுத் தர ஒரு பிராமணனுக்கு 72 குழி நிலம் மானியமாகக் கொடுக்கப்பட்டது[48].

நிலமானிய உடமை உறவுகளைக் கொண்ட பிற்காலச் சோழர் காலம், சாதாரண உழவர்களைப் பண்ணை அடிமைகளாகவே வைத்திருந்தது என்று பார்த்தோம்.

அன்றைய மக்கள் தொகையில் குறிப்பிடத்தக்க அளவு பண்ணை அடிமைகளே. அவர்களி, அடிமைவாழ்வுக்குப் பக்கத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்களை அடிமைப் பொருள்களைப் போல விற்று வாங்கும் முறை, தனிச் சொத்துரிமையிலே சகிக்க முடியாத வழக்கம் அன்று நிலவியது என்று கல்வெட்டுக்கள் சான்று பகர்கின்றன என்பர் நீலகண்ட சாத்திரியார்[49] இவ்வாறு அடிமையாகவோ அடிமைக்குப் பக்கத்திலோ இருக்கும் நிலையை இலட்சிய வாதப்படுத்தி, அந்த உடமைஉறவு முறைகளை உணர்வு நிலையிலோ உணர்வற்ற நிலையிலோ மக்கள் ஏற்கச் செய்யத் தத்துவம் முனைகிறது. உண்மை வாழ்வில் நிலக்கிழாருக்கும் பண்ணை ஆளுக்கும் உள்ள உறவு முறை தத்துவஉலகில் இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள உறவு முறையாக இலட்சியப்படுத்தப்படுகிறது. உதாரணமாக முதலாம் இராசேந்திர சோழனின் புகழ்ச் சின்னமான தஞ்சை இராச ராசேச்சுவரக் கோயில் பெருவுடையாருக்குச் சந்தனக் காப்பிட்ட பெருமை மிகு கருவூர்த்தேவர் எனும் அந்தணக் குடி மகனாரின் பாடல்களிலே இந்தஇலட்சியப்படுத்தல் ஊடுருவிப் பாய்ந்துள்ளதைக் காணலாம். "என்னுடைய அடிமைதான் யாதோ" (திருப்பூவணம்—பண்—பஞ்சமம்—பாடல் எண் 6) எனத் தன் அடிமைத் திறத்தையும் என் குடி முழுதும் ஆளும் குழகரே (திருக்களந்தையாதித்தேச்சரம்—பாடல் 4) என்று இறைவன் ஆளுகின்ற திறத்தையும் வெகுவாகப் பாடுகின்றார். இப்படி இலட்சியமயமாக்கப்படுவது பல்வேறு சங்கிலித் தொடர் 'உணர்வுகளால், நிலக்கிழார் பண்ணை அடிமைகளை வைத்துக் கொண்டு வேலை வாங்கப் பயனபடுகிறது. நிலக்கிழார்களால் சட்டுப்படுத்தப்படும் பண்ணை ஆளுகளுக்கு உற்பத்தியை விரும்பியவாறு அனுபவிக்கும் உரிமை கிடையாது. விளைச்சலின் பங்கீட்டை நிழக்கிழாரே நிர்ணயிக்கின்றான், இந்தப் பொருளாதாரக் கருத்து 'அப்படியே

த்துவமாகி விடுவதில்லை. ஆனால் இது சமயத்துறையில் பிரதி பலித்து சமயத்துக்கும் இலக்கியத்துக்கும் இருக்கும் பரஸ்பர தாக்கத்தால் இலக்கியத்தில் வெளிவருகிறது. "அருளுமாறு அருளி என்னை ஆளுமாறு ஆள" (தஞ்சை இராசராசேச்சரம் பாடல் 6) என்கிறார். இறைவன் உயிர்களுக்கு அருள் புரியும் வண்ணம் அருள் புரிந்து, அடிமை கொள்ளும் வண்ணம் அடிமை கொள்வான். இங்கே நிலவுலகில் இறைவனுக்கப் பட்ட நிலக்கிழார் அருளுவதைப் பெற்றுக் கொண்டு அவன் கீழே அடிமையாய் இருத்தலே சிறக்கும் என்று தத்துவ மூலம் பூசப்படுகிறது. கருவூர்த்தேவர் பாடல்களிலும் பிறர் பாடல்களிலும் இலட்சியமாக்கப்படும் இக்கருத்துக் களைத்தான் பிற்காலத்துச் சிவஞானபோதம் பிழிந்து கொடுக்கும்.

தத்துவத்தின் பணி இன்னுமொன்று உண்டு. மக்கள் வாழ்நிலையை ஓரளவுபார்த்தோம். மனுதர்ம சாத்திரத்தில் அந்தணர்கள் ஏர் பிடித்து உழக் கூடாது என்று சொல்லப் படுகிறது. இதை அப்படியே சதுர்வேதிமங்கலத்துச் சபையொன்று தீர்மானமாக்குகிறது[50]. இவர்தம் வாழ்வு வளத்தோடு இருந்தது; ஆனால் ஏர் பிடித்தவன் வாழ்க்கை யில் வறுமை வேர்விட்டுப் படர்ந்திருந்தது. பாவிஷ்யம் கற்றுத்தர ஒரு பிராமணனுக்கு 72 குழி மானியமாக்கப் பட்டது. (மேற்கோள் எண்; 48) ஆனால் 50 குழி நிலம் வெட்டும்பணிமகனுக்கு 1 காசுமட்டுமே கொடுக்கப்பட்டது. காவல்காரனுக்கு நாளொன்றுக்கு ஒரு குறுணி நெல்லும், சங்கு ஊதுபவனுக்கு நாளொன்றுக்கு இருவேளை சோறும் கொடுக்கப்பட்டது.[51] உழப்பறையர் இனம் இன்னும் மோசமாக இருந்தது. இதையே ஒரு அறிஞர் பின்வருமாறு கூறுவார்;

"பிரிட்டன் ஆட்சிக்கு முன்னாலும், பறையர் இனம்முழு வதும் எந்தவித விதி விலக்குமின்றி உடமைச் சாதியினருக்கு அடிமையாய் இருந்தது. பறையர்கள் மட்டுமல்ல, நிலத்திலே உண்மையிலே உழுது கொண்டிருந்த எல்லா விவசாயக்

கூலிகளும் இத்தகைய அடிமை நிலையிலேயே வைக்கப் பட்டிருந்தனர்.''[52]

நிலங்களிலே உழுது கொண்டிருந்த இனம் பொருளாதாரத் தாழ்நிலையுடன் அதன் உடன் நிகழ்ச்சியாக பண்பாட்டுப்பழக்க வழக்கத்திலும் தாழ்நிலையில் வைக்கப் பட்டிருந்தது. எந்தப்பண்ணை ஆளும் 'வேள்' 'அரசு' போன்ற பட்டங்களைப் பயன்படுத்தக்கூடாது நன்மை தீமைகளுக்குப் பேரிகைகள் கொட்டக்கூடாது என்று ஒரு கல்வெட்டு கட்டளையிடுகிறது[53] இவர்கள் வாழும் இடத்தைப் "பைங் கொடிச் சுரைமேல் படர்ந்த பழங்கூரையுடைப் புற்குரம்பைச் சிற்றில்'' என்று வர்ணிக்கிறது பெரிய புராணம். அன்றைய காலத்தில் பறையர் குடும்பப் பெண்கள் இடுப்புக்கு மேலே எந்த ஆடையும் அணியாமல் இருக்க வேண்டும்; இது அவர்களின் அடிமை நிலையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது என்டார் அறிஞர் எட்கர்தர்ஸ்டன்[54] கைவினைஞராகிய குயவர்கள் மன்றாடிக் கேட்டுக் கொண்டதன் பேரில் அவர்கள் ஒரேயொரு மேலாடை அணிந்து கொள்ளலாம் என்று ஒரு சதுர்வேதி மங்கலத்து சபை தாராளமனதுடன் தீர்மானிக்கிறது[55] இப்படி இவர்கள் பொருளாதார அளவில் சுரண்டப்பட்டு, கலாச்சார அளவில் தாழ்த்தப்பட்டு இருப்பதற்குக் காரணம என்ன? இங்கே தான் தத்துவமும் நிறுவன வடிவமான சமயமும் ஆளும் நிலக்கிழார்களுக்குச் சேவை புரிகிறது. பிராமணர்கள் இந்தத் தத்துவத்தை வழங்குகின்றனர். செல்வம் என்பது பிறப்பை ஒட்டி அமைகிறது. பிறப்புஎன்பது பழையவினையை கர்மவினையை ஒட்டி அமைகிறது. என்கிறது மனுதர்ம சாத்திரம். உண்ணையாள் குடும்பத்தில் கைவினைஞர் குடும்பத்தில் பிறந்து நிலக்கிழார்களுக்கு அடிமையாகத் தொண்டூழியம் செய்து, கலாச்சார அளவிலும் கேவலப்படுவதற்குக் காரணம் கர்மவினைதான்; நிலக்கிழார் குடும்பத்தில் பிறந்து நிலத்துக்குச் சொந்தக்காரனாக உபரி உற்பத்தியை அனுபவிப்பதற்குக் காரணம் கர்மவினைதான். சமுதாயத்தின் தேவைக்கு மேலே இருக்கும் உபரி உற்பத்தியை நிலவுடைமையாளர், பல நிறுவனங்

களின் மூலமாக எடுத்துக்கொள்கின்றனர்; அப்படி எடுத்துக் கொள்வதை நியாயப்படுத்தவும்,உழும்மக்களின்—கைவினைஞர் களின்—'புன்மை நிலையின்' உண்மைக் காரணங்களைத் திசை திருப்பவும் தத்துவம் தேவைப்படுகிறது. அதை மனுநீதியின் "கர்மவினைக் கோட்பாடு" தெளிவாக வழங்குகிறது. அன்றைய நிலைமைகளின் உண்மைக் காரணத்தைச் சாதுரியமாக மறைக்க முடிகிறது; அதே நேரத்தில் 'இந்தப் பிறவியில் மேல் வருணத்தாருக்குச் சிறந்த முறையில் சேவை செய் தால் அடுத்த பிறவியில் உயர் வருணத்தில் பிறந்து, நன்மை அடைவர்' என்ற பொய்யான நம்பிக்கை தூவப்படு கிறது. "மேல்வருணத்தார்க்கு நல்ல முறையில் உண்மை யாகத் தொண்டு செய்யும் சூத்திரன், அடுத்த பிறவியில் மேல் வருணத்தில் பிறப்பான்" என்றே மனுதர்மம் (IX...335) சொல்கிறது. இந்தத் தர்ம சாத்திரக் கருத்துக் கள் தாம் வேதத்தில் அடங்கியுள்ளன. "வேதத்தில் உள்ள கருத்துக்களையெல்லாம் தொகுத்துச் சொல்லும் என் தமிழ்ப் பாமாலை ஓதும் மக்களுக்கு அகன்றபெரிய வானுலக மளித்து இறைவன் முக்தியருளுவான்" எனக்கருவூர்த்தேவர் பாடுகின்றார். இக்கர்மவினைத் தத்துவங்கள் அடங்கிய வேதத்தைப் பரப்பவே அரசர்கள் 'கிடைப்புரம்' (வேத மானியம்) வழங்குகின்றனர்.

தத்துவ இலக்கியத்தின் முக்கியமான பணி இன்னொன் றுண்டு. சோழர்கள் காலத்தில் விதிகளும் மரபுகளும் சாதிப் பாகுபாட்டைத் தெளிவான முறையில் ஏற்றுள்ளன சமூகத்தில் "தீண்டாமை" கடைப்பிடிக்கப்பட்டது. 'அந்த ணர் முதல் புல்லுப் பறிக்கின்ற பறமன் வரை' என்று ஒரு கல்வெட்டு சமூகத்தை எடை போடுகிறது. இப்படி உள்ள சமூக உறவு முறைகளை இலக்கியம் பொய்மையாகக் காட்டு கிறது. தீண்டாமை தாண்டவமாடிய சமூகத்தில் அந்தணச் சம்பந்தர் குழாத்தில் பறைக்குடி நீலகண்ட யாழ்ப்பாணர் தம் குடும்பத்தோடு இடம் பெற்றிருக்கிறார்; நீலகண்டருக்கு அந்தணர் நீலநக்கர் தம் இல்லத்து வேதிகையின் அருகில் தங்க இடம் கொடுக்கிறார். அரசனாகிய சேரமான் பெரு

மான் திருநீற்று நினைவினால் அடிவண்ணனை வணங்குகிறார். அந்தணச் சம்பந்தர் நீலகண்ட யாழ்ப்பாணரை நோக்கி "ஐயரே நீர் அவதரித்திட இப்பதி அளவில் மாதவம் முன்பு செய்தவாறு' என மிகவும் மரியாதையுடன் அழைக்கின்றாராம். இவ்வாறு நமக்கு அக்கால இலக்கியம் காட்டுகிறது. இவையெல்லாம் வெவ்வேறு காலத்திய நிகழ்ச்சிகளைப் போலக் காட்டினாலும் இவற்றையெலாம் தொகுத்து ஒரு குறிப்பிட்ட காலத்தில் வெளியிட்டமைக்கு நிறையக் காரணங்களுண்டு. இதெல்லாம் எதைக் காட்டுகிறது?

"சேக்கிழார் பெருமான் தீண்டாமையைச் சிவஞானிகள் வாழ்க்கையிலிருந்தும் தம் உள்ளத்திலிருந்தும் சொல்லிலிருந்தும் எவ்வளவு தூரம் விலக்கி வைத்திருந்தார் என்பது நன்கு விளங்கும்" என்பர் மு. அருணாசலம் அவர்கள்[56] உண்மையில் மக்கள் சமூகத்தில் தீண்டாமை தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டது. வேதங்கள் மனிதர்களின் பிறப்பிலேயே ஏற்றத்தாழ்வுகள் கற்பிக்கின்றன. "வேதங்களின் பயனே சைவம்" (சண்டேசர் புராணம்) என சேக்கிழார் வேதங்களைச் சிறப்பிக்கிறார். கடுமையான மரபுகள் கடைப்பிடிக்கப்பட்ட காலத்தில், சிவபெருமான் சன்னிதானத்தில் அனைவரும் சமம் என்று பொய்மையான மனச்சாந்தியை அன்றைய இலக்கியங்கள் கொடுத்தன. அதற்குத் தத்துவம் துணையாக இருந்தது. அந்தத் தத்துவத்தை வழங்கியவர்கள் பிராமணர்கள். அந்த மாயையான உலகத்தில் அடக்கப்பட்டோர் பெருமூச்சு விடுகின்றனர். பேரிருள் அவர்களைக் கவ்வியிருந்த நேரத்தில், அவர்களைச் சுற்றிப் பொய்மையான சூரியன் சுழல விடப்படுகிறது. இந்த 'சிவஞானஜனநாயக' மூடு திரைக்குப் பின்னாலே. மனித வரலாற்றில் அதுவரை நடந்திராத மகத்தான கொடூரங்கள் நடந்தேறின. இப்படி யதார்த்தத்தில் இருக்கும் சுரண்டலான உறவுமுறையை இலட்சியமாக்கியும், சமூகக் கொடுமைகளுக்கான உண்மையான காரணங்களிலிருந்து மக்களைத் திசை திருப்பியும், அவற்

ருக்கு 'கர்மவினை' போன்ற காரணங்களைச் சொல்லியும், யதார்த்தத்தில் கனவு கூடக்காண முடியாத பொய்மையான உறவு முறைகளைப் படைத்து மாயையான மனச்சாந்தியை மக்களுக்கு அளித்தும் அன்றைய காலத்துத் தத்துவம் மக்களை மனஅளவில் கட்டுப்படுத்த முனைகிறது. விளைச்சலில் மிகப்பெரும் பங்கு எடுத்துக் கொள்ள நினைக்கும் வர்க்கவுணர்வு நிரம்பிய அரசர்கள், பெருங்குடிமக்கள் ஆகியோர் இத்தகைய தத்துவத்தை மக்களிடம் பெருமளவில் எடுத்துச்சொல்லும் பிராமணர்களுக்கு ஏராளமான நிலங்களை மானியமாகக் கொடுக்கின்றனர். வேந்தர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் வம்சங்களையும், கோத்திரங்களையும் கற்பித்து அவர்களை இறைவனுக்கினர்கள். சமுதாய அந்தஸ்தும் அரசர்களுக்குத் தேவையாக இருந்தது. 'தில்லைவாழ் அந்தணர்கள் அருண்மொழித் தேவனின் 19 ஆம் ஆட்சியாண்டில், அவனுக்கு இராஜராஜன், சிவபாத சேகரன் எனும் பட்டங்களைக் கொடுத்ததாகக் கல்வெட்டறிஞர் வெங்கையா குறிப்பிடுகிருர்' என்பர் ஜே. எம். சோமசுந்தரம்.[17] இவ்வாருக மக்களை மன அளவில் கட்டுப்படுத்த முனைந்து, அக்கால நிலமானிய உற்பத்தி முறைக்குத் தத்துவச் சேவை செய்ததற்காகவே பிராமணர்களுக்கு விளை நிலங்கள் மானியமாகக் கொடுக்கப்பட்டது. இந்நேரத்தில், ஐரோப்பிய நிலமானிய முறைக்குக் கத்தோலிக்க நிறுவனம் செய்த சேவை நினைவு கூரத்தக்கது. இந்நிறுவனப் பணிகளையும் இந்து சமயத்தின் மனுதர்ம சாத்திரம் வேதங்கள் ஆகியவற்றின் சேவைகளையும் ஒப்பிட்டு அறிஞர் ராபர்ட் லிங்கட் என்பவர் பின்வருமாறு கூறுகிருர்:

"மேற்கு ஐரோப்பிய மக்களின் நடவடிக்கையில் ரோமன் கத்தோலிக்க நிறுவனச் சட்டங்கள் என்ன செல்வாக்கு வகித்தனவோ அதே அளவு செல்வாக்கை இந்து தர்மங்கள் இந்தியாவில் வகித்தன என்று சொல்ல இயலும். ரோமானிய கத்தோலிக்கச் சட்டங்கள்; நீதிநெறி முறைகளாக அதிகாரம் செலுத்தியதைப் போலவே, இந்தியாவி

லும் தர்ம சாத்திரங்கள் அதிகாரம் செலுத்தி வந்தன''[58] பிராமணர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சபையின் தீர்மானத்தின் மூலம் நாம் இதைத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம். வானவன் மகாதேவி சதுர்வேதிமங்கலக் கிராம சபை மூன்றும் இராசராசனின் 17 ஆம் ஆட்சியாண்டில் கூடிப்பின் வருமாறு தீர்மானிக்கிறது.

"கிராம நலன்களுக்கு எதிராகவோ திருமயானம் உடையார் கோவில் நடவடிக்கைகளுக்கு எதிராகவோ யாரும் எதுவும் செய்யக்கூடாது. அவ்வாறு மீறி நடப்பவர் கள் கிராமத் துரோகிகள் ஆவார்கள்; அவர்கள் சமுதாய சமய உரிமைகளை இழந்துவிடுவார்கள்; சிவ உருவத்தின் பாதங்களைத் தொடுவதற்கு உரிமை இல்லாதவர்கள் ஆவார்கள்''[59] கிராம சபைகள், சிறுசிறு குற்றங்களுக்குத் தண்டனை கொடுப்ப தோடு மட்டுமின்றி, மக்களின் பொதுவான நடத்தைக்கும் பொறுப்பானதாக இருக்கின்றது என்று தெரிகிறது. இதையே மக்களின் செயல்களையும் நடத்தையும் கட்டுப் பட்டுத்துவதாக பிராமணர் நிரம்பிய சபை உள்ளதென்பர் நீலகண்ட சாத்திரியார்[60].

இந்தச் சபை என்றால் என்ன? சோழர்கால ஆட்சி முறையின் ஆணிவேர் கிராமம் என்று பார்த்தோம். வெள்ளான் வகைக்கிராமங்கள் எண்ணிக்கையில் சதுர்வேதி மங்கலக் கிராமங்களைவிட அதிகமாக இருப்பினும், வெவ் வேறு வகைகளில் சதுர்வேதி மங்கலங்களே தனித்தன்மை யோடு இருந்தன. இதன் தனித்தன்மை கருதியே இது "தனியூர்'' என்றழைக்கப்பட்டிருக்கிறது என்பர் டி. வி. மகா லிங்கம்[61] வெள்ளான் வகைக்கிராமத்தின் நிர்வாகஅமைப்பு "ஊர்'' என்றுபெயர். இதில் நிலப்பிரபுக்களே உறுப்பினரா யிருந்தனர்[62] இதன் செயற் குழுவுக்கு "கணம்'' என்றும் அதன் உறுப்பினர்களுக்கு "ஆளுங்கணத்தார்'' என்றும் பெயருண்டு.[63] இதுகுறித்து, இதற்குமேல் நமக்கு இதுகாறும் செய்திகள் இல்லை. ஆனால் சதுர்வேதி மங்கலக் கிராம அரசியல் அமைப்பு குறித்துக் கல்வெட்டுக்கள் நிறையவே பேசுகின்றன.

சதுர்வேதி மங்கலத்து நிலங்கள் பிராமணர்களிடத்தும் சிறுபகுதி கோயில்களிடத்தும் இருந்தன. கோயில் நிர்வாக சபையான மூலபருசையார் போன்ற சபைகளிலே பிராமணர்களே உறுப்பினர்களாயிருந்தனர் என்பர்[64] எனவே, சதுர்வேதி மங்கல நிலங்கள் அனைத்தும் எவ்வாறாயினும் பிராமணர்கள் கட்டுப்பாட்டில் இருந்தது. இக்கிராமத்தின் அரசியல் நிர்வாக அமைப்புக்குச் "சபை" "மகாசபை" என்று பெயருண்டு. கிராமம் பொதுவாக 30 குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டு குடவோலைத் தேர்வு நடக்கிறது. உறுப்பினராக வேண்டியோர் தகுதிபற்றிக் கல்வெட்டுகள் தெளிவாகச் சொல்கின்றன.

''குடும்பு முப்பதா முப்பது குடும்பிலும் அவ்வக் குடும்பிலாரே கூடி சால்நிலத்துக்கு மேல் இறைநிலம் உடையான் தன் மனையிலே அகம் எடுத்துக் கொண்டிருப்பானை எழுபது பிராயத்தின் கீழ் முப்பத்தைந்து பிராயத்தின் மேற்படாதார் மந்திரப் பிராமாணம் வல்லான் ஓதுவித்து அறிவானை குடவோலை இடுவிவதாகவும், அரைக்கால் நிலமேயுடையான் ஆயினும் ஒரு வேதம் வல்லான் ஆய் நாலு பாஷ்யத்திலும் ஒரு பாஷ்யம் வக்கணித்து அறிவான் அவனையும் குடவோலையும் எழுதிப்புக''[65] சபை உறுப்பினராவதற்கு சாதி தருமம் மட்டுமல்ல சொத்து உடமைத் தருமமும் கடைப்பிடிக்கப்பட்டது என அறிகிறோம். இப்படி குடவோலை மூலம் தேர்ந்தெடுக்கப்படும் 30 சபா உறுப்பினர்களும் தமக்குள் வாரியங்களாகப் பிரிந்து செயல்படுகின்றனர். கிடைக்கக்கூடிய கல்வெட்டுக்களிலே பிரமதேயக்கிராமங்களில் மட்டுமே இத்தகைய வாரியங்கள் காணப்படுகின்றன என்டர்[66]. பன்னிருவர் சம்வத்சரவாரியமாகவும், பன்னிருவர் தோட்டவாரியமாகவும், அறுவர் ஏரிவாரியமாகவும் பிரிந்து செயல்படுகின்றனர். குடிமை எனும் நிலவரி தவிர தறியிறை. செக்கிறை மனையிறை, அங்காடிப்பாட்டம், தட்டாரப்பாட்டம், இடைப்பாட்டம், வண்ணாரப்பாறை, கண்ணாலக்காணம், சேக்காணம், ஓடக்கூலி, நீர்க்கூலி, நாடுகாவல், மரவிறை, இலைக்கூலம், உல்ளாயம், அந்தராயம், விட்டணம், மகமை, மல்லாயிமகமை,

நாட்டக் காணிக்கை, அரசுபேறு, நாள்கிடா, அரிசிகாணம், தலையாரிக்கம், அவசரவர்த்தனை, பாண்மை, பண்டவெட்டி, சபாவினியோகம் என்பன போன்ற வரிகள் பொதுவாகவும் அந்தந்தத் தொழிலுக்கு ஏற்பவும் மக்கள்மீது விதிக்கப்பட்டன. ஆனால் பெரும்பான்மையானது நிலவரியே ஆகும். கிராம சபை, இதை வாங்கி அரசனுக்குச் செலுத்துகிறது. இது செலுத்த இயலாதவர்கள் தம் நிலத்தை விற்று கிராமத்தை விட்டு வெளியேறுகின்றனர். அவ்வாறு விற்கும்போது பிராமணருக்குத்தான் விற்க முடியும்[67] நிலத்தின்மீது வேறொரு இனத்தின் ஆதிக்கம் தவிர்க்கப்படுகிறது. சபை, சில நிலங்களுக்கு வரிச்சலுகையும் விலக்கும் அளிக்கிறது. இது அரசின் வருவாய் அலுவலர்களின் ஒப்புதலோடு செய்யப்படுகிறது[68] இனி வாரியங்களின் பணியைப் பார்ப்போம். ஊர்வாரியம்: கிராமத்திலே உள்ள நிலமெலாம் சரியான முறையில் சாகுபடி செய்யப்படுகின்றதா என்றும் விளைச்சலில் நிலவுடைமையாளர்க்குத் தரவேண்டிய 'மேல் வாரம்' சரியாகச் செலுத்தப்படுகின்றதா என்றும் கண்காணிப்பதே இதன் பணி[69] சாகுபடி வீணாகாமல் பாதுகாப்பதே கழனிவாரியத்தின் பணியாகும். ஏரிவாரியத்தின் பணி சிறப்பானது. கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில், நீர்ப்பாசனம் ஏரிகளிலும் குளங்களிலும் தண்ணீர் தேக்கி வைக்கப்படுவதையே பெரிதும் சார்ந்துள்ளது. ஆறுகளிலிருந்து கால்வாய் மூலமாகவும், பருவமழை பெய்வதன் மூலமாகவும் ஏரி நிரம்புகிறது. இது, தங்களின் பொருளாதார நலன்களை முற்றிலும் உணர்ந்த பெருநிலக்கிழார்களின் கூட்டுறவையும் ஒருமித்த செயற்பாட்டையும் பொறுத்திருக்கின்றது. இதனையுணர்ந்த சபா, ஏரிவாரியம் மூலம் நீர்ப்பாசன வசதியைப் பெருக்குகிறது. குளம் வெட்டுவதற்கும் ஏரிகளுக்குக் கரை உயர்த்துவதற்கும் சபை பொதுமையான கூட்டு நிலத்தில் ஒரு பகுதியை விற்றுச் செயல்படுகிறது[70] 'பொது நலம்' கருதிய பெருநிலக்கிழார்கள் குளங்களிலும் ஏரிகளிலும் தூர் எடுக்க சபைக்கு நன்கொடை கொடுக்கின்றனர்[71] இவற்றையெல்லாம் ஏரி

வாரியம் ஏற்றுச் செயல்படுகிறது. சம்வத்சரவாரியத்தின் அனுபவமிக்க உறுப்பினர்கள் பொதுவாக எல்லாப் பணிகளையும் மேற்பார்வை செய்கின்றனர். சில நேரங்களில் கோயில் நிர்வாகத்தையும் மேற்கொள்கின்றனர்.[72]

ஊர்வாரியம், ஏரி வாரியம், தோட்ட வாரியம், கழனி வாரியம். சம்வத்சரவாரியம் போன்ற வாரியங்களின் பணிகள் அனைத்துமே உற்பத்தியை மையமாகக் கொண்டே உள்ளன. இதனையே, "கிராம நிலங்கள் அனைத்திலும் சாகுபடி சரியாகச்செய்யப்படுகிறதா என்று பார்ப்பதிலும், நீர்ப்பாசன வசதிகள் போதுமான அளவு உள்ளதா என்று கவனிப்பதிலும், கூடுதலான மேல்வாரம் (நிலக்கிழார்பங்கு) பெறுவதிலும் தாம் நிலவுடைமையாளர் நலன்கள் அடங்கியிருக்கின்றது. இந்த அடிப்படையான நோக்கத்திற்குத் தான் பல்வேறு பணிகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளும் கிராம வாரியங்கள் அமைக்கப்படுகின்றன. எனவே, இது பொருளாதார நோக்கம் கொண்டதே" என்பர் அறிஞர் அப்பாத்துரை அவர்கள்[73]

இது ஒன்றும் வியப்புக்குரியதல்ல. எந்தக் காலத்திலும் சட்டம், அரசியல், தத்துவம் போன்ற கருத்துகளும் நிறுவனங்களும் அந்தக் காலத்திய பொருள் உற்பத்திமுறை என்னும் சமுதாய அடித்தளத்துக்கு ஏற்பவே அமைகின்றன. எனவே நிலமானிய முறையை அடித்தளமாகக் கொண்ட சோழர் காலத்தின் கிராமிய ஆட்சிமுறை தவிர்க்க இயலாதவாறு அங்ஙனம் காணப்படுகிறது.

ஆனால், "கிராமங்களில் அந்நாளில் நடைபெற்று வந்தது உண்மையான மக்களாட்சியே என்று ஐயமின்றிக் கூறலாம். கட்சி மனப்பான்மையற்ற பொது மக்களால் குடவோலை வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நடுநிலை திறம்பாத நல்லறிஞர் குழுவின் ஆட்சியாகும்...பொதுவாக நோக்குமிடத்து கிராம சபையின் ஆட்சியில் பொதுமக்களுக்குப் பலவகையான நலன்கள் ஏற்பட்டன என்பது தெளிவு" என்பர் அறிஞர் சதாசிவப்பண்டாரத்தார்[74].

யார் இந்த மக்கள்? யாருடைய நலனுக்காக? அவர்களே நிலவுடைமைக்காரர்களும் அவர் தம் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தத்துவம் போதித்துக் கொடுத்த பிராமணர் இனமும் தாம். இதனையே "பொது மக்களுடைய உழைப்பினால் உற்பத்தியான பொருள்களிலும், செல்வத்திலும் பெரும்பகுதி பல்வேறு வழியில் கோயில்களுக்கும், பிரபுக்களுக்கும், அரசர்களுக்கும் போய்ச் சேர்ந்தது" என்பர் நீலகண்டசாத்திரியார்[75] எனவே, அன்றைய காலத்துச் சக்திகளான நிலவுடைமையாளர்களின் நலனுக்கான நிலவுடைமையாளர்களின் ஆட்சிதான் நடந்தேறியது. சோழர்காலக் கல்வெட்டுக்களும் இலக்கியங்களும் நமக்கு உணர்த்தும் சமுதாய வரலாறு இதுதான்.

பேராசிரியர் பண்டாரத்தார் மட்டுமின்றி, சோழர் கால வரலாற்றை எழுதிய வரலாற்றாசிரியர்களில் பெரும்பாலானோர் அக்காலத்தில் அனைத்து மக்களிடம் பரஸ்பர நல்லுணர்வும் ஒற்றுமையும் இருந்தன என்றும், மக்கள் வர்க்க இன பேதமின்றி எவ்வித முரண்பாடுகளுமின்றி வாழ்ந்தனர் என்றும் குறிப்பிடுகின்றனர்.

"அந்தக் காலத்திலே அற்புதமான ஒருமைப்பாடு நிலவியது. அந்த ஒருமைப்பாடு தனிமனிதர்களுக்கிடையிலான சமத்துவத்தின் அடிப்படையிலோ பல்வேறு வகுப்புகளின் சமத்துவத்தின் அடிப்படையிலோ தோன்றியதன்று. ஒருவர்க்கு ஒருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையின் மீதும் ஒருவர்பால் ஒருவர் கொண்டிருந்த நல்லெண்ணத்தின் மீதும் அந்த ஒருமைப்பாடு எழுந்து வளர்ந்தது" என்பர் நீலகண்டசாத்திரியார்[76].

பேராசிரியரின் கருத்துப்படி வகுப்புகளுக்கிடையே சமத்துவமோ தனி மனிதர்களிடையே சமத்துவமோ அக்காலத்தில் இல்லை என்பது தெளிவாகிறது. பிறப்பால் பரிசாகக் கொடுக்கப்பட்ட வருணாசிரம தருமம், உடைமை உறவால் உண்டான வர்க்க வேறுபாடு, சமுதாய மரபுகளால் இயக்கப்பட்ட சாதி முறை ஆகிய பல்வேறு பிரிவுகளும் ஒன்றுக்கொன்று ஆதரவாகவும் அனுசரணையாகவும்

இயங்கிய சோழர் காலத்திலே, ஒவ்வொரு மனிதனுக்கும் சமூகத்திலே உரிமைகளும் கடமைகளும் இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. வேத நெறி எனும் அதிகார பீடத்தில் அமர்ந்து, கர்மவினைத் தத்துவத்தின் துணை கொண்டு வருணாசிரம தர்மங்கள் கோலோச்சிக் கொண்டிருந்தன. பழவினையை யார்தான் என்ன செய்ய முடியும் என்ற நம்பிக்கை பரவலாக்கப்பட்டது. இந்த மாயையான நம்பிக்கைக்குப் பின்னால், உபரி உற்பத்தியை நிலக்கிழார்கள் அபகரித்துக் கொண்டதைத்தான் நமக்குப் பல செய்திகள் உணர்த்துகின்றன. சமூகத்திலே ஏற்றத் தாழ்வுகள் மிகப் பயங்கரமாக இருந்தது. பேராசிரியர் நீலகண்ட சாத்திரியாரே வேறிடத்தில் இதனையே பின் வருமாறு கூறுகிறார்:

"இடைக்கால ஆட்சிமுறை (சோழர் ஆட்சிமுறை) சமுதாயத்தின் உயர்நிலையிலிருந்த மக்களின் நன்மைக்கு ஏற்ற தனிச் சிறப்பான இயல்புகளைக் கொண்டதாகவும் பொது மக்களின் நலன்களைப் புறக்கணிப்பதாகவும் தோன்றுகிறது என்று பொதுவாகக் கூறலாம். அந்த ஆட்சிமுறை வரம்பு கடந்த தீய விளைவுகளை உண்டாக்கக் கூடிய இயல்புகளைக் கொண்டிருந்தது உண்மையே"[77] இப்படி வர்க்க முரண்பாடுகள் கொண்ட காலத்தில் அற்புதமான ஒருமைப்பாடு நிலவியதுஎன்பதை நாம் ஏற்பதற்கில்லை. ஆனால் இந்த முரண்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிகிறது. இங்கேதான் சமயம் பெருங்கருவியாகப் பலமான முறையில் பயன்பட்டது. மேலும், இன்றிருப்பதைவிட பன்மடங்கு அதிகமான தலவாழ்க்கையே—தலஉணர்வே காணப்பட்டது இதன் விளைவாக பல எழுச்சிகள் கட்டுப்படுத்தப்பட்டன என்றும் சொல்வர்[78].

ஆனால், இக்கட்டுப்பாடுகளையும் தகர்த்தெறிந்து, மக்கள் கிளர்ந்தெழுந்தனர் என்பதையும் கல்வெட்டுக்கள் கூறும். உதாரணமாக, கள்ளூர் எனும் கிராமத்தில் கோயில் நிலத்தை உழுது கொண்டிருந்த உழவர்களுக்கும் கோயில் அதிகாரிகளுக்கும் கடுமையாகத் தகராறு ஏற்படுகிறது;

அதன் விளைவாக உழவர்கள் நிலத்தில் இறங்க மறுக்கின்றனர். அதனால் அவர்கள் கிராமத் துரோகிகள் என்று குற்றம் சாற்றப்பட்டு வெளியேற்றப்படுகின்றனர். பின்னர் கோயில் அதிகாரிகள் வேறு ஆள் கொண்டு நிலங்களைப் பயிரிடுவதை இவர்கள் தடுத்து தாங்களே உழ வேண்டும் என்று எழுச்சி செய்கின்றனர்[79]. சூலத்தால் குறியிடப்பட்ட அடிமைகள் கொடுமைகள் தாங்கமாட்டாது, நிலக்கிழாரிடமிருந்து ஓடி விடுகின்றனர். ஆனால் மூன்றும் குலோத்துங்கன் இவர்களைப் பிடித்து வந்து மிகவும் கடுமையாகத் தண்டித்து மீண்டும் வேலை வாங்குமாறு கட்டளை இட்டான் என்று திருவாலங்காட்டுக் கோயில் கல்வெட்டு கூறுகிறது[80] தங்கள் உழைப்புக்கேற்ற வண்ணம் பங்கு கிடைக்காமையால் கற்றப்பட்டு, பாகனேரி உள்ளிட்ட 24 கிராமங்களில் உள்ள உழவர்கள் கிளர்ந்தெழுகின்றனர். கடுமையான முறையில் அவர்கள் அடக்கியொடுக்கப்படுகின்றனர்[81]. குகை இடிகலகம், வலங்கை, இடங்கை பிரிவினர் கலகம் போன்ற கலகங்களைக் கல்வெட்டுக்கள் கூறும். எனவே பேராசிரியரோ பண்டாரத்தாரோ சொல்வதைப்போல, ஒருமைப்பாடு தோன்றவில்லை. ஆனால் அவர்கள் சொல்லும் 'ஒருமைப்பாட்டு உணர்வின்' அடியில் சமூகத்தில் பூசல்களும் போராட்டங்களும் நடந்தேறி வந்துள்ளன என்பது தாம் வரலாற்று நிகழ்ச்சிகளாகும். இந்த உண்மையைத் தான் நமக்குப் பிற்காலச் சோழர் காலமும் பிரமதேயக் கிராம சமூக அமைப்பும் தெளிவாக்குகிறது.

மேற்கோள் பட்டியல்


1. South Indian Epigraphy Report 1934—35—p 58
2. D. D Kosambi—Introduction to the study of Indian History—p. 240
3. மயிலை. சீனி. வேங்கடசாமி—சமணமும் தமிழும்—பக் 110.
4. Maurice Cornforth—Dialectical Materialism—p. 16
5. D. D. Kosambi—Introduction to the study of Indian History —P. 240.
6. மயிலை.சீனி. வேங்கடசாமி—சமணமும் தமிழும்—பக் 71.
7. பிளக்கனேவ்—வரலாற்றில் தனிநபர் வகிக்கும் பாத்திரம்—பக் 14.
8. எஸ் ஆர். பாலசுப்பிரமணியம்—சோழர் கலைப்பாணி—பக்72
9. மேற்படி நூல்—பக் 5.
10. ARE 1917 Part II Para 8
11. A Appadorai—Economic conditions of S. I. 1000—1500 AD—Vol. I—p. 261
12. South Indian Inscriptions—Vol. II part II—p 35
13. K A. N Sastriyar — Pandyan Kingdom—p 78
14. க. கைலாசபதி—பண்டைத்தமிழர்வாழ்வும் வழிபாடும்—பக்—115.
15. Inscriptions. Nos. 118, 119, 124/1916; 370, 373/1917.

16. Madras Museum Plates.

18. K. A. N. Sastriyar—Cholas Vol. II Part I—p. 380

19. Inscriptions—No. 274/1910

20. Inscriptions 1/1898; 692/1904; 348/1919.

21. S. I. I.—Vol. VIII—Nos. 202, 223.

22. Inscription. No. 386/1903.

23. A. R. E. 729/1919.

24. தி. வை. சதாசிவப்பண்டாரத்தார்— பிற்காலச் சோழர் வரலாறு—பாகம் III—பக்77.

25. Burton Stein—The State and Agarian order in Medieval South India in "Essays on South India"—p. 87

26 J. D. Bernal—Science in History — Vol. I—p. 288

26a Inscriptions Nos. 209/1937; 117/1900

27. Journal of Indian History — Vol. XXX—p. 274-276

28. Inscriptions. No. 75/1900

29. A. R. E. 1920—21—p. 91

30. T. V. Mahalingam — South Indian Polity — p. 377
K. A. N. Sastriyar — Cholas Vol. II Part I P. 504
A. Appadorai — Economic Conditions of S.I. 1000—1500 A. D.—Vol. I—p. 288

31. R. S. Sharma—Indian Feudalism—p. 270

32. Epigraphica Indica—Vol. II—p. 124

33. Inscriptions Nos. 46/1897; 311/1911

34. Burton Stein...'Essays on South India'—p. 71

35. A. Appadorai—Ibid—p. 141

36. Inscription—No. 264/1911

36a Inscription—No. 113/1927

37. A. Appadorai—Ibid—p. 255

38. S. I. I. Part II No. 5 Para 2

39. A. Appadorai—Ibid —p. 317

40. Inscriptions—No. 508/1922

41. K. A. N. Sastriyar — Cholas. Vol II Part I —p. 380

42. Inscription No. 205/1919

43. Inscription No. 42/1907

44. கே. கே. பிள்ளை தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும்

45. Epigraphic report—1915—p. 48

46. Inscription Nos. 353, 343/1917

47. Inscription No. 207/1931

48. Inscription No. 29/1898

49. K. A. N. Sastriyar—Cholas Vol. II Part I—p. 363

50. Inscription No. 538/1916

51. கி.பி. 960—ஐச்சேர்ந்த லால்குடிக் கல்வெட்டு. கல்வெட்டுஎண் 104/1924.

52. Madras Census Commissioner "Notes on Slavery"—1817

53. Inscription No. 538/1918

54. Edgar Thurston — Ethnographic Notes on S.I. 1906—p. 442

55. Inscription No. 538/1918

56. மு.அருணாசலம் — தமிழ்இலக்கியவரலாறு — 12 ஆம் நூற்றாண்டு முதல்பாகம்—பக்313.

57. ஜே. எம். சோமசுந்தரம்—சோழர் கோயிற் பணிகள்—பக்44.

58. Robert Lingat—The Classical Law of India—Translation—by M. Derret—p. 58

59. Inscription No. 332/1910

60. K. A. N. Sastriyar—Studies in Chola History and Administration—p. 95

61. T. V. Mahalingam — South Indian Polity — p. 307

62. M. E. R. 1913

63. M. E. R. 1913

64. கே. கே. பிள்ளை. தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும்—பக்98

65. Archeological Survey of India — Annual report 1904—1905—pp. 139—142

66. A. Appadorai—Ibid—p. 140

67. „ „ —p. 135

68. Inscription No. 2/1925

69. Inscription No. 262/1912

70. S. I. I. Vol.—p. 365

71. Inscription No. 74/1898

72. Inscription No. 335/1917

73. A. Appadorai—Ibid—p. 142
74. சதாசிவப்பண்டாரத்தார்—பிற்காலச்சோழர் வரலாறு—பாகம்III—பக்கங்கள் 43, 44, 50
75. கே. ஏ. என். சாத்திரியார் — தென்னிந்திய வரலாறு (தமிழ்)—பக்322
76. மேற்படி நூல்—பக்322
77. ,, —பக்321.
78. க. கைலாசபதி—பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் பக். 161—மேற்கோள்எண்16.
79. Inscription No. 630/1916
80. Inscription No. 94/1924
81. கே. கே. பிள்ளை. தமிழகவரலாறும் மக்கள் பண்பாடும்—பக்314

## நூல்கள் அகர வரிசை

(எண்கள் பக்கங்களைக் குறிக்கும்)

Ancient and Modern Tamil Poets, 77, 81.

An Introduction to the study of Indian History, 114, 151.

Archeological Survey of India, 180.

Aspects of Indian culture, 1 4.

Beginnings of South Indian History, 99.

Brahmi Inscriptions on South India, 113, 114.

Cholas—Vol II—Part I, 162, 165, 169.

Chronology Of Early Tamils, 13, 27, 74, 75, 99, 100, .04.

Comparative Grammar of Dravidian Languages, 27.

Daily Life in Ancient India 200 B. C. to 700 A. D., 25, 110.

Dialectical Materialism, 151.

Economic Conditions of South India 1000—1500 A. D. Vol I., 163, 165, 167, 168, 169, 181.

Epigraphic Notes on South India, 175.

Essays on South India, 14, 17, 112, 163, 167.

History of Early Tamils, 6, 27, 75, 99, 104.

History of Tamil Nadu to A. D. 1336., 104, 105.

Indian feudalism, 166.

Jainism, 144, 120.

Journal of Indian History—Vol XXX, 165.

Madras Museum Plates, 16.

Marco Polo Travels, 40.

Pandyan Kingdom, 104, 105, 106,

Readings in South Indian History, **141.**

Religion and Philosophy of Devaram—Vol II, 130, 139.

Science in History—Vol I, 72, 165.

South Indian Epigraphy Report 1934-35 , 150.

South Indian Polity, **166, 179.**

Studies in Chola History and Administration, 170.

*Surnames in Sangam Literature, 46.*

The Akananooru in its Historical Setting, 39.

The classical Age of Tamils, 28, 30, 31, 52.

The classical Law of India, 178, **179.**

The Development of Aristocracy in Ancient Tamil Nadu, 17, 18, 46.

The Tamil Heroic Poetry, 28, 73, 84.

# நூல்கள் அகர வரிசை (தொடர்ச்சி)

(எண்கள் பக்கங்களைக் குறிக்கும்)


அகநானூறு 1, 3, 9, 15, 26, 29, 46, 48, 73, 74, 108.
அசோகரும் அவருடைய காலமும், 13.
அடியும் முடியும் 125.
இலக்கியக் கொள்கை-முதல் தொகுதி 78, 87.
இலக்கியச் சிந்தனை 99, 102.
இலக்கிய தீபம் 104.
எந்தச் சிலம்பு 4.
ஐங்குறு நூறு 48, 108
கம்பராமாயணம் 98.
கலித்தொகை 88, 96, 102.
காலமும் கருத்தும் 135.
குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம் 21 22, 44
குறிஞ்சிப்பாட்டு 137.
குறுந்தொகை 9, 15, 18, 24, 28, 44, 45, 48, 108.
சங்ககாலச் சான்றோர் 85.
சங்கத் தமிழும் பிற் காலத் தமிழும் 80.
சம்பந்தரும் சமணரும் 130.
சமணமும் தமிழும் 151, 152,
சிலப்பதிகாரம் 102, 105, 112, 113, 120, 137, 149, 150,
சிறுபாணாற்றுப்படை 49, 96, 102, 108.
சீவக சிந்தாமணி 108.
சைவசமய வளர்ச்சி 139.
சோழர் கலைப்பாணி 157.
சோழர் கோயிற் பணிகள் 178.
தமிழ் இலக்கிய வரலாறு 12 ஆம் நூற்—முதல்பாகம் 177.
தமிழ் நாட்டில் சைனம் 130.
தமிழ் மொழி இலக்கிய வரலாறு 96, 97, 99, 104.
தமிழ் வரலாறு 96.
தமிழக வரலாறும் மக்கள் பண்பாடும் 170 180, 185.
திருக்குறள் 71, 115, 134.
திருக்கோவை 98.
திருஞான சம்பந்தர் வரலாற்று ஆராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும் 127.
திருமுருகாற்றுப் படை 123.
திவாகர நிகண்டு 107.
தென்னிந்தியாபற்றியவெளி நாட்டினர் குறிப்புகள் (மொழி பெயர்ப்பு) 109 110, 114.
தென்னிந்திய வரலாறு 96, 97, 99, 104.
தொல்காப்பியம் 59, 80, 102, 113, 151.
தேவாரம் 96, 127—129, 131 135, 137, 138.
நற்றிணை 15 18, 24, 48, 119.
நாலடியார் 108.
பக்தி இலக்கியம் 137.
பட்டினப் பாலை 18, 22, 24, 28, 42, 52, 53, 59, 61, 64, 72 108, 115.
பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும் 64, 79, 86, 132, 160, 184.
பண்டைய ஆரிய சமூகம் (மொழி பெயர்ப்பு) 45.
பத்துப் பாட்டும் பண்டைத்

தமிழர் வாழ்வும், 47, 57.
பதிற்றுப்பத்து 14, 19, 37, 39. 42—55, 47, 60, 67.
பரமார்த்த குரு கதை 127.
பரிபாடல் 102.
பிருகத் கதா கோசம் 107.
பிற்காலச் சோழர் வரலாறு மூன்றும் பாகம் 143, 182.
பிரான்சில் வர்க்கப்போராட்டம் முன்னுரை (மொழி பெயர்ப்பு) 64.
புறநானூறு 1—5, 7—9, 11—15, 20, 22—24, 28—34, 36—39, 42, 43, 45—47; 50, 55, 59, 61, 62, 64, 71, 72, 74—85, 87—91 96, 102, 111, 119, 137, 157, 161.
புறநானூற்றுச் சொற்பொழிவுகள் 27.
பெரும்பாணாற்றுப் படை 18, 36, 49, 87, 53, 62, 72, 108.
பொருநராற்றுப்படை 52.
மணிமேகலை 102, 112, 120, 149.
மதுரைக்காஞ்சி 95, 102, 111 112, 120.
மலைபடுகடாம் 18, 24, 39. 42, 47, 48, 52, 59, 61.
வரலாற்றில் தனி நபர் வகிக்கும் பாத்திரம், 155.
வளையாபதி 115.

# பொருள் அட்டவணை

அகழ்வாராய்ச்சி 14, 53.
அடிமைச் சமுதாயம் 65, 161,
அடிமை வியாபாரம் 24, 25.
அறங்கூறு அவையம் 21.
அன்பில் செப்பேடுகள் 166, 167.
அனல் புனல்வாதம் 178.
ஆளும் கணத்தார் 179.
ஆளும்வர்க்கம் 54, 55, 66, 67, 171.
இணை மண முறை 32.
இரண்ய கருப்பதானம் 170.
இரத்தக் கலப்பு உறவு 12, 19, 20, 32.
இரும்பின் பயன்பாடு 14, 15, 16, 72.
இறைகுடி 152, 165.
இறையிலி 156.
இறையிலிகுடி 162, 165.
உணவு உற்பத்தி நிலை 160.
உணவு சேகரிக்கும் நிலை 10, 160.
உபரி உற்பத்தி 161, 171 175, 184.
உரிமைச் சுற்றம் 21.
உழப்பறையர் 125, 169, 174.
உழுவித்துண்போர் 165.
உழைப்பு அடிமை முறை 22
உள் நாட்டுப்பண்டமாற்று 47
உள்நாட்டு வாணிபம் 71, 108, 150.
உழைப்புப் பிரிவினை 10.
உற்பத்திச் சாதனம் 18, 19, 20, 29, 35, 54, 57, 64, 160.

உற்பத்தித் திறன் 12,
ஊழ்வினைப் பயன் 133.
எதிர்க்கோட்பாடு 132.
எருது எறிகளமர் 24, 48.
ஏகபோகம் 106.
ஏகாதிபத்திய சமூகம் 65.
ஒருதாரமண முறை 63
கடைசியர் 24, 48, 49.
கணக்குடும்பம் 11.
கணபோகம் 166, 167.
கணம் 179.
கத்தோலிக்கத் திருச்சபை 164, 165, 178.
கர்மவினைக்கோட்பாடு 176, 184,
கருத்துப் பொய்ம்மை 100, 101—103, 117 141, 142
கழனைகள் 167.
கழுவேற்றம் 128, 132.
கள்ளார்களமர் 24.
களப்பிரர் 8.
களிற்றுடனிலை 41.
காணியாட்சி 162.
காராண்மை 167.
காவல் முரசு 28.
காவிதி 113,
கிழார்கள் 7, 8, 46, 50, 54, 89, 91. 119.
குடவோலைத்தேர்தல் 180,
குடிநீக்கிக் காராண்மை 168.
குடிநீங்காக் காராண்மை 168
குரவைக் கூத்து 43, 44,
குறுநில மன்னர்கள் 7, 8, 73.
கூட்டுச்சமுதாயம் 7, 12, 13, 15, 17-21, 23-30, 32, 36-38. 58, 62, 63,
கேரளபுத்திரர் 13,
கையறு நிலை 70,.
கைவினை மாக்கள் 24, 52,163,
கொண்டி மகளிர் 45.
கோட்டை 40, 41,
கோட்பாடு 132.
சதுர்வேதிமங்கலம் 158, 159, 167, 179, 180.
சமூக விஞ்ஞானம் 49, 50.
சாத்துகள் 47, 113.
சாதிமுறை 183.
சித்ரமேழி 165.
சிவஞான ஜனநாயகம் 152, 153, 177.
சிறப்புப் பட்டம் 175.
சிறுகுடி 22, 24, 48,
சிறுபணியாள் 169.
சீறூர் 23, 90, 91,
சோழர் காலவரிகள் 180, 181.
ஞாயில் 33, 37,
தலவுணர்வு 184.
தனியுடைமை 35, 63, 65,
தனியூர் 179,
திருவிடையாட்டம் 165,
தீண்டாமை 176.
துணங்கைக் கூத்து 44.
துலாபாரம் 170.
தேவதானம் 165.
தொகுப்பு நூல்கள் 6, 8.
நட்புமுரண்பாடு 122.
நடுகல் வழிபாடு 64,
நாட்போர் 41.
நாள்மகிழ் இருக்கை 21,
நிரந்தரப்படை 38.
நிலத்தரம் 163.
நிலப்பிரபு 162-165, 167, 168 171, 173, 175,
நிலப்பிரபுத்துவ சமுதாயம் 65, 111, 160. 162, 164, 166, 171, 181,

நிலமற்ற விவசாயிகள்
49, 50, 51
நிலமானியம் 149, 151 156, 157, 159, 162, 163, 165, 167, 170, 178.
நிலவரி 90, 91, 163, 180, 181
நில விற்பனை 167.
நிலவுடமையாளர் நல ஆட்சி 183.
நிவந்தம் 169.
நீர்ப்பாசனம் 17, 167, 181.
நெசவுத் தொழில் 52.
நெல் அரிபவர் 24, 28.
பகைமுரண்பாடு 122, 151.
படை 38, 58, 172,
படையணி மறவர் 33, 39, 60.
பண்டமாற்று 11
பண்ணையாள் 162, 164, 166, 167, 171, 173, 175,
பரத்தமை முறை 63,
பருவக்காற்றின் நிலை 24, 109,
பள்ளர் 50,
பாண்கடன் 42 91,
பிராமிக்கல்வெட்டு 11 ,
புரவு 20, 91.
புலவர் உலகியல் நிலைமை 74-75,
புறநிலைத்தன்மை 154—153
புறவுலகயதார்த்தம் 100,
பூமிபுத்திரர் 165,
பெருங்குடி 61
போர் நடனம் 43—45,
மக்கள் கிளர்ச்சி 184, 185,
மகண் மறுத்தல் 32.
மடப்புறம் 165.
மானிடவியல் 10,
மியாட்சி 162, 167,
முதலாளித்துவ சமுதாயம் 65
முதுமக்கட் தாழி 14,
மூலபருடையார் 180,
மூவேந்தர்கள் 7, 8, 19, 24, 25, 34, 35,
மென்புலம் 23, 34,
யவனர் 24,
ரோமாணியப் பேரரசு 118,
வஞ்சினம் 2,
வணிகர் 60, 61,
வர்க்க ஒருமைப்படு, 183, 184, 185,
வர்க்கம் 35,
வர்க்கவுணர்வு 178.
வர்க்க வேறுபாடுகள் 48, 50, 51, 54, 59, 120, 124, 183, 184.
வரியமைப்பு 7, 62.
வருணாசிரமதர்மம் 183, 184,
வன்புலம் 16, 17, 23.
வாரியங்கள் 180.
வாரியங்களின் பணிகள் 181, 182.
விளைச்சல் பங்கீடு 173, 178.
வீட்டு அடிமை முறை 22, 48, 63.
வீரமரணம் 2.
வீரவுணர்வு 2, 3,
வெட்டி 162.
வெண் கொற்றக்குடை 28.
வெள்ளான் வகைக்கிராமம் 158, 179.
வெளிநாட்டு பயணக் குறிப்புகள் 25.
வெளிநாட்டு வாணிபம் 25, 26, 47, 71, 109, 111 150!
வேலைப்பிரிவினை 18, 161.
வேளாண்மை 11, 14, 15 16. 24, 164,
வேளாண்மைக் கருவிகள் 47.
வேளாண்மைப் பொருளியல் 17.